LB:4:6
N51 -
101720

தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு—66.

# சரபேந்திர வைத்ய முறைகள்

## (வாத ரோக சிகித்ஸை)

★

பதிப்பாசிரியர் :

ஸ்ரீ K. வாஸுதேவ சாஸ்திரி, B. A.,

(ஆராய்ச்சி ஆசிரியர், ஸரஸ்வதி மஹால்)

*

தஞ்சை ஸரஸ்வதி மஹால் நிர்வாகக் கமிட்டியினருக்காகக்

கௌரவ காரியதரிசி

ஸ்ரீ S. கோபாலன், B. A., B. L.,

அவர்களால் வெளியிடப்பட்டது.

—o—

பதிப்பகம் :

வெற்றிவேல் மின்சார அச்சகம், தஞ்சாவூர்.

1953.

விலை ] * [ ரூ. 3-8-0

LB:4:6
N51

TAMIL NAD'U ARCHIVES LIBRARY
No. 101720
EGMORE, MADRAS-8

# PREFACE.

This book entitled "*Sarabendra Vaidya Muraigal: Vata Roga Chikitsai*" contains the tested recipes for diseases of the joints, muscles and nerves which are collectively known as "Vata Roga" in Tamil. These recipes were selected by Raja Serfoji (1798—1832) in the hospital attached to his Medical Research Institute called "*Dhanvantari Mahal*", and versified by the Tamil Pandits of his court. Of the 18 books of recipes left by Raja Serfoji, nine have already been published and this is the 10th of the series. Those that have already been published relate to :—

(1) Stomach diseases,
(2) Maternity and Child-welfare,
(3) Diseases of the Eye,
(4) Anaemia and Jaundice,
(5) Cough and Asthma,
(6) E. N. & T.,
(7) Diabetes and other urinary diseases,
(8) Fever, and
(9) Ulcer and other skin diseases.

These publications have been bought by many doctors and others who have testified to the efficacy of the recipes contained in these books. Some of the letters written by them have been extracted at the end of this book.

It is hoped that this publication will be found as useful as its predecessors.

This book has been well edited with a useful introduction on "*Vata Roga*" according to our system of medicine, by Sri K. VASUDEVA SASTRI, our Research Pandit who has already edited a number of other publications in this series. Our thanks are due to him for his valuable services.

Our thanks are due to the Government of Madras for their timely grants that have enabled us to publish this and other valuable manuscripts of this Library.

Saraswati Mahal,
Tanjore,
1—9—1953.

S. GOPALAN,
*Honorary Secretary,*

---

# முன்னுரை.

**'சரபேந்திர வைத்திய முறைகள் — வாத ரோக சிகிச்சை'** என்ற இவ்வெளியீட்டில் தஞ்சை மன்னர் சரபோஜி (1798—1832) அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட **'தன்வந்தரி மஹால்'** என்ற வைத்திய ஆராய்ச்சிக் கழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முறைகளில் வாத ரோகத்தைப்பற்றிய முறைகள் அடங்கியிருக்கின்றன. அவ்வாராய்ச்சிக் கழகத்தில் மன்னர் சரபோஜி நமது நாட்டில் பல நூற்றாண்டுகளாக அனுபவசித்தமாகக் கையாளப்பட்ட சிகிச்சை முறைகளை ஆராய்ச்சி செய்வதற்காக ஓர் ஆஸ்பத்திரி ஏற்படுத்தி அதில் நம் நாட்டு வைத்தியர்களையும் மேல்நாட்டு வைத்தியர்களையும் கொண்டு முறைகளை அனுபவத்தில் பரிசோதித்து, குணம் தரும் முறைகளை மட்டிலும் திரட்டி, தமது ஆஸ்தானத் தமிழ்ப் பண்டிதர்களைக்கொண்டு தமிழ்ப் பாடல்களாகத் தொகுக்கச்செய்து, வியாதிகளுக்குத் தக்கவாறு 18 தொகுதிகளாகப் பிரித்து ஓலைச்சுவடிகளில் எழுதுவித்துக் காப்பாற்றி வைத்திருக்கிறார்.

அவற்றின் அருமையையும் உபயோகத்தையும் உத்தேசித்து அவைகளுக்கு நமது வெளியீடுகளில் முதல் இடம் கொடுக்கப்பட்டு இதுவரையில் 9 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. அவைகளில்

(1) குன்மரோக சிகிச்சை
(2) கர்ப்பிணி, பாலரோக சிகிச்சை
(3) நயனரோக சிகிச்சை
(4) பாண்டு, காமாலை சிகிச்சை
(5) சுவாஸ, காஸ சிகிச்சை
(6) சிரோரோக சிகிச்சை
(7) நீரிழிவு சிகிச்சை

(8) ஜ்வரரோக சிகிச்சை

(9) விரணரோக சிகிச்சை

என்பவை அடங்கியிருக்கின்றன. இந்த ஒன்பது வெளியீடுகளை வைத்தியர்களும் மற்றோரும் வாங்கி அவற்றிலுள்ள முறைகளைக் கையாண்டு அவை 'ஆச்சரியமான குணம் தருகின்றன' என்ற விவரத்தைத் தங்கள் கடிதங்கள் மூலம் தெரிவித்திருக்கின்றனர். அக்கடிதங்களில் சிலவற்றை இவ்வெளியீட்டின் இறுதியில் அச்சிட்டிருக்கிறோம்.

சரபேந்திர வைத்திய முறைகளில் பல வெளியீடுகளைப் பதிப்பித்துக் கொடுத்த சரஸ்வதி மஹால் ஆராய்ச்சி ஆசிரியர் ஸ்ரீ. **K. வாசுதேவ சாஸ்திரி அவர்களே** இவ்வெளியீட்டை வசன நடையுடனும் வாத ரோகத்தைப்பற்றிய விரிவான முகவுரையுடனும் பதிப்பித்திருக்கிறார். அன்னார் அரிய சேவைக்கு எமது நன்றி உரித்தாகும். இவ்வெளியீடும் இதற்கு முந்திய வெளியீடுகள்போல யாவருக்கும் நன்மை பயக்குமென நம்புகிறோம்.

இந்த நூலையும் இந்நூல் நிலையத்திலுள்ள இதர அரிய நூல்களையும் வெளியிடுவதற்கு நிதியுதவி செய்து வரும் சென்னை அரசாங்கத்தாருக்கு நாங்கள் எப்போதும் கடமைப்பட்டுள்ளோம்.

சரஸ்வதி மஹால்,
தஞ்சாவூர்.
1—9—1953.

S. கோபாலன்,
கௌரவ காரியதரிசி.

---

# முகவுரை.

'வாதரோக சிகித்ஸை முறைகள்' என்னும் இந்த நூலில் சரபோஜி மகாராஜாவினால் நடத்தப்பட்ட 'தன்வந்திரி மஹால்' என்ற வைத்திய ஆராய்ச்சிக் கழகத்தில் கைகண்டதாகத் தெரிந்தெடுக்கப்பட்ட இலகுவான முறைகளில் வாத ரோகங்களுக்கான 175 முறைகள் அடங்கியிருக்கின்றன. 'வாத ரோகம்' என்றால் எந்த வியாதியைக் குறிக்கின்றது? என்பதை விவரிப்போம்.

## ஆயுர்வேதத்தில் வியாதிகளைப் பாகுபாடு செய்திருக்கும் முறை.

இப்போது நமது நாட்டிலும், மற்ற நாடுகளிலும் வெகுவாக வழங்கிவரும் சிகிச்சை முறைகளில் வியாதிகளின் கூறுபாடு, காரணங்கள் இவற்றை ஆராய்ச்சி செய்திருப்பதை மூன்று வகையாகப் பிரிக்கலாம். சில முறைகளில் வெளிப்படையாகத் தெரிகிற உடம்பின் வலி, சீதோஷ்ணம், மலஜலப் போக்கு, முதலியவற்றில் அதிகமான கவனத்தைச் செலுத்தி அவை எக்காரணம்பற்றி ஏற்பட்டிருந்தாலும், அவற்றை எவ்வாறு வெகு சீக்கிரத்தில் குணப்படுத்துவது என்பதிலேயே கவனம் செலுத்தி வருகிறார்கள் இதை 'Symptomatology' அல்லது 'வியாதிகளின் வெளிப்படைச் சின்னங்களைப்பற்றிய ஆராய்ச்சி' என்று கூறுவார்கள் ஹோமியோபதி முதலிய முறைகளில் இதையே முக்கியமாகக் கருதுகிறார்கள்.

வேறு சிலர் வியாதிகள் ஏற்படும்போது தேகத்திலுள்ள உட்புற அங்கங்கள் எவ்வித மாறுதலடைகின்றன என்பதில் அதிகக் கவனம் செலுத்தி வருகிறார்கள். இதை 'pathology'

அல்லது 'அங்கங்களின் உட்புற மாறுதலின் ஆராய்ச்சி' என்று சொல்வார்கள். 'Allopathy' என்கிற தற்கால மேல்நாட்டு முறையில் இதற்கு அதிக முக்யத்வம் கொடுக்கிறார்கள். இவ்விருபாலரும் பெரும்பாலும் வெளிச்சின்னங்களையும், அங்கங்களின் உள் மாறுபாடுகளையும் கொண்டே வியாதிகளைப் பிரித்திருக்கிறார்கள். அதை யனுசரித்தே சிகிச்சைகளையும் செய்து வருகிறார்கள். இவ்விரு வகுப்பினரும் வியாதிகளின் மூலகாரணத்தை (Etiology)க் கண்டுபிடிப்பதில் பலவித முயற்சிகள் செய்தும் பெரும்பாலும் அவர்களுக்கு அதில் வெற்றி கிட்டவில்லை; வெற்றியடைந்ததாகக் கருதப்படும் முடிவுகளும் அனுமானங்களாதலால் அவை புதிய விஷயங்கள் கண்டுபிடிக்கப்படுவதனால் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே வருகின்றன. எனவே ஒருபோதும் மாறாத நிச்சயமான முடிவு கிடைப்பது அரிதாகவே இருக்கிறது. இதற்குக் காரணம் நமது உடம்பில் ப்ரத்தியட்சமான பரீக்ஷை செய்வதற்குத் தற்காலம் உபயோகப்படும் நவீன விஞ்ஞான உபகரணங்களைக்கொண்டு கண்டுபிடிக்க முடியாத பலவிதப் பொருள் மாறுபாடுகளும் சக்தி மாறுபாடுகளும், இயக்கங்களும் நடைபெற்று வருகின்றன என்பதே.

நமது ஆயுர்வேதத்திலோ வியாதிகளின் மூலகாரணங்களிலேயே கவனம் செலுத்தி அவற்றை ப்ரத்யட்சமான முறைகளைக்கொண்டுமட்டுமல்லாமல் தங்கள் யோகசக்தியை உபயோகித்து மற்றவர்கள் நேரில் கண்டறிய முடியாத பலவித உண்மைகளை ஆயுர்வேத ஆசிரியர்களான ரிஷிகளும் சித்தர்களும் தெளிவாகக் கண்டுபிடித்து விளக்கி யிருக்கிறார்கள். இவர்கள் மூலகாரணங்கள்பற்றிக் கண்டுபிடித்திருக்கும் முடிவுகள் அனுமானங்களல்ல. யோகசக்தியால் நேரில் கண்டறிந்த அனுபவ உண்மைகள். இவைகள் நாளுக்குநாள் மாறக்கூடியவைகளும் அல்ல.

ஆகையால் வியாதிகளை வகுக்குங்கால் நமது ஆயுர்வேத ஆசிரியர்கள் வியாதிகளின் மூலகாரணங்களைக்கொண்டே அவற்றைப் பிரித்திருக்கிறார்கள்.



வியாதிகளை நமது ஆயுர்வேத முறையில் மனோவியாதிகள் என்றும், தேக வியாதிகள் என்றும் இரு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள்.

## வியாதிகளின் பொதுவான காரணங்களும் அவற்றை நீக்கும் முறைகளும்:—

1. மனோவியாதிகள்:—(a) காரணங்கள்:—

1. ரஜோ குணமும் (ஆசை, கோபம், சுறுசுறுப்பு முதலியவற்றிற்குக் காரணமான குணம்)

2. தமோ குணமும் (அறியாமை, சோம்பல், தூக்கம் முதலியவற்றிற்குக் காரணமான குணம்)

மனோவியாதிக்குக் காரணங்களாகும்.

(b) மனோவியாதிகளை நீக்குவதற்கான உபாயங்கள்:—

(1) ஞானம் (உலகிலுள்ள வஸ்துக்களைப்பற்றிய ஞானம்)
(2) விஞ்ஞானம் (ஆத்ம ஞானம்)
(3) தைரியம்
(4) ஸ்மிருதி (மறக்காமல் இருக்கப் பழகுதல்)
(5) ஸமாதி (மனதை ஓரிடத்தில் நிலை நிறுத்தல்)

2. தேக வியாதிகள்:—(a) காரணங்கள்:—

1. ஆகந்துகம், அதாவது திடீரென்று தேகத்திற்கு வெளியிலுள்ள காரணங்களால் உண்டாவன:—

(i) ஜந்துக்களின் நகம், பல் முதலியன.
(ii) விழுதல், அடிபடுதல், கட்டுண்டல், நோவுண்டாக்கப்படல்.
(iii) கயிறு, ஆயுதம் முதலியன
(iv) தீ, இடி, மின்னல், கொள்ளிவிழுதல் முதலியன.
(v) பயம் முதலியன.

2. நிஜம் (= தனது) அதாவது தேகத்திற்குள்ளாகவே உண்டாகும் கோளாறுகள். இந்தக் கோளாறுகள் உண்டாகும் இடங்கள் பின்வருமாறு:—

(i) தாதுக்கள்:— ரஸம், ரத்தம், மாம்ஸம், மேதஸ், அஸ்தி, மஜ்ஜை, சுக்லம்.

(ii) உபதாதுக்கள்:—ஸ்தன்யம் (முலைப்பால்), ருது, கண்டரங்கள், வஸை, ஆறு வகைத் தோல், ஸ்நாயு, ஓஜஸ்.

(iii) மலங்கள்:—மலம், மூத்திரம், வியர்வை முதலியன.

(iv) வாஹிகள்:—ஸ்ரோதஸ்ஸுகள், தமனிகள், ஸிரைகள்.

(v) கோஷ்டாங்கங்கள்:—இருதயம், நுரையீரல், கல்லீரல் மண்ணீரல், மூத்திரக்குண்டிக்காய், மூத்திரப்பை, இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல் முதலியன.

(vi) உணர்ச்சிக்கான உறுப்புகள்:— மூளை, நரம்புகள், ஐம்புலன்கள்.

(vii) தோஷங்கள்:—வாதம், பித்தம், கபம்.

### வாத, பித்த, கபங்களின் முக்கியத்துவம்.

இவைகளுள் வாதம், பித்தம், கபம் இவைகள் மூன்றும் சரீரம் முழுதும் பரவி பல முக்கியமான காரியங்களைச் செய்வதனாலும்; தாதுக்கள், உபதாதுக்கள், மலங்கள், வாஹிகள், கோஷ்டாங்கங்கள். இவைகள் சரியான ஸ்திதியில் இருக்கும்படி செய்ய ஆதாரமாக இருப்பதினாலும்; வாத, பித்த, கபங்கள் மிகுந்தாலும், குறைந்தாலும் தாதுமுதலியவைகளைக் கெடுக்கக் கூடியவைகளாக இருப்பதாலும்; கெட்டுப்போன தாது முதலியவைகளை, வாத, பித்த, கபங்களைச் சமப்படுத்துவதனால் சரியான நிலைக்குக் கொண்டுவரக்கூடியதாக இருப்பதாலும், ஆயுர்வேதத்தில்



(1) வாத, பித்த, கபங்களின் மிகுதல் குறைதலினாலேயே வியாதிகள் உண்டாகின்றன என்றும்,

(2) வாத, பித்த, கபங்களைச் சமப்படுத்துவதினாலேயே எல்லா வியாதிகளும் குணமாகின்றன என்றும்,

(3) 'ஆகந்துகம்' என்னும் வெளிக்காரணங்களினால் உண்டாகும் வியாதிகளிலும் முதற் காரணங்கள் வெளியிலிருந்து உண்டானாலும், பிறகு வாத, பித்த கபங்களை மாறுபடச் செய்கின்றன என்றும், அந்தக் காரணத்தினால் அவ்வித ஆகந்துக வியாதிகளையும் வாத, பித்த, கபங்களைச் சமப்படுத்துவதினால் குணப்படுத்தக்கூடும் என்றும் கூறுகிறார்கள். ஆகவே **ஆயுர்வேதத்தின் முக்கியமான நோக்கம் தேகத்திலுள்ள வாத, பித்த, கபங்களைச் சமப்படுத்துவதேயாகும்.** இவை மிகினும் குறையினும் உடல் நலத்தைக் கெடுப்பதால் இவைகளுக்கு 'தோஷங்கள்' என்ற பெயரிடப்பட்டிருக்கிறது.

அதுபற்றியே நம் தேகத்திலுள்ள தாதுக்கள் புஷ்டியடைவதற்காக நாம் ஏற்றுக்கொள்ளும் உணவுப் பொருள்களையும், தினசரியை, ருதுசரியை, முதலியவைகளையும், வாத, பித்த, கபங்கள் சமமாக இருப்பதற்கு அனுகூலமாகவே அமைத்துக் கொள்ளல்வேண்டும்.

### தோஷங்கள், தாதுக்களின் உற்பத்தி.

வாதம், பித்தம், கபம் இவைகள் என்ன? எப்படி உண்டாகின்றன? எவ்விதம் கூடிக் குறைகின்றன? அவை செய்யும் வேலை என்ன? என்பவை தெளிவாக அறியத்தக்கவை. மேலும் தாதுக்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று உண்டாகும் விவரத்தையும் அறிதல்வேண்டும்.

நாம் உட்கொண்ட அன்னபானதிகள் ஆமாசயம் என்னும் வயிற்றில் (Stomach) போனதும் முதலில் அதன் இனிப்பான அம்சங்களும், இனிப்பாக மாறக்கூடிய அம்சங்களும் பக்குவ

மடைகின்றன. இதுவே ஜீரணத்தின் முதற்பகுதி. இதற்கு 'மதுரபாகம்' என்று பெயர். இந்த மதுரபாகத்தில் மேலே நுரையாக மிதக்கும் பாகத்துக்கு 'சிலேஷ்மம்' அல்லது 'கபம்' என்று பெயர்.

பிறகு நமது ஆகாரத்திலுள்ள புளிப்பான அம்சங்களும் புளிப்பாக மாறக்கூடிய அம்சங்களும் பக்குவமாகின்றன. இதுவே ஜீரணத்தின் இரண்டாவது பகுதி. இதற்கு 'அம்ல பாகம்' என்று பெயர்.

இது முடிந்ததும் ஆமாசயத்தினின்றும் ஆகாரமானது வலது பாகத்தில் 'க்ரஹணி' என்னும் வளைந்த குழாயின் வழியாகச் சிறுகுடலுக்கு இறங்குகிறது. இறங்கும் தறுவாயில் இந்த அம்ல பாகத்தின் மேலேவரும் திரவப்பகுதிக்குப் பித்தம் என்று பெயர். சிறுகுடலில் இறங்கிய பிறகு ஜீர்ணத்தின் மூன்றாவது பகுதி நடக்கிறது. இப்போது நம் ஆகாரத்தின் கார்ப்பான பாகங்களும் கார்ப்பாக மாறக்கூடிய பாகங்களும் பக்குவமடைகின்றன. இதற்குக் 'கடுபாகம்' என்று பெயர். திரவமான ஸாரம் அல்லது ரஸம் சிறுகுடல் பெருங்குடலின் முதற்பகுதி இவைகளால் உறிஞ்சப்பட்டு, சக்கையான மலம் பெருங்குடலின் பிற்பகுதியான மலதாரா (transverse coln) என்னும் இடத்தில் தங்குகிறது. கடுபாகத்தில் வாயு என்னும் அம்சமும் வெளியாகிறது. எனவே **நமது ஆகாரம் ஜீரணமாகும் போது ஸாரமான ரஸமும், சக்கையான மல மூத்திரங்களும், கபம்; பித்தம், வாயு என்னும் அம்சங்களும் உண்டாகின்றன.**

ரஸம் ரத்தமாக மாறுகிறது. அப்போது அதிலிருந்து மல ரூபமாகக் கபம் வெளி வருகிறது. ஆகவே முதலில் ஆகாரத்தின் மதுரபாகத்தின்போதும், பிறகு ரஸம் ரத்தமாக மாறும்போதும் ஆக இரண்டு சமயங்களிலும் கபம் உற்பத்தியாகிறது.



ரத்தமானது மாம்ஸமாக மாறுகிறது. அப்போது பித்தம் மலமாக வெளிவருகிறது. ஆகவே ஆகாரமானது அம்ல பாகம் ஆகும்போதும் ரத்தம் மாம்ஸமாக மாறும்போதும் ஆகஇரண்டு சமயங்களிலும் பித்தம் உற்பத்தியாகிறது.

மாம்ஸம் மேதஸ்ஸாக (கொழுப்பாக) மாறுகிறது. அப்போது மலமாக வெளிவருவது காது முதலிய த்வாரங்களிலுள்ள அழுக்கு. மேதஸ்ஸானது அஸ்தியாக (எலும்பாக) மாறுகிறது. அப்போது மலமாக உற்பத்தியாவது வியர்வை. அஸ்தியானது மஜ்ஜையாக மாறுகிறது. அப்போது மலமாக உற்பத்தியாவது நகமும், மயிரும்.

மஜ்ஜையானது சுக்கிலமாக மாறுகிறது. அப்போது மலமாக உற்பத்தியாவது சரீரத்தின் எண்ணெய்ப் பசை. இந்தப் பசை கண்களிலும், மலத்திலும், தோலிலும் உண்டாகிறது.

## தாதுக்கள் செய்யும் வேலைகள்.

ரஸம் முதலிய ஏழு தாதுக்களும் நமது சரீர முழுதும் பல பாகங்களிலும் இருப்பது நமக்கு வெளிப்படை. அவை செய்யும் வேலைகளும் நமக்குத் தெரிந்ததே. அவையாவன:—

ரஸம்—சந்தோஷம் கொடுத்தல்.

மஜ்ஜை—எலும்பு த்வாரத்தை அடைத்தல்.

ரத்தம்—போஷணை.

மாம்ஸம்—பருமன்.

மேதஸ்—நைப்பு

சுக்கிலம்—கர்ப்பம் உண்டாக்கல்.

அஸ்தி—நிலை நிறுத்தல்.

ஆனால் வாதம், பித்தம், கபம் என்ற பரிணாமங்களைப்பற்றிய விவரங்கள் வெளிப்படையானவையல்ல. அவைகளை நமது ரிஷிகள் சித்தர்களின் நூல்களிலிருந்தே அறியவேண்டும்:—

## வாத, பித்த, கபங்கள் செய்யும் வேலைகள்.

1. **வாதம்**:—வாதம் என்பது கண்ணால் பார்க்கக்கூடியதல்ல காற்று எப்படி ஸ்பர்ச உணர்ச்சியால் அறியப்படுகிறதோ அப்படியே சரீரத்தில் உண்டாகும் வாதமும் அது செய்யும் வேலையினாலும் மற்ற குணங்களாலும் அறியப்படும். ஆரோக்கியமான உடம்பில் வாதம் செய்யும் வேலை:—

1. வாக்கு, மனது, உடம்பு, புலன்கள் இவற்றின் வேலைகள்.

2. உற்சாகம், மூச்சுவிடுதல்.

3. ரஸம், ரத்தம் முதலிய தாதுக்களையும், பித்தம், கபம் இவைகளையும் உடம்பில் சமமாகப் பரவும்படி செய்தல்.

4. வெளியே போகவேண்டிய மல மூத்திராதிகளைப் போகச் செய்தல்.

வாதத்தின் குணங்கள்:—

1. வறட்சி
2. இலேசு
3. குளிர்ச்சி
4. சுறசுறப்பு
5. நுட்பம்.
6. ஸ்திரமில்லாமல் சஞ்சரிக்கும் தன்மை.

2. **பித்தம்**:—இது பெரும்பாலும் கண்ணால் பார்க்கக்கூடிய மஞ்சள் நிறமான திரவரூபமாகவே இருக்கும். ஆனால் இதுவே கண்ணுக்குத் தெரியாத அக்னி முதலிய சக்தியாகவும் வேலை செய்கிறது.

ஆரோக்கியமான உடம்பில் பித்தம் செய்யும் வேலை:—

1. உஷ்ணத்தைக் கொடுத்தல்
2. பசி, தாகம் உண்டாக்கல்



3. ஆகாராதிகளைப் பக்குவம் செய்தல்
4. கண்கள் பார்க்கும் சக்திக்கு உதவுதல்
5. உடம்பின் காந்தியையும், மிருதுத் தன்மையையும் கொடுத்தல்.
6. புத்தியின் தெளிவு (சாந்தி), புத்தி கூர்மை, சௌரியம் இவைகளைக் கொடுத்தல்.

பித்தத்தின் குணங்கள்:—

1. நைப்பு
2. இலேசு
3. உஷ்ணம்
4. வேகம்
5. நாற்றம்
6. அசையுந்தன்மை
7. நெகிழ்ந்தோடுதல்.

3. **கபம்** (சிலேஷ்மம்):— இது கண்ணால் பார்க்கக்கூடியது, பசையுள்ள திரவரூபமாக இருக்கும். இதன் வர்ணம் வெண்மை.

ஆரோக்கியமான உடம்பில் சிலேஷ்மம் செய்யும் வேலை:—

1. நைப்புக் கொடுத்தல்
2. உடம்புக்குக் கட்டு உண்டாக்கல்
3. அசையாமல் இருக்கச் செய்தல்
4. உடம்பைக் கனக்கச் செய்தல்
5. பலத்தைக் கொடுத்தல்
6. பொறுமை, தைரியம், அவாவின்மை இவைகளைக் கொடுத்தல்.

கபத்தின் குணங்கள்:—

1. நைப்பு
2. கனம்
3. குளிர்ச்சி

4. அசையாமை
5. வழவழப்பு
6. பசையுள்ள தன்மை.

### வாத, பித்த, சிலேஷ்மங்களின் ஸ்தானங்கள்:—

வாதம், பித்தம், சிலேஷ்மம் இம்மூன்றும் எல்லா ஸ்ரோதஸ்ஸுகள், ஸிரைகள்[1], இவைகளின் வழியாக உடம்பின் எல்லாபாகங்களிலும் பரவி வேலை செய்கின்றன. அவை தேக முழுவதும் பரவவேண்டும் என்பதும், அவைகள் உடம்பிற்கு மிகவும் அத்தியாவசியமான பல வேலைகளைச் செய்கின்றன என்பதும், அந்த வேலைகளை நன்கு ஆராய்ந்து பார்த்தால் தெரியவரும்.

அவைகள் தேகமுழுவதும் பரவி வேலை செய்வதோடு சில இடங்களில் அதிக அளவில் தங்கியிருக்கின்றன. அவ்விடங்களை வாத, பித்த, கபஸ்தானங்கள் என்பார்கள். அவை பின் வருமாறு:—

#### (a) வாதத்தின் ஸ்தானங்கள்:—

1. பக்குவாசயம் (குடல்)
2. இடுப்பு
3. மூத்திரப்பை
4. துடைகள்
5. பாதங்கள்
6. எலும்புகள்
7. பொதுவாகத் தொப்புளுக்குக் கீழே உள்ள ஸ்தானங்கள்

இவைகளில் முக்கிய ஸ்தானம் பக்குவாசயம்

1. 'ஸ்ரோதஸ்' என்பதை 'ducts' என்றும் 'ஸிரை' என்பதை 'blood vessel' என்றும் மொழி பெயர்க்கலாம்.



#### (b) பித்தத்தின் ஸ்தானங்கள்:—

1. ஆமாசயம் (வயிறு)
2. ரஸதாது
3. ரத்தம்
4. ஊந்தண்ணீர்
5. வியர்வை
6. கண்கள்
7. பொதுவாகத் தொப்புளுக்கு மேலும் இருதயத்துக்குக் கீழும் உள்ள ஸ்தானங்கள்

இவைகளில் முக்யமான ஸ்தானம் ஆமாசயம்

#### (c) சிலேஷ்மத்தின் ஸ்தானங்கள்:—

1. மார்பு
2. கழுத்து
3. தலை
4. கணுக்கள்
5. மேதஸ் என்னும் கொழுப்பு
6. ஆமாசயம்
7. பொதுவாக இருதயத்துக்கு மேலே உள்ள இடங்கள்

இவைகளில் முக்யமான ஸ்தானம் மார்பு

### வாத, பித்த, சிலேஷ்மங்களின் வகை:—

வாதம், பித்தம், சிலேஷ்மம் இவை ஒவ்வொன்றையும் 5 வகையாகப் பிரித்திருக்கிறார்கள். இந்தப் பிரிவினை அவை இருக்கும் இடத்தையும் செய்யும் வேலையையும் பொறுத்திருக்கிறது:—

#### (a) வாதத்தின் 5 வகை:—

1. பிராணன்—இது தலை, கழுத்து, இருதயம் இந்த ஸ்தானங்களில் சஞ்சரிப்பது;

இது செய்யும் வேலை:—

i. புத்தி, இருதயம், புலன்கள், சித்தம் இவைகளுக்கு ஆதாரம்.

ii. ஆகாரத்தை உள்ளே இழுத்தல்.

iii. மூச்சுவிடுதல், எச்சில் உமிழ்தல், தும்மல், ஏப்பம் இவைகளைச் செய்வித்தல்.

2 உதானன்: இது மார்பிலும், மூக்கு, கழுத்து, இந்த ஸ்தானங்களிலும் சஞ்சரிப்பது. இதன் வேலை:

i. பேச்சு

ii மனது, இந்திரியம் இவைகளைப் பொருள்களின் மேல் செலுத்துதல்

iii. முயற்சி

iv. சக்தி

v. வலிமை

vi. மேனி

vii. ஞாபகசக்தி

3. வியானன்: இது இருதயத்திலும் தேகத்தின் எல்லா பாகங்களிலும் வெகு வேகமாக சஞ்சரிப்பது. இதன் வேலை:—

i. நடை

ii. அங்கங்களைக் கீழும் மேலும் போகச்செய்தல்

iii. கண் மூடித்திறத்தல்

iv. பொதுவாக எல்லா சேஷ்டைகளும்,

4. ஸமானன்: இது வயிற்றுக்கும் குடலுக்கும் இடையிலுள்ள க்ரஹணி என்னும் இடத்திலுள்ள அக்னிக்குச்சமீபமாக இருந்துகொண்டு கோஷ்டம் என்கிற உடம்பின் உள்புற முழுவதும் சஞ்சரிப்பது. இது செய்யும் வேலை:—

1. ஆகாரத்தை வாங்கி அக்னியின் உதவியால் அதைப்பக்குவப்படுத்தல்



2. ஆகாரத்தை ஸாரமாகவும் சக்கையாகவும் பிரிப்பது
3. மல மூத்திராதிகளை அவற்றின் கோசங்களில் சேர்ப்பது

5. அபானன்: இது மலமார்க்கத்திலும், பின் புறம், மூத்திராசயம், குறி, தொடை, இந்த பாகங்களிலும் சஞ்சரிப்பது. இது செய்யும் வேலை:

1. சுக்கிலம், ருது, மலம், மூத்திரம், கர்ப்பம் இவைகளை வெளிப்படுத்துவது

**பித்தத்தின் 5 வகை:—**

1. பாசகபித்தம்- இது ஆமாசயம் என்னும் வயிற்றுக்கும், பக்குவாசயம் என்னும் சிறு குடலுக்கும் இடையிலுள்ள க்ரஹணி என்னும் பாகத்தில் இருப்பது. இது தன்னுடைய திரவரூபம் மாறி அக்னியாக ஆகிவிடுகிறது. இதன் பலத்தையே அக்னிபலம் என்கிறோம்.

க்ரஹணியை அக்னி ஆசயம் என்றும் கூறலாம். தேகத்தின் பல முக்கியமான அம்சங்கள் இந்த அக்னியைப் பொறுத்தே இருக்கின்றன. அவையாவன:—

1. ஆயுள்
2. வர்ணம்
3. பலம்
4 ஆரோக்கியம்
5. உத்யோகம் (முயற்சி)
6. தேகபுஷ்டி
7. காந்தி
8. ஓஜஸ் என்னும் எல்லா தாதுக்களின் ஸாரம்
9. தேக உஷ்ணம்
10 தாதுக்கள் முதலியவைகளில் உள்ள அக்னி
11. ஐந்து ப்ராணன்கள் என்று சொல்லப்படும் ஐந்து வாயுக்களின் சக்தி.

அக்னியின் நிலைமைகள்:—அக்னியானது ஸமம், விஷமம் மந்தம், தீக்ஷ்ணம் என்ற நான்கு நிலைமைகளை அடையக்கூடியது.

(a) ஸமம்: வாதம், பித்தம், சிலேஷ்மம் இவை ஸமமாகவும், ஸமான வாயு தன் ஸ்தானத்திலும் இருக்குமானல் அக்னி ஸமமாக இருக்கும். அப்போது ஆகாரங்களை அதன் யுக்தமான காலத்தில் பக்குவம் செய்வதோடு அக்னி பலத்தினல் தேகத்தில் நடக்கவேண்டிய எல்லா வேலைகளும் சரிவர நடைபெறும்.

(b) விஷமம்: ஸமான வாயு மாறுபாடடைந்து அளவுக்கு மீறினல் அக்னியானது சில சமயம் கடுமையாகவும், சில சமயம் மந்தமாகவும் முறையின்றி மாறிக்கொண்டிருக்கும். இதற்கு விஷமாக்னி என்று பெயர்.

(c) மந்தம்: கபம் அதிகமானல் அது அக்னியின் பலத்தைக் குறைக்கும். அப்போது அதற்கு மந்தாக்னி என்று பெயர். மந்தமான அக்னியைப் பலப்படுத்தும் மருந்துகளுக்கு 'தீபன மருந்துகள்' என்று பெயர். நேராக அக்னியைப் பலப்படுத்தாமல் அக்னி செய்யும் வேலைகளில் ஒன்ருகிய ஜீரணத்தை மட்டில் விருத்தி செய்யும் மருந்துக்குப் 'பாசக' மருந்து என்று பெயர். பெரும்பாலும் மருந்துகளில் 'தீபனம்', 'பாசகம்' என்ற இரண்டு சக்திகளும் சேர்ந்து இருந்தபோதிலும் இரண்டு சக்திகளும் வெவ்வேருனவை என்பது கவனிக்கத்தக்கது.

(d) தீக்ஷ்ணம்: சுபாவத்தினலும், பித்தம் அதிகமாவதாலும் அக்னி கடுமையாகும். அதற்கு 'தீக்ஷ்ணுக்னி' என்று பெயர். இவ்விதமாக பாசக பித்தம் என்னும் அக்னி நான்கு நிலைமைகளில் இருக்கக்கூடியது.

பாசக பித்தமாகிய அக்னியானது ஆகாரத்தைப் பக்குவம் செய்யும் வகை :

பாசக பித்தம் அக்னி ரூபமாக இருக்கும் இடம் வயிற்று (ஆகாரப்பை)க்குக் கீழும் குடலுக்கு மேலும் உள்ள க்ரஹணி



என்னும் ஸ்தானம். ஆகாரம் உள்ளே சென்றதும் வயிற்றில் தங்குகிறது. கீழே க்ரஹணியில் உள்ள அக்னி ஸமானவாயுவினல் பலமாக்கப்பட்டு அடுப்பிலுள்ள நெருப்பு அதன் மேலுள்ள பானையின் சோற்றைச் சமைப்பதுபோல் பக்குவம் செய்கிறது. ஏற்கனவே சொல்லியபடி முதலில் மதுரபாகமும், பிறகு அம்ல பாகமும் ஏற்படுகிறது. அவ்வித அம்ல பாகம் முடிகிறவரையில் இந்த அக்னியே ஆகாரத்தைக் கீழே இறங்காமல் தடைசெய்கிறது. பிறகு முற்றிலும் பக்குவம் ஆவதற்காக க்ரஹணியின் வழியாகச் சிறுகுடலுக்கு இறங்குகிறது. சிறுகுடலுக்கு வந்த பிறகும் மேலே இருக்கும் அக்னி ஆசயத்தின் ஒத்தாசையைக்கொண்டே பக்குவம் பூர்த்தியாகிறது.

எனினும், ஆகாரத்தில் உள்ள 5 மூலப் பொருள்களோடு அவற்றின் பஞ்சபூதாக்னி என்ற ஒரு சக்தியும் கூடவே இருக்கிறது. பக்குவம் ஆகும்போது இந்தப் பஞ்சபூத அக்னியானது சரீரத்தில் அக்னி ஆசயத்திலுள்ள அக்னியினல் பலமாக்கப்பட்டுப் பக்குவத்தைச் செய்கிறது என்பதே ஆயுர்வேதத்தின் துணிபு.

அதேவிதமாக ரஸம், ரத்தம் முதலிய 7 தாதுக்களிலும், மலம், மூத்ரம் முதலிய கழிவுப்பொருளிலும் இருக்கும் உஷ்ணமும் ஆகாரப் பக்குவத்திற்கு ஒத்தாசை செய்கின்றது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

2. ரஞ்ஜக பித்தம்: இது இருதயத்துக்குக் கீழும் தொப்புளுக்கு மேலும் உள்ள ஆமாசயத்தில் உள்ளது. அதாவது க்ரஹணிக்கு மேலே உள்ள ஸ்தானங்களில் உள்ளது. இது ரஸத்துக்கு வர்ணத்தைக் கொடுத்து ரத்தமாக மாற்ற உதவுகிறது. அதனல் இதற்கு ரஞ்ஜக பித்தம் என்று பெயர். (ரஞ்சகம்=வர்ணம் கொடுத்தல்.)

3. சாதக பித்தம்: இது இருதயத்தில் உள்ளது. இது ஒருவன் நினைத்த வஸ்துவைப்பற்றி யோசிக்கவும், நிச்சயிக்க

வும், அதை அடையும் முயற்சிகளைச் செய்யும்படி தூண்டவும் உதவுகிற புத்தி, ஞாபக சக்தி, அபிமானம் இவைகளுக்கு ஆதாரமாக இருக்கிறது. பொருள்களை அடைய ஸாதனமாக இருப்பதால் இதற்கு ஸாதகபித்தம் என்று பெயர்.

4. ஆலோசக பித்தம்: இது கண்ணிற்குள் இருந்து உருவத்தை அறியும் சக்திக்கு உதவுகிறது.

5. ப்ராஜக பித்தம்: இது தோலில் உள்ளது. தோலுக்குக் காந்தியைக் கொடுப்பது.

## சிலேஷ்மத்தின் 5 வகை:—

1. அவலம்பனம்: இது தன் சக்தியினால் முள்ளெந்தண்டின் அடிப்பாகத்திலுள்ள முக்கூட்டெலும்பிற்கு ஆதரவாகவும், அன்னரஸத்தோடு சேர்ந்து இருதயத்துக்கு ஆதரவாகவும், உடம்பின் மற்ற பாகங்களில் உள்ள கபத்துக்கு ஆதரவாகவும் இருப்பது. இதன் ஸ்தானம் மார்பு.

2 க்லேதகம்: இது ஆமாசயத்தில்(வயிற்றில்) இருந்துகொண்டு ஆகாரத்தை நெகிழச் செய்கிறது.

3. போதகம்: இது நாக்கில் இருந்துகொண்டு உருசி பார்க்கும் சக்திக்கு ஆதாரமாக இருப்பது.

4 தர்ப்பகம்: இது தலையில் இருந்துகொண்டு கண்களுக்குக் குளிர்ச்சியைத் தந்து போஷிக்கிறது.

5. ச்லேஷகம்: இது ஸந்திகளில் இருந்துகொண்டு அவைகளுக்கு எண்ணெய் போட்டதுபோல் நைப்பை உண்டாக்கி அசைவுக்கு அனுகூலமாக இருப்பது.

### வாத, பித்த, கபங்கள் குறைதலும் கூடுதலும்.

வாதம், பித்தம், கபம் இம்மூன்றின் குணங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இவை மூன்றும் தத்தம் குணத்திற்கு



விரோதமான குணங்களின் சேர்க்கையால் குறையும். அதே விதமான குணங்களின் சேர்க்கையால் கூடுதல் அடையும்.

### கூடுதல் அடைவதில் இரண்டு வகையுண்டு:—

1. அளவு அதிகரித்தாலும் தத்தம் ஸ்தானத்தை மீறாமல் இருக்கும் அதிகரிப்புக்கு 'சயம்' அல்லது 'கூடுதல்' என்று பெயர்.

2. தத்தம் ஸ்தானத்தை மீறும்படியான அதிகரிப்புக்கு, 'ப்ரகோபம்' அல்லது 'கடுமையான அதிகரிப்பு' என்று பெயர்.

அதிகரித்தவை மறுபடியும் சரியான நிலைமைக்கு வருவதற்குச் 'சமனம்' அல்லது 'அடங்குதல்' என்று பெயர்.

### பொதுவாக வாத, பித்த கபங்கள் பின்கண்ட காரணங்களினால் கூடிக் குறையும்:—

1. குணங்களின் சம்பந்தம்:—

(a) வாதம்

i. சயம்—வாதத்தின் குணங்களாகிய வறட்சி முதலிய குணங்கள் உஷ்ணத்தோடு சேர்ந்தால் வாதத்தின் 'சயம்' என்ற கூடுதலை உண்டாக்கும்.

ii. ப்ரகோபம் — வாதத்தின் குணங்களாகிய வறட்சி முதலிய குணங்கள் குளிர்ச்சியோடு சேர்ந்தால் வாதத்தின் 'ப்ரகோபம்' என்னும் கடுமையான அதிகரிப்பை உண்டாக்கும்.

iii. சமனம்—வாதத்தின் குணங்களுக்கு விரோதமான நைப்பு முதலிய குணங்கள் உஷ்ணத்தோடு சேர்ந்தால் வாதத்தை 'சமனம்' செய்யும்.

(b) பித்தம்:—

i. சயம் — பித்தத்தின் குணங்களாகிய தீக்ஷ்ணம், வேகம், கடுமை முதலிய குணங்கள் குளிர்ச்சியோடு சேர்ந்தால் 'சயம்' என்னும் கூடுதலை உண்டாக்கும்.

ii. ப்ரகோபம்—பித்தத்தின் குணங்களாகிய தீக்ஷ்ணம் முதலிய குணங்கள் உஷ்ணத்தோடு சேர்ந்தால் பித்தத்தின் 'ப்ரகோபம்' என்ற கடுமையான அதிகரிப்பை உண்டாக்கும்.

iii. சமனம்—பித்தத்தின் குணங்களுக்கு விரோதமான மந்தம் (மெது) முதலிய குணங்கள் குளிர்ச்சியோடு சேர்ந்தால் பித்தத்தை சமனம் செய்யும்.

(c) சிலேஷ்மம்:—

i. சயம்—சிலேஷ்மத்தின் குணங்களான கைட்பு முதலிய குணங்கள் குளிர்ச்சியோடு சேர்ந்தால் சிலேஷ்மத்தின் 'சயம்' என்னும் கூடுதலை உண்டாக்கும்.

ii. ப்ரகோபம்—சிலேஷ்மத்தின் குணங்களான கைட்பு முதலிய குணங்கள் உஷ்ணத்தோடு சேர்ந்தால் சிலேஷ்மத்தின் 'ப்ரகோபம்' என்னும் கடுமையான அதிகரிப்பை உண்டாக்கும்.

iii. சமனம் — சிலேஷ்மத்தின் குணங்களுக்கு விரோதமான வறட்சி முதலிய குணங்கள் உஷ்ணத்தோடு சேர்ந்தால் சிலேஷ்மத்தைச் சமனம் செய்யும்

2 காலபேதங்கள்:—

(a) வாதம்—

நல்ல வெயிற்காலத்தில் வாதம் சேர ஆரம்பித்து, மழை காலத்தில் ப்ரகோபம் அடைந்து, மழைக்குப் பின்னும் பனிகாலத்துக்கு முன்னும் சமனம் அடையும்.



(b) பித்தம்—

மழை காலத்தில் பித்தம் சேர ஆரம்பித்து, மழைக்குப் பின்னும் பனிக்கு முன்னும் ப்ரகோபம் அடைந்து. முன் பனிக்காலத்தில் சமனமடையும்.

(c) சிலேஷ்மம்—

பின்பனிக்காலத்தில் சிலேஷ்மம் சேர ஆரம்பித்து, இளம் வெயிற்காலத்தில் ப்ரகோபம் அடைந்து, கடும் வெயிற் காலத்தில் சமனம் அடையும்

3. வயதுக்குத் தகுந்த மாறுதல்:—

குழந்தைப் பருவத்தில் சிலேஷ்மம் மிகுதியாகவும், வாலிபப் பருவத்தில் பித்தம் மிகுதியாகவும், வயோதிகப் பருவத்தில் வாதம் மிகுதியாகவும் இருக்கும்.

4. தினசரி மாறுதல்:—

அதிகாலையில் சிலேஷ்மமும், வெயில் அதிகரிக்கும் போது பித்தமும், வெயில் தணியும்போது வாதமும் மிகுதியாக இருக்கும். அவ்விதமே இரவிலும் இருக்கும்.

5. ஆகார பரிணமத்தைப் பொறுத்த மாறுதல்:—

சாப்பிட்டவுடன் சிலேஷ்மமும், நன்றாக ஜீரணம் நடக்கும்போது பித்தமும், ஜீரணம் முடிந்தபின் வாதமும் அதிகமாக இருக்கும்.

6. ரஸங்களினால் ஏற்படும் மாறுதல் :—

| | ப்ரகோபம் செய்வன | சமனம் செய்வன. |
|---|---|---|
| 1. வாதம் | கார்ப்பு (கடு) | இனிப்பு (மதுர) |
| | கைப்பு (திக்த) | புளிப்பு (அம்ல) |
| | துவர்ப்பு (கஷாய) | உப்பு (லவண) |

| | | |
|---|---|---|
| 2. பித்தம் | கார்ப்பு (கடு) | இனிப்பு (மதுர) |
| | புளிப்பு (அம்ல) | கைப்பு (திக்த) |
| | உப்பு (லவண) | துவர்ப்பு (கஷாய) |
| 3 சிலேஷ்மம் | இனிப்பு (மதுர) | கார்ப்பு (கடு) |
| | புளிப்பு (அம்ல) | கைப்பு (திக்த) |
| | உப்பு (லவண) | துவர்ப்பு (கஷாய) |

## தேக வியாதிகளின் தொகுதி.

மேலே சொன்ன காரணங்களினால் வியாதிகளை வாத, பித்த, கபம் என்ற தோஷங்களைப் பொறுத்தே பிரிவினை செய்திருக்கிறார்கள். இப்பிரிவினை இரண்டு வகையாகச் செய்யப் பட்டிருக்கிறது:—

1. **தனித்தனியாக வாத, பித்த, கபங்களின் ப்ரகோபத்தால் ஏற்படும் வியாதிகள். இவைகளுக்கு 'நாநாத்மஜ' வியாதிகள் என்று பெயர்.**

2. **வாதம், பித்தம், கபம்** இவை மூன்றும் கூடிக் குறைவதினால் உண்டாகும் வியாதிகள். இவைகளுக்கு 'ஸாமான்யஜ' **வியாதிகள் என்று பெயர்.**

**இவற்றுள் நாநாத்மஜ வியாதிகளின் ஓர் பிரிவாகிய வாத வியாதிகள்.**

**வாத வியாதிகள் 80:—**

1. நகபேதம் (நகம் பிளத்தல்)
2. விபாதிகா (பாதம், உள்ளங்கை வெடித்தல்)
3. பாதசூலம் (பாதத்தில் குத்துவலி)
4. பாதப்ரம்சம் (பாதத்தடுமாற்றம்)
5. பாதஸுப்ததா (பாதம் மறத்துப் போதல்)
6. வாதகுட்டதா (கணுக்கால் வளைவு)
7. குல்பக்ரஹம் (கணுக்கால் பிடிப்பு)
8. பிண்டிகோத்வேஷ்டனம் (ஆடு சதையைப் பிழிவது போன்ற வலி)



9. க்ருத்ரஸி (நரம்புக் குடைச்சல் வலி)
10. ஜானுபேதம் (முழங்காலில் பிளப்பதுபோன்ற வலி)
11. ஜானு விச்லேஷம் (முழங்கால் மூட்டு நழுவுதல்)
12. ஊருஸ்தம்பம் (துடை ஸ்தம்பித்தல்)
13. ஊருஸாதம் (துடை விலவிலத்தல்)
14. பாங்குல்யம் (நொண்டி)
15. குதப்ரம்சம் (ஆஸனம் வெளிப்படுதல்)
16. குதார்த்தி (ஆஸனக் கடுப்பு)
17. வ்ருஷண க்ஷேபம் (விரை மேல் இழுத்துக்கொள்ளல்)
18. சேப ஸ்தம்பம் (குறி அசையாமை)
19. வங்க்ஷணாநாஹம் (துடையிடுக்கில் வாயுசேர்ந்து வலி)
20. ச்ரோணி பேதம் (பின்பாகத்தில் பிளப்பது போன்றவலி)
21. விட்பேதம் (மலம் அதிகமாக இளகிப்போதல்)
22. உதாவர்த்தம் (வாதம் தன் ஸ்தானமாகிய பக்குவாசயத்திலிருந்து மேல்நோக்கிக் கிளம்புதல்)
23. கஞ்சத்துவம் (தங்கித்தங்கி நடத்தல்)
24. வாமனத்துவம் (குறுகிய உருவம்)
25. த்ரிகக்ரஹம் (முள்ளந்தண்டின் அடிப்பாகத்தில் பிடிப்பு)
26. ப்ருஷ்டக்ரஹம் (முதுகுப் பிடிப்பு)
27. பார்ச்வ அவமர்தம் (விலாப்பிடிப்பு வலி)
28. உதராவேஷ்டம் (வயிற்றைச் சுருட்டல்)
29. உன்மாதம் (வாதத்தினால் ஏற்பட்ட பயித்தியம்)
30. ஹ்ருத்த்ரவம் (இருதயம் வேகமாக அடித்துக்கொள்ளுதல்)
31. வக்ஷோகர்ஷம் (இருதயத்தைத் தேய்ப்பது போன்ற வலி)
32. வக்ஷஉபரோதம் (மார்பு அடைப்பு)
33. வக்ஷஸ்தோதம் (மார்பில் குத்துவலி)
34. பாஹுசோஷம் (கையுலர்ந்துபோதல்)
35. க்ரீவாஸ்தம்பம் (கழுத்துத் திருப்ப முடியாதிருத்தல்)
36. மந்யாஸ்தம்பம் (கழுத்தின் ஸிரைஸ்தம்பம் பித்துச்சிந்தனை சக்தியைக் குறைத்தல்)
37. கண்டோத்வம்ஸம் (கழுத்தைப் பிளப்பதுபோன்ற வலி)

38. ஹனுபேதம் (தாடையில் பிளப்பதுபோன்ற வலி)
39. ஓஷ்டபேதம் (உதட்டில் பிளப்பது போன்றவலி)
40. அக்ஷிபேதம் (கண்ணில் பிளப்பதுபோன்ற வலி)
41. தந்தபேதம் (பல்லில் பிளப்பதுபோன்ற வலி)
42. தந்தசைதில்யம் (பல் அசைதல்)
43 மூகத்வம் (ஊமை)
44. கத்கதத்வம் (தழதழத்துப் பேசுதல்)
45. வாக்ஸங்கம் (பேசமுடியாமல் அடைப்பு)
46. கஷாயாஸ்யதா (வாயில் துவர்ப்பு)
47. முகசோஷம் (வாய் உலர்தல்)
48. அரஸஜ்ஞதா (ருசியறியும் சக்தியை இழத்தல்)
49 கர்ணசூலம் (காதில் குத்துவலி)
50. அசப்தச்ரவணம் (காது இரைச்சல்)
51. உச்சைச்ரவணம் (உரத்த சத்தம் மாத்திரம் காதில் விழுதல்)
52. பாதிர்யம் (முழுச் செவிடு)
53. வர்த்மஸ்தம்பம் (இமையசையாதிருத்தல்)
54. வர்த்மஸங்கோசம் (கண் இடுங்கிப்போதல்)
55. திமிரம் (கண் மறைப்பு)
56. அக்ஷிசூலம் (கண்ணில் குத்துவலி)
57. அக்ஷிவ்யுதாஸம் (கண் பிதுங்கல்)
58. சங்கபேதம் (பொட்டில் பிளப்பதுபோன்ற வலி)
59. ப்ரூவ்யுதாஸம் (புருவம் உயர்தல்)
60. லலாடபேதம் (நெற்றியில் பிளப்பதுபோன்றவலி)
61. சிரோருக் (தலைவலி)
62. கேசபூமிஸ்புடனம் (மண்டைத்தோல் வெடிப்பு)
63. அர்திதம் (முகம், கை, கால்களில் ஒரு பக்கம் வலியுடன் கோணும்படி செய்யும் வ்யாதி)
64. ஏகாங்கரோகம் (வலது அல்லது இடதுபக்கம் ஒன்றில் மாத்திரம் வலி முதலிய வாத சேஷ்டை)
65. ஆக்ஷேபகம் (உதறுவாதம்)
66. ஸர்வாங்கரோகம் (வலது. இடது, இரண்டு பக்கத்திலும் வலி முதலிய வாதசேஷ்டை)



67. தண்டகம் (கம்புபோல் உடம்பு முழுதும் விறைத்தல்)
68. ச்ரமம் (களைத்துப்போதல்)
69. ப்ரமம் (மயக்கம்)
70. வேபது (நடுக்கம்)
71. ஜ்ரும்பா (கொட்டாவி)
72. ஹிக்கா (விக்கல்)
73. விஷாதம் (உற்சாகமின்மை)
74. ப்ரலாபம் (பிதற்றல்)
75. க்லானி (அயர்வு)
76. ரௌக்ஷ்யம் (வறட்சி)
77. பாருஷ்யம் (உடம்பின் சுரசுரப்பு)
78. ச்யாவாருண பாஸதா (சரீரம், மலம் முதலியன கருமை கலந்த செம்மை நிறமாதல்)
79. அஸ்வப்தம் (தூக்கமின்மை)
80. அநவஸ்திதசித்தத்வம் (மனது ஓரிடம் தரிக்காமல் இருத்தல்)

மேலேகண்ட 80 வியாதிகளும் முக்யமான வாதரோகங்கள். இவைகளே இந்நூலிலுள்ள முறைகளில் வாத ரோகங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவைகளைத் தவிர, குறிப்பிட முடியாத பலசில்லரை உபத்திரவங்களும் வாத தோஷத்தின் ப்ரகோபத்தினால் உண்டாகக் கூடியவை. அவைகளை அடியில் சொல்லப்பட்ட வாத ப்ரகோபத்தின் பொதுவான குணங்கள், சேஷ்டைகளைக்கொண்டு நிச்சயிக்கவேண்டும்.

வாத குணங்கள்:—

1. வறட்சி
2. குளிர்ச்சி
3. இலேசுத்தன்மை
4. ஒட்டிக்கொள்ளாததன்மை
5. உருவமில்லாமை
6. சஞ்சரிக்கும் தன்மை
7. ஓரிடத்தில் ஸ்திரமாக நில்லாமை

வாத சேஷ்டைகள் :—

1. ஸ்தானத்தைவிட்டு நழுவுதல்
2 ஸ்தானத்தைவிட்டு வெகுதூரம் நகரல்
3. பரவுதல்
4. அடைப்பு
5 பிளப்பதுபோன்ற வலி
6. மயிர்க்கூச்சல்
7. மலம் முதலியவைகளை உருட்சையாகச் செய்தல்
8. தாகம்
9. நடுக்கம்
10. உடம்பு வலி
11. துடித்தல்
12 குத்துவலி
13. வலி முதலிய தொந்தரவு
14. நகருதல், உதறுதல் முதலியன
15. சுறசுறப்பு உண்டாக்கல்
16. கடினம் உண்டாக்கல்
17. விலவிலக்கச் செய்தல்
18. த்வாரம் உண்டாக்கல்
19. செம்மை கலந்த கருமை உண்டாக்கல
20. வாயில் துவர்ப்பும் அருசியும் உண்டுபண்ணுதல்
21. வேலையில் மூளை செல்லாமல் தடுத்தல்.
22. குறுக்கல்
23 முடக்கல், முதலியன.

## வாத ரோகம் உண்டாகும் காரணங்கள்.

1. வறட்சி, சீதம் இவைகள் உள்ள அன்னபான பழக்க வழக்கங்களை அதிகமாகக் கையாளுவதாலும்,

2. ஆகாரக் குறைவினாலும்

3. இலகுவான ஆகாரத்தையே சாப்பிடுவதனாலும்

4. அதிகமான ஸ்திரீ சங்கத்தாலும்



5. அதிகமான கண் விழிப்பினாலும்

6. பேதிக்குச் சாப்பிடுதல் வஸ்தி எடுத்துக்கொள்ளுதல், வாந்தியெடுக்க மருந்து சாப்பிடுதல், முதலிய முறைகளில் அளவு கூடிக் குறைவதாலும்

7. இரத்தத்தை வெளிப்படுத்தும் சிகிச்சையில் அளவு மீறுவதாலும்

8. தாண்டுதல், ஓடுதல், நடத்தல், தேகாப்பியாசம் இவைகளில் அமிதமாக ஈடுபடுவதாலும்

9. வலுவுக்கு மிஞ்சிய காரியங்களைச் செய்வதாலும்

10. கவலை, துக்கம், வியாதி, அதிக இளைப்பு இவைகளினால் ஏற்படும் தாதுபுஷ்டிக் குறைவாலும்

11. மலமூத்திராதி வேகங்களை அடக்குவதாலும்

12. ஜீரணமாகாத ரஸம் ஆமவிஷமாக மாறுவதாலும்

13. அடிபடுவதாலும்

14. பசியை அடக்குவதாலும்

15. உயிர்நிலைகளுக்குக் கெடுதி ஏற்படுவதாலும்

16. வேகமாகச் செல்லும் வாகனங்களிலிருந்து விழுவதாலும்

உடம்பிலுள்ள ஸ்ரோதஸ் (ducts) என்னும் த்ரவ மார்க்கங்களில் இருக்கவேண்டிய பொருட்சேர்வு குறைந்து அதை நிரப்புவதற்காக உடம்பு முழுவதும் சஞ்சாரம் செய்யும் சக்தி வாய்ந்த வாயு புகுந்துகொள்கிறது. அப்படிப் புகுந்துகொண்டு ஓர் உறுப்பையோ அல்லது பல உறுப்புக்களையோ அடைந்து பலவிதத் தொந்தரவுகளைச் செய்கின்றது.

## வாத வியாதிகளின் பொதுவான சிகிச்சை.

வாத வியாதிகளுக்கு அடியில்கண்ட சிகிச்சைகள் குணம் தரும் :—

1. இனிப்பு, புளிப்பு, உப்பு, லைப்பு, உஷ்ணம் இந்த குணங்களுள்ள பிரயோகங்கள்.

2. ஸ்நேஹம் (அதாவது எண்ணெய், நெய், கொழுப்பு, முதலியவைகளை உள்ளுக்குக் கொடுத்தோ, வெளிப்பிரயோகம் செய்தோ நைப்பு உண்டாக்கல்)

3. ஸ்வேதம் (மருந்துச் சரக்குகள் சேர்த்துக் கொதிக்க வைத்த நீராவி பிடித்தல், ஒத்தடம் கொடுத்தல், வெந்நீர் ஊற்றல் முதலியவைகளால் வியர்க்கச் செய்தல்)

4. ஆஸ்தாபன வஸ்தி (கஷாயங்களைக்கொண்டு வஸ்தி (enema) கொடுத்தல்), அனுவாஸன வஸ்தி (தைலங்களைக் கொண்டு வஸ்திகொடுத்தல்)

5. நஸ்யம் (மூக்கில் போடும் மருந்து)

6. வாதஹரமான ஆகாரம்

7. அப்யங்கம் (எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்தல்)

8. ம்ருதுவான விரேசனம் (பேதிக்குச் சாப்பிடுதல்)

9. வாதஹரமான சரக்குகள் சேர்த்துக் கொதிக்கவைத்த தண்ணீரில் நனைத்தல்

10. உடம்பு பிடித்தல்

11. பயமுறுத்தல்.

மேலே சொல்லப்பட்ட ப்ரயோகங்களை நோயாளிகளின் வயது, பலம், காலம் இவைகளைப் பொறுத்து அளவாக உபயோகப்படுத்தவேண்டும்.

இவைகளுள் நான்காவதாகச் சொல்லப்பட்ட ஆஸ்தாபன வஸ்தி, அனுவாஸன வஸ்தி இவ்விரண்டும் வாதரோகங்களுக்கு மிகச் சிறந்தது. ஏனெனில் அது அடிமரத்தை வெட்டுவது போல் வாதத்தின் முக்ய ஸ்தானமாகிய பக்வாசயத்திலுள்ள



வாத ப்ரகோபத்தைப் போக்குகிறது. அதனால் கிளைகள் போன்ற மற்ற இடங்களிலுள்ள வாத ப்ரகோபங்கள் சமனத்தை அடையும்.

## வாத ரோகங்களைப்பற்றித் தமிழ் நூல்களில் கிடைக்கும் விபரம்.

தமிழ் நூல்களில் 80 வகை வாத ரோகங்களையும் அவை உண்டாகும் காரணங்களையும், குணகுணங்களையும் தெளிவாகக் கூறியிருப்பது 'யூகிமுனி வைத்திய சிந்தாமணி'யிலுள்ள வாத ரோகங்களைப்பற்றிய பகுதியேயாகும். அது யாவரும் அறியக் கூடிய எளிய தமிழ் நடையில் அமைந்திருப்பதால் அதை இதனடியில் தருகிறோம்:—

### வாத ரோகங்களைப்பற்றி யூகிமுனி வைத்திய சிந்தாமணியிலுள்ள விவரங்கள்.

#### வாத ரோகம் உண்டாவதற்கான காரணங்கள்.

என்னவே வாதமது என்பதாகும்
இகத்திலே மனிதருக்கு எய்யும்வாறு
பொன்னவே பொன்தனையே சோரம்செய்தும்
பெரியோர்கள் பிராமணரைத் தூஷணித்தும்
வன்னவே வஞ்சத்திற் சோரம்செய்தும்
மாதாபிதா குருவை மறந்தபேர்க்கும்
கன்னவே வேதத்தை நிந்தைசெய்தால்
காயத்தில் கலந்திடுமே வாதந்தானே உ௬௪

தானென்ற கைப்போடு துவர்ப்புவர்ப்பு
சாதகமாய் மிஞ்சுகிலும் சமைத்தஅன்னம்
ஆனென்ற ஆறினது புசித்தலாலும்
ஆகாசத் தேற்றநீர் குடித்தலாலும்

பானென்ற பகலுறக்கம் இராவிழிப்புப்
பட்டினியே மிகவுறுதல் பாரமெய்தல்
தேனென்ற மொழியார்மேல் சிந்தையாதல்
சீக்கிரமாய் வாதமது செனிக்குந்தானே. உசரு

### வாதம் கூடிக் குறையும் காலங்கள்.

வாதவர்த்தனை காலமேதோ வென்னில்
மருவுகின்ற ஆனிகற் கடகமாகும்
ஆதஅற்பசியோடு கார்த்திகை தன்னில்
அடருமே மற்றமாதங்கள் தன்னில்
போதவே சமிக்குகின்ற காலமாகும்
பொருந்தியே யிவர்தொழில்தான் கண்திறத்தல்
காதவே கண்மூடல் கைகாலசைத்தல்
கடிந்தோட்ட முடக்கலொடு நீட்டலென்னே. உசசு

### வாதம் எண்பதுக்கும் பெயர்.

என்னவே வாதமது எண்பதாகு
மேற்றமாம் பேருடைய எழிலைக்கேளு
வன்ன வாதஸ்தம்பம், வாதக்ருஷணம்,
வகையான கால்ஸ்தம்பம். தலஸ்தம்பந்தான்,
பொன்னவே பூசுவாதத்தோடொக்கப்
பெரிய காளாஞ்சகம், ஊருஸ்தம்பம்
குன்னவே வாதகண்ணகம், குறிஷ்கிறிஷ்கம்,
கூரான நரித்தலையின் வாதமாமே. உசஎ

தலைகம்ப வாதமொடு, மலைத்தகம்பம்,
தருக்கான பாணிகம்பம், கூனிவாதம்,
அலைய ஆகுனிவாதம், ஆக்ஷேபகந்தான்,
அதிவாத வுப்கதம், நெத்திசூலை,
கலைகன்னசூலை, செவிபடு வாயாகும்,
கடுபக்க வாதமொடு, பக்ஷவாதம்,
திலையபேய் வாதமொடு, ப்ராணலயம்,
சிரஸ்தம்ப மொடு, சந்துவாதமாமே. உசஅ



சந்துவாதத்தோடு, செகனவாதம்,
தரித்த அற்புதவாதம், உரகன்வாதம்,
உந்து உற்காரியொடு, அஸ்வதம்பம்,
உறுதி பாசதம்பம், நேத்திரபவுத்திரம்,
அந்துதெண்ட வாயுவொடு, அஷ்டதந்திர,
அதிவசனு வாயுவொடு, மகாவாதந்தான்,
முந்துமிருத்து வாதமொடு, உதாவர்த்தம்,
விசைமூத்திர உதாவர்த்தமு, மாமென்றே. உசகூ

என்றசுக்கில வாதஞ்சவ்விரங்க வாத,
மெழில் வூர்தவாதமொடு, மஞ்ஞானத்தம்பம்,
தென்றசிரக்கம்ப வாதமொடு சத்தம்பம்
செயவச்சிர ரூபமொடு கண்டக்கிருகம்
நன்றதாம் நகாரியொடு பதிதவாதம்
நலியோனி சூலையொடு குடல்வாதந்தான்
குன்றவஷ்ட சூலையொடு குடல்வாதந்தான்
குறியசுவவாதமெச்சு வாதந்தானே. உருய

தாமூடு வாதமாம் வசுவாதந்தான்
தனுபீசத் தம்பமொடு அந்திரவேட்டி
வான்வாத சுரோணிதம் சித்துவாத சுரோணிதம்
மகத்தான வைகித வாதசுரோணிதம்
ஊனுதிர வாதச்சுரோணிதந் தன்னோடு
உறுபயித்திய வாதசுரோணிதமு மாகும்
தேன்சேத்தும வாதச் சுரோணிதந்தான்
மிக்கச் சினத்துதரவாத சுரோணிதமுங்காணே. உருக

காணவேகுண அவதானகமாம் வாதம்
கண்டக அவதானகமாம் வாதமாகும்
தோணவே சிரக்கம்ப அவதானகந்தான்
சீறியதோர் வாதத்தின்றலை நோக்காடு

பூணவே பித்தத்தின் றலை நோக்காடு
புகழான சேற்றுமத்தின் றலை நோக்காடு
சாணவே சன்னிவாதத்தின் றலை நோக்காடு
தருவிரத்த பித்தத்தின் றலைநோக்காடே. ௨௫௨

நோக்கான கிறுமிகத் தலைநோக்காடு
நுகர்சூரிய வாதமொடு சந்திரவாதம்
ஊக்கான கர்ணவா தந்தன்னோடு
ஒருத்தலையின் வாதபேதமு மேயாகும்
வாக்கான வாதகன்ன சூலையொடு
மருவியதோர் பித்தகன்ன சூலையாகும்
தேக்கான சேற்றும கன்னசூலையோடு
செயமான கிறுமி கன்னசூலைதானே. ௨௫௩

தானனதந்த வாயுவின் றன்னோடு
தாக்கான வாதமது எண்பதாகும்
ஆனன அரன் றனையே துதியாமாந்தர்
அகதி பரதேசியர்க்கு அன்னமீயார்
கோனன குருமொழியை மறந்தபேர்கள்
கொலை, களவு, பொய் காமங் குறித்தபேர்க்கு
ஊனன சடந்தன்னில் வாதம்வந்து
உற்பவிக்கும் வேதத்தின் உண்மைதானே. ௨௫௪

## 1. வாதஸ்தம்ப குணம்.

உற்பவிக்கும் வாதமது மெழுந்துபொங்கி
உயர்காலின் புறவடியைக் குடைந்துபற்றி
தெற்பவிக்கும் வீக்கமாய்ச் செழும்பலுண்டாய்
தேகமெங்கும் நோவாகித் திமிருமாகி
விற்புவிக்கும் வில்லுப்போல் விசுவுமாகி
மீடுக்கான மரந்தனைப்போல் விதனமாகி
பற்பவிக்கும் பரன் றனையே நினையாமூடர்
படுகின்ற வாதஸ்தம்பமு மாம்பாரே. ௨௫௫



## 2. வாதக்ருஷ்ண குணம்.

பார்க்கின்ற பாதவுள்ளடியிற் சாணி
பதித்து வைத்ததுபோல் பாரமெங்கும்
கோர்க்கின்ற குதிநரம்புங் கால்களெங்கும்
கொடிதான பாரமாய்த் திமிர்ப்புண்டாகி
வார்க்கின்ற வார்த்தைகள் தான் மிகவேசெய்து
வறண்டுகினு நிமிண்டுகினும் வசங்கொடாமல்
ஏற்கின்ற காலுளைக்கும் வாதகிருஷ்ண
மீதலற மில்லாதாற் கெய்துங்காணே. ௨௫௬

## 3. கால்ஸ்தம்பம்.

எய்தியே விரிவுதனி லிரண்டுகாலு
மிசைந்த உள்ளடிதனிலு மெரிந்துநோவாம்
அய்தியே அக்கினியில் வைத்தாப்போல
அங்கமெல்லா மிகவெளுத்து உலத்தியாகும்
பொய்தியே புரைதனிலே புழுக்களூர்தல்
போலவே மிகவூர்ந்து நடைகொடாது
கய்தியே வாயுலர்ந்து உடல்கனக்கும்
கணக்கான கால்ஸ்தம்பம் கருதிப்பாரே. ௨௫௭

## 4. தலஸ்தம்பம்.

கருதியே மிகக்கனத்து உள்ளங்காலை
கனக்கவே குடைந்துநொந்து கருகிக்காணும்
வருதியே வணக்கஞ் சத்திலாமலேற
வலித்து மேல்நோக்கியுமே வருத்தங்காணும்
சருதியே சடமுலர்ந்து மேல்மூச்சுண்டாய்
தாகமா யுடம்புலர்ந்து தளர்ந்துகாணும்
கருதியே கடுஉப்பு புளிப்புத்தன்னால்
கனவாதங் கோபித்தே தலத்தம்பங் காணே. ௨௫௮

## 5. பூசுவாத குணம்.

தம்பமா மலத்துவாரந் தனைத்தான்
    தைத்ததோ ரம்புபோல் குடைந்துநொந்து
உம்பமா முள்ளடியி னளவாய்ப்பற்றி
    உறுதியாய் மிகநொந்து குடைச்சல்காணும்
நம்பனூர் பதம்போற்று நரர்கள் தன்னை
    நணுகியே உருக்குலைந்து நலிக்கப்பண்ணும்
கம்பமாங் கனத்துதிரம் வலியுண்டாக்கும்
    கனத்ததோர் பூசுவாதமு மன்றே. ௨௫௯

## 6. காளாஞ்சக வாத குணம்.

வாதமாங் கால்கையின் குரங்கிரண்டும்
    வகுத்துசந்து முருக்கியே குடைந்துநொந்து
நாதமா நடைதானுந் தான்கொடாமல்
    நலிந்துமே முடமாகிக் கறடுகட்டி
சேதமாஞ் செடந்தானு மிகவெளுத்து
    தினவோடு சிரங்குமாய் சேற்றுமமாகி
காதமா யருசியோடு மயக்கமாகுங்
    கருதிய காளாஞ்சகமாம் வாதமாமே. ௨௬௰

## 7. ஊருஸ்தம்பம்

ஆமென்ற வாதமது உள்ளடங்கி
    அடித்துடைதான் குரங்கிரண்டு மளவாய்ப்பற்றிக்
காமென்ற கைகாலில் விரலுஞ்சுற்றி
    கனத்துமே சாணியது பொதிந்தாப்போல
தேமென்ற சிரந்தனிலே பாரமுண்டாய்
    தேகமெங்கு மூதியே திமிருண்டாகும்
நாமென்ற நடக்கொணா வொடுக்கமாகி
    நலி மூருஸ்தம்பமது நணுகுங்காணே. ௨௬௧



## 8. வாத கர்ணகம்.

தம்பமா நடக்கும்போதுந் தரித்துந்
    தாவியே உயரமா யெட்டும்போதும்
வம்பமாம் பள்ளத்திலிறங்கும் போதும்
    மயக்கமாய்த் தள்ளாடி யிடத்துவீழ்ந்தும்
வெம்பமாம் பாம்புவிஷ மேறும்போல
    மிக்கான சரீரமெல்லாந் தளர்ச்சியாகுஞ்
சிம்பமாம் புள்ளூப்போல் பறப்புக்காணுஞ்
    செறிவாத கண்ணகச் சிறப்புமாமே. ௨௬௨

## 9. குறிஷ்கிஷ்க குணம்.

சிறப்பான பாம்புவிஷம் போலேயேறிச்
    செறிவாக இறங்கியதோர் செய்கைபோலுந்
துறப்பான சூறையா யரையில்தட்டை
    சுழலவே சுருக்கித்தான் பற்றியங்கம்
பிறப்பான பீறியதோர் குடலைப்போலப்
    பிதிர்கின்றவன் போலும் பிரமி மெள்ள
முறப்பான தோலில்முள்ளூப் பொதித்தாப்போல
    முயன்றிடுங்காண் குறிஷ்கிஷ்க மூர்க்கந்தானே. ௨௬௩

## 10. நரித்தலைவாத குணம்.

மூர்க்கமாய் முயன்று முழங்கால்தான்வீங்கி
    முதிர்ந்தி ரத்த முந்திரண்டு முயற்சியாகி
நீற்கமாய் நின்றிடவொணாமல் தானும்
    நிமிர்த்திடில் சற்றுந்தான் முடக்கொணாமல்
தூற்கமாய்த் துண்டித்து மிகச்சிக்கென்று
    செழுமை நரித்தலைபோல மிகவேவீங்கி
நாற்கமாய் நாடியுமே படபடக்கும்
    நரித்தலையின் வாதமென்றே நவிலலாமே. ௨௬௪

## 11. கும்பவாத குணம்.

நவிலவே தோள்மீதுங் கரத்தின்மீதும்
நலிவுமெத்த வாகியே நோவுண்டாகுங்
கவிலமே கன்னமொடு நயனந்தானுங்
கடுத்துமே விரிவிரிப்பு மெரிவுங்காணும்
துவிலவே துடிப்பாகுஞ் சிரசுதன்னில்
சுழற்றியே நாபிக்கீழ் வலியுமுண்டாம்
அவிலவே அடிநாக்கில் அழன்றுங்காணு
மலறுமேவரு கும்பவாதந் தானே. ௨௬௫

## 12. மலைத்தகும்பவாத குணம்.

கும்பமாங் கையின் மணிக்கட்டுதன்னிற்
குவிந்தரையிற் போற் சதைபோலூரத்துக்காணுந்
தும்பமாம் அங்கங்கள் துடிப்புண்டாகுந்
துவண்டுமே கால்கையு நடுக்கமாகும்
அம்பமா மரைக்குங்கீழ் திமிருண்டாகும்
அதரமே மிகக்கறுத்து வெடிப்புண்டாகும்
வம்பமாம் வாயுவுத்தான் பரியுநாற்றம்
வருமலைத்த கம்பத்தின் மார்க்கமாமே. ௨௬௬

## 13. பாணிக்கம்ப வாத குணம்.

மார்க்கமாய் வாயுவுமாய் மெய்நிறைந்து
வயிறுதனிற் பசியிலா தூணுமற்று
நார்க்கமாய் ஞாலத்து நடக்கையற்று
நடுக்கமாங் கையிரண்டுந் திமிருமுண்டாம்
ஊர்க்கமாயுறக்க மில்லா துணர்ச்சியற்று
உதறுமே சரீரமெங்கு முலர்ந்துகாணும்
பார்க்கமாம் வாய்விட்டு அலற்றலாகும்
பாணிகம்ப வாதத்தின் பாங்குதானே. ௨௬௭



## 14. கூனிவாத குணம்.

பாங்கான மலப்பாண்டப் பையிற்றூனும்
பண்பாகத்துடங்கியே மலத்துவாரம்
நீங்காமலடக்கியே நோவுமாகி
நினைவில்லாச் சர்த்தியோடு மயக்கமாகித்
தேங்கான தேகமெங்கும் வலியுமாகிச்
சீதளமாய்க் குளிர்ந்துமே காணுங்கண்டாய்
கோங்கான கோழிப்பேன் ஊர்தல் போலுங்
குறிகாணுங் கூனியாம் வாதந்தானே. ௨௬௮

## 15 ஆகுனிவாத குணம்.

கூனியே தேகமெங்குங் குத்தலுண்டாய்க்
குளுகுளென் றேயிருமி வாய்நீரூறி
ஆனியே அங்கமெல்லா மசைதலாகி
யடிக்கடிக்கு வேர்வைதா னதிகமாகி
மேனியெல்லாங் குறுகியே யூதலுண்டாய்
வெளுக்குமே சரீரந்தான் வீக்கமாகும்
பானியே அடிக்கடிதான் வருந்திக்கேட்கும்
பண்பான ஆகுனியின் வாதந்தானே. ௨௬௯

## 16. ஆக்ஷேபக வாத குணம்.

வாதமே கோபித்துச் சரீரந்தன்னில்
வயிறுவிலாப் பக்கங்கள் வாடியாடி
நாதமே யுட்புகுந்து இருபத்தஞ்சும்
நலமறிய ஈரலைப்பற்றி நொந்து
காதமே கைகாலுமோய்ந்து போகுங்
கனக்கவே நோவாகிச் சுருளநொந்து
ஆதமே அங்கமெல்லா மசைதலாகும்
ஆக்ஷேபகமாம் வாதத்தி னுண்மைதானே. ௨௭௰

### 17. வாத உபகத குணம்.

ஆண்மையாங் காலோடு கையுஞ்சந்தும்
அங்கமெல்லா மிகத்திமித்துச் சாணிதானும்
பூண்மையாய்ப் பூசினதுபோலே காணும்
புரண்டுதான் விருவிருத்துப் புளகமாகிப்
பாண்மையாங் கால்கையும் உஷ்ணமாகிப்
பசித்துமே மிகநாணி நடைகொடாது
பாண்மையாய் வாட்டமுறு மயக்கமாகும்
வாதஉபகதந் தன்னை வகுத்தவாறே. உஎக

### 18. நெற்றிச்சூலை குணம்.

வாறான நயந்தகண் புருவமற்றை
மத்தியத்திற்குடைந்துமே மூக்குத்தண்டு
கூறான குரல்வளையைப் பற்றிநொந்து
குடைந்துமே கையோடு கால்கள் ரெண்டும்
ஆறான அங்கமெல்லாங் கடுப்புண்டாகும்
அழுகுரலாய் நித்திரையு மயக்கமாகுந்
தேறான சிரசுதனில் குத்தலுண்டாய்
சிறி நெற்றிச்சூலையின் செய்கைதானே. உஎஉ

### 19. கன்ன சூலை குணம்.

செய்கையாஞ் செவித்துவாரந்தன்னில் நின்று
சிக்கெனவே குச்சிகொண்டு குடைந்தாற்போல
செய்கையாய் நோவுண்டாய்ச் சலிக்குஞ்சிந்தை
சலத்தின்மேல் மனத்துவாய் தாகமுண்டாம்
வைகையாய் வயிறுதனில் மந்தமுண்டாய்
மயக்கமாய் மனதுதனிற் பயமுமுண்டாய்க்
கைகையாய் வாய்கசந்து புளிப்புண்டாகும்
கன்னசூலையின் குணத்தைக் காணுங்காணே. உஎங



### 20 செவிபடு வாயு குணம்.

காணுமே செவிதனிலே சத்தம்போலக்
கடலிரைச்சல் போலவே முழக்கங்காணும்
நாணவே செவியுறுதல் நரம்பைப்பற்றி
நினைவுகளி மண்கொண்டு அடைத்தாற்போலத்
தோணவே தொண்டைதனிற் கபந்திரண்டு
கப்பிறமாய்க் கட்டியா யிறுகிவீழும்
ஊணவே பிறசத்தம் செவியிற்கேளா
உக்கிரமாம் செவிபடுவா யுண்மைதானே. உஎச

### 21. பக்கவாத குணம்.

உண்மையா யுடம்பெல்லாம் வாயுவாகி
உயர்கின்ற நாடியது அசைவுமன்றிக்
கண்மையாய்க் காயமீதினிலே யேறிக்
கசக்கியே பிழிந்துமே வலித்துக்காணும்
பண்மையாய்ப் பக்கத்தி லிசிவுமுண்டாய்ப்
பாரித்துப் பிணக்கையுங் காலும்கோணும்
வெண்மையா யுடம்பெங்கும் வேர்வைகாணும்
மெலிவு பக்கவாதத்தின் விபரந்தானே. உஎரு

### 22. பட்சவாத குணம்.

தானான கால்கோணிச் செத்தாப்போலத்
தாக்கான தரைதனிலே நடக்கொணாது
கானான கைகளொன்றும் பிடிகொடாது
கனமான வுணர்ச்சியன்றிக் கைகள்சோரும்
மானான மயிர்க்கூச்சும் திமிர்ப்புண்டாகும்
வாய்தானும் கோணியே தண்ணீர்வீழும்
பேனான பித்தம்போ லழுன்றுகாணும்
பிறிவு பட்சவாதத்தின் பெற்றியாமே. உஎசு

### 23 பேய் வாத குணம்.

பெற்றியாம் பெருமையாங் காலுங்கையும்
பெருவயிறு நெஞ்சோடு விரலுமூக்கும்
எற்றியா மெறிகழுத்து மெங்கும்பற்றி
யேகமாய் நொந்துடம்பு எங்கும்வீங்கி
யுற்றியாம் ஊணவே நிமிர்த்தெடுத்து
உறுதியாய்ப் பிடிக்கவு மொண்ணுமலாகும்
சத்தியாய் வாய்கசந்து மயக்கமாகுந்
தரித்திடவு மொடாதுபேய்வா தந்தானே. உஎஎ

### 24. பிருஞூலய வாத குணம்.

வாதமாய் வலித்துமே கண்கள் தானும்
வரிசையாங் கருவிழியிற் சோதிதன்னில்
யூதமாய் முழுவெளுப்பாய்த் தான்மறைத்து
உக்கிரமாய் மலந்தானுங் கட்டலாகும்
நாதமாய்க் கையிரண்டுங் காலும்வற்றி
நடுக்கமே யுண்டாகி நலியும்தேகம்
வேதமாய்ச் சொன்னதுதான் தீராதென்று
விளங்கும் பிருஞூலயமாம் வாதந்தானே. உஎஅ

### 25. சிரத்தம்ப குணம்.

தானென்ற மலத்துவா ரத்திறேடு
தாக்கியே சலத்துவாரந் துடங்கி
வேனென்ற நீரிறங்கும்போது தானும்
வெடிபுண்ணில் நோவுபோல் கிலேசம்பண்ணும்
வானென்ற மலங்கடுத்துச் சிறுகிவீழும்
மயிர்க்கூச்சுண்டாகியே வருத்தம்பண்ணும்
தேனென்ற தித்திப்புப்போல் நீராகுஞ்
சிறுகிவீழுஞ் சிரத்தம்பச் செய்கையாமே. உஎகூ



### 26. சந்து வாத குணம்.

செய்கைதான் சந்துகளு மிகத்திமிர்த்து
செடமெங்கும் நொந்துமே மிகவழற்றி
நைகையாய் நவிந்துமே மயிர்க்கூச்சிட்டு
நாணியே முன்போல நடைகொடாது
மெய்கைதான் மயக்கமொடு வாய்நீரூறி
வறண்டிடுமே நாவுதா னடிக்கடிக்குத்
தைகைதான் தரணிதனில் தரிகொடாது
சஞ்சலிக்குஞ் சந்துவாம் வாதங்கேளே. உஅய

### 27. சேகன வாத குணம்.

கேளுமே கழுத்துக்கீழரைக்கு மேலுங்
கெடியான கரமிரண்டு மிகவேநொந்து
வாளுமே சரீரமெல்லாம் கனத்திருக்கும்
வாலிபர்தன் மனங்கண்ணு மயக்கமாகு
மேளுமே யிரண்டுகண்ணு மெரிச்சலுண்டா
மேற்றமாய் மலந்தானு மிறுகிக்காணும்
தேளுமே கொட்டினதுபோல் கடுக்கும்
சேகன வாதத்தினுட தீர்க்கந்தானே. உஅக

### 28. அற்புத வாத குணம்.

தீர்க்கமாய் ஸ்திரீசங்கம் பண்ணும்போதுந்
திடுக்கெனவே வார்த்தை கோபித்தபோதும்
ஊர்க்கமாய் உரத்துத்தான் பாடும்போது
முண்ணும் வலக்கச்சாயப் பாக்குத்தானும்
ஆர்க்கமாய்த் தட்டியே கடித்தபோதும்
அழகான முகந்தன்னில் வாயுக்கோபித்
தார்க்கமாய் மிகச்சிதறி வாயுங்கோணுஞ்
சாங்கமா யற்புதவா தந்தானுமே. உஅஉ

## 29. உரகன வாத குணம்.

அற்புதமாய் நோவாகிப் புருவங்காது
அங்கத்திற் பாதிதான் வலித்தெப்போதும்
தற்புதமாய்க் கோணியே தலையும்வாயும்
தந்தாமிகவே நடுங்கிக் குளிர்ந்துகூசும்
விற்புதமாய் விழிகளுந்தானி மைப்புருதா
மெலிவாகிச் சரீரமெல்லாம் வேர்வையாகும்
புற்புதமாய் வாய்நீரு மிகவேயூறும்
பெரிதான உரகனவாதமும் பேராமே. ௨௮௩

## 30. உற்காரி வாத குணம்.

பேரானநெஞ்சு குரல்வளையும் நொந்து
பெருவிரல் தன்னிலே நோக்கிவாயு
ஆரான அன்னத்தை யிறங்கொட்டாம
லிராவசனங் கொள்ளாம லுதரம்விம்மி
பாரான வாயுதான் மிகவுமூறிப்
பாரமாய் நெஞ்சடைத்துப் பசுந்திருக்கும்
கூரான மேனிமேல் கூச்சலுண்டாங்
கொடிதான உற்காரிவாத மாமே. ௨௮௪

## 31 ஆசுவதம்பவாத குணம்.

வாதமாயுடல் வெளுத்து வடிவெல்லாம்நோம்
மயக்கமோடு இருமலாய் ஈளையுண்டாம்
நேதமாய் நெஞ்சடைத்துப் பொறிகலங்கும்
நெருப்பாக உடல்காணும் நெடுமூச்சுண்டாம்
கோதுதான் மயக்கத்தில் மருந்திலீடால்
குளிர்ச்சியாய்க் கோபிக்குங் கூச்சலுண்டாம்
பாதந்தான் திமிருண்டாய் முள்போலாகும்
பரிஆசுவதம்ப மென்றே பகரலாமே. ௨௮௫



## 32. பாசத்தம்ப வாத குணம்.

பகரவே வாதமது கோபித்தப்போ
பண்பாக ஸ்திரீகோஷ்டி செய்தாராகில்
நகரவே வெகுதூர வழிநடக்கில்
நளிரான காற்றுமே பனிமேல்பட்டால்
மிகுரவே காய்கள்கனி கிழங்குதன்னை
மிகவருந்தி மீறியே தயிர்தான்கொண்டால்
முகுரவே முதுகெலும்பை முறுக்கிநொந்து
முழங்காலுங் கணைக்காலுங் கடுப்புண்டாமே. ௨௮௬

கடுத்துமே சரீரமெங்கும் சோம்பலாகிக்
கண்மயங்கிப் புகைந்துமே கூசிக்காணும்
வடுத்துமே சரீரமெல்லா மிகவும்பற்றி
வாய்வறண்டு புளித்தேக்காய் மந்தமாகி
நடுத்துமே நாடியெங்கும் படபடத்து
நரம்போடு சதைகளெல்லாம் விருத்தமாகும்
அடுத்துமே யிவ்வாதம சாத்தியமாகு
மடுபாசத்தம்ப மென்றே யறையலாமே. ௨௮௭

## 33. நேத்திர பவுத்திர வாத குணம்.

அறையவே நெற்றியோடு புருவங்காது
அதட்டியே நோவாகிக் குடைச்சலாகும்
நிறையவே உடம்பெங்கு மூதலாகும்
நிற்கவுந்தா ளொட்டாமல் தள்ளிப்போடும்
குறையவே தேகமெங்குங் குடைச்சலாகும்
குருவேர்வை மயக்கமோடு கூச்சலுண்டாம்
மறையவே நேத்திரபவுத்திரமு மாகும்
மறைசொன்னபடி யானும் வழுத்தினேனே. ௨௮௮

## 34. தெண்ட வாத குணம்.

வழுத்தவே மூலவாதாரம் பற்றி
　　மருவியே மேலேறி முதுகுண்டாதல்
விழுத்தவே சிரசில்வந்து வேர்வையாகி
　　விருவாக நோவாகி மேனிகன்லிப்
பழுத்தவே உடம்பெங்கும் பஞ்சுபோலாம்
　　பாங்கான மலசலமு மஞ்சளாகும்
குழுத்தவே தெண்டமாம் வாதந்தன்னை
　　கூறினேங் குணமெல்லாங் கூர்ந்துபாரே. உஅகூ

## 35. அஷ்டதந்திர வாத குணம்.

கூர்ந்திட்ட மலசலங்கள் துரிதமானல்
　　கொண்டடக்கிப் பின்புதான் கொடிதாய்த்தள்ளில்
ஊர்ந்திட்ட சரீரத்திலுதிர மீறி
　　லுறத்தேய்த்துத் தலையிலே எண்ணைவார்க்கில்
வார்ந்திட்ட வழிநடக்கில் மெத்தத்தானும்
　　வாதந்தா னுற்பவித்து நடைகொடாமல்
நார்ந்திட்ட நரம்போடு யெலும்பிற்சூழ்ந்து
　　நணுகியே யோடி நெஞ்சிலேறுந்தானே. உகூ௰

ஏறியே யுணர்ச்சியற் றுள்ளுக்குள்ளே
　　யிருந்தால் தானழைத்தாப்போல் சத்தமுண்டாம்
காறியே கண்ணீருமுண்ட வாய்நீர்
　　கசந்துமே முன்போல விழித்திடாமல்
பாறியே பற்கிட்டி மூச்சுமற்றுப்
　　பலகாலும் பிதற்றியே பிணத்தைப்போலச்
சீறியே அடிக்கடிக்கு சேற்றுமமுண்டாஞ்
　　செருக்கு மஷ்டதந்திரத்தின் சேதிதானே. உகூக

## 36. வசனு வாதம்.

தானான தேகமெங்குந் தான்வலித்துச்
　　சங்கற்ப விகற்பமாய்க் கிலேசமாகிப்



பானான பலகுணங்கள் மிகவேயாகும்
　　பரமசிவ னடியார்கட் கணுகிடாது
தானான துஷ்டரையே பற்றிநிற்கும்
　　துடிப்புண்டாய்ச் சோரவே சொருகிவீழும்
கானான காயமது கதித்துக்காணும்
　　கனவசனு வாயுவின்றன் கணக்குத்தானே. உகூஉ

## 37. மக வாதம்.

கணக்காகத் தத்துமேல் வயிற்றைப்பற்றிக்
　　கருகியே பொருமித்தான் வலித்துவீங்கிக்
கிணக்காகச் கீழ்முதுகில் விதனமாகிக்
　　கிஞ்சுகமாய் விதனவூணற்ப மாக்கும்
வணக்காக மலசலந்தான் பலகாலுண்டாம்
　　வருத்தமாய்ச் சடந்தானும் அழன்றுபோகும்
மணக்காக மேனியுமே மஞ்சளாகும்
　　மகவாத குணமென்றே மருவலாமே. உகூங

## 38. மிருத்து வாதம்.

மருவலாம் முடியா பாய்தனிலெலுங்கிப்
　　பண்டியே மேனேக்கி யபானவாயில்
எருவலா யேறி வாயால்நுரைப்பட்
　　டிறுகியே தேகமெல்லாம் வலிக்குங்கண்டாய்
துருவலாய் மலந்தள்ளும் சோபையாகும்
　　சுருக்கென்று கால்கையும் சோர்ந்துபோகும்
பருவலாய் மனதுதான் பயமுமுண்டாய்ப்
　　பார்மிருத்து வாதத்தின் பண்புதானே. உகூச

## 39. உதாவர்த்தம்.

பண்பான குக்ஷியைத்தான் பொருமிநொந்து
　　பருத்துமே மிணறுதான் கனத்துமெத்த
என்பான விக்கலுமே இளைப்புண்டாகி
　　இணைவிழிநீர் பாய்ந்தங்க மிளைப்புமாகி

மண்பான வாதமது நிரம்பியேறி
　　வாயினுன் மலந்தானும் புறப்பட்டாற்போல்
விண்பான நீரதுவும் விடுத்துநிற்கும்
　　மிகுமுதாவர்த்த மென்றே விளம்பலாமே. ௨௯௫

## 40. மூத்திர உதாவர்த்தம்.

விளம்பவே விடுமூத்ரம் வாயிற்றோன்றும்
　　மீறியே நெஞ்சுதனில் அழன்றுநோகும்
நிளம்பவே நெஞ்சுதனில் விக்கமுண்டாம்
　　நித்திரை யில்லாமலே வெதும்பலாகும்
வளம்பவே வயிறுதனில் நோயுமாகும்
　　மகத்தான விக்கலுடன் இருமலுண்டாம்
அளம்பவே அடிவயிறு கனத்துநோகும்
　　அசைமூத்ர உதாவர்த்த வாதந்தானே ௨௯௬

## 41. சுக்கில வாதம்.

வாதமா முடலிறுகி மிகவும்வற்றி
　　மலமூத்ரஞ் சிக்கியே கீழ்வீழாமல்
நாதமாம் நாக்கோடு மூக்குதன்னில்
　　நணுக்கமாய் உதிரந்தா னருவிபாயும்
சேதமாய்ச் சேட்டுமமும் கோழையுண்டாம்
　　செயலோடு சுவாசமாயருசி யுண்டாம்
சூதமாய்ச் சுக்கிலந்தான் றுன்னியாகும்
　　துரியசுக்கில வாதத்தின் சூக்ஷந்தானே. ௨௯௭

## 42. சவ்விரங்கவாதம்.

சூட்சமாய்த் தெய்வவுடல் திகைத்தங்கூர்ந்து
　　தேகமோ வெளுத்துப்பின் கறுப்புமாகும்
ஆட்சமாயருசி யொடு வாந்தியுண்டாம்
　　அடிக்கடிக்குத் தண்ணீர்தான் தட்டிக்கேட்கும்



ஊட்சமாய் அன்னத்தை முன்னேகாணில
　　ஓக்காளந் தன்னோடுப்பு புசமுமாகும்
தாட்சமாய்ச் சலிப்போ டுறக்கமாகும்
　　சவ்விரங்க வாதமென்றே சாற்றுநூலே ௨௯௮

## 43. ஊர்த்வ வாதம்.

நூலான சுவாசந்தான் மேலேநோக்கி
　　நுணுக்கமா மிடையுடனே வயிறுவிம்மி
வாலான வாய்தனிலே நுரையுமுண்டாய்
　　வாய்கழுத்து மார்புமே மிகவும்நொந்து
ஆலான வங்கமெல்லாம் அழன்றுகாணும்
　　அடித்துடையும் அடிக்கையு மிகவேவற்றும்
பாலான மேனியுமே பசுமைகாணும்
　　பருவூர்த்வ வாதமென்றே பகரலாமே. ௨௯௯

## 44 ஐஞ்ஞானத்தம்பம்.

பகர்கின்ற குரல்வளையைப் பற்றிநொந்து
　　பாரமாய் வலித்துமே கீழ்நோக்கெய்தி
நிகர்கின்ற கண்ணதனை மூடிக்கொண்டு
　　நெருநெரென மூக்காலே சுவாசம்போகும்
திகர்கின்ற விரண்டுசெவி தன்னில்நொந்து
　　செழுமையாங் கொட்டாவி வாய்மூடாமல்
மகர்கின்ற வாய்வறண்டு நெஞ்சுகாயு
　　மைஞ்ஞானத் தம்பமாம் வாதமாமே. ௩௱

## 45. சிரக்கம்ப வாதம்.

தம்பமாய் முதிர்கண்ட நரம்பிற்புக்கித்
　　தலையோடு சரீரமெல்லாந் தாக்கிப்புக்கும்
கம்பமாங் காதிரண்டு மிகவுங்கேளா
　　கையோடு காலிரண்டும் வசக்கேடாகும்

நிம்பமாய் நினைவுதான் கலங்கிக்காணும்
நெடுமூச்சுங் கொட்டாவி நித்திரையுமாகும்
சிம்பமாய்த் தலைநடுக்கிக் களைப்புமுண்டாம்
சிரக்கம்ப வாதமென்றே செப்பலாமே. ௩௱௧

## 46. சத்தம்பவாத குணம்.

செப்பவே நடுநாக்கு நுனிநாக்குத்தான்
தெறித்துமே தேள்விஷம்போல் கனுவுமாகும்
அப்பவே அடிநாக்குத்தான் தடிக்கும்
அழகான வாய்தானும் பிதிர்தல்போன்றும்
உப்பவே உண்ணுக்கிற் கடுதூக்கு
முரிசைதா னில்லாமலூறும் நாக்கும்
வெப்பவே விஷந்தானு மமுதம்போலாம்
வெளியான சத்தம்ப விதியிதாமே. ௩௱௨

## 47. வச்சிரரூப வாத குணம்.

விதியான பிடரியைத்தான் மிகவிழுத்து
மிகக்கண்க ளசைவில்லா மேலேநோக்கி
ததியான குறுக்கைபோல் சத்தம்பெற்றுத்
தலைநோவு மிகுதியாய் நடுக்கலுற்றுத்
குதியான நரம்பிழுத்துத் திமிருண்டாகிக்
கொட்டாவி சோம்பலாய்க் கூச்சலுண்டாய்
வதியான மலசலமுஞ் சுருக்கிவீழும்
வச்சிர ரூபந்தன்னின் வகையிதாமே. ௩௱௩

## 48. கண்டக்கிருக வாத குணம்.

வகையான குரல்வளையைப்பற்றி நொந்து
மார்போடு பிடரியினில் வலியுண்டாகி
நுகரான சரீரமெல்லாம் நொந்தழற்றி
நுணுக்கமாய் சுவாசமது புறப்படாமல்



முகையான நாவாலே மூச்சுமாற்றி
முகத்திலே வியர்வையாகி விலாநோவுண்டாம்
பகையான அன்னத்தைப் பருகொட்டாது
பரிய கண்டக்கிருகத்தின் பண்புதானே. ௩௱௪

## 49. நகாரி வாத குணம்.

பண்பான குரல்வளை தானுன் விலாப்பக்கங்கள்
பல்கியே பெருநரம்பைப் பற்றிநோகும்
வண்பாகக் கீழ்வாய்தான் மேல்வாய்தன்னில்
வாயுவங்கே பூரித்து வசனங்கோச்சை
நண்பான நடுநாக்கு மரம்போலாதல்
நசையான தேகமெங்கும் சொரிச்சலாகும்
விண்பான மேலுதடு தடிப்புண்டாகும்
மீறியதோர் ஙகாரியாம் வாதமாமே. ௩௱௫

## 50. பதித வாத குணம்.

காரியாய்மிக வார்த்தை பேசும்போது
கழுத்திலுள்ள நரம்புமிக யிசித்துநோவாம்
வாரியாய் வார்த்தைகள்தான் விக்கிப்பேசி
வார்த்தைகள்தான் பேசுவதில் தெரிந்திடாது
நாரியார் போகமது விரும்பிடாது
நலுக்கமாய் தாதுவெல்லா மிளைத்துக்காணும்
பாரியாயடிக்கடிக்குப் பசியே யுண்டாம்
பதிதமாம் வாதமென்றே பகரலாமே. ௩௱௬

## 51. யோனி தூலை.

பகரவே மலத்துவாரந் தன்னில்தோன்றி
பக்கமா யிறங்கியே யோனிபற்றி
திகரவே குரங்கடி மறையுமுள்ளுஞ்
சிக்கெனவே கோல்கொண்டு குடைந்தாற்பேலே

அகரவே அடிக்கடிக்கு நோ்வுமாகும்
ஆசனமுங் கடுத்துமே நீரிறங்கும்
நகரவே நடக்கும்போ துறக்கமாகும்
நவில்யோனி சூலையென்றே நாட்டலாமே. ௫௧

## 52. கெர்ப்பசூலை வாத குணம்.

நாட்டமாய்க் கன்னியர்கள் துடங்குங்காலை
நலமான கர்ப்பத்தின் ரேகைதன்னில்
பாட்டமாய்ப் பற்றியே வாயுத்தோன்றி
பழகியே புருஷசங்கை பண்ணும்போது
தாட்டமாய்த் தடைபட்டு மலத்தைச்சிக்கித்
தத்தளித்துக் கடுப்பாகி விலாப்பக்கம்நோம்
கேட்டமாய் மனதுதனிற் கிலேசமுண்டாம்
கெர்ப்பமாஞ் சூலையென்றே கீர்த்திப்பாயே. ௫௨

## 53. அஷ்டசூலை குணம்.

கீர்த்தியாய் மலங்கடுக்குங் கெடியாஞ்சோபம்
கீழான வருரேகை தனிலேநின்று
ஆர்த்தியா யலந்திடக் கோபித்துநின்று
அதட்டியா யிருகுறங்கும் யோனிதானும்
கார்த்தியா யுமித்தணலின் காந்தளாகிக்
கடினமாய் நீர்தானும் துளியாய்வீழும்
மூர்த்தியாய் மொறுமொறெனக் கடிக்கும்பல்லை
மீறுமஷ்ட சூலையுட வினையந்தானே. ௫௩

## 54. குடல் வாத குணம்.

வினையாகப் பலவிதமாய்க் குடலைப்பற்றி
மிடுக்காக வலித்துமே நாபிதன்னில்
அனையாக அடிவயிற்றில் நொந்துநொந்து
அழகான விரைதன்னில் வலித்துவீங்கி



மினையாக மிக்கவளியிழிந்து நோவாம்
மிடுக்கான நளிரோடு காய்ச்சலுண்டாம்
தினையாகத் திடுக்கிட்டுத் தலையும்நோவாம்
செப்பினேங் குடல்வாதச் சேதிதானே. ௫௪

## 55. அசுவ வாத குணம்.

சேதியாய்ச் சிறுகுதிரைப் பாய்ச்சலாகிச்
செடமெல்லா மிகக்குலுங்கி கோட்டிபண்ணி
மேதியாய் மேலேறிக் கீழேநோக்கி
வெறிகொண்டாற் போல்மிரண்டு அண்டம்வீங்கி
யேதியா யிரண்டுவிரை யுள்ளேபுக்கி
யிணையிலிங்கமுள் சுருக்கியிழிந்து நோவாம்
ஆதியா மடிவயிறு இசிவுகாணு
மணியசுவ வாதமென்றே யறியலாமே. ௫௫

## 56. மெச்சுவாத குணம்.

அறியவே யாண்மையா மிலிங்கந்தன்னை
யடவாகச் சுருக்கியே குழித்துநோவாம்
நெறியவே நீர்க்கடுத்துச் சிவந்துகாணும்
நேர்மையாய்க் குளிரோடு சுரமுமுண்டாம்
மறியவே தியக்கமொடு மயக்கமுண்டாம்
வாடியே தேகமெங்கு மசதியாகுங்
குறியவே கொட்டாவி சோம்பலாகும்
குறிப்பான மெச்சுவாதமு மாமென்றே. ௫௬

## 57. மூடு வாத குணம்.

மெச்சான பிடரிநரம் பதனைப்பற்றி
மிடுக்காக இறங்கியே மலத்துவாரம்
பிச்சான ததுகலங்கி மேலேயேறிப்
பிறவடியுங் குரங்கடியுஞ் சுற்றிநொந்து

குச்சான கோவணந்தான் வளைந்தாற்போலக்
குறுக்காகி லிங்கத்தில் வலித்துநொந்து
கச்சான காற்றுக்கு மிருதியாகுங்
கடுமூடு வாதத்தின் கருமந்தானே. ந௰ந

### 58. வசு வாத குணம்.

கருமமாய்க் குடல்முடங்கி வயிறளைந்து
கனமாக நொந்துமே மயிற்கூச்சிட்டுப்
பருமமாயுடம் பெங்குந் துடிப்புண்டாகிப்
பாரமாயுடல் கனத்துப் பங்கமாகும்
மருமமாய்த் தோலெல்லா மிறுகிக்கொண்டு
மாசற்ற வுடம்பெல்லாம் வாட்டமாகும்
உருமமா யுசீபனந்தான் வேண்டாதாகு
முயர்வசு வாதத்தி னுண்மைதானே. ந௰ச

### 59. பீஜத்தம்ப வாத குணம்.

உண்மையா யிரண்டுவிரல் தானும்வீங்கி
யுயர்கின்ற புண்போல வலித்துநொந்து
தண்மையாய்ச் சலாகையது யேற்றினாற்போல்
தாக்கான பீசமெங்கும் வலித்துநொந்து
வெண்மையாய் நீருவித்துளியாய் வீழும்
விம்முமே யடிக்கடிக்குத் தண்டுதானும்
பெண்மையாய் மனமதுதான் பிதற்றல்காணும்
பீசமாந்தம்ப மென்றே பேசலாமே. ந௰ரு

### 60. அந்திரவேஷ்டி குணம்.

பேசவே விரையிரண்டும் பெருத்துவீங்கி
பெருக்கவே நோவோடு இசிவுமாகி
காசவே களகளவென் றிசைச்சலாகிக்
கனமான குடல்தனிலே சத்தி*தோறும்

* சத்தி = (ச்சர்தி) வாந்தி.



வாசவே வயற்றினைத்தான் முறுக்கிமெத்த
வலியோடு குளிர்தானுஞ் சுரமுமுண்டாம்
ஆசவே அடிவயிற்றில் குத்தலுண்டாம்
அந்திரமா வேட்டியென்றே யறிந்திடாயே. ந௰சு

### 61. வாத சுரோணிதம்.

அறிந்திட்ட அங்கமெல்லாம் மெலிவுமாகி
யசைவான தவ்விடங்கள் வீக்கமாகி
நறிந்திட்ட நடைகோடா தாலிருத்தல்
நலியாகி மொழிமொழிய வீக்கமாதல்
செறிந்திட்ட தேகமெங்கு மசைவுகாணல்
சோற்றின்மேல் நினைவில்லாத் தூக்கமாதல்
வரிந்திட்ட வாயதனில் நீர்தானூறல்
வாதசுரோணிதந்தானும் வருத்தவாறே. ந௰எ

### 62. சித்துவாத சுரோணிதம்.

வாறுன சரீரமெல்லாம் நுழைந்துவுதல்
மாசற்ற தோல்தானும் இளைந்துபோகும்
நாறுன நாறுபோல் நரம்பிசிக்கும்
நாக்குத்தான் வழுவழுத்துக் கோழையாகும்
நீறுன நெருப்புத்தான் பட்டாற்போலே
நொந்துமே சடமெல்லாங் கொப்பளிக்கும்
வீறுனவுரிந்து பின்னை வெதும்பிவீங்கும்
மிக்கசித்து வாதசுரோணிதமுமாமே. ந௰அ

TAMILNADU ARCHIVES LIBRARY No. ______ MADRAS

### 63. வைகித வாத குணம்.

ஆமென்று வீங்கியதோரிடத்தில் ரத்தம்
அழுத்தமாய்த் திரண்டுமே யெங்கும்பாய்ந்து
ஓமென்று ஓட்டியே திரண்டிருக்கும்
உறுதியாய்த் தொட்டுடனே மெத்தென்றுகும்

தேமென்ற தேகமெங்கனு மிசிக்கும்
சீரியதோர் இருமலோடு காய்ச்சலுண்டாம்
பாமென்ற படந்தனிலே திமிருண்டாகும்
பாரமாய் **வைகிதமாம்** வாதந்தானே. ௩௰௯

### 64. உதிரவாத சுரோணிதம்.

வைகிதமாய்க் கணைக்காலு முழங்கால்தானும்
மர்க்கடமாஞ் சந்துபுற வடியும்வீங்கி
சேகிதமாஞ் சிறுவிரல்கள் மிகவும்நொந்து
சிந்தை தடுமாறியே சலிப்புண்டாகும்
பைகிதமாம் பயித்தியத்தில் வாதமிஞ்சி
பாரமாய் உற்பவித்து அழலுண்டாகும்
உய்கிதமாம் உசீபனமுந்தானும் வேண்டா
**உதிரவாத** சுரோணிதத்தின் உணர்ச்சியாமே. ௩௨௰

### 65. பைத்திய வாத சுரோணிதம்.

உணர்ச்சியாய் சுரோணிதந்தான் மிகவெதும்பி
ஊக்கமாய் தேகமெல்லா மிகவேநொந்து
முணர்ச்சியால் முழங்கால்கள் முழங்கையொக்க
முனையான சிறுவிரல்கள் கன்னம்நெற்றி
தணர்ச்சியாய்ச் சந்துசரு வாங்கமெங்குந்
தாஷ்டீகமாய்க் குடைந்து சுரமுமுண்டாம்
பணர்ச்சியாய்ப் பாண்டதுபோல் மேனியாகும்
**பயித்தியவாத** சுரோணிதத்தின் பண்புதானே. ௩௨௧

### 66. சேற்றும சுரோணித வாதம்.

பண்பாக உடல்குளிர்ந்து ஏறிவீங்கிப்
பதைப்பான இடந்தொட்டால் பாரநோவாம்
திண்பான சிரம்நெற்றி நோக்காடுண்டாம்
சிலேற்றுமமாய்க் கோழையொடு சுவாசமாகும்



மண்பாக மயக்கமொடு கனவுமுண்டாம்
**வாய்வறண்டு** ருசியில்லா வருத்தமாகும்
கண்பாக நாடியுமே படபடக்கும்
**நற்சேற்றும** சுரோணிதவாதம் நாடுங்காலே. ௩௨௨

### 67. உதரவர்த்த சுரோணிதம்.

நாடுமே சுரம்வந்து நடுக்கலுண்டாம்
நாவறண்டு தலைநொந்து உடம்பழற்றி
வாடுமே தேகமெல்லாம் அனிச்சம்பூப்போல்
மகா வருத்தமுண்டாகி மயக்கமுண்டாம்
சாடுமே அடிக்கடிதான் பேதிதானும்
தவிக்குமே தண்ணீர்தான் நாட்டமாகித்
தேடுமே சோற்றின்மேல் நினைவுதானும்
செய்உதரவர்த்த சுரோணிதந்தா னென்னே. ௩௨௩

### 68. குண அவதானகம்.

என்னவே குமரிதான் கெர்ப்பமுண்டாய்
ஏறியே நால்மூன்று திங்கட்குள்ளே
வன்னவே வயிறிழிந்திரத்தம் வீழ்ந்து
வாடியே வயிறெல்லாஞ் சுருக்கிக்கொண்டு
கன்னவே கால்கையு முடக்கமாகிக்
கருகியே தேகமெங்கும் காந்தளாகும்
குன்னவே கோபமது மிகுதியாகுங்
குணகுண அவதானகமென்றே கூறிடாயே. ௩௨௪

### 69. கண்டக அவதானகம்.

கூறியே கெர்ப்பமுண்டாம் பயின்றபோது
குணகியே பச்சுடம்பில் வலிப்புத்தோன்றி
மூறியே மூக்கோடு புருவந்தன்னில்
முடகரமாய் மிகநொந்து வலிப்புண்டாகி

நாறியே நாக்கொடு உண்ணுக்குத்தான்
நலிந்துமே பல்லெல்லாங் கடுப்புண்டாகும்
ஆறியே முன்னர்சொன்னதது அசாத்தியம்
அரிதுதான் கண்டகஅவதானகந் தானுமே* ௩௨௫

## 70. சிரக்கம்ப அவதானகம்.

அவதான அடிச்சிரசு தன்னைப்பற்றி
அதட்டியே பின்னெல்லாம் பற்றிநொந்து
மவதான வடிம்புகுரங்கடியிற் சென்று
வளைந்துடம் பெல்லாம் நொந்துவாட்டமாகி
சிவதான தேகமெங்குந் திமிருண்டாகுஞ்
செடம்போகுங் காலத்திம் மூன்றுங்காணும்
பவதான சிரக்கம்ப அவதானகந்தான்
பாடியதோ ரிம்மூன்று மசாத்தியமாமே. ௩௨௬

## 71. வாதத் தலைநோக்காடு.

சாத்தியமாம் வாதிகையின் றலைநோக்காடு
தண்மையாம் பிடறிபற்றித்தலை நோவுண்டாய்க்
காத்திரமாய்க் காதிரண்டுந் தான்வலித்துக்
கதுப்படியுங் குறட்டோடு மூக்குஉச்சி
நெற்றியுமாய் நெற்றியொடு நோவுமாகி
நெருக்கான ஆய்ப்படித்தாப் போலேகுத்தும்
மாத்தியமாய் மனக்கிலேசப் படுத்தும்மற்றும்
வாதத்தின் தலைநோவு வண்மைதானே. ௩௨௭

---

*"ஆறியே முன்சொன்ன ததுவுமன்றி
அசாத்ய அரிஅவதான சந்தனுமே"
என்று 78 செ. சுவடியில் காணப்படுகிறது.



## 72. பித்தத் தலைநோக்காடு.

வண்மையாய் நிற்கின்ற மூக்குத்தானும்
வடிந்துமே நீர்பாய்ந்து தலைகனத்து
வெண்மையாய் வாய்நீர்தான் மிகவும்ஊறி
மீறியே உண்ணாக்கைப் பற்றிநொந்து
திண்மையாய்ச் செவிதனிலே குத்தலுண்டாய்ச்
சிரசுதான் பாரமாய் மிகக்கனக்கும்
கண்மையாய்க் கண்ணோடு புருவங்குத்தும்
கனமான பித்தத்தின் தலைநோக்காடே. ௩௨௮

## 73. இரத்தபித்தத் தலைநோக்காடு.

சன்னியாய்க் குளிர்ந்துமே வெச்சென்றாகுந்
தாகமே மிகவுண்டாய் மயிர்க்கூச்சாகும்
தின்னியாம் திமிர்த்துமே யிரத்தம்மீறிச்
செவிமூக்கு வாயாலே ரெத்தம்வீழும்
உன்னியாய் உடலதுதான் துடிப்புண்டாகும்
ஊர்க்கமாம் சுவாசமது மெத்தவாகும்
கன்னியாஞ் சரீரமது கருகலாகும்
கதித்தெழுந்த ரேத்தபித்தத்தலை நோக்காடே. ௩௨௯

## 74. கிருமித் தலைநோக்காடு.

கதித்துமே மவுலிபற்றித் தலைநோவுண்டாம்
கடிமூக்குத் தண்டுபுருவம் வலிக்கும்
வதித்துமே வாய்நீர்தான் மிகவும்ஊறும்
வடிவமெல்லாம் நோவாகி மனமறுக்கும்
குதித்துமே கைகாலும் மிடறும்பற்றிக்
குற்றியே விறுவிறென்றே யிருக்கும்
நதித்து நாணற்பூப்போலக் கிறுமிவீழும் ௩௩௰
நாறுமே கிருமிகந்தலை நோக்காடே.

## 75. சூரியாவர்த்தம்.

கந்தமாம் வலப்பக்கம் இடப்பக்கமாதல்
கண்ணடியும் மூக்கடியும் புருவம்பற்றிப்
புந்தமாம் புருவத்தில் ஊசிகுத்துப்
போல்வலிக்குங் கணந்தானுஞ் சுருங்கிக்காணும்
பந்தமா முடம்பெங்கும் பாரமாகும்
பகல்போது தாழ்ந்தவுட னேவுமட்டாந்
துந்தமாம் துந்தும்போல் வலியுண்டாக்கும்
சூரியாவர்த்தந் தன்னின் சொரூபமாமே. ௩௩௧

## 76. சந்திராவர்த்தம்.

சொரூபமா யுடம்பெங்கும் வலியுமாகி
தும்மியே மூக்கடைத்துச் சுகந்தமற்றுப்
புருவமே மிகவலித்து நெற்றியோடு
புண்போலக் குடைந்திட்டுப் புளகமாகி
அருபமாய் அந்தியம்போது தோன்றி
அர்த்தராத்திரி மட்டும் அலைச்சலாகி
சருபமாய் விடிகிற நேரத்தில்தானும்
சாய்க்குமே சந்திராவர்த்த மாமே. ௩௩௨

## 77 கரணுவர்த்தம்.

வத்தமாய் மார்போடு பிடறிகாது
வலித்துமே யாய்ப்புக்கொண் டடித்தாற்போலே
குத்தமாய்க் காதிரெண்டுங் குடைச்சலாகும்
கோணியே கழுத்துங் காதுங்கனக்கும்
அத்தமாய் உச்சியிலும் நெற்றிதன்னில்
அடிக்கடிக்கு நோவாகி யசதியாகும்
பத்தமாய்ப் பசியின்றி உறக்கமில்லை
பார்கரணுவர்த்த மென்றே பகரலாலே. ௩௩௩



## 78. ஒருத்தலையின் வகாதபேதம்.

பகரான ஒருத்தலையைப் பாதிநொந்து
பகழிகொண்டு மவுலிதன்னைப் பிளந்தாற்போல
நிகரான கண்ணும்நீர்பாய்ந்து காந்தி
நெடுமூச்சு விட்டுமே நினைந்துதுன்பம்
நிகரான சடந்தானும் திடுக்குண்டாகிச்
சிணுக்கிரும லாகியே பசிகாணது
வகரான வாதமாய் மயிர்க்கூச்சாகும்
வகாத பேதத்தின் தலைவலியுமாமே. ௩௩௪

## 79. வாதகன்னச்சூலை

வலியாகிச் சீவிழுந்து காதிரண்டும்
மகத்தான சமுத்திரம்போல் இரைச்சலாகி
கிலியாகிச் செவிதனிலே சத்தமுண்டாய்க்
கேள்விகள்தான் வசனமது கேட்டிடாது
பெலியாகிப் பிறவசனத் திசைகேடாகும்
பேய்கொண்ட மனமதுபோல் பேச்சுத்தானும்
அலியாகி ஆணவங்காமியங் குறைக்கும்
அடங்காத வாதகன்னச்சூலை தானே. ௩௩௫

## 80. பித்தகன்னச்சூலை.

தானென்ற இரண்டுசெவி தன்னிலேதான்
தாக்கான கிரந்தியெழுந்து நொந்து
ஊனென்ற உதிரமொடு சீயும்பாய்ந்து
ஊத்தையாங் கும்பிபோல் நாத்தமாகும்
கானென்ற சிரமெங்கும் வண்டுபோலூருங்
காதிரண்டும் பருத்துமே வீக்கமுண்டாம்
பேனென்ற புளகிதமாய்த்தலை யெங்கும்நோம்
பித்தகன்னச் சூலையென்றே புகலுவீரே. ௩௩௬

## 81. சேற்றும கன்னச்சூலை.

புகலவே காதுக்குள் குரும்பிசேர்ந்து
பெருங்கோலைக் கொண்டுதான் குடைந்தாப்போல
நுகலவே நோவாகிப் புண்தானுண்டாம்
நோக்கான சடந்தானும் நுணுக்கமாகும்
இகலவே யிரைச்சலது கொஞ்சங்காணும்
ஏற்றமாய்த் தினவுமே மிகவுண்டாகும்
அகலவே ஆக்கையெல்லாம் வெளுத்துக்காணும்
அரிதான சேற்றுமகன்னச் சூலையாமே. ௫௫௭

## 82. கிருமிகன்னச்சூலை.

ஆமென்ற கம்புமுளை யரிசிபோல
அடைத்துமே காதிரண்டுந் துன்னிப்போகும்
போமென்ற புழுக்களது மெத்தவூர்ந்து
புரண்டுமே புண்ணாகி உதிரம்பாயும்
தேமென்ற சீயோடு சில்லுங்காணுந்
துடித்துமே படபடத்துக் காதிரண்டும்
கோமென்ற சத்தமது கேட்டிடாது
கிருமிகன்னச் சூலையென்றே கீர்த்திப்பாயே. ௫௫௮

## 83. தந்தவாயு.

கீர்த்திப்பாய்க் கெட்டியாய்க் கடித்தலாலும்
கெடியான சீதளங்கள் மிகவேவூறிப்
பார்த்திப்பாய்ப் பல்லதனி லடக்கிறாலும்
பலபலவாம் உதிரந்தான் பற்றலாலும்
மூர்த்திப்பாய் முகமெல்லா மிகக்குடைந்து
முகிளிதமாந் தந்தங்கள் சன்தகரைந்து
நார்த்திப்பாய் நாவடியும் நரம்பும்நோவாம்
நாறுதந்த வாயுவின்தன் நலமதாமே ௫௫௯



## 84. பெரிய வாதம்.

நலமான வாயுவது கோபித்தாக்கால்
நற்சந்து குடைந்துமே பல்லும்நோவாம்
தலமான தலையோடு பிடரிகுத்தும்
தாக்கான மலம்இறுகி நீருங்கட்டுங்
குலமான பெருநரம்புதான் முடங்கும்
குடைச்சலாய் வாய்தானும் வறண்டுகாணும்
பலமான குளிரோடு சுரமுமுண்டாம்
பேர்பெரிய வாதமென்றே பேசலாமே. ௫௬௰

ஆமப்பா வாதமது யெண்பத்துநாலும்
அதினுடைய குணகுணங்கள் அடங்கலாக
ஓமப்பா வடமொழியைப் பிரித்துப்பார்த்து
உலகத்தோர் பிழைக்கவென்று உறுதிசொன்னேன்
தாமப்பா தன்வந்திரி சதாசிவனைக்கேட்கச்
சதாசிவன்தான் சொன்னபடி தாமுங்கேட்டு
நாமப்பா நன்னூல் வெளியாய்ச்சொன்னேன்
நாதாக்கள் சொன்னபடி நாட்டினேனே. ௫௬௧

**வாதநிதானம் முற்றும்**

---

சரபேந்திர சிகிச்சை முறைகளில் சில வாதரோகங்களுக்குப் பழக்கத்தில் உள்ள சிறப்பான பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை விவரிக்கும் பாடல்களும் இடையிடையே காணப்படுகின்றன. அவைகளைத் தொகுத்து இதனடியில் கொடுத்திருக்கிறோம்.

---

### (1) அந்தி வாதம். (2) காக்கை வாதம்.

பேசிடா திருந்திடுவ னழுதிடுவான்
றலைநோகும் பின் மூர்ச்சிக்கும்
ஆசதனிற் கம்பமுண்டா மின்னதந்தி
வாதமென்றே யறியல்வேண்டுந்
தேசுறு கைகால் நடுக்கு மூர்ச்சையாம்
விழிதிரும்புந் தேகஞ் சுற்றும்
மோசம் செய்திடு மிதனையுயர் காக்கை
வாதமென மொழிகுவாரே. ௨௩௩

### (3) தனுர் வாதம். (4) திமிர் வாதம்.

விற்போல வுடல்வளைக்கு நடுக்கமுறும்
பசியாது மிகமூர்ச்சிக்கும்
பொற்பகல வழுதிடுவா னிது
தனுர்வாதமெனப் புகலலாகுங்
கற்போல வுடம்புதிமிர்ந் திடுமானை
போற்றடிப்பாங் காயமெங்கும்
மற்பயில் கைகால்க ளெல்லா மசதியா
மீது திமிர் வாதமாகும். ௨௩௪

### (5) ரச வாதம். (6) சந்தியா வாதம்.

இரவுபக லழுகை யுறுஞ் சூலையுண்டாம்
நாவதுனுக்கியாவுங் கைக்கும்



பிரமை யொடுதாப முண்டா
மீதிரதவாத மெனப் பேசுவார்கள்
வருகாலைப் போதுசுக மந்தியுடல்
நோந்துயிலும் வந்திடாது
மருவுடலு நடுக்கமுறு மழுவலிது
சந்தியா வாதமாகும். ௨௩௫

### (7) சுரோணித வாதம். (8) ஆமில வாதம்.

இரத்தம் வாயாலெடுக்குந் தாகமொடு
மூர்ச்சை விக்கலிசையும் வேர்வை
கருத்தழிக்கு நடுக்கலுறுஞ் சுரோணித
வாதத்தியல்பு காணுமெல்லாம்
பருக்கவ ரோசிகமாகு மருந்தியது
செரியாது பசித்திடாம
லிருக்கும் வயிற்றினிற் சூலையெய்திடு
மாமில வாதமென்பர் நல்லோர். ௨௩௬

### (9) கிக்கிச வாதம். (10) பாரிச சூலை.

உடம்பெல்லாங் கட்டு மெழுந்திட
விருக்கக்கூடாம லுயர்கால்மட்டு
மொடுங்கியிட நோவுளதாங் கிக்கிசவாதத்
தியல்பென் றுரைக்கலாகு
முடம்பெல்லா நோவுளதாந் தலையோடு
கைகானடுக்கு முடலஞ்சுற்று
மொடுங்கிடு நித்திரையில்லை பாரிசசூலத்
தியல்பென் றோது நூல்கள். ௨௩௭

### 11) மது வாதம். (12) ஸ்நான வாதம். (13) கர்ப்ப வாதம்.

தேனருந்தில் வாய்வுளதாந் தாபமுறு
மதுவாதச் செய்கை யீதாம்

மானமுறத் தலைமூழ்கிற் றலைநோகு
    மிதுஸ்நான வாதமாகு
மீனமின்றித் துடையினின்று காலளவு
    நோவுளதா மெதிர்நடுக்கு
மானவிதுதனைக் கம்பவாதமென
    வுரைத்திடுவ ரறிந்துகொன்ளே. ௨௪௮

**(14) தூம வாதம். (15) விஷாகி வாதம்.**

அனஞ்செரியா தரோசிகமாம் பசியாது
    தினவுடம்பி லதிகமாகும்
கனமுறு மின்னது தூமவாதமா
    மதிசாரங் கலந்து நிற்குந்
தினமுடம்பிற் சுரமுளதாம் வாந்தியாந்
    தாகமிகச் சேர்ந்திருக்கும்
மனமதனிற் பிரமையுண்டா மூர்ச்சையாம்
    விஷாகியெனும் வாதந்தானே. ௨௪௯

**(16) குடல் வாதம். (17) இருகால் வாதம்.**

வாந்தியாஞ் செரியாது தலைநோகுஞ்
    சோஷிக்கும் வருத்தமுண்டாங்
காந்தியுடல் வெளுக்குமிது குடல்வாத
    மிருகாலங் கடியதேளிற்
சார்ந்திடு தீவிடம்போலக் கடுத்திடு
    நித்திரை சிறிதுஞ் சார்ந்திடாது
நாந்தமுவ னீதிருகால் வாதமென
    நூல்வல்லோர் செப்பினரால். ௨௫௰

**(18) மூத்திரவாதம். (19) அங்குலி வாதம்.**

மலத்தினொடு சலங்கட்டும் பசியாது தேகத்தில்
    வாதங் கொள்ளும்



கலக்குமிது மலபந்த வாதமாம்
    நீர்கட்டுங் கண்டந்தன்னில்
விலக்கரிய விருமலுறு மின்னது மூத்திர
    வாதம் விளங்குடம்பில்
லெலுத்தி டிளவயதினரை யாந்துயரா
    மங்குலியின் வாதந்தானே, ௨௫௧

**(20) பிரமண வாதம். (21) முணங்கு வாதம்.**
**(22) சன்னி வாதம்.**

சடுதியினிற் கிறுகிறுத்து விழுந்திடுவான்
    விகாரமாஞ் சாற்றிடேது
விடலரிது பிரமணவாதத் தியல்பாஞ்
    சந்துகளின் மிகுநோவுண்டாம்
வடிவதினு நோவுளதாம் நடைகூடாதிது
    முணங்குவாதம் வேர்வை
சடமதனிலுரு துலரும் மலங்கட்டுஞ்
    சுரமுளதாஞ் சன்னிவாதம். ௨௫௨

**(23) சருவ வாதம். (24) விருச்சிக வாதம்.**

அதிவேகமாய் நாடி நடந்திடு நோவுளதா
    மங்கமெல்லா
மிதுசருவ வாதத்தி னியல்பாகு
    முள்ளங்கை யெரிவுண்டாகுங்
கதுவலுறு சூலையுண்டாங் கால்களிற்றேள்
    கொட்டியபோற் கடுப்புண்டாகும்
வதிதலுறு முடம்பெல்லாங் குடைச்சலாம்
    விருச்சிகப் பேர்வாதந்தானே. ௨௫௩

**(25) நாடி வாதம். (26) கன்ன வாதம். (27) சிங்காங்க வாதம்.**

நரம்பெல்லாம் நெறிப்பினோடு நோவுளதா
    மின்னதுதா னாடிவாதம்

விரும்புசெவி நோவுளதாங் கேளாது
வெயில் சிறிதும் விரவிடாது
வரம்பிலா தழுவனிது கன்னவாதந்
தாகமருவும் வெப்பு
வருங்காது கேளாது சடநோகுஞ்
சிங்காங்க வாதச் செய்கை.

### (23) நாநாப்பிராண வாதம். (22) முக வாதம்.

வாசமுறுமலர் தனைமோந் திட்டாற்
றலைதிரும்பு மயக்கமெய்தும்
பேசரிய பயித்தியந்தா னதிகமாமிது
நானாப்பிராண வாதம்
மாசுறு கொட்டாவிகொளின் வாய்கூட்ட
வொட்டாது மன்னுநாவி
லாசிலகு தோடமுறுமிது முகவாதத்
தியல்பென் றறியலாமே. உ௫௫

### (30) நயன வாதம். (31) உதிர வாதம்.

கண்ணொன்றிற் புனல்வடியு மடிக்கடிதான்
திரச்சியுறுங் கலக்கமெய்தி
நண்ணுமது சிவப்பாகு முட்டணமா
மின்னதுதா னயனவாதம்
பண்ணிடு மார்பெலா மிரத்தங் குழம்புமுட
னோவுளதாம் பகருஞ்சூலை
யண்ணிடு மின்னது தன்னை யுதிரவாதக்
குணமென் றறைகுவாரே. உ௫௬

### (32) தூமிர வாதம். (33) கபால வாதம்.

வாயுவினாற் பசுவெருமை யாட்டினோடு
துரங்கமதமா நடக்கும்



பாயபெருந் தூளிகள் மேற்பட்டதனா
லுடலெல்லாம் பருநோவுண்டா
மாயது தூமிரவாத மெங்நேரந்
தலையினோ வணுகிநிற்கும்
மேயதுயில் வாராது கபால வாதக்
குணந்தான் விரவிப்பாரே. உ௫௭

### (34) கட்டுல் வாதம். (35) சாகர வாதம்.

சென்னி வெட்டும் பொழுததனைப் பார்த்தாலும்
வேகமதாய்த் திரும்பினாலும்
மன்னியுறு பிரமையுற்றுப் பேசுவன்
கட்டுல்வாத வகையிதற்கும்
பன்னலுறு வாதரோகத் தனுக்குமிக
விழித்தாற் பசியெடாது
தன்னுடலில் வாயுவினால் நோவுளதாஞ்
சாகரவாதந் தான்பாரே. உ௫௮

## இதர வகைகள்.

இவையன்றி, இன்னும்

(36) ஈரல் வாதம், (37) சூலை வாதம், (38) சுரோணித வாதம், (39) பெருங்கால் வாதம், (40) குதிகால் வாதம் இவைகளின் குணங்கள் முறைகளோடு சேர்த்துக் கூறப்பட்டுள்ளன.

## சரபேந்திர வைத்திய முறை

# வாதரோக சிகித்ஸை முறைகளிலுள்ள மருந்து வகைகளின் அட்டவணை.

### I. தைல வகைகள்.


| நெ. | மருந்துகளின் பெயர். | பக்கம். |
|---|---|---|
| 1. | அமுத சஞ்சீவித் தைலம் (சர்வ வாதத்திற்கும்) ... | 75 |
| 2. | அரக்குத் தைலம் (வாயு, நாட்பட்ட ஜ்வரத்திற்கு) | 48 |
| 3. | அரப்பொடி யெண்ணெய் (மஹாவாதத்திற்கு) ... | 91 |
| 4. | அர்க்காதித் தைலம் (எலும்பு முறிவு, வாள்வெட்டுப் புண்ணிற்கு) ... ... | 13 |
| 5. | அறுகுத் தைலம் (முழங்கால் சோணித வாதத்திற்கு) ... ... | 165 |
| 6. | *(ஆமணக்கெண்ணெய்) மருந்து (பேருங்கால் வாதத்திற்கு) ... ... | 167 |
| 7. | (ஆயில்பட்டை) எண்ணெய் (முடக்கு வாதத்திற்கு) | 119 |
| 8. | (ஆயில்ய) எண்ணெய் (அற்புத வாதம், திமிர் வாதம், முதலானவைகளுக்கு) ... | 93 |
| 9. | (ஆயில்) எண்ணெய் (விஷவாதத்திற்கு) ... | 71 |
| 10. | இலட்சுமிநாராயணத் தைலம் (சர்வ வாதத்திற்கும்) ... ... ... | 23 |
| 11. | (இறைச்சி) எண்ணெய் (விரை வாதத்திற்கு) ... | 139 |
| 12. | எருக்கெண்ணெய் (நரம்பு முடக்கத்திற்கு) ... | 68 |
| 13. | எருக்கெண்ணெய் (ஸர்வ வாதத்திற்கு) ... | 62 |


*பிறைக்குறிகளுள் காணப்படும் பெயர்கள் நமது கற்பனைப் பெயர்களாகும்.

தைல வகைகள்—தொடர்ச்சி.


| நெ. | மருந்துகளின் பெயர். | பக்கம். |
| --- | --- | --- |
| 14. | எருக்காதித் தைலம் (வாத நோய்களுக்கு) ... | 39 |
| 15. | எருக்காதித் தைலம் (மகா வாதத்திற்கு) ... | 90 |
| 16 | ஏரண்டத் தைலம் (சகல வாதத்துக்கு) ... | 12 |
| 17. | (ஐந்தெண்ணெய்) (ஒரு புறத்தண்டவாதத்திற்கு) | 157 |
| 18. | (ஐந்தெண்ணெய் பாஷாணத்) தைலம் (சகல வஞ்சனை வாதத்திற்கு) ... ... | 95 |
| 19. | (கள்ளி) எண்ணெய் (வாதத்திற்கு) ... | 72 |
| 20. | (கற்கடக)த் தைலம் (அறணை பிரண்டி, கைகால் சூம்பிப்போன வாதத்திற்கு) ... | 169 |
| 21. | கார்ப்பாஸாஸ்தியாதி) தைலம் (மகாவாதத்திற்கு) | 88 |
| 22. | (குப்பைமேனி) எண்ணெய் (வாத சந்நியால் முடங்கினதற்கு) ... ... | 117 |
| 23. | (குறட்டைப்பழத்) தைலம் (சகல வஞ்சனைக்கும் வாதத்திற்கும்) ... ... | 94 |
| 24. | குறிஞ்சி எண்ணெய் (வாதத்திற்குப் பூச, தலைபாரத்திற்கு நஸ்யம்) ... ... | 8 |
| 25. | (குன்றி) எண்ணெய் (முகவாதத்திற்கு) ... | 99 |
| 26. | கேதகீ தைலம் (சகல வாதத்திற்கு) ... | 40 |
| 27. | கேதகீ தைலம் (வாத சோணிதம், வாதம்) ... | 49 |
| 28. | (சங்கங்குப்பி) எண்ணெய் (அண்டவாதத்திற்கு) | 160 |
| 29. | சதுர்வகைச்சாறு தைலம் ... ... | 14 |
| 30. | (சாறணை) எண்ணெய் (அண்டவாதத்திற்கு) ... | 158 |
| 31. | சித்ரமூல எண்ணெய் ... ... | 2 |
| 32. | (சித்ர மூல) எண்ணெய் (சகல வாதத்திற்கும்) ... | 86 |
| 33. | சீரகத் தைலம் .... ... | 21 |




தைல வகைகள்—தொடர்ச்சி.


| நெ. | மருந்துகளின் பெயர். | பக்கம். |
| --- | --- | --- |
| 34. | சீரகத் தைலம் ... ... | 44 |
| 35. | தசமூல மரிசாதி தைலம் ... ... | 43 |
| 36. | தசமூல மாஷ தைலம் ... ... | 35 |
| 37. | (தழுதாழை) எண்ணெய் (வாதத்திற்கு) ... | 73 |
| 38. | (தழுதாழை) எண்ணெய் (முடக்கு வாதத்திற்கு) | 120 |
| 39. | (தாளியிலைத்) தைலம் (எரிவாதத்திற்கு) ... | 100 |
| 40. | (திருவ்ருத்) எண்ணெய் (பெருவயிறு, குடல் வாதம் முதலானவைகளுக்கு) ... | 138 |
| 41. | தேற்றான் தைலம் ... ... | 20 |
| 42. | (நக்ர) தைலம் (வாயுவினாலும், வாதத்தினாலும், பில்லிசூன்யத்தினாலும் ஏற்பட்ட கடப்புகள், பல தந்திரத்தினாலும் முடங்கின கைகால் தீர)... | 115 |
| 43 | நத்தைச்சூரி எண்ணெய் ... ... | 1 |
| 44. | நிம்பாதித் தைலம் ... ... | 3 |
| 45. | (நிர்குண்டித்) தைலம் (எரிவாதத்திற்கு) ... | 101 |
| 46. | (நிர்குண்டித்) தைலம் (முழங்கால் வாதத்திற்கு) ... | 111 |
| 47. | (நிர்குண்டித்) தைலம் (கழல் வாதத்திற்கு) ... | 123 |
| 48. | பஞ்சார்க்கத் தைலம் ... ... | 17 |
| 49. | பஞ்சார்க்கத்தைலம் ... ... | 29 |
| 50. | (பலாவில்வாதி) தைலம் (திமிர்வாதத்திற்கு) ... | 109 |
| 51. | பலாதசமூலாதி தைலம் (உள் நடுக்கு வாதத்திற்கு) | 102 |
| 52. | (பிரஸாரணீ) தைலம் (முகவாதத்திற்கு) ... | 93 |
| 53. | பிருங்காமலகத் தைலம் ... ... | 45 |
| 54. | பீலுத்தைலம் ... ... | 37 |

நே. மருந்துகளின் பெயர். பக்கம்.

### தைல வகைகள்—தொடர்ச்சி.


55. புளியிலைத்தைலம் (திமிர் வாதத்திற்கு) ... 110
56. பூதிகா தைலம் ... ... 9
57. (பெருகுறிஞ்சான்) எண்ணெய் (குடல் வாதத்திற்கு) ... ... ... 149
58. மரகதாஞ்சனத்தைலம் (குடல் வாதம், சுரோணித வாதம் முதலானதற்கு) ... 125
59. (மயூர சிகைத்) தைலம் (வாதப்பிடிப்பிற்கு) ... 130
60. மஹா நாராயணத் தைலம் ... ... 31
61. (மஹாவாதத்) தைலம் (குன்மம், குடல் வாதத்திற்கு ... ... ... 132
62. மாஷத் தைலம் ... ... 22
63. (மிளகுப்பழ) தைலம் (சுரோணித வாதத்திற்கு)... 165
64. முருங்கைவேர்த் தைலம் ... ... 18
65. (ரஸப்பாஷாணத்)தைலம் (சூலை வாதத்தின் குணமும், மருந்தும்) ... ... 106
66. லசுன பிஷ்டித்தைலம் ... ... 15
67. லசுன தைலம் (அண்டவாதத்திற்கு) .... 159
68. லசுனாதி தைலம் (குடல்வாதம், முதலானவைகளுக்கு) ... ... ... 141
69. வாத தைலம் ... ... 56
70. வாத தைலம் ... ... 57
71. வாத தைலம் (எண்பதிற்கும்) ... ... 59
72. வாத தைலம் ... ... 61
73. விஷமுஷ்டித் தைலம் ... ... 65
74. (வெண்ணொச்சித்) தைலம் (வாதத்திற்கு) ... 82




நே. மருந்துகளின் பெயர். பக்கம்.

### தைல வகைகள்—தொடர்ச்சி.


75. (வேப்பெண்ணெய்) மருந்து (வாதக்கட்டுக்கு) ... 118
76. (வேலிப்பருத்தி) எண்ணெய் (ஈரல் வாதத்திற்கு)... 104
77. க்ஷீர தைலம் (சகல வாதத்திற்கும்) ... 76


## II. கல்க மருந்துகள்.


1. (கழற்சிக்)கல்கம் (விரை வாதம், அண்டவாத வீக்கத்திற்கு) ... ... 162
2. (கையாந்தகரை) மருந்து கல்கம் (அண்டவாதத்திற்கு) ... ... ... 156
3. (சாறணைக்கொழுந்து) கல்கம் (குடல் வாதத்திற்கு) 148
4. (திரிகடுக்) கல்கம் (கழல் வாதத்திற்கு) ... 84
5. (தேவதாருக்) கல்கம் (விரை வாதத்திற்கு) ... 152
6. (பூண்டு கள்ளிக்) கல்கம் (முடங்கின வாதம், வாத கரப்பான், சூலை, கூன், இடுப்பு பிடிப்பிற்கு) ... 121
7. (பெருங்காயக்) கல்கம் (அண்ட வாதத்திற்கு) ... 149
8. (மாவலிங்கைக்) கல்கம் (வயிறு வலி, குடல் வாதத்திற்கு) ... ... 142
9. (முள்முறுக்கஞ்சாறு) மருந்து (அண்ட வாதத்திற்கு) ... ... ... 154
10. லசுன பிஷ்டி ... ... 35
11. (லசுன பிஷ்டி) (குடல் வாதத்திற்கு) ... 145
12. (வீழிவேர்க்) கல்கம் முதலிய மருந்துகள் (குடல் புரட்டு, குடல் வாதத்திற்கு) ... 151
13. (கழல்கொடி) மருந்து (கழல் வாதத்திற்கு) ... 125
14. (கழல்கொடிவேர்க்) கல்கம் (குடல் வாதத்திற்கு) ... 147
15. (கழற்கொடி) மருந்து (அண்டவாதத்திற்கு) ... 161

| நெ. | மருந்துகளின் பெயர். | பக்கம். |
|---|---|---|

### III. கஷாயம்.

| | | |
|---|---|---|
| 1. | (தேற்றான்) கஷாயம் (அண்டவாதத்திற்கு) | ... 156 |
| 2. | (நந்தியாவட்டையிலைக்) கஷாயம் (குடல் வாதத்திற்கு) ... ... | ... 150 |
| 3. | (பிரப்பங் கிழங்கு) கஷாயம் (சூலை, திமிர்வாதத்திற்கு) ... ... | ... 113 |
| 4. | (முடக்கித்தான்கொழுந்து) கஷாயம் (குடல் வாதத்திற்கு) ... ... | .... 151 |
| 5. | (முடக்கித்தான் கொழுந்து) கஷாயம் (அண்டவாதத்திற்கு) ... | ... 153 |
| 6. | (வெந்தய) கஷாயம் (விரை வாதத்திற்கு) | ... 163 |
| 7. | (வேம்புக்) கஷாயம் (கடுப்பு வாதத்திற்கு) | ... 132 |

### IV. மாத்திரை.

| | | |
|---|---|---|
| 1. | குக்குலு மாத்திரை (மேக விரணம், மார்பு விரணம், வலி, வாதம் முதலியவைகளுக்கு) | ... 50 |
| 2. | குருவுண்டை (சகல வாதத்திற்கும்) | ... 53 |
| 3. | வடவானல ரஸம் ... | ... 80 |
| 4. | விஷ்ணுபராக்ரம ரஸகுளிகை | ... 55 |
| 5. | (வேலம்பிசினி) உருண்டை (இடுப்பு வலிக்கு) | ... 133 |

### V. ஒத்தடம், வேதுகள்.

| | | |
|---|---|---|
| 1. | (ஆவாரையிலை) ஒத்தடம் (ஆனந்தவாதம், விரை வாதத்திற்கு) ... | ... 164 |
| 2. | (எட்டி எண்ணெய் என்று போடப்பட்டிருப்பினும் இது நொச்சி வேது) (வாதத்திற்கு) | ... 70 |
| 3. | (எருக்கமொட்டு) ஒத்தடம் (விரை வாதத்திற்கு) | ... 145 |
| 4. | (வேலிப்பருத்தி) வேது (குதிகால் வாதத்திற்கு) | 170 |





| நெ. | மருந்துகளின் பெயர். | பக்கம். |
|---|---|---|

### VI. நெய் வகை.

| | | |
|---|---|---|
| 1. | கண்டங்கத்திரி நெய் (சகல காசத்திற்கும்) | ... 85 |
| 2. | சேங்கொட்டை நெய் ... | ... 42 |
| 3. | (திரிகடு) நெய் (குடல் வாதத்திற்கு) | ... 148 |
| 4. | பாஷாண நெய் ... | ... 47 |

### VII. பத்து மருந்துகள்.

| | | |
|---|---|---|
| 1. | (ஆதண்டைப்) பத்து (முழங்கால் வாதத்திற்கு) | ... 112 |
| 2. | (எருக்கம்) பால் பத்து (குதிகால் வாதத்திற்கு) | ... 171 |
| 3. | (மாவலிங்கப்)பத்து (இடுப்பு வாதத்திற்கு) | ... 132 |
| 4. | (முட்காவேளைப்) பத்து (பெருங்காலுக்கு) | ... 168 |

### VIII. சூரண வகைகள்.

| | | |
|---|---|---|
| 1. | அமுத சர்க்கரை (பலவித வாதம், சூலை, குன்மம் முதலியவற்றிற்கு) ... | ... 79 |
| 2. | குக்கிலாதி சூரணம் (வாதம், வாயுக்களுக்கு) | ... 97 |
| 3. | சவ்யாதி சூரணம் ... | ... 66 |
| 4. | வாதராட்சஸ சூரணம் ... | ... 52 |

### IX. பணியார வகைகள்.

| | | |
|---|---|---|
| 1 | (எருக்கிலைக்) களி (இடுப்பு வலிக்கு) | ... 108 |
| 2. | (கழற்சிக்கொழுந்து) அடை (அண்டவாதத்திற்கு) | 155 |
| 3. | (குமிழம்வேர்ப்) பிட்டு (கழல் வாதத்திற்கு) | ... 124 |
| 4. | (திரட்டுப் பால்) மருந்து (இடுப்பு வலிக்கு) | ... 129 |
| 5. | (நிர்குண்டிப்) பிட்டு (முடக்கு வாதத்திற்கு) | ... 114 |

| நெ. | மருந்துகளின் பெயர். | பக்கம். |
|---|---|---|

### X. லேகியம்.


1. (கண்டத்திப்பிலி) லேகியம் (இடுப்பு வலிக்கு) ... 130
2. (மாஷாவ) லேஹம் (தண்டுவாதத்திற்கு) ... 163
3. (வாசாதி) லேகியம் (க்ஷயத்திற்கு) ... 172


### XI. இதர மருந்துகள்.


1. (கோழிமுட்டை) மருந்து (அண்டவாதம், வீக்கம், சூலைக்கு) ... ... 154
2. சிநேகப் பொட்டணம் (80 வாதத்திற்கு) ... 64
3. நிர்குண்டிக் குழம்பு ... ... 7
4. நிர்குண்டிச் சிநேகப்பொட்டணம் (சந்துவாதம் முதலியவைகளுக்கு) ... ... 170
5. (பூண்டு) மருந்து (அண்டவாதத்திற்கு) ... 125
6. (ஆட்டுப்பால்)மருந்து (ஓடிக்குத்து முளைப்புக்கு) .. 114
7. (கடுகாதி) இடிமருந்து (குடல் வாதத்திற்கு) ... 144
8. கலிங்காதிக் கடுகு (குன்மம், கட்டி முதலியவைகளுக்கு) ... ... ... 5
9. (எருக்கெண்ணெய்) புகை (வாதத்திற்கு) ... 69
10. (பாவட்டையிலைச்) சாறு மருந்து (வயிற்று வலி, குடல் வாதத்திற்கு) ... ... 143




# சரபேந்திரர் வைத்ய முறைகள்

## வாதரோக சிகிச்சை

### 1. நத்தைச்சூரி யெண்ணெய்

நத்தைச் சூரிமுற்றின வேர்
நலமாய் மூன்று பலத்துட் கூட்டே
யொத்த வசம்பு பலமுக்கா
லுயர்ந்தபூண்டு காற்பலமே
யித்தை யம்மி தனிலிட்டே
யிதமாய்நறுக்கி யேரண்டச்
சுத்தவெண்ணெய் படியதனிற்
றுலங்கத்தூவிப் பத்தெரியே. (1)

எரித்த எண்ணெய் புண்ணுக்கி
லீந்துமேலும் பூசிடவே
வருத்தமான சில்விடமும்
வண்டுகடியும்புடை யனுடன்
பெருத்த வாத கரப்பானும்
பெரியசூலை சுருட்டைகணந்
தரித்த மாந்தம் போர்மாந்தந்
தணியும் வாதமெண்பதுடன். (2)

பாதவீக்க மேற்றேய்த்துப்
பண்பாயுடம்பெல்லாம் பூசி

பேதமில்லா வெந்நீரைப்
பெருக்கவிட்டுக் குளித்திட
காதமோடுநோ யெல்லாங்
கண்டுசொன்னோம் மிம்முறை
போதுநத்தைச்சூரி யெண்ணெ
யென்னவுயர்ந் தோருரைத்தனரே. (3)

(இதன் பொருள்)

| | |
|---|---|
| முற்றின நத்தைச்சூரிவேர் | 3 பலம் |
| வசம்பு | $\frac{3}{4}$ பலம் |
| பூண்டு | $\frac{1}{4}$ பலம் |

இவைகளை அம்மியிலிட்டு நன்றாய் நசுக்கி ஒருபடி சுத்த ஆமணக்கெண்ணெயிற் கலந்து பதமாக எரிக்கவும்.

எரித்த எண்ணெயை அதன் கடுகுடன் சேர்த்து மேலே பூசிட சில் விஷங்களும், வண்டு கடியும், புடையனும், வாதகரப்பானும், சூலை, சுருட்டை, சணைமாந்தம், போர்மாந்தம், வாதம் எண்பது வகையும் தீரும். கால் வீக்கத்திற்கு மேலே தேய்த்து உடம்பெல்லாம் பூசி வெந்நீரில் ஸ்நானம் செய்யக் குணமாகும்.

---

## 2. சித்திரமூல எண்ணெய்

சித்திரமூலம் வெள்ளுள்ளி
சிறந்தகடுக்காய் வகைமூன்றும்
ஒத்தநிறை யொவ்வொர் பலமாய்
ஒன்றாயிடித்துத் தூளாக்கி
யத்தூடன்னை வடிகட்டி
யரியவேம்பி னெண்ணெய்தனிற்
பத்தியுடனே மனமுற்றுப்
பதமாயெரித்து வடிகொள்ளே. (4)



வடித்தவெண்ணெய்தனை நித்தம்
வராகனெடை யொன்றுள்ளுக்குக்
கொடுத்து மேலும் பூசியே
குலவுவெந்நீர்தனிற் குளித்தே
யடுத்தங்கொரு நாற்பதுதினந்தான்
அகற்றி விட்டாற் புளிதன்னைத்
தொடுத்த வாதம் பதினெட்டுந்
தொடாதோடுங் கண்டாயே. (5)

(இ-ள்.)

சித்திரமூலம் (கொடிவேலி வேர்)
வெள்ளுள்ளி (வெள்ளைப்பூண்டு)
கடுக்காய்

இவைகளை வகைக்கு ஒருபலம் எடுத்து, இடித்துத்தூளாக்கி வஸ்திரகாயம் செய்து நல்ல வேப்பெண்ணெய்விட்டுப் பதமாய் எரித்து வடிக்கட்டிக் கொள்ளவும்.

இந்த எண்ணெயைத் தினமும் ஒரு வராகனெடை உள்ளுக்குச் சாப்பிட்டு, மேலும் பூசி வெந்நீரில் குளித்துவரவும். இவ்வாறு 40 நாள் புளியை நீக்கிப் பத்தியமாக இருந்துவரப் பதினெட்டுவித வாதமும் போகும்.

---

## 3. நிம்பாதித் தைலம்

பதினெண் வாதந்தீருதற்கும்
பகர்வேனிம்பாதித் தயிலம்
புதுவேப்பெண்ணெய் காற்படிமேற்
புகழ்நல்லெண்ணெ யவ்வளவு

சதுரக்கள்ளி வெதுப்பிக்கொள்
    சாற்றினுடனே மாம்பட்டை
முதிராவிலை நன்முகிழ்ச்சாறு
    மொழிந்த வெருக்கின் வேர்ப்பட்டை. (6)

பட்டைச் சாறிவ்வை வகையும்
    பண்பாய் வகைக்குப்படி யரைசேர்த்
தெட்டிக்கொட்டை பதினைந்தும்
    இதமாயரைத்திட்டே யெரித்துக்
கட்டுவாத சூலையுடன்
    கனத்தவாத நோய்க்கெல்லாந்
தொட்டுப்பூசிப் பிடித்திடவே
    தொலைந்துபோகு மின்னங்கேள். (7)

இன்னம் நொச்சித்தழைத் தண்ணீ
    ரிதமாய்க்காய்ச்சி வைத்துக்கொண்
டன்னமுண்டு நடுப்பகற்போ
    தந்தத்தைலம் பூசியே
சொன்ன தழைநீர்தன்னை விட்டுச்
    சுருளப்பிடித்தும் விடாதிருந்தாற்
பின்னு நாலுநாள் செய்யப்
    பெயரும்வாதம் புளிதள்ளே. (8)

(இ-ள்.)

| | |
|---|---|
| புது வேப்பெண்ணெய் | ¼ படி |
| நல்லெண்ணெய் | ¼ படி |
| சதுரக்கள்ளியை வெதுப்பிப்பிழிந்தசாறு | ½ படி |
| மாம்பட்டைச்சாறு | ½ படி |
| மாங்கொழுந்துச்சாறு | ½ படி |
| மாம்பூவின்மொக்குச்சாறு | ½ படி |
| எருக்கம்வேர்ப் பட்டைச்சாறு | ½ படி |

இவைகளைச்சேர்த்து, பதினைந்து எட்டிக்கொட்டைகளை எடுத்து அரைத்துச் சேர்த்து எண்ணெய் எரித்து வைத்துக்



கொள்ளவும். கட்டுவாதம், சூலை, மற்றும் கனத்த வாதத்துக்கெல்லாம் மேலே பூசிப் பிடித்துவிட நோய் தீரும்.

நொச்சித்தழையைப்போட்டு வெந்நீர் காயவைத்துக் கொண்டு மத்தியானம் சாப்பிட்டவுடன் இந்தத் தைலத்தைப் பூசி நொச்சித்தழைத் தண்ணீரைவிட்டு சுருளப்பிடித்துவிட வாதம் தீரும். அதில் உடனே குணமாகாவிடில் இன்னும் நாலுநாள் புளிதள்ளிப் பத்தியமாக இருந்து அதேவிதமாகப் பிடித்துவிடத் தீரும்.

---

## 4. கலிங்காதிக்கடுகு

பேயுறு கொம்மடிக்காயின் சாறுேர்சேர்தான்
    பேதமில் லாமணக்கெண்ணெயரைச்சேராகும்
நேயமுறக் கலந்திரண்டு மனலில்வைத்து
    நினைவாக நுரையடங்கக் காய்ச்சிக்கொண்டு
வாய்விளங்கம் யவச்சாரம் வசம்பினோடே
    வளமான கொடிவேலி கடுக்காயோமங்
காயந் திப்பிலிமூலங் கிரும்பு நல்ல
    கரியசீரகத்துடன் திப்பிலியுமாமே. (9)

சீரகம் வெங்காரத்தி னுடனைந்துப்பு
    சிற்றரத்தை சதகுப்பை கடுகுசத்திச்
சாரம் வகைக்கொவ்வொரு காசெடையேயாகத்
    தப்பாமலிடித்து வடிகட்டிக்கொண்டு
நேர்மையுறக் காய்ச்செண்ணெய் தனிலேயிட்டு
    நினைவாகத்தானியத்துள்நாள் மூவைந்து
சார்வாக வைத்தெடுத்துத் தேனுங்கூட்டிச்
    சாப்பிடவே தீருநோய் சாற்றக்கேளே. (10)

கேளுமகோதரங் குன்மம் வயிற்றுக்கட்டி
கீழ்வயிற்றின் வலியுடனுந் தமர்வாயுவும்
நாள்பட்ட வழிநோவு பக்கச்சூலை
நலமில்லாத் தூனி பிரதூனியோடு
தாள்வலிபின் பலவிதமாம் வாயுவெல்லாஞ்
சாந்த மாங்கலிங்காதிக்கடுகினாலே
யாளின் வலியறிந்திசையுமனுபானத்தோ
டருந்தவே தீருமின்னமநேக நோயே. (11)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| பேய்க் கொம்மட்டிக்காய்ச்சாறு | 1 | சேர் |
| ஆமணக்கெண்ணெய் | $\frac{1}{2}$ | சேர் |

இவ்விரண்டையும் அனலில்வைத்து நுரையடங்கக் காய்ச்சிக் கொண்டு,

| | |
|---|---|
| சதகுப்பை | யவச்சாரம் (யவக்ஷாரம்) |
| வாயுவிடங்கம் | கொடிவேலி |
| செம்பு | ஓமம் |
| கடுக்காய் | திப்பிலி |
| பெருங்காயம் | வெண்காரம் |
| சீரகம் | சிற்றரத்தை |
| ஐந்துப்பு (கடலுப்பு, | கடுகு |
| இந்துப்பு, அட்டுப்பு, | சத்திச்சாரம்(ஸர்ஜக்ஷாரம்) |
| வளையலுப்பு, உவர் | |
| மண்உப்பு) | |

இவை வகைக்கு ஒரு காசெடை எடுத்து, இடித்து, வஸ்திர காயம் செய்து, காய்ச்சிவைத்திருக்கும் எண்ணெயிற்கலந்து 15 நாள் தானியபுடம் வைத்துப் பிறகு எடுத்துத் தேன்கூட்டிச் சாப்பிடத் தீரும் வியாதிகள்:—



குன்மம், வயிற்றுக்கட்டி, கீழ்வயிற்றின் வலி, தமர்வாயு, நாள்பட்ட வழிநோவு, பக்கச்சூலை, தூனி, பிரதூனி, இன்னும் பலவிதமான வாயுவெல்லாந்தீரும்.

நோயாளியின் உடல் வலிமை நோயின் வலிமை இவற்றிற்குத் தகுந்தவாறு அரைக்காசெடை முதல் வலுவுக்குத் தகுந்தபடி அனுபானத்துடன் இந்த மருந்தை அருந்த மேலே கண்ட நோய்களும் இன்னும் அநேக நோய்களும் தீரும்.

---

## 5. வாதத்துக்கு நொச்சிக்குழம்பு

முற்ற நொச்சி யிலைச்சாறு மூன்றுபடி பானையில்
விட்டு
வற்றக் காய்ச்சி யாழாக்கு வாங்கி யதனை மண்
டலந்தான்
நித்தங் கழஞ்சி யுட்கொண்டு நேராய் மேலும்
பூசிடவே
பற்றும் வாத நோய்க ளெல்லாம் பறந்துபோகுங்
கண்டாயே. (12)

(இ-ள்.)

முற்றின நொச்சி யிலைச்சாறு 3 படி பானையில் விட்டு ஒரு ஆழாக்காக வற்றக் காய்ச்சி, அதனை ஒரு மண்டலம் கழஞ்சியெடை வீதம் உள்ளுக்குச் சாப்பிட்டு, மேலும் பூசிவர எல்லாவித வாதநோய்களும் தீரும்.

---

## 6. குறிஞ்சி யெண்ணெய்

குறிஞ்சி வேரோர் நூறுபலங் கொண்டு வந்தே
 தறித்திடித்துப்
பெருஞ்சால் தனிலடைத்ததனைப் பிசகாதொரு
 தூணிப் பதக்கு
நறுந் தண்ணீர் விட்டோர் குருணி நண்ணக்
 காய்ச்சிப் பால் படியு
மறிந்தி டெண்ணெய் நாழியுமே யடைவா
 யதனிலிடு வாயே. (13)

ஏல மதுர மரமஞ்ச ளிலவங்கந் திப்பிலி
 நற்கச்
சோல மோமம் பெருங்காயஞ் சுக்கிந் துப்பு
 மாஞ்சில் சிறு
மூல மரத்தை யசுவகந்தி முதிர்ந்த தேவதார
 ந்தக்
கோல மகில் சந்தன மஞ்சள் குங்குலிய நற்
 சீரகமே. (14)

சீரா மினியவரேணுகநற் சவ்வியங் குப்பை
 நன்னாரி
நேராய் வகைக்குக் கழஞ் சதுவே நிறுத்தே
 யரைத்துக் கரைத்திட்டுக்
கூராய்ப் பதத்தில் வடித்தருந்து குலவிக் குறிஞ்சி
 யெண்ணெய் சிரப்
பாரந்தனக்கு நசியமிடு பருத்தவாதம் போம்
 பாரே. (15)

(இ-ள்.)

குறிஞ்சி வேர் 100 பலம் கொண்டுவந்து இடித்து ஒரு பானையில் போட்டு 6 மரக்கால் தண்ணீர் விட்டுக்குருணியாகக் காய்ச்சி அதில்,



பால் 1 படி
நல்லெண்ணெய் 1 நாழி (அரைட்படி)

விட்டு,

| | |
|---|---|
| ஏலம் | அதிமதுரம் |
| மரமஞ்சள் | இலவங்கம் |
| திப்பிலி | கச்சோலம் |
| ஓமம் | பெருங்காயம் |
| சுக்கு | இந்துப்பு |
| சடாமாஞ்சில் | சிறுமூலம் |
| பேரரத்தை | |
| முதிர்ந்த தேவதாரம் | அகில் |
| சந்தனம் | மஞ்சள் |
| குங்கிலியம் | சீரகம் |
| அரேணுகம் | சவ்வியம் |
| சதகுப்பை | நன்னாரி |
| அசுவகந்தி(அமுக்கிரா வேர்) | |
| தக்கோலம் | |

இவைகளில் வகைக்குக் கழஞ்செடை எடுத்து அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடிக்கவும்.

இந்தக் குறிஞ்சி எண்ணெயை அருந்தப் பலவகை வாதமும் தீரும். தலை பாரத்துக்கு நசியமிடவும்.

---

## 7. பூதிகா தைலம்

பூதிகா தைல மொன்று புகலக்கேளு
 புங்கு நொச்சி யயித்பட்டை யமுக்கிரா வேர்

தூதளை பாவட்டையொடு சிற்றாமுட்டி
துளசி வெள்ளைச்சாறணை யாதண்டை நல்ல
வாத மடக்கிடுதலோடு மாவிலங்கை
வகையொன்றுக் கனக்காறு பலமே கொண்டாங்
கேதுவா யிடித்தொரு பாண்டத்திலிட்டே
யெட்டு மரக்கா லீர்தான் விட்டிடாயே. (16)

எட்டி லொன்றாய்க் காய்ச்சியதை யிறுத்துக் கொண்டே
யிரண்டு படி யாமணக்கி னெண்ணெய் கூட
விட்டாவின் பாலொரு நாற்படியும் விட்டு
வெள்ளெருக்கம் பூ வசம்பு தேவதாரக்
கட்டை கடுகுரோகணி நன் மஞ்சள் கோட்டங்
கடு கத்தித்திப்பிலி சிற்றரத்தை நீடு
கிட்ட முறு வாய்விளங்கங் கூகைநீறு
சீரக நன்னாகப்பூ வரத்தையாமே. (17)

மரமஞ்சளிந்துப்பே பேரா மங்காயம்
வகையான கடுக்காய் நற்சிறியதேக்குத்
திரிகடுகு மதுரமிவை வகை யொன்றுக்குத்
தெரியுமிரு வராகனெடை யரைத்திட் டெண்ணெய்
கருகாமலைந்து நாளெரித்துச் சென்னி
காயமிவைகளிற் பூச வாதமெல்லாம்
பெரிதோடு மிராப்பொழுது தசமூலத்தின் பிசனாத
கடாயத்தைக் குடித்திடாயே. (18)

(இ-ள்)

| | |
|---|---|
| புங்கம்பட்டை | நொச்சிவேர்ப்பட்டை |
| ஆயில்பட்டை | அமுக்கிரா வேர் |
| தூதுவளை வேர் | பாவட்டை வேர் |
| சிற்றாமுட்டி வேர் | துளசி வேர் |
| வெள்ளைச் சாறணைவேர் | ஆதண்டை வேர் |
| வாதமடக்கி வேர் | மாவிலங்கை வேர் |



இவை வகைக்கு 6 பலம் எடுத்து இடித்து ஒரு பாண்டத்தில் போட்டு 8 மரக்கால் நீர் விட்டு எட்டி லொன்றாய்க் காய்ச்சி வடிகட்டிக் கொண்டு,

ஆமணக் கெண்ணெய் 2 படி
பசுவின் பால் 4 படி

விட்டு,

| | |
|---|---|
| வெள்ளெருக்கம் பூ | வசம்பு |
| தேவதாரக் கட்டை | கடுகுரோகணி |
| மஞ்சள் | கோஷ்டம் |
| கடுகு | யானைத்திப்பிலி |
| சிற்றரத்தை | வாயுவிடங்கம் |
| கூகைநீறு | சீரகம் |
| நாகப்பூ | பேரரத்தை |
| இந்துப்பு | மரமஞ்சள் |
| பெருங்காயம் | ஓமம் |
| சிறுதேக்கு | கடுக்காய் |
| அதிமதுரம் | திரிகடு (சுக்கு, மிளகு, திப்பிலி) |

இவை வகை யொன்றுக்கு 2 வராகனெடை எடுத்து அரைத்து எண்ணெயிற் கலந்து எண்ணெய் கருகாமல் 5 நாள் எரித்து தலை, உடம்பு இவைகளில் பூச வாதம் தீரும். இராத்திரியில் தசமூலக் கஷாயம் சாப்பிடவும். (தசமூலம் = பாதிரி, வாகை, பெருங்குமிழ், வில்வம், முன்னை, வழுதுணை என்னும் சிறுமூள்ளுக்கத்திரி, நெரிஞ்சில், சிறுமல்லி, பெருமல்லி, கண்டங்கத்திரி இப்பத்துவகை வேர்)

## 8. ஏரண்டத்தைலம்

ஏரண்டெண்ணெய் நாழிதனிலிதமா மிளகுகடுகு
மஞ்சள்
பாரவுள்ளி யிவைநான்கும் பண்பாய் வகைக்குப்
பலமரையாய்ச்
சேரவரைத்திட்டேயதனிற் சிறக்குங்குப்பை
மேனிச்சாறு
வார்த்து வெய்யிலில்வைத்திட் டந்திப்பொழுதிலெரித்
திறக்கே. (19)

இறக்கியே வாதமுள்ள விடத்தில்தைலந்
தேய்த்து
முறுக்கியே பிடித்துநன்றாய் முன்னொச்சித்தழை
யின் வெந்நீர்
பொறுக்கவே விட்டிரண்டு பொழுது மெண்டினந்தான்
செய்யப்
பறக்குமே வாதமெல்லாம் பகருமித்தைலந்
தன்னால். (20)

(இ-ள்.)

ஆமணக்கெண்ணெய் ஒரு நாழியில்,

| | |
|---|---|
| மிளகு | கடுகு |
| மஞ்சள் | உள்ளி (வெள்ளைப்பூண்டு) |

இவை வகைக்கு $\frac{1}{2}$ பலம் எடுத்து, அரைத்துக்கலந்து, அதில் $\frac{1}{2}$ படி குப்பைமேனிச் சாறுவிட்டு வெயிலில் வைத்து, மாலையில் எரித்து இறக்கவும்.

இந்தத் தைலத்தை வாதமுள்ள இடத்தில் தேய்த்து முறுக்கிப் பிடித்துவிட்டு, நொச்சித்தழைபோட்டுக் காய்ச்சிய வெந்நீர் ஊற்றவும். இவ்விதம் காலையும் மாலையும் 8 நாள் செய்யச் சகலவித வாதமும் தீரும்.



## 9. அர்க்காதித் தைலம்

முதியார் கூந்தலாமணக்கு முதிர்மாவிலங்கை
யெருக்கு நொச்சி
சதுரக்கள்ளி யிலைக்கள்ளி யுத்தாமணி
நற்றழுதாழை
புதிய வசுவகந்தியுடனாடாதொடை
மென்பொடுதலை நீ
டிதமாமிவற்றினிலை சமனாயிடித்தே
யரைத்தங்கினிதேடே. (21)

எடுத்தேயெண்ணெய் தனிலிட்டே யிதமாய்க்
காய்ச்சிப் பதந்தன்னில்
வடித்துப்பூசி நசியமிட்டுள்வாங்க
முகத்திற்பட்டகுத்து
மடித்தேயெலும்பு முறிந்ததுட னடல்வாள்
வெட்டுப்புண் காயமுங்
கடுத்த வாதநோயுமெல்லாங்
கழலுமெருக்கின்றைலமிதே. (22)

(இ-ள்.)

| | |
|---|---|
| முதியார்கூந்தல் இலை | ஆமணக்கு இலை |
| முதிர்மாவிலங்கை இலை | எருக்கிலை |
| நொச்சியிலை | சதுரக்கள்ளி |
| இலைக்கள்ளியிலை | உத்தாமணியிலை |
| தழுதாழையிலை | அசுவகந்தியிலை |
| ஆடாதொடையிலை | பொடுதலை |

இவைகளைச் சமனெடை சேர்த்து இடித்து, அரைத்து எடுத்து எண்ணெயிற்கலந்து பதத்தில் வடித்துப்பூச எலும்புமுறிவு, வாள்வெட்டுப்புண் காயங்கள் மற்றும் வாதநோய்கள் முதலியவைதீரும்.

# 10. சதுர்வகைச் சாற்றின்தைலம்

சதுர்வகைச்சாற்றின் தைலஞ்சாற்றக் கேளு
தக்காளியெருக்கு நொச்சிகள்ளிச்சாறிங்
கிதுவகைக்குப் படியொன்றே யெண்ணெய்யு
மிதமாகவவ்வளவே கூடச்சேர்த்தே
யதிற்போடுங் கற்கவகையமுக்கிரு
அகில்கட்டை கோட்டம்பாடாண் பேதி
யிதமுறுதிப்பிலிமூலஞ் சிற்றரத்தை
யிந்துப்பு வசம்பு கொடிவேலி வேரே. (23)

வேர்க்கொம்பு கடுகுடனேதேவதார
மேலாகவுரைத்திடு சாரணையினுள்ள
வேர்தவசி முருங்கைவேர் வகையொன்றுக்கு
மீறுமல் வராகனெடை தூளாச்செய்து
சேரவேயதிலிட்டே யடுப்பிலேற்றித்
தெரிந்துவரு பதந்தனிலே வடித்துடம்பில்
வாரமொன்று பூசிடவே நெடுநாள்சென்ற வலு
வான வாதங்கள் விலகிப்போமே. (24)

(இ-ள்.)

| | |
|---|---|
| தக்காளிச்சாறு | எருக்கஞ்சாறு |
| நொச்சிச்சாறு | கள்ளிச்சாறு |

இவை வகைக்கு ஒரு படியும், இதே அளவு நல்லெண்ணெயும் சேர்த்து, அதில்

| | |
|---|---|
| அமுக்கிரு | அகிற்கட்டை |
| கோஷ்டம் | சுத்தி செய்த பாஷாணம் |
| சுத்திசெய்த அன்னபேதி | கண்டதிப்பிலி |
| சிற்றரத்தை | இந்துப்பு |
| வசம்பு | கொடிவேலி வேர் |
| வேர்க்கொம்பு | கடுகு |



| | |
|---|---|
| தேவதாரம் | சாரணைவேர் |
| தவசி | முருங்கைவேர் |

இவை வகைக்கு 1 வராகனெடை எடுத்துத் தூள்செய்து கலந்து பதத்தில் வடித்துக்கொண்டு, ஒரு வாரம் உடம்பில் பூசிவர பல நாளாக இருக்கும் வாதங்களெல்லாம் தீரும்.

---

# 11. லசுன புஷ்டித்தைலம்

விட்டிடுவாய் நார்த்தம் பழத்தின்சாறு
விளங்கவொரு படியாக வின்னங்கேளு
கொட்டை யுறுகரந்தை முடக்கொத்தானொச்சி
குணமான காவேளை பிரமிபேய்த்தும்
முட்டியுட னமுக்கிரா வாடாதோடை
முருங்கை சாரணை காசாவகத்தி யாடு
தொட்டிடாப் பாளைமூக்கரட்டை வீழிசொல்லிந்த
வகையிலையின் சாறுபடி யரையே. (25)

அரைப்படியாய்ச் சேர்த்திடதிற் கற்கங்கேளா
யழகான சதகுப்பை கடுகுகோட்டம்
திரிகடுகு செவிய மிலவணங்களைந்து சிற்றரத்தை
வெண்காரம் வாய்விளங்கம்
நிறைவகைக்கு வராகனெடை மூன்றுங்கூட்டி
நிசமான வாவின்பால் விட்டரைத்துக்
கரைத்துச் சாறெரித்து விளக்கெண்ணெய் நாழி
கள்ளிப்பா லுழக்குவிட்டுக் கிளறிடாயே. (26)

கிளறியே யிறுகுகின்ற பதத்திறக்கிக் கெட்டிபண்ணி
யிருபொழுதுந் தான்றிக்காயி
னளவுண்ண விதனுக்குத் தீருநோய்கே
ளருவைகுடல் வாதம் வில்லிக்குன்மஞ்சூலை

யுள்மூலந்தமர் வாயுவட்ட முற்றங்கோதாங்
 கவுசை தந்தநோவு
வளமான லசுனபுட்டி கொண்டால்வாதம்
 வாங்குமே யெண்பத்து நாலுந்தானே. (27)

(இ-ள்.)

நார்த்தம்பழச்சாறு 1 படியுடன்

| | |
|---|---|
| கொட்டைக்கரந்தை | ஆடாதோடை |
| மூடக்கொத்தான் | முருங்கை |
| நொச்சி | சாரணை |
| காவேளை | காசா |
| பிரமி | அகத்தி |
| பேய்த்தும்மட்டி | ஆடுதீண்டாப்பாளை |
| அமுக்கிரா | மூக்கரட்டை<br>வீழி |

மேற்சொன்ன இலைகளின் சாறுகளில் வகைக்கு அரைப்படி சேர்த்து, அதனுடன்

| | |
|---|---|
| சதகுப்பை | கடுகு |
| கோஷ்டம் | திரிகடு (சுக்கு, மிளகு, திப்பிலி) |
| சவ்வியம் | ஐந்துப்பு (கடலுப்பு, இந்துப்பு, |
| சிற்றரத்தை | அட்டுப்பு, வளையலுப்பு, உவர் |
| வாயுவிடங்கம் | மண் உப்பு) |
| | வெண்காரம் |

இவைகளை வகைக்கு மூன்று வராகனெடை எடுத்துப் பசுவின் பால்விட்டு அரைத்துப்போட்டுக் கரைத்து எரித்து அதில்

| | |
|---|---|
| விளக்கெண்ணெய் | 1 நாழி |
| கள்ளிப்பால் | 1 ஆழாக்கு |



விட்டுக் கிளறி இறுகுகின்ற பதத்திலிறக்கிக் கெட்டியாகச் செய்து தினமும் காலையும், மாலையும் தான்றிக்காயளவு சாப்பிட்டுவரத் தீரும் நோய்கள்:—

அகுவை, குடல்வாதம், குன்மம், சூலை, உள்மூலம், தமர் வாயு, கவுசி, பல் நோவு, மற்றும் 84 வாத நோய்களும் தீரும்.

---

## 12. பஞ்சார்க்கத் தைலம்

எருக்கினுறு பஞ்சக நாற்றெண்பலத்தை
 யிசைந்தவொரு பாண்டத்திலிட்டு நாலு
மரக்காலீர் விட்டெரித்து நாலிலொன்று
 மன்னியெரித்தெண்ணெய் படியிரண்டு சேர்த்திட்
டுருக்கமுற வாட்டுப்பால் படியொன்றூற்றிக்
 கடுகிந்துப்புத் தேவதாரந்
தெரிந்த திரிகடுகு சதகுப்பை கோட்டஞ்
 சிற்றரத்தை கங்குட்டம் பிடாலவணமாமே (28)

ஆனசதுரக் கள்ளிப்பால் வசம்போ
 டாயிலுறு பட்டையுடன் கொடியவேலி
யீனமிலாதிவை வகைக்குப் பலமொன்றாக
 விடித்துத்தூள் செய்ததனிற் கூடச் சேர்த்து
மானமுற வெரித்தருந்தி மேலும்பூசி
 வகையாகப் புளிகைப்புத்தவிர்த்து வந்தா
லேனிருக்கும் வாதங்களெட்டு நாண்மே
 லிவ்வெருக்கின்றைல நீ யறிந்துசெய்யே. (29)

(இ-ள்.)

எருக்கின் இலை, வேர், பட்டை, பூ, காய் இவை 32 பலம் எடுத்து ஒரு பாண்டத்தில் போட்டு 4 மரக்கால் தண்ணீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி, யதில்,

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 2 படி |
| ஆட்டுப்பால் | 1 படி |

விட்டு, அதில்

| | |
|---|---|
| கடுகு | இந்துப்பு |
| தேவதாரம் | திரிகடு (சுக்கு, மிளகு, திப்பிலி) |
| சதகுப்பை | கோஷ்டம் |
| சிற்றரத்தை | கங்குஷ்டம் |
| அட்டுப்பு | சதுரக்கள்ளிப்பால் |
| வசம்பு | ஆயில்பட்டை |
| கொடிவேலி | |

இவை வகைக்கு 1 பலம் எடுத்து, இடித்துத் தூள் செய்து கலந்து எரித்து உள்ளுக்குச் சாப்பிட்டு மேலும் பூசி, புரிப்பு, கசப்புத் தள்ளிப் பத்தியமாக இருந்தால் வாதங்கள் தீரும்.

---

## 13. முருங்கைவேர்த் தைலம்

முருங்கைவேர் நொச்சியுடன் சதுரக்கள்ளி
மொழிந்திடு சாறணை வாதமடக்கி மத்தந்
தெரிந்தபுர மெரித்தான் தைவேளை நல்ல
திராய்கழல்வன் கொடிமுதியார் கூந்தல்வேலிப்
பரிந்த தனிப்பருத்தியுட னாடாதோடை
பகர்ந்தவிலை வகைக்குச் சாறுழக்கு வாங்கி
விரிந்திடு மாவிலங்கை சாரணைகுறிஞ்சா
வெவ்வேலிவெளுத்த பிசின் புங்கம்வேரே. (30)

வேரிதுவும் பாவட்டை யிருப்பை பூளை
வேர் நல்லகூவி ளைவேர் தில்லைவேரும்



ஓரொன்று வகையொன்றுக்கோர் பலந்தா
னொருபாண்டந்தனிலிட்டுப் பதக்குச் சுத்த
நீர்விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி வாங்கி
நினைவாகமுன் சாற்றில் விட்டுக்கற்கம்
நேர்வாளந் திப்பிலி நல்வெடியுப்புள்ளி
நிசமானகல்மதமு மிங்குமாகும். (31)

இங்குமுதல் வகைக்கிரண்டு கழஞ்சுகூட்டி
யிதமாயைந் தெண்ணெய்களும் வகைக்குநாழி
குங்கிலியப் பொடியுடனே தேங்காய்ப் பாலுங்
கூட்டியெலா மொன்றாக்கி யடுப்பிலேற்றிப்
பங்கீடா யெரித்திருநாள் மூன்றுநாளிற்
பதத்திலே வடித்தருந்தி யங்கமென்ற
தெங்குமே துவளையிட வாதமென்ற
தெண்பத்துநாலும் போமெட்டு நாளில். (32)

(இ—ள்.)

| | |
|---|---|
| முருங்கைவேர் | நொச்சி |
| சதுரக்கள்ளி | சாறணை |
| வாதமடக்கி | புரமெரித்தான் (சிவனார்வேம்பு) |
| தைவேளை | திராய் |
| கழல்வன்கொடி | முதியார்கூந்தல் |
| வேலிபருத்தி | ஆடாதொடை |

மேற்சொன்னவைகளின் சாறுகளில் வகைக்கு ஒரு ஆழாக்கு எடுத்துக்கொண்டு,

| | |
|---|---|
| மாவிலங்கைவேர் | சாரணைவேர் |
| குறிஞ்சா | புங்கம்வேர் |
| பாவட்டைவேர் | இலுப்பைப்பட்டை |
| பூளைவேர் | கூவிளைவேர் (வில்வவேர்) |
| தில்லைவேர் | |

இவை வகைக்கு 1 பலம் எடுத்து ஒரு பாண்டத்தில் போட்டு 1 பதக்கு சுத்தத் தண்ணீர்விட்டு நாலிலொன்ருய்க் காய்ச்சி முன்சொன்ன சாறுவகைகளேயும் விட்டு, நாலிலொன்ருய்க் காய்ச்சி

| | |
|---|---|
| நேர்வாளம் (சுத்தி செய்தது) | திப்பிலி |
| வெடியுப்பு | உள்ளி |
| கல்மதம் | பெருங்காயம் |

இவை வகைக்கு 2 கழஞ்சு எடுத்து, முன்சொன்ன சாறு விட்டுக் கல்கமாக அரைத்துச் சேர்த்து ஐந்தெண்ணெய் (நல் லெண்ணெய், இலுப்பெண்ணெய், வேப்பெண்ணெய், புங் கெண்ணெய், ஆமணக்கெண்ணெய்) வகைக்கு 1 நாழி

குங்கிலியப் பொடி (2 கழஞ்சு)
தேங்காய்ப்பால் (1 நாழி)

இவைகளே யெல்லாம் சேர்த்து அடுப்பில் வைத்து 3 நாள் எரித்து மூன்ரும் நாள் பதத்தில் வடித்து உடம்பில் பூச எண் பத்து நாலுவித வாதமும் எட்டே நாளில் தீரும்.

---

## 14. தேற்ருன்றைலம்.

நீருறு மண்ணினைப் பிரிக்குந் தேற்ருன் வேரு
நிலநத்தைச் சூரியிலே யுடும்பிருஞ்சி
வேருடனே சாரணைவேர் கள்ளிப்பாலும்
வெள்ளுள்ளி வசம்பு மரீசங்கறுத்த
சீரகமு மிவை வகைக்குக் கழஞ்சிரண்டு
திறமான நல்லெண்ணெய் நாழிதன்னில்
நேருடனே யிட்டெரித்து வடித்தருந்தி
நிகமுடலிற் பூசிடவே வாதந்தீரும். (33)



(இ-ள்).

| | |
|---|---|
| தேத்தான்வேர் | நத்தைச்சூரியிலே |
| உடும் பிருஞ்சிவேர் | சாரணைவேர் |
| கள்ளிப்பால் | வெள்ளைப்பூண்டு |
| வசம்பு | கருஞ்சீரகம் |

இவை வகைக்கு 2 கழஞ்சு எடுத்து நல்லெண்லெணய் ஒரு நாழியில் போட்டு எரித்து உள்ளுக்குக் கொடுத்து உடம்பில் பூச வாதம் தீரும்.

---

## 15. சீரகத் தைலம்

சீரகம் வாலுளுவை யரி கோட்டமாம்
திரமான தக்கோலங் கிராம்பிந் துப்புக்
கார்போக வரிசி கர்க்கடகசிங்கி
கச்சோல மரத்தை துவர்ச்சிகையினேடு
காரமுறு கடுகு ரோகணி வகைக்குக்
கழஞ்சொன்ரு மெண்ணெ யரைப்படி யாட்டுப்பால்
தேர் சேர்த்தே யெரித்து வடித்தெடுத் திரண்டு
நேர முந்தானுண்டி வாதம் போமே. (34)

(இ-ள்.)

| | |
|---|---|
| சீரகம் | வாலுளுவை |
| கோஷ்டம் | தக்கோலம் |
| கிராம்பு | இந்துப்பு |
| கார்போகவரிசி | கற்கடசிங்கி |
| கச்சோலம் | அரத்தை |
| கடுகுரோகணி | துவர்சிகை (கடுக்காய்ப்பிஞ்சு) |

இவை வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து, அதில், எண்ணெய் $\frac{1}{2}$ படி, ஆட்டுப்பால் $\frac{1}{2}$ படி விட்டு எரித்து வடித்துக் காலையும் மாலையும் சாப்பிட்டு வர வாதம் தீரும்.

---

## 16. மாஷத்தைலம்

உளுந்துபடி யொன்றெட்டுபடி நீர்விட்டே
யொருபடியாய்க்காச்சி யதிலெள்ளினெண்ணெய்
யளந்து படி யொன்றுவிட்டே யதனிற் பின்ன
ரதிமதுரம் வெட்பாலை பாலை காட்டி
னுளுந்து காட்டுப்பயறு சிற்றுமுட்டி
யுயர்நாகமுட்டி திரிகடுகிந்துப்பு
வளமுடைய சிற்றரத்தை கிறுகாஞ்சோரி
வகையான சதகுப்பை நெருஞ்சியாமே. (35)

ஆக வகைக் கொவ்வொன்று பலங்கால் கூட்டி
யம்மிதனிலிடாவின் பாலைவிட்டு
நேகவே யரைத்திட்டே யெண்ணெய் தன்னில்
நேராகக் காய்ச்சி யிந்தவுளுந்தினெண்ணெய்
பாகமுடனசியஞ் செய்தருந்த மூழ்கப்படிந்திருந்த
செவியிரைச்சல் வலியினோடு
தேகமுறு திமிர் வாதமெல்லாம் போகுந்திரமாக
வத்தியுறு புகையுங்காட்டே. (36)

(இ-ள்)

உளுந்து 1 படியை எட்டுபடி தண்ணீர்விட்டு ஒருபடியாய்க் காய்ச்சி அதில், நல்லெண்ணெய் 1 படி விட்டு,

| | |
|---|---|
| அதிமதுரம் | வெட்பாலை |
| | பாலை |
| காட்டுஉளுந்து | காட்டுப்பயறு |



| | |
|---|---|
| சிற்றுமுட்டி | நாகமுட்டி |
| திரிகடு (சுக்கு, மிளகு, திப்பிலி) | இந்துப்பு |
| சிற்றரத்தை | சிறுகாஞ்சோரி |
| சதகுப்பை | நெருஞ்சில் |

இவை வகைக்கு ஒரு பலம் கூட்டி பசுவின்பாலை விட்டு அம்மியில் நன்ருக அரைத்து எண்ணெயிற் போட்டுக் காய்ச்சி உள்ளுக்குக் கொடுத்து, நசியமிட்டு, தலையில் தேய்த்து முழுகக் காது இரைச்சல், காதுவலி, திமிர்வாதம் முதலியவை தீரும். இந்த எண்ணெயின் புகைபிடித்தலும் நன்று.

---

## 17. இலட்சுமி நாராயணதைலம்

சுந்தர லட்சுமணபஞ்சிவேரமிஞ்சிவேர்
தூதளைவெங் கள்ளியுகாய் நெருஞ்சியாயில்
தந்திடு வெள்ளறுகவரி முருங்கை வெள்ளைச்
சாரணை தக்காளி சங்கு சங்கங்குப்பி
கந்தமுறு முள்ளிக்சத்தரி நன்னுரி
கானத்தாமணக்கு கொடிவேலி புங்கோ
டந்தமுறு குமிழ்வில்வம் பிராயாவாரை
யமுக்கிராப்பாதிரி செம்முள்ளியாமே. (37)

ஆமணக்கு நீர்முள்ளி சிற்றுமுட்டி
யணிபாலை சிவதையோடு பேராமுட்டி
கோமளச் சிற்றரத்தை நாயுருவி நல்ல
கொம்மடி பாவட்டையொடு நாகமுட்டி
யேமருதணி முசுட்டையொடு சேங்கொட்டை
யிலவுபெருங்காஞ்சொரி நற்சிறுகாஞ்சோரி
பூமிபடர் கண்டங்கத்தரியினோடு
புகல்பேய்க்கொம் மட்டியிலந்தைவேர்கள் கூட்டே.

கூட்டுவாய் பெருமரத்தின் பட்டையோடு
　　கூறுமுருக்கெருக்கொடு பூசணி நல்வேப்ட
காட்டில் வளர் கருங்காலி சிவகரந்தை
　　கழற்கொடி தன்னொடு தேவதாரம்நீடு
வாட்டமிலா நற்பருத்திக் கொட்டை மஞ்சள்
　　மரமஞ்சள் கஸ்தூரிமஞ்சள் கூடுங்
கோட்டமுயர் துளசியொடு மாற்கிழங்கு
　　குரிவாழைக்கிழங்கு திரிபலையுஞ்சேரே. (39)

சேராடாதொடை கொன்றை காக்கிறட்டான்
　　றிகழ்பேராமல்லி சிற்றுமல்லி குப்பை
பேருறு மிந்திரவல்லி நற்குதிரைவாலி
　　பெருஞ்சீந்திற்கொடி செவ்வாமணக்கிருப்பை
காருறு கான்பயறுளுந்து வாய் விளங்கங்
　　கருநொச்சி வேங்கை நிலக்குமிழ் கடம்பு
பாரில் வளர் சிறுதேக்குச் செருந்திவாகை
　　பகர்வாதமடக்கி விருகங்கிழங்காம். (40)

ஆமிவையோர் வகையினுக்குப் பலமொன்றாக
　　வம்மிதனி லிடித்தொரு பாண்டத்திலிட்டு
நேமமுடனதற்கெட்டுப்பங்கு தண்ணீர்
　　நேரவிட்டு, நாலிலொன்றாகக் காய்ச்சித்
தாமதமில்லா தந்தக் கடாயத்திற்குச்
　　சமமாக நல்லெண்ணெ யாவினெய்யு
மாமணக்கினெய்யு மந்த வளவாய் விட்டே
　　யதின்மொச்சையுளுந்து பச்சைப்பயறு கொள்ளு. 41

கொள்ளிதெல்லாம் வெவ்வேறு கடாயஞ்செய்து
　　கூட்டிடுமுன் மருந்தினையுங் கூட்டுநேராய்
வெள்ளையுறு சதாவேரிக் கிழங்குச்சாறு
　　விபரமாய் விட்டிடந்தக் கடாயம் போலே
யுள்ளபடி யாவின்பா லாட்டுப்பாலு
　　மொன்றாக வெண்ணெயினுக் கிரட்டிப்பாக



யெள்ளளவு தப்பாமற் சேர்த்துக் கொண்டே
　　யிலவங்கப்பட்டை யுடனிலாமிச்சம்வேர் (42)

வேருடனே காகோளி சீர்காகோளி வேழத்திப்பிலி
　　யேல மிருப்பைப்பூநற்
காரமுள திரிகடுகு திரிபலாதி காய்ச்சுப்புச் சைந்தவ
　　மா முப்புத்தேவ
தாரமுடன் மஞ்சிட்டி மதுரநல்ல சந்தனஞ்சீவகஞ்
　　சவிய மகிலினோடு
சாரந் திப்பிலிமூல முருங்கைவித்துச் சமுத்திரா
　　லவணஞ் சவ்விலவணந்தான். (43)

இலகுமுயர் மகிழின் விதைகுங்குமப்பூ விசைந்திடு
　　பொன்முசுட்டை பூலாங்கிழங்கு
நிலமுறுதண் குமிழ்மேதை சைலேபந்தான்
　　நீள்கழலின் பருப்புச் சாரப் பருப்பு
இலவங்கப்பத்திரி நீள்சிற்றரத்தை
　　யெழிலுகப்பூவினொடு வாய்விளங்கம்
வலிதரு கத்தூரி தொட்டாற் சுருங்கி தெங்கின்
　　வன்முளை ருஷபகத்தினோடமுக்கிராவேர். (44)

அதிமதுரம் கடுகுரோகணி தன்னொ
　　டரேணுகநற்சரளந் தேவதாரங் கூறு
மதினுடனே பிரேங்கணமும் பதுமமுஞ் சேர்த்
　　தழகான விவை யெல்லாஞ் சமனாய்க்கொண்டு
பதனமுடன் சூரணித் தெண்ணெயிலே போட்டுப்
　　பக்குவமா யெரித்துப் பூவாசங்கூட்டி
யதனையே பூசுடம்பில் வாதந் தீருமதுலெட்சுமி
　　நாராயணத் தைலமாமே. (45)

(இ-ள்.)

லக்ஷ்மணா பஞ்சகம் (வெள்ளைக்கண்டங்கத்திரி இலை, பூ, காய், கொடி, வேர்)

ஏறழிஞ்சில் — தூதுவளை
கள்ளி — உகாய்
நெருஞ்சில் — ஆயில்பட்டை
வெள்ளறுகு — அவுரி
முருங்கை — வெள்ளைச்சாரணை
தக்காளி — சங்கம்வேர்
சங்கங்குப்பி — உள்ளி
கத்தரிவேர் — நன்னாரி
காட்டாமணக்கு — கொடிவேலி
அமுக்கிரா — பாதிரி
செம்முள்ளி — ஆமணக்கு
நீர்முள்ளி — சிற்றுமுட்டி
பாலை — சிவதை
பேராமுட்டி — சிற்றரத்தை
நாயுருவி — கொம்மட்டி
பாவட்டை — நாகமுட்டி
மருதாணி — முசுட்டை
சேராங்கொட்டை (சுத்தி செய்தது) பெருங்காஞ்சொரி
சிறுகாஞ்சொரி — கண்டங்கத்திரி
பேய்க்கொம்மட்டி — இலந்தைவேர்
பெருமரப்பட்டை — முருங்கை
எருக்கு — பூசினி
வேம்பு — கருங்காலி
சிவகரந்தை — கழற்கொடி
தேவதாரம் — பருத்திக்கொட்டை
மஞ்சள் — மரமஞ்சள்
கஸ்தூரிமஞ்சள் — கோஷ்டம்
துளசி — மருளங்கிழங்கு
வாழைக்கிழங்கு — திரிபலை (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்)
ஆடாதொடை — கொன்றை
காக்கரட்டான் — பேராமல்லி



சிற்றுமல்லி — குப்பைமேனி
இந்திரலதை (கொத்தான்கொடி) குதிரைவாலி
சீந்திற்கொடி — செவ்வாமணக்கு
இலுப்பை — காட்டுப்பயறு
உளுந்து — வாயுவிடங்கம்
கருநொச்சில் — வேங்கை
நிலக்குமிழ் — கடம்பு
சிறுதேக்கு — செருந்தி (மணத்தக்காளி)
வாகை — மெருகங்கிழங்கு
வாதமடக்கி

இவைகளை வகைக்கு 1 பலம் எடுத்து அம்மியில் இடித்து ஒரு பாண்டத்தில்போட்டு, இதைப்போல் எட்டுப்பங்கு தண்ணீர்விட்டு நாலிலொன்ருய்க் காய்ச்சிக்கொண்டு, அதில் இந்தக் கஷாயத்திற்கு சமமாக,

நல்லெண்ணெய்
பசுவின் நெய்
ஆமணக்கெண்ணெய்

விட்டுக்காய்ச்சி

மொச்சை — உளுந்து
பச்சைப்பயறு — கொள்ளு

இவைகளை வெவ்வேருகக் கஷாயம் செய்துகொண்டு அதனுடன் அதேயளவு தண்ணீர்மிட்டான் கிழங்குச்சாறு விட்டு; முன்சொன்ன மருந்தெண்ணெயையும்விட்டு, அந்த எண்ணெயைப்போல் சரியாக இரண்டு மடங்கு

பசுவின்பால் — ஆட்டுப்பால்

விட்டு,

இலவங்கப்பட்டை — இலாமிச்சம்வேர்
காகோளி — க்ஷீரகாகோளி

| | |
|---|---|
| யானைத்திப்பிலி | ஏலம் |
| இலுப்பைப்பூ | திரிகடு (சுக்கு, மிளகு, திப்பிலி) |
| திரிபலை (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்) | காய்ச்சுப்பு |
| சைந்தவம் (இந்துப்பு) | தேவதாரம் |
| மஞ்சிஷ்டி | அதிமதுரம் |
| சந்தனம் | சீவகம் |
| அகில் | குமிழ் |
| சவ்வியம் | திப்பிலிமூலம் (கண்டத் திப்பிலி) |
| முருங்கைவித்து | கடலுப்பு |
| சவுட்டுப்பு | மகிழம்விதை |
| குங்குமப்பூ | பொன்முசுட்டை |
| பூலாங்கிழங்கு | சைலேயம்[1] (கல்பாசி) |
| மேதை | ருஷபகம் |
| கழலின்பருப்பு | சாரப்பருப்பு |
| இலவங்கப்பத்திரி | சிற்றரத்தை |
| நாகப்பூ | வாயுவிடங்கம் |
| கஸ்தூரி | தொட்டாற்சுருங்கி |
| தேங்காய் மூளை | அமுக்கிராவேர் |
| அதிமதுரம் | கடுகுரோகிணி |
| அரேணுகம் | சரளம் |
| தேவதாரம் | பிரேங்கணம் |
| பதுமம் (தாமரைத்தாது) | |

இவை எல்லாம் சமனெடை சேர்த்துச் சூரணமாகச் செய்து முன்சொன்ன எண்ணெயிற் போட்டுப் பக்குவமாய் எரித்துப்பூவாசனை கூட்டி உடம்பிற்பூச வாதந்தீரும்.

**குறிப்பு:—** பூவாசனை கூட்டுவதற்கு எண்ணெய் இருக்கும் பாத்திரத்தில் மெல்லிய துணியால் வேடுகட்டி அதில் நல்ல வாசனையுள்ள பூக்களை வைத்து மூடியால் கவிழ்த்துமூடி இரண்டொரு நாள் வைத்து எடுத்து விடவும். இப்படி 10, 15 முறை செய்யப் பூவாசனை கூட்டப்படும்.

1. 'சைலேயம்' என்பது 'கல்மதம்', 'கல்பாசி' என்ற இரண்டு சரக்குகளுக்கும் பெயராக நிகண்டுகளிற் காணப்படுகின்றது.



## 18. பஞ்சார்க்கத் தைலம்

பஞ்சார்க்கத் தைலமொன்று பகரக்கேளு
மெருக்கம்வேர் பூகாயிலை நற்றண்டோ
டஞ்சுமொசுக்கை விடிநையத்தானே
யதின் சாறுநாலுபடியாகக் கொண்டே
யஞ்சு கிளேயிலை நொச்சி முக்கால்வேளை
யமுக்கிராக் கொடிவேலி யுந்தன்னோடே
யஞ்சுந்தான் சமூலங்கொள் முருங்கையின்ற
னடிப்பட்டையுடன் வாதமடக்கியாமே. (46)

மேலாக வகையொன்று பலந்தான் பத்து
மென்மையா யிடித்தொரு பாண்டத்திலிட்டுச்
சால நாற்றறுபதெனும் படிநீர்விட்டுச்
சார்ந்தெரித்தே யெட்டிலொன்றாயிறுத் தேயாட்டுப்
பாலுமெனக் கோசலமுஞ் சாணச்சாறும்
பழங்காடி யேரண்ட நெய்யினோடு
சீலுறு புங்கெண்ணெ யெண்ணெய் வகையொன்றுக்குத்
திறமாக நாலுபடி யளந்துக்கொள்ளே. (47)

கொண்டெருக்கம் பாலுமரைப்படி தான்விட்டுங்
கோட்டமுடன் கடுகேலங் கிரும்புதாளுந்
தண்டரு வெள்ளிக்துப்பு வெள்ளிலோத்தி
தகரமுட னெவ்வொன்று கழஞ்சுபத்தும்

பண்டுரைத்த பாலினுலரைத்துச் சேர்த்துப்
பத்தெரித்துப் பாதமுதலெங் கும்பூசிக்
கண்டிடி லெண்பத்துநால் வாதந்தானுங்
கதறிக்கொண் டோடிவிடுங் காணலாமே. (48)

(இ-ள்.) எருக்கம்வேர், பூ, காய், இலை, தண்டு இவைகளை நைய இடித்து அதன்சாறு 4 படி,

| | |
|---|---|
| ஐந்துகிளை இலை நொச்சி<br>முக்காவேளை<br>அமுக்கிரா<br>கொடிவேலி | இவை சமூலம் 10 பலம் |
| முருங்கையின் அடிமரப்பட்டை | 10 பலம் |
| வாதமடக்கிப்பட்டை | 10 பலம் |

இவைகளை மென்மையாக இடித்து, எல்லாவற்றையும் ஓர் பானையிலிட்டு 160 படி (40 மரக்கால்) ஜலம் விட்டு எட்டிலொன்ருய்க் காய்ச்சி இறுத்துக் கொண்டு, அதில்,

| | | | |
|---|---|---|---|
| வெள்ளாட்டுப்பால் | 4 படி | கோமூத்திரம் | 4 படி |
| பசுவின் சாணச்சாறு | 4 படி | பழங்காடி | 4 படி |
| ஆமணக்கெண்ணெய் | 4 படி | புங்கெண்ணெய் | 4 படி |
| எருக்கம்பால் | ½ படி | | |

இவைகளைச் சேர்த்து அதனோடு,

| | | | |
|---|---|---|---|
| கோஷ்டம் | 10 கழஞ்சு | ஏலம் | 10 கழஞ்சு |
| கிரும்பு | ,, | இந்துப்பு | ,, |
| வெள்ளிலோத்திரம் | ,, | தகரம் (எனும் வாசனைச் சரக்கு) | 10 கழஞ்சு |

இவைகளை வெள்ளாட்டுப்பால் விட்டு அரைத்துச் சேர்த்துச் ஒன்ருகக் கலந்துஎரித்துப் பதத்தில் இறக்கி எடுத்து வைத்துக் கொள்ளவும். நோயின் பல மறிந்து பாதம் முதல் உடம்பெல்லாம் பூச 84 வாதமும் தீரும்.



## 19. மகா நாராயணத் தைலம்

தசமூலம் பெருமுட்டி கொன்றைப்பட்டை
சதாவேரிக்கிழங்கு சிற்றரத்தை பொன்னை
முசுட்டைவே ராமணக்கு வெள்ளைநொச்சி
முருங்கைவேர் தேட்கொடுக்கி யமுக்கிராத்த
வசிமுருங்கை கருங்காலி குதிரைவாலி
வாதமடக்குதல் பாலைவேர் நன்மஞ்சள்
சுசிவெள்ளை புங்கம்வேர் சித்திரமூலந்
தூதளைவேருடன் சரளந் தேவதாரம். (49)

தாருறு கத்தூரிமஞ்சள் சிறுகாஞ்சோரி
தகுமுகாய் வெட்பாலை சிற்ருமுட்டி
வேருடனே நீர்முள்ளி யாயிற்பட்டை
வெள்ளருக்கம் வேரோடு மாவிலங்கையின்வேர்
சாருறுசாறணை வேரும்சேம்பு சீந்தில்
தண்டுகுமிழ் நாகமுட்டிசங்கு வேங்கை
நேரிடுவேர் வகையினுக்குப் பலந்தான் பத்தாய்
நிறுத்திடித்தே யிருப்புப் பாண்டத்திடாயே. (50)

இட்டவுட னிருபதெனு மரக்காற்றண்ணீ
ரிதமாக வார்த்ததனை யடுப்பி லேற்றி
யெட்டி லொன்ருய்க் காய்ச்சி யதையிறுத்துக்கொண்டே
யிசைவாக நல்லெண்ணெய் படிதானுன்கு
விட்டதனிற் சதாவேரிக் கிழங்குச்சாறு
மேலானபடி நான்கு விட்டாவின்பா
லெட்டென்னும் படிசேர்த்துப் பொன்முசுட்டை
யிலுப்பைப்பூப் பாலை திரிபலை தானுமே. (51)

திரிகடுகு நன்னரி தேவதாரு
செவியமுடனி லவங்கப் பட்டையேலம்
மரமஞ்சள் கங்குட்ட மிந்துப் போமம்
வளர்சங்கம் வேர்ப்பட்டை வெள்ளிலோத்தி

திரமரலின் கிழங்கு சதகுப்பை கோலஞ்
சிறுதேக்குச் சீரக நற்புனுகுசட்டம்
விரையுதவு குமிழ் சோதிஷ்மதி கரந்தை
வெள்ளைக் காக்கரட்டான் வேர்நெல்லி வேரே. (52)

வேருடன் கஸ்தூரி தாமரையின்ருது
வெண்கோரைக் கிழங்ததோ டதிவிடைய மஞ்சள்
சீரகநீள் செவ்வகம் நற்குங்கு மப்பூத்
திரமான சந்தனமூ டகில்காகோளி
காரமுள கடுகு புஷ்கரமூ லந்தான்
கர்ச்சூர மாஞ்சில் சைலேய மேதை
சீருறு காகோளி மதுரஞ் சாதிக்காய்
மென்செவ்வள்ளிக் கொடி லவங்கப் பத்திரியாமே.

பத்திரிநீள் பொன்முசுட்டை வேர்வகைக்குப்
பாங்கான வராகனெடை யெட்டுத்தூக்கி
யித்தனையுமுன் பாலாலரைத்து மைபோ
லெண்ணெய் தனிலிட்டெரித்து வைத்துக் கொண்டு
வத்திகட்ட நசியமிடத் தலையிற் றேய்க்க
வாங்கிடு மெண்பத்துநால் வாதந்தானும்
அத்தியுடன் குதிரைக்குவந்த வாத
மகலு மிதுமகா நாராயணத் தைல மாமே. (54)

(இ-ள்.)

தசமூலம் (பாதிரி, வாகை, பெருங்குமிழ், வில்வம், முன்னை, வழுதுணை என்னும் முள்கத்திரி, நெருஞ்சில், சிறு மல்லி, பெருமல்லி, கண்டங்கத்தரி இவற்றின் வேர்).

| | |
|---|---|
| பேராமுட்டி | கொன்றைப்பட்டை |
| சதாவெரிக்கிழங்கு (தண்ணீர்மிட்டான்) | சிற்றரத்தை |
| பொன் முசுட்டைவேர் | |
| ஆமணக்குவேர் | வெள்ளைநொச்சிவேர் |



| | |
|---|---|
| முருங்கைவேர் | தேள்கொடுக்கிவேர் |
| அமுக்கிராக்கிழங்கு | தவசி முருங்கைவேர் |
| முருங்கைவேர் | கருங்காலிவேர் |
| குதிரைவாலி | வாதமடக்கி |
| பாலைவேர் | மஞ்சள் |
| சுசிவெள்ளை[1] | புங்கம்வேர் |
| சித்திரமூலம் (கொடிவேலி) | தூதுவளைவேர் |
| சரளம் | கஸ்தூரி மஞ்சள் |
| தேவதாரம் | உகாய்வேர் |
| சிறுகாஞ்சொரிவேர் | வெட்பாலை |
| சிற்றுமுட்டிவேர் | நீர்முள்ளி |
| ஆயில்பட்டை | வெள்ளெருக்கம்வேர் |
| மாவிலங்கை வேர் | சாரணைவேர் |
| சேப்பு | குமிழ்வேர் |
| சீந்திற்றண்டு | சங்கம்வேர் |
| நாகமுட்டி | வேங்கைவேர் |

இவைகளை வகைக்குப் பத்துபலம் எடுத்து இடித்து ஒரு இருப்புப் பாத்திரத்தில் போட்டு 20 மரக்கால் தண்ணீர்விட்டு அடுப்பில் வைத்து எட்டிலொன்றாய்க் காய்ச்சி வடிகட்டிக்கொண்டு அதில்,

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 4 படி |
| சதாவரிக்கிழங்குச்சாறு | 4 படி |
| பசுவின்பால் | 8 படி |

விட்டு,

| | |
|---|---|
| பொன் முசுட்டை | இலுப்பைப்பூ |
| பாலை | திரிபலை (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்) |
| திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி) | நன்னாரி |
| தேவதாரு | சவ்வியம் |

1. 'சுசிவெள்ளை' என்பதன் பொருள் விளங்கவில்லை.

| | |
|---|---|
| இலவங்கப்பட்டை | ஏலம் |
| மரமஞ்சள் | கங்குஷ்டம் |
| இந்துப்பு | ஓமம் |
| சங்கம்வேர்ப்பட்டை | வெள்ளிலோத்திரம் |
| மருளங் கிழங்கு | சதகுப்பை |
| தக்கோலம் | சிறுதேக்கு |
| சீரகம் | புனுகுசட்டம் |
| குமிழ் | சோதிஷ்மதி (வாலுளுவை) |
| சிவகரந்தை | நெல்லிவேர் |
| வெள்ளைக்காக்கறட்டான்வேர் | |
| கஸ்தூரி | தாமரைத்தாது |
| கோரைக் கிழங்கு | அதிவிடையம் |
| மஞ்சள் | சீரகம் சீரகம் |
| செவ்வகம் (செவ்வகத்தி வேர்) | குங்குமப்பூ |
| சந்தனம் | அகில் |
| காகோலி | கடுகு |
| புஷ்கரமூலம் | கர்ஜ்ஜூரம் (பேரீச்சங்கள்) |
| சைலேயம் | சடாமாஞ்சில் |
| மேதை | க்ஷீரகாகோலி |
| அதிமதுரம் | சாதிக்காய் |
| செவ்வள்ளிக்கொடி | லவங்கப்பத்திரி |
| பொன்முசுட்டைவேர் | பொன்முசுட்டைவேர் |

இவைகளை வகைக்கு 8 வராகனிடை எடுத்துப் பால்விட்டு மைய அரைத்து எண்ணெயிற் கலந்து எரித்து வைத்துக் கொண்டு, வர்த்தியால், நசியம் செய்தும், தலையில் தேய்த்தும் வர, 84 வாதநோய்களும் தீரும். யானை, குதிரை இவைகளுக்கு வந்த வாதமும் தீரும்.

குறிப்பு: சீரகம், பொன்முசுட்டைவேர் இவைகள் வகையில் இருமுறை கண்டிருப்பதால் இரண்டு மடங்கு எடுத்துக்கொள்க.



## 20. லசுன புஷ்டி

வெள்ளைப்பூண்டு நூறுபல மேற்றோல் போக்கியே யதனை
மெள்ளவரைத்துத் திரிகடுகு மெலாஞ் சத்திச்சாரமுடன்
கள்ளமில் சீரகங் காயங்கனத்த யவச்சாரத்தினொடு
தள்ளே யெனுத்திப்பிலிமூலந் தகுமோமமு நீடோத்திடுமே.55

ஓதுமிந்தவகை யொன்றுக்குயர்ந்த மூன்றுபல மரைத்துத்
தீதிலாத நெய்யொரு சேர் திகழாமணக்கினெய் யொருசே
ரேதுவாக நெய்ப்பாண்டத் திட்டே யைந்துநாள் வைத்து
வாதம் வலிப்புக் குன்மங்கள் முதலாம்பிணிக்கு மகிழ்ந்துதவே.

(இ-ள்.)

வெள்ளைப்பூண்டு 100 பலத்தை மேல்தோல் போக்கி அரைத்து வைத்துக்கொண்டு,

| | |
|---|---|
| திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி) | ஏலம் |
| சத்திச்சாரம் | சீரகம் |
| பெருங்காயம் | யவச்சாரம் |
| திப்பிலிமூலம் | ஓமம் |

இவை வகைக்கு 3 பலம் எடுத்து அரைத்து,

நெய் 1 சேர் ஆமணக்கெண்ணெய் 1 சேர்

விட்டு நெய்ப்பாத்திரத்தில் 5 நாள் வைக்கவும். இதைச் சாப்பிட வாதம், வலிப்பு, குன்மங்கள் தீரும்.

---

## 21. தசமூலமாஷ தைலம்

தசமூலந்துலா மரையாமுளுந்து படியிரண்டே
தன்மையுறுசல மரக்கால் நான்குவிட்டுப்
பிசகாமலே யெரித்தோர் மரக்காலாகப்
பிழிந்ததனை வடிகட்டிப் பாண்டத் திட்டே

நிசமா நல்லெண்ணெ யோர்படியுஞ் சேர்த்து
நேராவின்பாலொரு நாற்படிதான் கூட்டி
வசம்பு திரிகடுகு திப்பிலியின் மூலம்
வளையுப்புப் பாலைவேர் கோட்டமாமே. (57)

அமுக்கிராக் கிழங்கு கொடிவேலி யோடே
யதிமதுரங் காய்ச்சுப்புத் தேவதாரம்
இமகரன் றனுப் புக்கல்லுப்புங் கூட்டி
யெழிற் சீந்தீற் கொடியுமா மணக்கம்வேருங்
கமழுறு பூலாங்கிழங்கு சிற்றரத்தை
காஞ்சோரிவேர்செவ்வள்ளிக்கொடி நற்பூமிக்
குமிழ் செவியஞ் சதகுப்பை வகையொன்றுக்குக்
கூட்டுவாய் காற்பலந்தான் குறையாகாதே. (58)

குறையாமல் மருந்தெல்லாமுன் கடாயங்
கொண்டரைத்திட்டே யெரித்து வடிபுகட்டி
நிறையவேயுடம் பெல்லாம் பூசிமூழ்க
நியமமாய் நாசியினிற் செவியிற் குத்த
மறைதருமே யெண்பத்துநான் கென்றோதும்
வாதமெல்லா மின்னதுதான் மிண்ணமாகும்
முறைபுரியுஞ் சரபோசி மன்னர்சொன்ன
முறையாருமிந்த முறைதெளிவாய்ச் செய்யே. (59)

(இ-ள்.)

தசமூலம் துலாமரை ($3\frac{1}{8}$சேர்) உளுந்து 2 படி

இவைகளில் 4 மரக்கால் தண்ணீர்விட்டு 1 மரக்காலாகக் காய்ச்சி வடிகட்டி ஒரு பானையில் வைத்துக்கொண்டு,

நல்லெண்ணெய் 1 படி பசுவின்பால் 4 படி

விட்டு,

| | |
|---|---|
| வசம்பு | திரிகடு (சுக்கு, மிளகு, திப்பிலி) |
| திப்பிலிமூலம் | வளையலுப்பு |
| பாலைவேர் | கோஷ்டம் |



| | |
|---|---|
| அமுக்கிராக்கிழங்கு | கொடிவேலி |
| அதிமதுரம் | காய்ச்சுப்பு |
| தேவதாரம் | கல்லுப்பு |
| சீந்திற்கொடி | இந்துப்பு |
| பூலாங்கிழங்கு | ஆமணக்குவேர் |
| காஞ்சொரிவேர் | சிற்றரத்தை |
| நிலக்குமிழ்வேர் | செவ்வள்ளிக்கொடி |
| சதகுப்பை | சவ்வியம் |

இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் எடுத்துக்கூட்டி முன் சொன்ன கஷாயத்தை விட்டரைத்து, எல்லாவற்றையும் சேர்த்து எரித்து வடிகட்டி வைத்துக்கொண்டு, உடம்பு முழுதும் பூசி ஸ்நானம் செய்தும், நசியம் செய்ய, காதிலேவிட 84 வித வாதமெல்லாம் தீரும்.

## 21. பூபீலு[1]த் தைலம்

சிறுவுகாய்வேர் சிவதைவேரினோடு செழித்திடு
பூலாங்கிழங்கு காடாமணக்கின் .
திறமானவேர் தவசிமுருங்கையின்வேர் செம்
முள்ளிவேர் பஞ்சமூலத் தோடே
யுறுநாறு கரந்தைநொச்சி சதுரக்கள்ளியுற்றி
டுவேர் மாவிலங்கை நீடுநல்வேர்
குறிதருகொள் ளெருக்கம்வேர் குதிரைவாலி
குணமிகுந்தபுளி நறளைக் கிழங்குமாமே. (60)

ஆதொண்டை சாரணை தீடாபாற்பட்டையதி
வேக நேர்வாளப் பருப்பினோடே
யோதுகின்ற வகையினுக்குப் பலம்நநான்கா
மொன்றாக விடித்தொருநாற்படி தண்ணீரைச்

1. பூபீலு = ஆயில்பட்டை

சோதித்துவிட்டே யோர்மரக்காலாகச் சுண்ட
வெரித்தொரு மரக்கால் காடிசேர்த்துக்
கோதில்லாக் கடுகெண்ணெய் படியிரண்டு கூட்டியே
தயிரிரண்டுபடியும் வாரே. (61)

வார்கோட்ட மிலவங்க மிந்துப்போடு வசம்பி
லவங்கபத்திரி தன்னோடு நற்றேவ
தாரமுயர் பொன்முசுட்டை சிற்றரத்தை சடா
மாஞ்சில் வெள்ளைக் குங்கிலிய மெல்லாங்
காரமுள திப்பிலிநற் கடுகுகாயங் கத்தூரிமஞ்
சள்மரமஞ்ச ளெல்லாஞ்
சீராகவகை தனக்கோர் கழஞ்சுவீதந் திறமா
கப்பொடித்ததனிற் கூடப்போடே. (62)

எரித்ததனைப் பக்குவமா யிறுத்துக் கொள்வாயின்
னதுதான் பூபீலுத் தைலமாகும்
வருத்தமுறு சிரநோவு காதுநோவு வகையாமிங்
கிதுமுதலாம் வாதமெல்லாங்
கருத்துடனே யுடம்புதனிற் பூசிமேலுங்கரண்டி
யளவுட்கொள்ளக் கலங்கியோடுநந்
திருப்பெருகுஞ் சரபோசி மன்னவன்றன்றிரு
முகங்கொண்டார் போலின்பமு நீடெய்தும். (63)

(இ-ள்.)

| | |
|---|---|
| சிறு உகாய் வேர் | |
| பூலாங்கிழங்கு | சிவதைவேர் |
| தவசி | காட்டாமணக்குவேர் |
| செம்முள்ளிவேர் | முருங்கைவேர் |
| கொட்டைக்கரந்தை | மகா பஞ்சமூலம் (பாதிரி, வாகை. பெருங்குமிழ், வில்வம் முன்னை இவற்றின் வேர், |
| சதுரக்கள்ளிவேர் | நொச்சில் |



| | |
|---|---|
| எருக்கம்வேர் | மாவிலங்கைவேர் |
| புளிநறளைக்கிழங்கு | குதிரைவாலி |
| சாரணை | ஆதண்டை |
| நேர்வாளப்பருப்பு | தீடாபாற்பட்டை (ஆயில்பட்டை) |

இவை வகைக்கு 4 பலம் எடுத்து ஒன்றாக இடித்து 4 படி தண்ணீர் விட்டு ஒரு மரக்காலாகக் காய்ச்சி,

கடுகெண்ணெய் 2 படி தயிர் 2 படி

விட்டுக் காய்ச்சி, அதில்,

| | |
|---|---|
| கோஷ்டம் | இலவங்கம் |
| இந்துப்பு | வசம்பு |
| லவங்கப்பத்திரி | தேவதாரம் |
| பொன்முசுட்டை | சிற்றரத்தை |
| சடாமாஞ்சில் | வெள்ளைக்குங்கிலியம் |
| ஏலம் | திப்பிலி |
| கடுகு | பெருங்காயம் |
| கஸ்தூரிமஞ்சள் | மரமஞ்சள் |

இவை வகைக்கு 1 கழஞ்சுவீதம் எடுத்துப்பொடிசெய்து அதில்போட்டு எரித்துப் பக்குவமாக இறக்கி இறுத்துக்கொள் ளவும். இதை உடம்பெல்லாம் பூசி ஒரு கரண்டியளவு உள்ளுக்கும் சாப்பிடத் தலைநோவு, காதுவலி, முதலியனவும், மற்ற வாதநோய்களும் தீரும்.

---

## 22. எருக்காதித் தைலம்

எருக்கம்பா லுமுக்குரியாம் நொச்சியின்சா
றினியபுளியிலையின் சாறுரிதா ளுகு
மெருக்கிலைச் சாறுரியே வெள்ளாட்டுப் பாலு
மீடுநாழிநல்லெண்ணெய் யொருசேராகும்

எருக்கம்வேர்ப் பட்டையொரு கழஞ்சோடிங்கு
விதுவுமொரு காசெடையாய்ச் சேர்த்தெரிப்பர்
எருக்காதித் தைலமிதாமிதனைப் பூசி
லேகிவிடும் வாதமெனச் சொல்வதெல்லாம் (64)

(இ-ள்.)

எருக்கம்பால் 1 ஆழாக்கு
நொச்சிச்சாறு 1 உரி (அரைப்படி)
புளியிலைச்சாறு ,,
எருக்கிலைச்சாறு ,,
வெள்ளாட்டுப்பால் 2 நாழி (ஒருபடி)
நல்லெண்ணெய் 1 சேர்
எருக்கம்வேர்ப்பட்டை 1 கழஞ்சு

இவைகளைச்சேர்த்து எரித்த தைலத்திற்கு எருக்காதித் தைலம் என்று பெயர். இதைப் பூசிவந்தால் வாதநோய்களெல்லாம் தீரும்.

---

## 23. கேதகித்தைலம்

நல்லெண்ணெ யோடுதாழை விழுதின் சாறு
நயமாக வகைக்கிரண்டு படிதான்கூட்டி
நெல்லிமுள்ளி கொத்தமல்லி பலமும் மூன்று
நீண்மூங்கிற்புரணி பலமுப்பதாகும்
நல்லவிலாமிச்சம்வேர் பலமிரண்டு
நாலிரண்டு பலஞ்சிற்று முட்டியின்வேர்
வல்லசீந்திற் பலமும் பதினைந்தா மிவ்
வகையெல்லா மிடித்ததனைக் கடாயஞ் செய்தே
சொல்லதனை மூன்றுபடியா யிறுத்துத்
தொடர்குழித்தாமரைச் சாறுபடியுங்கூட்டே. (65)



கூட்டியத னுடனற் றாழைவிழுதின் சாறுங்
குலவிடு நல்லெண்ணெயதும் வகைக்கிரண்டா
யீட்டமுறு படிசேர்த்தே மதுரங்கோட்ட
மிவற்றோடு நன்னாரி பூலாங்கிழங்கு
தேட்டமுறு செங்கழுநீ ரிலாமிச்சம்வேர்
செழுமை யுறுசந்தன நீள்வெட்டிவேரும்
நாட்டுமிரு காசெடையாய்க் கொண்டு சேர்ப்பாய்
நலமாக வுரைத்தி டொவ்வோர் வகை
யினுக்கே. (66)

வகையெல்லா மிடித்து வடிகட்டிக் கொண்டு
வளர் தேவதாரத்தைச் சூரணித்துத்
தொகையான முன்னிடி தூளினுக்கு நேராய்த்
தூக்கியே யதனோடு சேர்த்தெல்லாங் கூட்டிப்
பகவானை நினைந்தெரித்து வடித்துக்கொண்டு
பண்பாகத்தலை மூழ்கியுடம்பிற் பூசிற்
பகையான வாதமெண்பத்தினாலும் பறக்குமிது
கேதகியின் றைலமாகும். (67)

(இ-ள்.)

| | |
|---|---|
| நெல்லிமுள்ளி 3 பலம் | கொத்தமல்லி 3 பலம் |
| மூங்கிற்புரணி 30 பலம் | இலாமிச்சம்வேர் 2 பலம் |
| சிற்றுமுட்டிவேர் 8 பலம் | சீந்திற்கொடி 15 பலம் |

இவைகளை இடித்துக்கஷாயம் செய்து 3 படி எடுத்துக் கொண்டு அதனோடு,

குழித்தாமரைச்சாறு 1 படி
தாழை வீழுதின்சாறு 2 படி
நல்லெண்ணெய் 2 படி

சேர்த்து, அதில்,

அதிமதுரம் கோஷ்டம்

| | |
|---|---|
| நன்னாரி | பூமாங்கிழங்கு |
| செங்கழுநீர் | இலாமிச்சம்வேர் |
| சந்தணம் | வெட்டிவேர் |

இவை வகைக்கு 2 காசெடை வீதம் எடுத்து, இடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு இதற்குச் சரியெடை தேவ தாரத்தைச் சூரணமாகச் செய்துப் போட்டு எண்ணெய் எரித்து வடித்து, இந்த எண்ணெயினால் தலைதேய்த்து மூழ்கி, உடம்பி லும் பூசிவர 84 வித வாதநோய்களும் தீரும்.

## 24. சேங்கொட்டை நெய்

சேங்கொட்டை தன்னையே சாணிப்பாலிற்
றிறமாகச் சுத்திசெய்தே யெடுத்துக்கொண்டு
பாங்குடனே பசுவினெய் தன்னிலிட்டுப் பதமாக
வெரித்திறுத்து வைத்தருந்தில்
வாங்காமற் றேகத்தி னெடுநாணின்ற வாத
மெனப்பட்ட தெல்லாம் வகையாஞ் செங்கோல்
தாங்கு சரபேந்திர மாலறிந்தே யித்தைச்சாற்
றினால் சேங்கோட்டை நெய்யிதாமே (68)

**(இ-ள்)**

சேங்கொட்டையை சாணிப்பாலில் சுத்திசெய்து பசுவின் நெய்விட்டுப் பதமாக எரித்து இறுத்து வைத்துக்கொண்டு அரைக்காசெடை சாப்பிட்டுவர நாள்பட்ட வாதம் தீரும்.



## 25. தசமூலமரிசாதித் தைலம்

இதமான தசமூல மெருக்குக் கொங்கோடெழிற்
பேராமுட்டி மருதணிப் பூங்கொத்தே
இது வகைக்குப் பலம் பத்து மிளகு தானு மிருப
தெனும் பல மிதற்கெண்பங்கு தண்ணீ
ரதனிற் சேர்த்தெரித்து நாலதனிலொன்றுயாக்கி
யவ்வளவே நல்லெண்ணெயுஞ்சேர்த்
ததற்கிரட்டியாவின் பால் விட்டதன் பினதி
மதுரம் வசம்பு குங்குமப்பூக் கூட்டே (69)

பூவோடு சந்தன மும்மைக்கடுகு [1] கோட்டம்
புகழானைத்திப்பிலி நற்சைலேயந்தான்
தேவதாரஞ் சிறுநாகப்பூ வேலஞ் செவ்வள்ளிக்
கொடிலவங்கப் பத்திரியோடு
காவது சிற்றரத்தை மாஞ்சில் வகைக்குக் கண
க்காகப் பலமிரண்டே யரைத்துப் போட்டுத்
தாவனலில் வைத்தெரித்துப் பதத்திறக்கித் தலை
முழுகு நசியஞ் செய் – சேகம் [2] பண்ணே (70)

பண்பினுடன் வத்தி [3] கட்டிப் புகையதுங்கொள்
பரும்பிணி கடீருகிற வகையைக்கேளு
கண்பயிலுமுகரோகஞ்சிர நோவோடே கனமான
பீனிசமுங் காதிநோவு
மெண்பயிலும் வாதங்கள் யாவுந்தீரு மித்தைலந்
தசமூல மரிசாதியாகுந்
திண் புயனுஞ் சரபேந்திர பூபன்றனுஞ் செப்பினனி
ம்முறையைத் தெரிந்துகொள்ளே (71)

1. மும்மைக்கடுகு - திரிகடு (சுக்கு, மிளகு, திப்பிலி)
2. சேகம்பண்ண - உடம்பில் சதும்பப்பூச (லேகம்)
3. வத்திகட்ட - சிரோவஸ்தி செய்ய.

(இ-ள்)

தசமூலம் 10 பலம் — எருக்கு 10 பலம்
பேராமுட்டி 10 பலம் — மருதாணிப்பூங்கொத்து 10 பலம்
மிளகு 20 பலம்

இவற்றை யெல்லாஞ்சேர்த்து இதைப்போல் 8 பங்கு தண்ணீர்விட்டு, நாலிலொன்ருய்க் காய்ச்சி, இதே அளவு நல்லெண்ணெய் சேர்த்து, இதைப்போல் இரண்டு மடங்கு பசுவின் பால் விட்டு,

| | |
|---|---|
| அதிமதுரம் | வசம்பு |
| குங்குமப்பூ | சந்தனம் |
| மும்மைக்கடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி) | கோஷ்டம் |
| யானைத்திப்பிலி | சைலேயம் (கல்பாசி) |
| தேவதாரம் | சிறுநாகப்பூ |
| ஏலம் | செவ்வள்ளிக்கொடி |
| இலவங்கப்பத்திரி | சிற்றரத்தை |
| சடாமாஞ்சில் | |

இவை வகைக்கு 2 பலம் எடுத்து, அரைத்துப்போட்டு, எரித்துப் பதத்திலிறக்கவும். இந்தத் தைலத்தைத் தலைமுழுகி, நசியம் செய்ய, உடம்பில் நன்ருக சதும்பப்பூச, வஸ்திகட்டப், புகையைப் பிடிக்கத், தீரும்நோய்கள்:— முகரோகம், தலைவலி, பீனிசம், காதுவலி, வாதங்கள் முதலியவை தீரும்.

---

## 26. சீரகத் தைலம்

கந்தமிகு சீரகம் வாலுளுவை கோட்டங் கார்போக
வரிசி கற்கடசிங்கி
யிந்துப்புக் கச்சோலங்கடுகுரோணி யெழிலோம
ங்கிராம்பு துவர்ச்சிகை யரத்தை



யிந்த வகை வகையினுக்கோர் கழஞ்சு நாழி
யெண்ணெ யுடனுட்டுப் பாலுழி கூட்டி
வெந்தவுட னிறுத்துக் கொண்டுடலிற்பூசில் வெகு
வாதந்தீரு மீதறிந்து செய்யே (72)

(இ-ள்)

| | |
|---|---|
| சீரகம் | வாலுளுவை யரிசி |
| கோஷ்டம் | கார்போக அரிசி |
| கற்கடசிங்கி | இந்துப்பு |
| கச்சோலம் | கடுகுரோகணி |
| ஓமம் | கிராம்பு |
| அரத்தை | |

இவைகளை வகைக்கு 1 கழஞ்சு எடுத்து,

எண்ணெய் 1 நாழி
ஆட்டுப்பால் 1 நாழி

விட்டு வேகவைத்து இறுத்துக்கொண்டு உடம்பில் பூசிவர வாதநோய்தீரும்.

---

## 27. பிருங்காமலகத் தைலம்

கரிசாலை நெல்லிக்காய்ச்சாருவ்வொன்று
கணக்காகவோர் குறுணியாகச் சேர்த்து
வரிசையுள நன்னுரி முசுமுசுக்கை வழவழத்த
கற்ருழை பொன்னுங்கண்ணி
விரிதருமிச்சாறு வகைபடியொவ்வொன்று
விட்டாட்டுப் பாலினுடனெள் ளினெய்யுஞ்
சரியாக வகைக்கொவ்வோர் குறுணிவிட்டுச்
சந்தன நற் செங்கழுநீர் மருவத்தேடே (73)

மரமஞ்சள் கச்சோலங் கொத்தமல்லி மன்னும
ரேணுகங்குப்பை முசுமுசுக்கை
திரிபலை நல்வெட்டி வேரரக்கினேடு திகழேல
மதுரஞ் சேர்த்தும்புராட்டம்

இருவகைச் சீரகம் வகைக்குப்பலங்கால் கூட்டி
யிதமாக வரைத்திட்டே யைந்தா நாளிற்
சரியாக வெரித்ததனை வடித்துக்கொண்டு தலைமூழ்கு
பருகு சிரவத்திகட்டே (74)

கட்டு சிரநோவுடனே கன்ன ரோகங் கனமான நாத
ரோகங்களோடு
திட்ட விஷப்பாக மல்லாட்ட வாதஞ்சிரோப்பிரமண
மூர்த்த வாதங் கை கால்கள்
கட்டு வாதங்களுடன் பக்கவாதங்கனமான வியாதி
யின்னமநேக மெல்லாம்
விட்டகலு மின்னத னன்றுமெந்தானு விளங்குபிருங்
காமலகத் தைலமாமே (75)

(இ–ள்)

| | |
|---|---|
| கரிசாலைச்சாறு | 1 குறுணி |
| நெல்லிக்காய்ச்சாறு | 1 குறுணி |
| நன்னாரிச்சாறு | 1 படி |
| முசுமுசுக்கைச்சாறு | 1 படி |
| கற்றாழைச்சாறு | 1 படி |
| பொன்னாங்கண்ணிச்சாறு | 1 படி |

இந்தச் சாறுவகைகளைச் சேர்த்து இதனோடு

| | |
|---|---|
| ஆட்டுப்பால் | 1 குறுணி |
| நல்லெண்ணெய் | 1 குறுணி |

விட்டு,

| | |
|---|---|
| சந்தனம் | செங்கழுநீர் |
| மரமஞ்சள் | கச்சோலம் |
| கொத்தமல்லி | அரேணுகம் |
| சதகுப்பை | முசுமுசுக்கை |
| திரிபலை | வெட்டிவேர் |
| ஏலம் | மதுரம் |



| | |
|---|---|
| தும்புராட்டம் | கருஞ்சீரகம் |
| சீரகம் | |

இவை வகைக்குக் கால்பலம் வீதம் கூட்டி அரைத்து, ஐந்து நாள் எரித்து வடித்துக்கொண்டு தலைமூழ்கி, உள்ளுக்குச்சாப்பிட்டு, [1]சிரோவஸ்திகட்டத்தீரும் நோய்கள் :—

தலைவலி, கன்னரோகம், நாதரோகங்கள், விஷப்பாகம், அல்லாட்டவாதம், தலைசுற்றல், ஊர்த்வ வாதம், கை கால்கள் கட்டுவாதம், பக்கவாதம், இன்னும் பல வியாதிகளும் தீரும்.

குறிப்பு :— [1]சிரோவஸ்தி என்பது தலையின்மேல் இறுகி நிற்கக் கூடியதாக ஓர் பையைப்போல் துணி சுற்றி, அதில் தைலத்தை ஊற்றி அது தலையில் ஊறி நாசிவழியே துர்நீர் வரச்செய்யும் பிரயோகம். மலையாளத்தில் பிரசித்தம்.

---

## 28. பாஷாண நெய்

வெள்ளைப் பாடாணமுடன் செம்பாடாணம் வெங்கா
ரி(?)வெர்வச்ச நாபியோடு
கள்ளமிலா திசையிந்த வகையொன்றுக்குக் கழஞ்
சுகடுக்காயு ரையதாகக் கூட்டி
யுள்ளி மஞ்சள் மிளகு நீரடியின் முத்துரைத்தவகை
தனக்கிரண்டு பலமுஞ் சேர்த்தே
உள்ளபடி நெய் நாழி விட்டெரித்தே யுண்வாதம்
போமிவை பாடாண நெய்யே (76)

(இ–ள்)

| | |
|---|---|
| சுத்திசெய்த | வெள்ளைப்பாஷாணம் |
| ” | சிவப்புப்பாஷாணம் |
| ” | வெண்ணாபி (கலப்பைக்கிழங்கு) |

| | |
|---|---|
| பச்சநாபி | |
| வெள்ளைப்பூண்டு | மஞ்சள் |
| மிளகு | நீரடிமுத்து |

இவை வகைக்கு இரண்டு பலம் சேர்த்து,

நெய் 1 நாழி

விட்டு எரிக்கவும். இதைப் பூச வாதம் போம். இதற்குப் 'பாடாண நெய்' என்று பெயர்.

---

## 29. அரக்குத்தைலம்

கொம்பரக்கு நாற்பது வாம்பல நிறுத்துக்கொண்ட
தலிற்றூணி நீர்விட்டெரித்து
நம்பியதைக் குறுணியாயிறக்கிக்கொண்டு நலமா
னதயிர்த்தண்ணீர் குறுணிவிட்டுத்
தும்புராட்டகங் கோரைக்கிழங்கு குப்பை। சொற்
றேவதாருடன முக்கிராநற்
கொம்பு மஞ்சளரேணுகம் நீள்கடுகுரோகிணி
கோட்டஞ் செங்கழுநீ ரபின்மரலின்றன்வேர் (77)

மதுரஞ்சந்தன மிவைதாம் வகையொன்றுக்குவள
மாய் நால்வராக னெடை யரைத்துக்கொண்டே
யிதனோடு நல்லெள்ளினெய் குறுணிவிட்டே யித
மாகக்காய்ச்சியே யிறுத்தபின்ன
ரதனையே தலைமூழ்கிற்றீருநோய் கேளகலாதநா
ட்பட்டசுரமும் வாய்வுங்
கெதிகெட்டே யோடிவிடும் நிலை நில்லாது இளத்து
மிதுதானரக்கின் தைலமாமே (78)

(இ-ள்)

கொம்பரக்கு 40 பலம் எடுத்துக்கொண்டு இதில் 1 தூணி தண்ணீர்விட்டுக் குறுணியாகக் காய்ச்சிக்கொண்டு இதனோடு 1 குறுணி தயிர் வடிந்த தண்ணீர்விட்டு



| | |
|---|---|
| தும்புராட்டகம் | கோரைக்கிழங்கு |
| சதக்குப்பை | தேவதாரம் |
| அமுக்கிரா | மஞ்சள் |
| அரேணுகம் | கடுகுரோகிணி |
| கோஷ்டம் | செங்கழுநீர் |
| அபின் | மருள்வேர் |
| சந்தனம் | அதிமதுரம் |

இவை வகைக்கு 4 வராகனெடை எடுத்து அரைத்துச்சேர்த்து இதனோடு

நல்லெண்ணெய் 1 குறுணி

விட்டுக்காய்ச்சி இறுத்துக்கொள்ளவும். இந்தத்தைலத்தைத் தலை மூழ்கினால் நாள்பட்ட சுரம், வாயு முதலியவை தீரும்.

---

## 30. கேதகித் தைலம் (வேறு)

நலத்தாழை விழுதுச் சாறொரு நாழுழி நல்லெண்
ணெ யாவின்பால் படியொவ் வொன்று
இலவங்கஞ் சந்தனநற் கோட்டமேல மெழில்
விலாமிச்சம் வேர்வெட்டி வேர்பின்
னிலக் கோரைக்கிழங்கு நற்றேவதாரம் நிகழ்
மதுரந்தாளிச பத்திரி யிதெல்லாம்
பலங்கா லோர்வகையினுக்கு நிறுத்தெடுத்தே
பாலினை விட்டெரித் தெண்ணெய் தன்னிற்போடே.

ஏதுவாய்க் காய்ச்சியதைப் பதத்திறக்கி யியல்பாக
வத்திகட்ட மேலிற்பூச
வாதசுரோணிதத் தோடேயநேக வாதமாறுமிந்த
க்கேதகி யின்தைலத்தாலே

யாதியிலே முன்னோர்கள் சொன்ன நூலை
யாராய்ந்து தெளிந்திந்தமுறை களெல்லாம்
நீதிபுரி சரபேந்திர பூபன்றானும் நிச்சயித்த
தாலிதுதான் பிசகிடாதே. (80)

(இ-ள்)

| | |
|---|---|
| தாழைவிழுதுச்சாறு | 4 நாழி (சின்னப்படி.) |
| நல்லெண்ணெய் | 1 படி |
| பசுவின்பால் | 1 படி |

இவைகளைச் சேர்த்து,

| | |
|---|---|
| இலவங்கம் | சந்தனம் |
| கோஷ்டம் | ஏலம் |
| இலாமிச்சம்வேர் | வெட்டிவேர் |
| கோரைக்கிழங்கு | தேவதாரம் |
| அதிமதுரம் | தாளிசபத்திரி |

இவை வகைக்குக் கால் பலம் எடுத்துப் பால்விட்டு அரைத்து எண்ணெயிற் போட்டுக் காய்ச்சிப் பதத்திலிறக்கி வஸ்திகட்ட, மேலே பூச, வாதசோணிதம் தீரும். இன்னும் அநேக வாதங்களும் தீரும். (வாதசோணிதம் = வாதரக்தம் என்னும் நோய். இதில் ரத்தம் கெட்டுத் தோலின் நிறத்தில் மாறுபாடுகளும் அரிப்பும் எரிவும் உண்டாகும்)

---

## 31. குக்குலு மாத்திரை

ஆமணக் கினெண்ணையிருசேரினோடே
யழுத்தமுள்ள கந்தகந் தான்பல மோராறு
கோமளஞ்செய் திரிபலையின் பொடிநீ டோர்சேர்
கூட்டிடு குக்குலுவு மந்நிறையதாகும்



ஓமமுடன் வாய்விளங்கம்பொன் முசுட்டையுயர்
பஞ்சலவணமொடு மருந்கிழங்கு
காமுறுவெட்பாலை குரோசாணி காயங்கமழ்
வசம்பு சிறுதேக்குச்சீரகந்தான் (81)

சீரகத்தினொடு மதுரஞ்சிற்றரத்தைத் திகழானைத்
திப்பிலிநற் றேவதாரம்
பாரில்வளர் சோதிஷ்மதி விதையும்புங்கம் பட்டை
சதகுப்பை விளாம்பழமு நன்று
யோரும் வகைக்கரைப் பலந்தான் சூரணித்தே
யுரிமையுடன் வெல்லம் போட்டுண்டை செய்து
சீருடனே நெய்கலந்து தின்பீராகிற் றீருநோய்
தனையினிது செப்புவோமே. (82)

மேகவிரணங்கள் மூக்கதனில் வந்து வெகுநாள்
சென்றாறாத நோய்களொடே
ஆகத்தின் விரண முள்ளங்கை கால்தன்னி லாறாத
விரணத்தினீர் வடித்தல்
ஆகு மிரணங்களெல்லாந் தீருமார்பிலதிகவலி
யெண்பத்தினாலு வாதம்
ஏகமுடன் விட்டோடிப் போகுமென்றே விளம்
பினோங்குக் குலுமாத்திரை யிதாகும். (83)

(இ-ள்)

ஆமணக்கெண்ணெய் 2 சேரோடு

| | |
|---|---|
| கந்தகம் | 6 பலம் |
| திரிபலைப்பொடி | 1 சேர் |
| வெள்ளைக்குங்கிலியம் | |
| ஓமம் | வாயுவிளங்கம் |
| பொன்முசுட்டை | ஐந்துப்பு |
| மருள்கிழங்கு | வெட்பாலை |
| குரோசாணி ஓமம் | காயம் |

| | |
|---|---|
| வசம்பு | சிறுதேக்கு |
| சீரகம் | அதிமதுரம் |
| சிற்றரத்தை | யானைத்திப்பிலி |
| தேவதாரம் | ஜோதிஷ்மதி விதை (வாளுலுவை) |
| புங்கம்பட்டை | சதகுப்பை |
| விளாம்பழம் | |

இவை வகைக்கு ½ பலம் எடுத்துப் பொடிசெய்து, வெல்லம் போட்டு உருண்டைகளாகச் செய்து, இதனோடு நெய் கலந்து சாப்பிட மேகவிரணங்கள், வெகுநாளாக ஆருத மூக்கில் வரும் நோய்கள், இரணமுள்ள கைகால்களிலிருந்து நீர்வடிதல், மார்புவிரணம், மார்புவலி, முதலியனவும் 84 வித வாதநோய்களும் தீரும்.

---

## 32. வாதராட்சதசூரணம்

அரப்பொடி கல்நார் காந்தங் கன்மதஞ் சங்கரி
தான்கந்தக நீடன்னபேதி
யுரியகற்பூர சிலாசித்தோடே சாத்திரவேதி
யொவ்வொரு காசெடையே யாகு
மிரதமுடன் வெங்காரம் வகையொன்றுக்கே
யீரிரண்டு வராகனெடை யாகக் கூட்டிக்
கரியசீரக மோம மரத்தை மும்மைக்கடுகு
வகையொன்றுக்கோர் பலமதாமே (84)

பலம் பத்து வெடியுப்பு நிறுத்துக்கொண்டு பாங்
காகவிவை யெல்லாம் நிறுத்துத் தூளாய்க்
கலையதனல் வடிகட்டிக்கொண்டிடுது கனவாத
ராட்சதசூரணமாமித்தை
யுலகத்தின் மனிதருக்கு நோய்கள்வந்தே யுழல்
கின்றபோதிந்த வவுடதத்தைப்
பலமறிந்தேயனுபான மறிந்துதந்தாற்பலமான
வாதங்கள் பேர்ந்துபோமே (85)



(இ-ள்)

| | |
|---|---|
| அரப்பொடி | கல்நார் |
| காந்தம் | கல்மதம் |
| சங்காரி (முதியார் கூந்தல்) | கந்தகம் |
| அன்னபேதி | கற்பூரம் |
| கற்பூர சிலாசித்து | சகஸ்ரவேதி |

இவை வகைக்கு 1 காசெடை எடுத்து,

| | |
|---|---|
| பாதரசம் (சுத்தி செய்தது) | 2 வராகனெடை |
| வெண்காரம் | 2 வராகனெடை |

கூட்டி

| | |
|---|---|
| கருஞ்சீரகம் | ஓமம் |
| அரத்தை | மும்மைக்கடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி) |

இவை வகைக்கு 1 பலம்

வெடியுப்பு 10 பலம்

எடுத்து, இவைகளை யெல்லாஞ் சேர்த்துத்தூள்செய்து, வஸ்திரகாயம் பண்ணவும்.

இந்தச் சூரணத்தை நோயாளியின் வலுவுக்குத்தகுந்த அநுபானத்தோடு கொடுக்க வாதநோய் தீரும்.

---

## 33. குருவுண்டை

கந்தகமு மிரதமுமே சமனுக் கூட்டிக் கனத்தி
டுமாமணக்கு நெய்சிறுகவிட்டே
யந்தமாமிரவியின் முன்னுறுநாள் வைத்தரைத்
துருட்டி யுலர்த்தியோர் பட்டினலே

பந்துபோற்சுருட்டி மேனூலைச் சுற்றிப் பருத்தசித்தி
ரமூல வேர்ப்பட்டைத் தூளுந்
தந்திரமாயுடைத்திட்ட சங்கின்றூளுஞ் சமன்
கொண்டே யோரோட்டிற் சற்றிடேமுன். (86)

முட்டந்தப் பந்துதனை யதனின்மேல் வைத்தியம்பு
தூளினை மேலுமெய்தக்கொட்டி
வட்ட வோட்டான் மூடிச்சேலை மண்செய் வாயுவில்லா
விடத்தில் மறைவிலேதான்
றிட்டமாயிரு நூறு விருட்டிதன்னிற் றீரமதாய்ப்
புடஞ்செய்குருவுண்டை யாகுந்
துட்ட வாதத்துக்கே யனுபானத்தின் றொடர்பறிந்து
கொடுத்திட்டாற்றொலைந்துபோமே (87)

(இ-ள்)

சுத்திசெய்த கந்தகம்   சுத்திசெய்த பாதரசம்

இவை சமனெடை கூட்டி,

ஆமணக்கினெண்ணெய்

கொஞ்சம்விட்டு 6 நாள் வெயிலில் வைத்துப் பிறகு எடுத்து அரைத்து, உருட்டி, அதை ஒரு பட்டில்வைத்துப் பந்துபோல் சுருட்டி மேலே நூலைச் சுற்றி,

சித்திரமூல (கொடிவேலி) வேர்ப்பட்டைத்தூள்
சங்குத்தூள்

இவை சமனெடை எடுத்துக்கொண்டு ஒரு சட்டி ஓட்டில் கொஞ்சம் போட்டு அதன்மேல் அந்தப் பந்துபோல் சுருட்டிய மருந்தை வைத்து அதன்மேல் மீதி இருக்கும் பொடியையும் போட்டு, மற்றொரு சட்டி ஓட்டால்மூடி சேலைமண்செய்து, காற்றுஇல்லாத இடத்தில், 200 வரட்டிகள் வைத்து புடம் போடவும்.

இந்தக் குருவுண்டையைத் தகுந்த அனுபானத்தோடு கொடுக்க வாத நோய்கள் தீரும்.



## 34. விஷ்ணுபராக்கிரம ரசகுளிகை

சுத்தித்த ரசங் கெந்திவெங்காரமுஞ் சுத்தி
செய்திடு நாபி மிளகுடன்
சத்திச்சாரஞ் சயிந்தலவணமுஞ் சமனதா
யூமத்தையின் சாற்றினால்
மத்தித்தே செப்புச்சிமிழிலடைப்பின் மண்ணின்
சேலையை யந்தச்சிமிழின்மே
லுய்த்துச் சுற்றிக் குக்குடப்புட மிட்டபின்னேது
பன்றியின் பிச்சுமீன்பிச்சுமே (88)

மீனின்பிச்சு மிரண்டுமே சேர்த்ததில் மிளகு
போலவே யுண்டைகள் செய்தனு
பானந் தண்ணீரி லோருண்டை கொண்டிடப்
பழித்திடும் பலமாக முகத்தினி
லூனஞ் செய்திடு வாதந்தனுர் வாத மொருபுறத்தில்
வலித்திடு வாதமுங்
காலோடுமே விஷ்ணுபராக்கிரம கனரசத்தின்
குளிகை யிதாகுமே (89)

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்திசெய்த பாதரசம் | மிளகு |
| ,, கெந்தகம் | சத்திச்சாரம் |
| ,, வெண்காரம் | இந்துப்பு |
| ,, நாபி | |

இவைகளைச் சமனெடை எடுத்து, ஊமத்தையின் சாற்றினால் மத்தித்து ஒரு சிமிழிலடைத்து, அதன்மேல் சீலைமண் செய்து குக்குடப் புடம் (10 வரட்டிகள் வைத்துப்புடம் போடுதல்) போட்டுப் பிறகு எடுத்து அதனோடு,

பன்றியின் பிச்சு   மீன்பிச்சு

சேர்த்து மிளகளவு உருண்டைகளாகச் செய்து தண்ணீரோடு ஒரு உருண்டை சாப்பிட்டுவர, முகவாதம், தனுர்வாதம், பக்க வாதம் இவை தீரும்.

## 35. வாதத்துக்குத் தைலம்

நல்லெண்ணெயொரு நாழிவேப்பெண்ணெ யொரு
நாழி நயமாய்க்கொண்டு
செல்லிதனில் வாதகரப்பான் பூதகரப்பான் மேற்
சங்கத்தாரி
வல்லப் பறங்கிப்பட்டையிந் நான்குபட்டையுந்
தான் வகையொன்றுக்குச்
சொல்லுறு காற்பலமாகத் தூள்செய்தவ் வெண்ணெ
யினிற்றுலங்கக்சேரே (90)

சேர்த்தொரு நால்வராகனெடைக் கந்தகத்தூ
ளும்போட்டுத் திகழு மேனிக்
கூர்த்திடு சாறுகுதல் வெற்றிலைச் சாறுகுதலினிது
கொடுமுறித்துப்
பார்த்த விரதத்தையு மோர்வராகனெடைசேர்த்
திருநாள் பகல்முன்வைத்துப்
பேர்த்தெடுத்துக் காய்ச்சிமேற் றடவிடில் வாதங்
களெல்லாம் பெயர்ந்து போமால். (91)

(இ-ள்)

| | |
|---|---|
| வாதகரப்பான் பட்டை | பூதகரப்பான் பட்டை |
| சங்கத்தாரிப் பட்டை | பறங்கிப்பட்டை |

இந் நான்கு வகைப்பட்டைகளிலும் வகைக்கு ¼ பலம் எடுத்துத் தூள் செய்து,

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 1 நாழி |
| வேப்பெண்ணெய் | 1 நாழி |

இந்த எண்ணெய்களில் போட்டு, சுத்திசெய்த கந்தகத்தூள் 4 விராகனெடை எடுத்து, குப்பைமேனிச்சாறு அல்லது வெற்றிலைச்சாற்றில் முறித்து எடுத்துக்கொண்டு, அதையும் சுத்தி செய்த பாதரசம் 1 விராகனெடையும் கூடப்போட்டு, 2 நாள் வெயிலில் வைத்து எடுத்துக்காய்ச்சி மேலேதடவ, வாதங்கள் தீரும்.



## 36. வாதத்துக்கெண்ணெய்.

நொச்சி தழுதாழைபுங்கு வேம்புவேலிப்பருத்தி
நுவெலூமத்தை
யிச்சையுறு வேளைசாரணை முதியார்கூந்தன்
மாவிலிங்கை மெத்த
மெச்சிடு பாவட்டை எனக்குறிஞ்சி குமிழிலை
யினோடுவேருங் கொற்றுன்
பச்சிலந்தை மேனி புளியாமணக்காவாரை
செருப்படி யிருப்பை (92)

பைம்பொனிற மஞ்சள் கழற்கொடியினோடு
வில்வங் கம்பந்திராயி
னம்புதரு மிலைகளுஞ்சேர்த் திதமுறவே கடா
யம்வைத்து நன்கிறுத்துப்
பம்பதனிற் சதகுப்பை மஞ்சிட்டி குங்கிலியம்
பகருங்கோட்டம்
வம்புறுசெவ் வள்ளிமரமஞ்சள் மாவிஞ்சியோடு
வயங்கு மேலும் (93)

மேலிலங்கு செவியமுடன் கரியசீரகமரத்தை
விளம்புதற்குச்
சாலமகிழ்ந்திடு குளவிந்தன மரைத்துக்
கூட்டியைந்துதைல முஞ்சேர்த்
தேலவெரித்துப் பதத்தினிறக்கி வடித்துப்
பூசவிலகு வாகக்
காலையினி லருந்திவர வாதமெனச் சொல்வ
தெல்லாங் கலங்கியோடும் (94)

இ-ள்)

| | |
|---|---|
| நொச்சி | தழுதாழை |
| புங்கு | வேம்பு |

| | |
|---|---|
| வேலிப்பருத்தி | ஊமத்தை |
| வேளை | சாரணை |
| முதியார்கூந்தல் | மாவிலங்கை |
| பாவட்டை | குறிஞ்சி |
| குமிழிலை, வேர் | முடக்கொற்றான் |
| இலந்தை | புளி |
| குப்பைமேனி | ஆமணக்கு |
| ஆவாரை | செருப்படி |
| கழற்சிக்கொடி | இலுப்பை |
| கம்பந்திராய் | மஞ்சள் |
| | வில்வம் |

இவைகளைச் சேர்த்துக் கஷாயம் வைத்து இறுத்து, அதில்

| | |
|---|---|
| சதகுப்பை | மஞ்சிட்டி |
| குங்கிலியம் | கோஷ்டம் |
| செவ்வள்ளி | மரமஞ்சள் |
| மாங்காய் இஞ்சி | வயங்கு |
| கருஞ்சீரகம் | சவ்வியம் |
| குளவிந்தமஞ்சள் | அரத்தை |

இவைகளை யரைத்துச் சேர்த்து

| | |
|---|---|
| இலுப்பெண்ணெய் | நல்லெண்ணெய் |
| ஆமணக்கெண்ணெய் | வேப்பெண்ணெய் |
| புங்கெண்ணெய் | |

இவைகள் சேர்த்து எரித்துப் பதத்திலிறக்கி வடித்துப் பூச வாதங்கள் தீரும்.

குறிப்பு:—சரக்குகளின் அளவு சொல்லப்படாத இடத்தில் சமனெடை என்று கொள்ளவும். தைலங்கள் காய்ச்சுவதற்கு கஷாயம், கல்கம், மேல பொடி, எண்ணெய் இவை சேர்க்கப்படும். கஷாயம் காய்ச்ச கஷாயச் சரக்குகளின் சேர்ந்த எடைக்கு எட்டு பங்கு ஜலம் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சவேண்டும். கஷாயத்திற்கு $\frac{1}{4}$ பங்கு எண்ணெயும் அதில் $\frac{1}{8}$ பங்கு கல்கமும் சேர்க்கவேண்டும்.

---



## 37. எண்பதுவாதத்துக்குமெண்ணெய்

தழுதாழை நொச்சியிலை புங்கிலை சாறணை
மத்தஞ் சதுரக்கள்ளி
கழற்கொடி யாடாதொடை வேலிப்பருத்தி
தைவேளை கனமார்கூந்தல்
செழிய திரிபுரமெரித்தானெனச் சொல்லுமின்ன
வற்றின் றிகழுஞ்சாறு
வழுவின்றி வகையொன்றுக் குழக்குவீத (95)
மெல்லாம் வாய்ப்பக் கொள்ளே

வாய்த்தகொடிவேலி சாரணை வெளுத்தபிசின்
பூளை மாவிலங்கை
கூர்த்திடு பாவட்டை புங்குதில்லை கூவிளை
சிறியகுறிஞ்சா வேர்கள்
பேர்த்த விருப்பைப்பட்டை வகையொன்றுக்
கொருபலமாய்ப் பெருகக்கொண்டு
வார்த்திரண்டு குறுணிநீர் நாலிலொன்றாய்க் (96)
காய்ச்சியதை வடித்தல் செய்யே

வடித்தகடாயத்துடன் முன்னுரைத்த சாற்றினை
யும்விட்டு வளநேர்வாளம்
தொடுத்திடுகன்மத மினியபெருங்காயம்
வெடியுப்புத் தொகு மிந்நான்கு
மடுத்தவொரு நாழியெண்ணெய்க் கிருகழஞ்சு
விதஞ் சேர்த்ததின் வேப்பெண்ணெய்
பொடித்திடு நல்லெண்ணெய் புங்கெண்ணெயிருப்பை (97)
த்தைலம் புகழ்தேங்காய்ப்பால்

பாலுறு குங்கிலியத்தூள்சேர்த்து முத்தினத்
தெரித்துப் பதத்திறுத்து
மேலுடலிற் பூசிவரி லெண்பதெனும் வாதமெல்
லாம்விலகிப் போகுஞ்

சாலவுமிம்முறை யுலகிற்கை கண்டதென
விமையோர் தம தூர்வைகுஞ்
சீலமிருந்திடு தன்வந்திரி யுரைத்தானிதை
வகையாய்த் தெளிந்து செய்யே. (98)

(இ-ள்)

தழுதாழை நொச்சியிலை
புங்க இலை சாறணை
ஊமத்தை
சதுரக்கள்ளி கழற்சிக்கொடி
ஆடாதொடை வேலிப்பருத்தி
தைவேளை முதியார்கூந்தல்
திரிபுரமெரித்தான்
(சிவனார் வேம்பு)

இவைகளின் சாறுகளில் வகைக்கு ஒரு உழக்கு (2 ஆழாக்கு) எடுத்துக்கொண்டு,

கொடிவேலி சாறணைவேர்
பூளைவேர் வெள்ளைப்பிசின்
மாவிலிங்கைவேர் பாவட்டைவேர்
புங்குவேர் தில்லைவேர்
கூவிளைவேர் சிறுகுறிஞ்சாவேர்
(வில்வவேர்)
இலுப்பைப்பட்டை

இவை வகைக்கு 1 பலம் எடுத்து 2 மரக்கால் ஜலம்விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். இறுத்துக் கொண்ட கஷாயத்துடன் முன் சொன்ன சாறு வகைகளையும் விட்டு, அதில்

நேர்வாளம் (சுத்திசெய்தது) கல்மதம்
பெருங்காயம் வெடியுப்பு



இவை வகைக்கு 2 கழஞ்சு வீதம் எடுத்துப் பொடிசெய்து போட்டு, அதனோடு

நல்லெண்ணெய் புங்கெண்ணெய்
வேப்பெண்ணெய் இலுப்பையெண்ணெய்
தேங்காய்ப்பால்

வகைக்கு ½ படி வீதம் விட்டு குங்கிலியத்தூள் சேர்த்து 3 நாள் எரித்துப் பதத்தில் இறுத்து உடம்பில் பூசிவர எண்பது வித வாதமும் தீரும். இது உலகிலேயே கைகண்ட மருந்தாகச் சொல்லப்படுகிறது. இம்முறை தன்வந்திரியால் சொல்லப் பட்டது.

## 38. சகல வாதத்துக்கும்

நாடெருக்கின் சமூல மிடித்தொரு தூணிப்புனல்
விட்டு நாலி லொன்று
யீடுபெறக்காய்ச்சி வடித்தரத்தை யரேணுகஞ் சரள
மேலமாசில்
சேடுறுமஞ்சிட்டி சதகுப்பை யமுக்கிறுவேர்
நற்றேவதாரம்
நீடெருக்கம் வேர் கோட்டங் கச்சோலஞ்சை
லேய நிகழகில் பின் (99)

பின்னமில் பச்சிலை யிலாமிச்சை கடுகட்டவர்க்கம்
பேசுகின்ற
நன்னயக் குந்திருக்க மிவையொவ்வொன்றெ
வ்வோர் பலமே நன் கரைத்து
மன்னுற மேற்கரைத் தெண்ணெய் நாழியுரி
விட்டெருக்கின் வளர்பால் மூன்றாய்த்
துன்னும் பலம் விட்டெரித்துத் தடவிடில் வாதங்
களெல்லாந் தொலையும் பாரே. (100)

(இ-ள்)

எருக்கின் சமூலத்தை இடித்து நாலுமரக்கால் தண்ணீர் விட்டு நாலிலொன்ருய்க் காய்ச்சி, வடித்துக்கொண்டு,

| | |
|---|---|
| அரேனுகம் | அரத்தை |
| சரளம் | ஏலம் |
| மஞ்சிஷ்டி | சதகுப்பை |
| அமுக்கிருவேர் | தேவதாரம் |
| எருக்கம்வேர் | கோஷ்டம் |
| கச்சோலம் | சைலேயம் (கல்பாசி) |
| அகில் | பச்சிலை |
| இலாமிச்சை | கடுகு |
| குந்துருக்கம் | அஷ்டவர்க்கம் (ஜீவகம், ரிஷபகம், காகோலி, க்ஷீரகாகோலி, மேதா, மகாமேதா, ருத்தி, விருத்தி.) |

இவை வகைக்கு ஒரு பலம் எடுத்து நன்ருக அரைத்து, நல்லெண்ணெய் $1\frac{1}{2}$ படி (சின்னப்படி) சேர்த்து, எருக்கின் பால் 3 பலம் விட்டு எரித்துத்தடவி வந்தால் வாதங்கள் தீரும்

---

## 39. சருவவாதத்துக்குமெருக்கெண்ணெய்

எருக்கம்வேர் நூறுபல நொச்சி புன்முருங்கை
மாவிலங்கை வேர்கள்
திருக்கறு சிற்ருமணக்கம்வேர் கொன்றைப்பட்டை
யோடு சேவகன் வேர்
தரித்திடு சாறணை தொய்யில் சிறிய வழுதுணை
திராய் சங்கம் வேர்கள்
பருத்திடு மூமத்தையொடு குறிஞ்சிவேர்
வகைக்கொரு முப்பது பலந்தான் (101)



பலனுற வோர்கலனே தூணிப்புனலிட்
டோரிரண்டு பதக்கு நீராய்
நலனுறவே யெரித்து வடித்தேலந் திப்பிலி
மிளகு நவிலுங்காய
மிலவங்க மிருசீரகம் வகைக்குமுப்பலத்
தூளெண்ணெய் நாழி
புலனுறச் சேர்த்தெரித்துப் பாக்களவருந்த
வாதமெல்லாம்போகுந்தானே (102)

(இ-ள்)

எருக்கம்வேர் 100 பலம்
நொச்சிவேர்
புன்முருங்கைவேர் (புரசின்வேர்)
மாவிலங்கைவேர்
சிற்ருமணக்கம்வேர்
கொன்றைப்பட்டை
சேவகன்வேர்
சாறணை
தொய்யில் வேர் (ஒருவகைக் கீரை)
சிறுவழுதுணை (முள்கத்திரி)
திராய்வேர்
சங்கம் வேர்
ஊமத்தை வேர்
குறிஞ்சிவேர்

இவை வகைக்கு 30 பலம் எடுத்து 16 மரக்கால் நீர்விட்டு நாலு மரக்கால் நீராய்க் காய்ச்சி,

| | |
|---|---|
| இலவங்கம் | கருஞ்சீரகம் |
| சீரகம், | ஏலம், |
| திப்பிலி, | மிளகு, |
| பெருங்காயம் | |

வகைக்கு 3 பலம் தூள் செய்து போட்டு நல்லெண்ணெய் 1 நாழி விட்டு எரித்துப் பாக்களவு சாப்பிட வாதநோய்கள் தீரும்.

# 40. எண்பது வாதத்துக்குஞ் சிநேகப் பொட்டணம்.

ஏலமுஞ் சரளமுந் தேவதாரங் கோட்டமிலந்தை
விதை வெள்ளுள்ளியு
மியல்பான புன்கரிசிபுன்னை கழற்மணி
யுடனெழிற் சதகுப்பையுடனே
சாலவே சணல்விதை முருங்கைவிதை
வேப்பரிசி தழைத்த மகிழின் விதையுந்
தாரணியிலே வளரெள்ளும் பருத்திவிதை
தருவாமணக்கம் விதையு
மூலமறவே யிடித்துத் தூளாக்கியே தேங்காய்
மூன்றுந் திருகியிட்டே
முற்று வெள்ளாட்டினிணங் கூட்டிப்பிசைந்து
பின்முசியாம ஐந்தெண்ணெயிற்
சீலமுடனே பிசைந்து சேலையிற்கட்டியே
சிக்கென வொத்தவேதான்
சேர்கின்ற வெண்பதுவாதமுந் தீருமேசிநேக
பொட்டணமாமிதே (103)

(இ-ள்)

| | |
|---|---|
| ஏலம் | சரளம் |
| தேவதாரம் | கோஷ்டம் |
| இலந்தைக்கொட்டை | வெள்ளைப்பூண்டு |
| புங்கரிசி | புன்னை |
| கழற்சிப் பருப்பு | சதகுப்பை |
| சணல் விதை | முருங்கை விதை |
| வேப்பரிசி | மகிழம் விதை |
| எள்ளு | பருத்திவிதை |
| ஆமணக்கு விதை | |

இவற்றை இடித்துத் தூளாக்கி மூன்று தேங்காய்களைத் திருவிச் சேர்த்து வயதுவந்த வெள்ளாட்டின் கொழுப்பைச் சேர்த்து,



ஐந்தெண்ணெய் (நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், வேப்பெண்ணெய், புங்கெண்ணை, தேங்காயெண்ணெய்,)

கூட்டிப் பிசைந்து துணியிற் கட்டி (மித உஷ்ணமாக) ஒத்தடம் கொடுக்க எண்பது வாதமும் தீரும்.

---

# 41. விஷமுட்டித்தைலம்

எட்டியுறும் பழத்தையொரு பானையதினிரைத்
ததனிலிசைந்தகாடி
விட்டொரு நாற்றின மூறவைத்ததைக்
கையாற்பிசைந்து விளப்புதூசாற்
றிட்டமுற வடிக்கட்டிக் கொண்டதொரு
குறுணியதிற்றிகழ் நல்லெண்ணெய்
யிட்ட முறவிரண்டுபடி யொருபடி
யாமணக்கெண்ணெ யிசையச்சேரே (104)

சேரெலுமிச்சம் பழச்சாறொரு படியுஞ்
சேர்த்ததன் பின் செப்புமெட்டிப்
பார முறுங்கொட்டையதும் படியிடித்துப்
போட்டெரித் துப்பதத்திற் காய்ச்சிச்
சார முறவிடித்துக் கொளினதன்பேர்
விடமுட்டித் தைலமாகும்
பாருலகோர்க்கிதைத் தொட்டுத் தடவிடில்
வாதங்களெல்லாம் பறக்கும்பாரே (105)

(இ-ள்)

எட்டிப் பழத்தை யொருபானையிற்போட்டு, காடிவிட்டு 4 நாட்கள் ஊறவைத்து, பிறகு அதைக்கையால் பிசைந்து சாற்றை வடிகட்டிக்கொண்டு, ஒருகுறுணி எடுத்துக்கொண்டு அதனுடன்,

நல்லெண்ணெய் 2 படி
ஆமணக்கெண்ணெய் 1 படி

விட்டு,

எலுமிச்சம் பழச்சாறு 1 படி

யும் சேர்த்து,

கனமுள்ள எட்டிக்கொட்டை ஒரு படி

இடித்துப்போட்டு எரித்துப் பதத்தில் காய்ச்சி வடித்துக் கொண்டு, இதைத்தொட்டுத் தடவிவர வாதங்கள் தீரும் இதற்கு விஷமுட்டித் தைலம் என்று பெயர்.

---

## 42. வாதரோகங்களுக்குச் சவ்வியாதி சூரணம்

கொடிவேலி தாளிசபத்திரி யோமம்
வாய்விளங்கங் கொத்தமல்லி
கடுக்காய் சத்திச்சார மெவச்சாரம்
வெண்காரங் கருதரத்தை
யடைவுதரு மைந்துப்புக் குரொசானியோம
முடனுயிற் பட்டை
திடனுறு திப்பிலி மூலந்திரி கடுகு
தசமூலஞ்சிறந்த கோட்டம் (106)

சிறந்திடு பொன்முசுட்டை பேராமுட்டி
புன்கிஞ்டு தெரிக்குங்காயம்
நிறைந்திடுவை வகையொன்றுக் கரைப்பலத்தாள்
கொண்டிந்த நிறைக்கு நாற்பங்
குறைந்திடு தோலுரித்திடு வெள்ளுள்ளி
சேர்த்தாவி னெய்யுயர்தேன் கூட்டித்
திறந்தரவே கழற்கொடிக் காயளவுருட்டி
நாற்பது நாள் சேரத்தின்னே (108)



தின்றால்வாதிலனுத்தப்பவாயுவொடு மகோதரமுந்
தெரிக்குங் குன்மங்
கன்று வயிற்றுக்கிருமி புகலண்டவாயுவொடு
கயநோய் தாழ்வா
யென்றுமுறுபிடிப்பு வயிற்றுப்பொருமல்
பக்கவாய் வெலுப்புருக்கி
யென்றுரைத்தபிணிசளும் போமின்னதற்குப்
புளியோடு கைப்பிவை விலக்கே (108)

(இ-ள்)

கொடிவேலி
ஓமம்
கொத்தமல்லி
சத்திச்சாரம் (ஸர்ஜக்ஷாரம்)
வெண்காரம்
ஐந்துப்பு
(கடலுப்பு, இந்துப்பு,
உவர் மண்ணுப்பு,
வளையலுப்பு, அட்டுப்பு)
ஆயில்பட்டை
திரிகடுகு (சுக்கு, மிளகு,
திப்பிலி)
கோஷ்டம்
பேராமுட்டி
பெருங்காயம்
பொன் முசுட்டை

தாளிசபத்திரி
வாயுவிளங்கம்
கடுக்காய்
யவச்சாரம்
அரத்தை
குரோசாணி ஓமம்
திப்பிலி மூலம்
(கண்டந்திப்பிலி)
தசமூலம் (பாதிரி வாகை,
பெருங்குமிழ், வில்வம்,
முன்னை, சிறுவழு
துணை, நெருஞ்சல், சிறு
மல்லி, பெருமல்லி,
கண்டங்கத்திரி, இவற்
றின் வேர்.)
புங்கு

இவைகளில் வகைக்கு அரைப் பலம் தூள் எடுத்து வடிகட்டிக் கொண்டு இந்த நிறையைப்போல் நாலுமடங்கு நிறையுள்ள தோல் உரித்த வெள்ளைப்பூண்டும், பசுவின் நெய்யும், தேனும் சேர்த்துத் தினமும் 1 கழற்கொடிக் காயளவு 40 நாள் சாப்பிட்டுவரத் தீரும்நோய்கள் :-

1. ஹனுஸ்தம்ப வாயு அதாவது தாவாய்க்கட்டைப் பிடிப்பு, 2. மகோதரம், 3 குன்மம், 4. வயிற்றுக் கிருமி, 5. அண்ட வாயு, 6. கயநோய், (க்ஷயம்) 7. எப்பொழுதும் விலகாத பிடிப்பு, 8. வயிற்றுப் பொருமல், 9. பக்கவாயு, 10. எலும்புருக்கி.

குறிப்பு: இந்தச் சூரணத்திற்கு ‘சவ்வியாதிச் சூரணம், என்ற பெயர் இருப்பினும் சவ்வியம் இதில் சேர்க்கப்படவில்லை. உரைச்சுவடி (நெ. 82) யில் சவ்வியமும், சேர்க்கப்பட்டிருக்கிறது. மேலும் அதில் வசம்பு, சீரகம், கருஞ்சீரகம், முதலியவைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

---

## 43. வாதத்துக் கெருக்கெண்ணெய்

எருக்கினொடு புளிநொச்சி யிலைச்சாறு
பிரண்டைதேகிளங் கொடிச்சாற்
றுருக்கிளர் நற்றாழை கள்ளிச்சாறு கோசலம்
வகைக்கொன் றெவ்வோர்நாழி
விருப்பொடுகொண்ட முக்கிராக்கொடிவேலி
யிலாமிச்சம் வேரிந்துப்புப்
பருத்த சதகுப்பை யிருவேலி
வேர்சாறணைவேர் பருவசம்பு. (109)

வசமுறுவெண் சிறுகடுகு குளவிந்தஞ்செவிய
மிவைவகை யொன்றுக்குப்
பிசகாதெவ்வோர் கழஞ்சுகொண்டரைத்துக்
கரைத்தெண்ணெ பெருகநாழி
யிசையவிட்டுப் பதத்தெரித்துத் தடவிஞ்நரம்பு
முடக்கிசையுஞ் சந்து
மிசைநோவு முதலிய வாதங்களெல்லாஞ்
சிலபகலின் விலகிப்போமால் (110)



(இ-ள்)

| | |
|---|---|
| எருக்கிலைச்சாறு | புளியிலைச்சாறு |
| நொச்சியிலைச்சாறு | பிரண்டைச்சாறு |
| தேகிளங்கொடிச்சாறு | தாழைச்சாறு |
| பசுவின் மூத்திரம் | கள்ளிச்சாறு |

இவை வகைக்கு ஒவ்வொரு நாழி எடுத்துக்கொண்டு

| | |
|---|---|
| அமுக்கிரா வேர் | கொடிவேலி வேர் |
| இலாமிச்சம்வேர் | இந்துப்பு |
| சதகுப்பை | இருவேலிவேர் (வெட்டிவேர்) |
| சாறணைவேர் | வசம்பு |
| | குளவிந்தமஞ்சள் |
| வெண்சிறுகடுகு | செவ்வியம் |

இவை வகைக்கு ஒவ்வோர் கழஞ்சு எடுத்து அரைத்துக் கரைத்து எண்ணெய் 1 நாழிவிட்டுப் பதமாக எரித்துத்தடவி வர நரம்புமுடக்கி அதனால் ஏற்படும் நோய் முதலிய வாதங்களெல்லாம் சிலநாட்களில் தீரும்.

---

## 44. வாதத்துக் கெருக்கெண்ணெய்ப் புகை

கையகல வெண் சேலை யெலுமிச்சம் பழச்சாற்றிற்
கலக்கத் தோய்த்து
மைபறு பொன்னரிதாரம் வராகனெடை
கொண் டுத்தாமணியிலைச்சா
றெய்திட விட்டரைத் ததனாலூட்டி நிழலிடத்
துலர்த்தி யிலங்கக் காய்வீர்
துய்யுமதைத்திரி செய்தத்திரிப் புகையைக்
கொளில் வாதமோடிப் போமால் (111)

அனையதிற்புகை யெருமைத் தயிரினோடு
பழஞ்சோறுண் டதன்மேலங்குப்
புனைதிரியை நல்லெண்ணெய்தனிற் றோய்த்துக்
கொளுத்தி யிருப்புக்குழாயில்
வினையுறவே யேற்றி வாயாலுண்ண
நாலுநாள் மிகுவாதம் போம்
வனையந்தப் புகையன்று நாளதிகரிக்கு
மற்றைநாள் வாசியாகும் (112)

(இ-ள்)

கையகலவெண்சேலை எலுமிச்சம்பழச்சாற்றில் தோய்த்து, நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு,

பொன்னரிதாரம் ஒரு வராகனெடை

யை உத்தாமணிச்சாற்றைவிட்டு அரைத்து, நிழலில் உலர்த்தி அதை எலுமிச்சம் பழச்சாற்றில் தோய்த்த சேலையில் வைத்துத் திரி செய்து வைத்துக்கொள்ளவும். வியாதியுள்ள வருக்கு எருமைத் தயிரும், பழஞ்சோறும் உண்பித்துவிட்டு, ஒரு இருப்புக் குழாயில் அந்தத்திரியை நல்லெண்ணெயிற் தோய்த்து கொளுத்தி வாயாலே புகை பிடிக்கவும். இப்படி காலையும், மாலையும் 4 நாள் புகையுண்ண முதல் நாள் அதிகப் படும். மறுநாள் முதல் சிராகும். குறிப்பு:— முறையின் பெயர் எருக்கெண்ணெய் புகை என்றிருந்தபோதிலும் இதில் எருக்கு சேர்க்கப்படவில்லை.

---

## 45. வாதத்துக்கெட்டியெண்ணெய்

நொச்சி செருப்படி குப்பைமேனி
மயிர்மாணிக்க நுவலூமத்தை
மெச்சிடுஞ் சாறது தன்னிற்சுண்ணும்பு
கரைத்து மண்வெட்டிகாய்ச்சிப்



பச்சுறுசாற்றினிற் காலைத்தோய்த்து
நோமிடமதனிற் படமிதிக்கில்
வெச்சுறு நோக்காடு நிற்கும் பதநோகிலிவ்வாறு
மிதியல் செய்யே (113)

(இ-ள்)

| | |
|---|---|
| நொச்சி | செருப்படி |
| குப்பைமேனி | மயிர்மாணிக்கம் |
| ஊமத்தை | |

இவைகளின் சாறுகளோடு சுண்ணும்பும் கரைத்துக் கொதிக்க வைத்து குதிகாலில் சாற்றைத் தேய்த்துக்கொண்டு, ஒரு மண் வெட்டியைக் காய்ச்சி அதன்மேல் நோகிறவிடத்தில் படும்படி யாக மிதிக்க நோவு நிற்கும்.

---

## 46. விஷவாதத்துக்கு

வல்லாயிற்பட்டை பலநாற்பது முக்குறுணி
நீர்மருவக் கூட்டி
யொல்லுமதை நாலிலொன்றாய்க் காய்ச்சி
யெண்ணெய் நாழியுடனுரியுந்தீம்பால்
சொல்லுமொரு குறுணியுடனுழியும் விட்டுப்
பாரத்தைத் துலங்குமஞ்சள்
கல்லினுர் பெருங்காய நன்னரி வாய்விளங்கங்
கருதுமாஞ்சில் (114)

கருதமுக்கிராவேர் செங்கழுநீர்கோட்டம் வசம்பு
கடுக்கா யதன்னே
டுரைதருநற்றேவதாரம் வகைக்குவராகனெடை
யோரிரண்டாய்

விரவுறு தாளுங் கலந்தே யெரித்திறக்கிச்
சிறிதருந்தி மேலிற்பூசப்
பரவுறு விடவாயுப்பாரிச வாய்வியவை
யனைத்தும் பறந்து போகும் (115)

(இ-ள்)

ஆயிற்பட்டை 40 பலத்தில் 3 குறுணி நீர்விட்டு அதை நாலிலொன்றாய்க் காய்ச்சி,

நல்லெண்ணெய் 1 நாழி
பசுவின் பால் 1 நாழி

விட்டு,

| | |
|---|---|
| மஞ்சள் | கல்நார் |
| பெருங்காயம் | நன்னாரி |
| வாயுவிளங்கம் | சடாமாஞ்சில் |
| அமுக்கிராவேர் | செங்கழுநீர் |
| கோஷ்டம் | செம்பு |
| கடுக்காய் | தேவதாரம் |

இவை வகைக்கு 2 வராகனெடை எடுத்துத் தூள் செய்து கலந்து எரித்துச் சிறிது உள்ளுக்குச் சாப்பிட்டு, மேலும் பூச விஷவாயு, பாரிசவாயு இவையனைத்தும் தீரும்.

---

## 47. வாதத்துக்கெண்ணெய்

நல்லெண்ணெய் யாமணக்கி னெண்ணெய்
வகைக்கொரு நாழிநவில் கள்ளிப்பால்
வல்லெருக்கம் பாலிரண்டும் வகைக்குழக்கு
முடக்கொற்றான் மன்னுங்காந்தஞ்
சொல்லுமெவச்சாரங் கத்தூரிமஞ்சள்
மரமஞ்சள் துலங்குங் காம
னெல்லாஞ் சேர்த்தெரித்தருந்த யேற்பூச
வாயுவென்ப தெல்லாந் தீரும்



(இ-ள்)

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | ஆமணக்கெண்ணெய் |

வகைக்கு 1 நாழியும்

| | |
|---|---|
| கள்ளிப்பால் | எருக்கம்பால் |

வகைக்கு 1 ஆழாக்கும்,

| | |
|---|---|
| முடக்கொற்றான் | காந்தம் |
| யவச்சாரம் | கஸ்தூரிமஞ்சள் |
| மரமஞ்சள் | திப்பிலி |

இவை எல்லாவற்றையும் சேர்த்து எரித்து உள்ளுக்கு சாப்பிட்டு மேலும் பூச எல்லா வாயுவும் தீரும்.
காமன் = திப்பிலி

---

## 48. வாதத்துக்கெண்ணெய்

தழுதாழை நொச்சிவேலிப்பருத்தி
பாவட்டை சங்கங்குப்பி
செழுமையுறு மிருப்பையிலை திராயினோடு
குமிழ்கம்பந்திராய் நல்வேளை
பழுதறுவேப்பிலை சதுரக்கள்ளியிலை நீடெருக்கம்
பழுப்பூமத்தைக்
கொழுமையிலை செருப்படி யாட்டிலங்கொடியினிலை
முதியார் கூந்தல்பின்னும் (117)

பின்னுறு சாறணையிவற்றின் சாறு
மரமஞ்சளுள்ளி பெருமஞ்சிட்டி
தன்னோடு குங்கிலியம் விழலரிசிவசம்புயர்
தேவதாரங்குப்பை

மன்னுறுதேங்காய்ப்பால் செவ்வெள்ளி
    முளிமஞ்ச ளாமணக்கினெண்ணெய்
பன்னிடு வேப்பெண்ணெய் யெண்ணெய் கலந்தெரித்து
    மேற்பூசிற் பறக்கும்வாதம். (118

(இ-ள்)

| | |
|---|---|
| தழுதாழை | நொச்சி |
| வேலிப்பருத்தி | பாவட்டை |
| சங்கங்குப்பி | இலுப்பையிலை |
| திராய் | குமிழ் |
| கம்பந்திராய் | நல்வேளையிலை |
| வேப்பிலை | சதுரக்கள்ளியிலை |
| எருக்கம் பழுப்பு | ஊமத்தையிலை |
| ஆமணக்கிலை | செருப்படி |
| ஆட்டிளங்கொடி | முதியார் கூந்தல் |
| சாறணை | மரமஞ்சள் |

இவைகளின் சாற்றோடு,

| | |
|---|---|
| வெள்ளைப் பூண்டு | பெருமருந்சிஷ்டி |
| குங்கிலியம் | விழலரிசி |
| வசம்பு | தேவதாரம் |
| சதகுப்பை | தேங்காய்ப்பால் |
| செவ்வெள்ளி | முளிமஞ்சள் |
| ஆமணக்கெண்ணெய் | வேப்பெண்ணெய் |

இவற்றைச் சேர்த்து எரித்து மேலேபூசிவர வாதம் தீரும்.



## 49. வாதத்துக்கு

முசுமுசுக்கைவே ரெலுமிச்சங்காய்நேரரைத்
    தாடுசுரந்திடும்பா
லிசைவுறவிட்டுக்கரைத்து நெல்லரிசி
    போட்டன்னமிலங்கச் செய்து
பசையுற வேயின்னுமந்தப்பால் வார்த்து
    மூன்றுநாள் பருகினோரே
லசையுற வுற்றிருந்த குடல்வாதம்போம்
    வாதம்போலதுவும் பாரே (119)

(இ-ள்)

முசுமுசுக்கைவேர் எலுமிச்சங்காயளவு அரைத்து ஆட்டுப் பாலில் கரைத்து அதில்,

அரிசி போட்டு சாதமாகச் சமைத்து அந்தப்பாலைவிட்டுச் சாப்பிடவும். இவ்விதம் 3 நாள் சாப்பிடக்குடல்வாதம் தீரும்.

---

## 50. சருவவாதத்துக்கும் அமுதசஞ்சீவித்தைலம்

தாளகங் கந்தக மிரதமனோசிலையென்
    றவைநான்குஞ் சமமாய்க்கொண்டு
நாளுறு காடியிற் கலந்தோரார் துகிலூட்டி
    யுலர்த்திமேல் நனிதிரித்துத்
தாளுறுமாமணக்கு நெய்தனிற் றோய்த்துக்
    கொளுத்தி விழுந்தைலந்தன்னைக்
கேளுறவுள்ளருந்தி மேலினுந்தடவில்
    வாதமெல்லாங் கெட்டுப்போமால் (120)

(இ-ள்)

சுத்திசெய்த தாளகம் சுத்திசெய்த கந்தகம்
,, பாதரசம் ,, மனோசிலை

இவை நான்கையும் சமனெடை எடுத்துக் காடியிற் கலந்து உலர்த்தி இதைவைத் துத்திரிசெய்து, ஆமணக்கெண்ணெய்யில் தோய்த்துக் கொளுத்தி அதில் விழும் தைலத்தை உள்ளுக்குச் சாப்பிட்டு, மேலும் தடவிவர வாதநோய் தீரும்.

---

## 51. சகலவாதத்துக்கும்

தேங்காய்ப்பால்குறுணி கள்ளிச்சாறுதா
னொருதூணி தில்லையின்பா
லேங்கு கள்ளிப்பாலெருக்கம்பால் புங்கம்பாலினுட
னிலைக் கள்ளிப்பா
லேங்குவகைக் கொருநாழி நெருஞ்சிதழுதாழையுட
னுயர் மேனிச்சா
ருங்குறு சங்கங்குப்பி வீழிகொழுங்கொடி
வேலியாமி வற்றின் (121)

முனிதுரைத்த சாறுவகைக்கோர்குறுணி
பேய்ப்பீர்க்கி னிலங்குசாறு
கனிவுறு காரைப்பழச்சாறதனுடன்
பேய்க்கொம்மட்டிக் காயின்சாறு
நனிவகைக்குப் பதபதக்குச் செருப்படி
நீர்மேனெருப்பு நற்பாவட்டை
வனமுறு மான்செவிக்கள்ளி யுகாய்
முதியார்கூந்த லுத்தாமணியின்சாறு (122)

சாறிடுமாவிலங்கை மரு ளுமத்தையோடு
கம்பந்தாரை யிலைச்சா
றேறும்வகைக்கோர்குறுணி கொண்டுகுழ
லாதண்டைவே ரெருக்கின்றன்வேர்



வீறுகொடிக்கழல் கொன்றை புன்முருங்கை
மிளகரணைவேர் வசம்பு
தேறுமரமஞ்சள் சதகுப்பை கொத்தமல்லியோடு
சிறியதேக்கு (123)

தேக் கிருப்பைப்புண்ணுக்குக் கார்போக
வரிசியோடு ஜீவகம்மேன்
மாக்கடகசிங்கி கோழிக்காரங்
குங்கிலிய மருவுமேதை
தாக்கிடுமாயிற்பட்டை சிறுமூலஞ்
செவியமொடு தகுமரத்தை
நீக்கமறு மகாமேதை யிடவகைகளிவையெல்லாம்
நேராய்க்கொள்ளே (124)

கொண்டரைத்து முன்னுரைத்த சாறுபால்களிற்
கரைத்துக் குலவுமெண்ணெய்
மண்டிடவிட் டடுப்பேற்றியினிதெரித்துப்
பதந்தன்னில் வடித்துப்பூச
மிண்டிநோய் செயும்வாதமத்தனையுஞ் சிலபகலின்
விலகிப்போகும்
பண்டிந்தமுறை யுலகோரின்பமுற மலயமுனி
பகர்ந்தவாறே (125)

(இ-ள்)

| | |
|---|---|
| தேங்காய்ப்பால் | 1 குறுணி (மரக்கால்) |
| கள்ளிச்சாறு | 1 தூணி (4 மரக்கால்) |
| தில்லையின்பால் | |
| கள்ளிப்பால் | |
| எருக்கம்பால் | |
| புங்கம்பால் | |
| இலைக்கள்ளிப்பால் | |

இவை வகைக்கு 1 நாழி,

நெருஞ்சில்
தழுதாழை

குப்பைமேனி
சங்கங்குப்பி
வீழி
மருக்கொழுங்கொடி
வேளை

இவற்றின் சாறுகளில் வகைக்கொரு குறுணியும்,

பேய்ப்பீர்க்கங்சாறு
காரைப்பழச்சாறு
பேய்க்கொம்மட்டிக்காயின்சாறு

இவை வகைக்கு 1 பதக்கும் (2 மரக்கால்)

| | |
|---|---|
| செருப்படி | நீர்மேல்நெருப்பு |
| பாவட்டை இலை | மான்செவிக்கள்ளி |
| உகாய் இலை | முதியார்கூந்தல் |
| உத்தாமணி | மாவிலங்கை |
| மருள் | ஊமத்தை இலை |
| கம்பந்தாரயிலை | |

இவற்றின்சாறு வகைக்கு 1 குறுணியும்,

| | |
|---|---|
| ஆதண்டைவேர் | எருக்கின்வேர் |
| கழற்சிக்கொடிவேர் | கொன்றை |
| மிளகறணைவேர் | புன்முருங்கை (புரசு) |
| மரமஞ்சள் | வசம்பு |
| கொத்தமல்லி | சதகுப்பை |
| இலுப்பைப்புண்ணாக்கு | சிறுதேக்கு |
| சீவகம் | கார்போகவரிசி |
| கோழிக்காரம் | கற்கடசிங்கி |
| மேதை | குங்கிலியம் |
| ஆயில்பட்டை | சிறுமூலம் |
| சவ்வியம் | அரத்தை |
| மகாமேதை | இடபகம் (ரிஷபகம்) |



இவைகளை அரைத்து முன் சொன்ன சாறு வகைகளில் கரைத்து நல்லெண்ணெய்விட்டு எரித்துப் பதத்தில் வடித்துப் பூச வாதநோய்களனைத்தும் தீரும்.

---

## 52. வாதத்துக் கமுத சர்க்கரை

நெல்லிமுள்ளி யிலாமிச்சஞ் சீரகம் பச்சிலை
கோட்ட நிகழுமேலம்
வல்லவிலப்பனைக்கிழங்கு முந்திரிகைப்பழங்
குங்குமஞ் சாதிக்கா
யல்லிமலர் தாமரைப்பூ நாகப்பூத் திரிகடு
கோடரேணுகந்தான்
சொல்லுறுசந்தனம் பச்சைக்கற்பூர மதுரங்
கத்தூரிமஞ்சள் (126)

மஞ்சுறுசாத்திரவேதிக்கிழங் கமுக்கிராவேர்
செம்மலர்நெருஞ்சி
விஞ்சுறுகற்கடசிங்கி நெற்பொரி தக்கோலமென
விளம்புமெல்லா
மெஞ்சலின்றிச் சமன்கொண்டு பொடித்ததொரு
கூறதனுக் கிரண்டுகூறு
வஞ்சமிலாதோ தமுதசருக்கரைசேர்த் தொருகலச
மருவவையே (127)

வைத்ததனை வாய்கட்டி நெல்லிடை யீரைந்துதின
மருவவைத்துச்
சுத்தமுறு நாளி லெடுத்தருந்திவரிற் குன்மம் வெப்பு
தொடர் நீராமை
பித்தமுறுசோகை காமாலை வரட்சோகையொடு
பீலி நீர்க்கோப்
புய்த்திடு கைகாலெரி வக்கினிமாந்தமெனும்
பிணிகளோடிப் போமால் (128)

(இ-ள்)

| | |
|---|---|
| நெல்லிமுள்ளி | இலாமிச்சம்வேர் |
| சீரகம் | கோஷ்டம் |
| ஏலம் | நிலப்பனங்கிழங்கு |
| முந்திரிப்பழம் | குங்குமப்பூ |
| சாதிக்காய் | அல்லிமலர் |
| தாமரைப்பூ | நாகப்பூ |
| திரிகடு | அரேணுகம் |
| சந்தனம் | பச்சைக்கற்பூரம் |
| அதிமதுரம் | கஸ்தூரி மஞ்சள் |
| சாத்திரவேதிக்கிழங்கு | அமுக்கிராவேர் |
| செம்மலர் நெருஞ்சில் | |
| கற்கடசிங்கி | நெற்பொரி |
| தக்கோலம் | |

இவைகளைச் சமனெடை எடுத்துப் பொடிசெய்து, இதைப் போல் 2 பங்கு அமுத சர்க்கரை சேர்த்து ஒரு கலசத்தில் வைத்து அதன் வாயைக்கட்டி 10 நாள் நெல்லுக்குள் வைத்துப் பிறகு எடுத்துச் சாப்பிட்டுவரத்தீரும் நோய்கள் :—

குன்மம், வெப்பு, நீராமை, பித்தசோகை, காமாலை, வரட்சோகை, பீலிகை, நீர்க்கோப்பு, காலெரிவு, அக்கினிமாந்தம் முதலியவை.

---

## 53. சகல வாதத்துக்கும் வடவானல ரசம்

இரதம் பொன் வயிர மாக்கிழகந் தாளக ங்காந்த
மிலங்குதுத்தம்
பரவுநீலாஞ்சனங் கடலினுரை யிவைமேற்சுத்திசெய்
தூள்பாதி யிந்துப்



புரவுபொட்டிலுப்புக் காய்ச்சுப்பு வளையுப்புச்
சவ்வுப் பிவ்வைந்தும்
விரவொரு பாதியுமாக்க் கொடு சதுரக்கள்ளிப்பால்
விட்டரைத்தே (129)

அரைத்தொருநாள் பூமிபுடஞ்செய் திதெடுத்திட்
டாறியபின் னதைத்தூள்செய்தே
பெருத்த ஒரு குன்றிநிறை யிஞ்சிச்சாறதனிற்
றிப்பிலித் தூளுஞ் சேர்த்
தருத்தியுறக் கொளி னடுக்குவாதமொடு தனுர்வாத
மனைத்துந்தீரும்
இருத்திடு சுக்காமணக்கம்வேரி னுறுகடாயங்கொள்
ளிரவிற்றுனே (130)

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | பாதரசம் | சுத்திசெய்த | பொன் |
| ,, | வைரம் | ,, | தாளகம் |
| ,, | காந்தம் | ,, | துத்தம் |
| ,, | நீலாஞ்சனம் | ,, | கடல் நுரை |

இவைகள் சேர்ந்து பாதி எடையும்

| | |
|---|---|
| இந்துப்பு | பொட்டிலுப்பு |
| காய்ச்சுப்பு | வளையலுப்பு |
| சவுட்டுப்பு | |

இவை ஐந்தும் சேர்ந்துப் பாதி எடையுமாக எடுத்துக்கொண்டு கள்ளிப்பால்விட்டுஅரைத்து ஒருநாள் பூமிபுடம்செய்து எடுத்து ஆறியபின் அதைத்தூள்செய்து ஒரு பெரிய குன்றிமணி எடை இஞ்சிச்சாற்றில் திப்பிலித்தூளும் சேர்த்துச் சாப்பிட, அடுக்குவாதம், தனுர்வாதம் தீரும். இரவில் சுக்கு, ஆமணக்கம் வேர் சேர்த்துக் கஷாயம்போட்டுச் சாப்பிடவும்.

---

# 54. வாதத்துக்குத் தைலம்

வெண்ணூத்திப்பாம்புதனைத் துண்டமிட்டோர்
பானையிடை மேவிவைத்து
நண்ணிடு வெள்ளாடுமூத்திரத்திடு முற்பதக்குவிட்டு
நல்லகுப்பை
மண்ணிடைப் புதைத்துவைத்துச் சிவன்வேம்பினோடு
வேப்ப மரத்தின்பட்டை
யெண்ணிடு மொவ்வோர்கொடுங்கை கொண்டிரண்டு
மொரு பானையிடத்திற்போடே (131)

போட்டொரு தூணிப்பதக்குநீர்விட்டுப் படி
யிரண்டாய்ப் பொருந்தக்காய்ச்சி
மீட்டொருதாழியிலிறுத்து மற்றொருபானையி
லழிஞ்சில்வேர் கடுக்காய்
வாட்டுசிற்றுமுட்டி யிஞ்சியோடு பேராமுட்டி
கோவைக்கிழங்கு
காட்டுறுதூதளை முத்தக்காசு வெண்சாறணை
தும்பை கணித்தவேர்கள் (132)

கணித்திடு மும்மூன்றுபல மதிமதுர நிலப்பனை
தன்கனக்கிழங்கு
தணித்தலுறு குரொசாணியோமம் வகைக்கோர்
பலமேதகு சாதிக்கா
யிளைத்த பஞ்சதிரவிய மிலவங்கங் காற்பலம்
வகைக்காங் கிசையுங்கோட்டம்
பணித்திடு செங்கழுநீரோ வரைப்பல மாந்
துரிசுதான் பலமரைக்கால் (133)

பலந்தருமின் னவையெல்லா மிடித்திருதூணிப்
புனலிற் பரிவாய்ப்போட்டே
யிலங்கவெரித்துக் குறுணியாக்கி முன்னர்க்
கடாயத்தோ டிசையச்சேர்த்து



நலம்பெறு நல்லெண்ணெயொருகுறுணி விட்டு
மற்றதில் வெண்ணூத்திபூறு
கலந்தனின் முந்நாழியும் விட்டிரவிபுடம்
நாலுநாள் சாரவையே (134)

வைத்துமறுநா ளந்திப்பொழுதிற் காய்ச்சிடுங்
காலை வளர்வெண்ணூத்தி
யுய்த்திடு பாம்பெனப்பிரளு மன்னதுவேபத
மாயுறவிறக்கிச்
சுத்தமுறு தலையதனிற் படாது கண்ட நரம்பதிலுந்
தொடரு மற்றங்
கத்தினிலு மூன்றுதினந்தடவி யுறப்பிடித்திடுக
வனற்படாதே (135)

தேகமதின் மூன்றுநாள் படுமுன்னர் வெகுநாளாய்த்
திரமாய்நின்ற
வேகமுறு சுருள்வாதந் திமிர்வாத முடக்குபெரு
வினைசெய்வாதம்
ஏகமென வுண்டையதாய்ச் செய்வாதந் தமகவாய்
வென்பதெல்லாம்
போகுமிதற் கையமில்லைத் தினகரன்முன்
னிருளதுதான் பொருந்திடாதே (136)

(இ-ள்)

வண்ணூத்திப் பாம்பைத் துண்டம்செய்து ஒரு பானையில் வைத்து வெள்ளாட்டு மூத்திரம் 3 பதக்கு விட்டுக் குப்பைமண்ணில் புதைத்து வைத்துக்கொண்டு, வேறொரு பானையில்

சிவனார்வேம்பு வேப்பமரப்பட்டை

இவை ஒரு கொடுங்கையளவு போட்டு 6 மரக்கால் தண்ணீர் விட்டு 2 படி குழம்பாய்க்காய்ச்சி ஒரு தாழியில் இறுத்துக் கொண்டு, மற்றொருபானையில்,

| | |
|---|---|
| அரிஞ்சில் வேர் | கடுக்காய் |
| சிற்றுமுட்டிவேர் | இஞ்சி |
| பேராமுட்டிவேர் | கோவைக்கிழங்கு |
| தாதுவளைவேர் | முத்தக்காசு (கோரைக்கிழங்கு) |
| வெண்சாறணைவேர் | தும்பைவேர் |

இவை வகைக்கு 3 பலம்

| | |
|---|---|
| அதிமதுரம் | நிலப்பனங்கிழங்கு |
| குரோசாணி ஓமம் | |

வகைக்கு 1 பலமும்

| | |
|---|---|
| சாதிக்காய் | பஞ்சதிரவியம் (மிளகு, |
| இலவங்கம் | கோஷ்டம், அகில், தக்கோலம், குங்குமப்பூ) |

வகைக்கு ¼ பலமும்,

| | |
|---|---|
| செங்கழுநீர் | கோஷ்டம் |
| நெய்தல் அரிசி | |

வகைக்கு ½ பலமும்

துரிசு ⅛ பலம்

இவைகளையெல்லாம் இடித்து 2 தூணி (8 மரக்கால்) தண்ணீரில்போட்டுக் குறுணியாகக் காய்ச்சி முன்பு சொன்ன குழம்புக்கஷாயத்தோடு சேர்த்து,

நல்லெண்ணெய் 1 குறுணி

விட்டு, வண்ணாந்தைத்துண்டங்களைவைத்துப் புதைத்து வைத்திருந்த பானையிலிருந்து 3 நாழி விட்டு 4 நாள் வெயிலில் வைத்து ஐந்தாம் நாள் மாலை இதையெடுத்து, விளக்கு வைத்துக்கொண்டு அடுப்பில் வைத்துக்காய்ச்சி, வண்ணாந்தைப் பாம்புபோல் புரளுவதாகத் தோன்றும் பதத்தில் இறக்கிப் வைத்துக்கொண்டு, அந்தத் தைலத்தைக் கழுத்துப்பிடரி



நரம்பிலும் மற்ற அங்கங்களிலும் தலையில்படாமல் சர்வாங்கமும் இட்டு அனல் படாமல் 3 தினங்கள் தடவிப்பிடித்துவிட, 3 நாள் முழுதும் ஆவதற்குமுன்பே வாதங்கள் குணமாகும். தீரும் வியாதிகள் :—

சுருள்வாதம், திமிர்வாதம், முடக்குவாதம், தமகவாதம், சர்வவாதம்

---

## 55. சகல காசத்துக்குங் கண்டங்கத்தரி நெய்

கண்டங்கத்திரி யனைத்து மிடித்திடுசாறொருநாழி
கருதாவின் பால்
கொண்டிடொருநாழி நெய்யிரு நாழிசாரணைவேர்
கூறரத்தை
மண்டுசிறுகாஞ்சொறிவேர் கீழ்நெல்லி சிறுதேக்கு
வளர்நெருஞ்சி
விண்டிடுவெட்பாலையரி தாளிசபத்திரி யிந்துவிதங்
களெல்லாம் (137)

ஆகும் வகைக்கொருநா லுவராகனெடை
யரைத்துச்சேர்த் தடுப்பிலேற்றிப்
பாகமாயெரித்து வடித்திருபொழுதும் வராகனெடைப்
பருகி வந்தாற்
போகலரிதென் றிருந்த காசவகைநோயெல்லாம்
புறப்பட்டோடும்
வாகுதரு மிதுகண்டங்கத்தரிநெய் யெனவுலகோர்
மதிப்பதாமே (138)

(இ-ள்)

| | |
|---|---|
| கண்டங்கத்திரி சமூலம் இடித்த சாறு | 1 நாழி |
| பசுவின்பால் | 1 நாழி |
| பசுவின் நெய் | 2 நாழி |

இவற்றுடன்,

| | |
|---|---|
| சாரணைவேர் | அரத்தை |
| கீழாநெல்லி | சிறுகாஞ்சொறிவேர் |
| நெருஞ்சி | சிறுதேக்கு |
| தாளிசபத்திரி | வெட்பாலையரிசி |

இவை வகைக்கு 4 வராகனெடை எடுத்து அரைத்துச் சேர்த்து அடுப்பில்வைத்து எரித்து வடித்து இருபொழுதும் 1 வராகனெடை வீதம் பருகிவந்தால் தீருவது கஷ்டமான காசநோய் (இருமல்) வகைகளெல்லாம் தீரும். (வாதரோகசிகிச்சை முறைகளோடு தீராத காசநோய்க்கான இம்முறை சேர்க்கப் பட்டிருப்பது வாதரோகிக்குக் காசமும் சேர்ந்திருந்தால் செய்ய வேண்டிய சிகிச்சைக்காக என்று தோன்றுகிறது)

## 56. சகல வாதத்துக்கும் தைலம்

கொடிவேலி யாதண்டை மாவிலங்கை சாறணை
பொற்கொன்றை வேம்பு
படியுறு காற்றெட்டி புன்கின்வேர்ப்பட்டைவகை
மூன்றுபல மிடித்துக்
கடிதருதூணிப்பதக்கு நீரிடைப்போட்
டஞ்சிரண்டாய்க் காய்ச்சி நன்றாய்
வடிதாகக்கொண் டாமணக்கு வேம் பெள்ளினெய்
சமனாய் மருவச்சேரே. (139)

சேர்த்துக் கந்தக மதுரம் பெருங்குரும்பை குளவிந்தத்
திகழ்சாதிக்காய்
கூர்த்ததிரிபலை யரத்தை வசம்போமம் துரிசு
சேங்கொட்டை யுள்ளி



கார்த்த கார்போகரிசி வாலுளுவையரிசி
யபின் கடுகுகாயம்
போர்த்திடு திப்பிலி வெளிச்சப்பிசின் சுக்கின்னவை
யெல்லாம் பெரிதுந்தேடே. (140)

தேடி யொருநாழி யெண்ணெய்க் கொன்றரையாம்
வராகனெடை திகழத்தாள்செய்
தீடுபெறக் கலந்தெரித்து வடித்துமேற்
பூசிவரி லெட்டுநாளி
லோடிவிடும் வாதமெனச் சொல்வதெல்லா
மோடியபின் னுடலுக் கின்பங்
கூடுமிது கைகண்ட முறையாகுங்
குறுமுனிவன் கூறினனே. (141)

(இ-ள்.)

| | |
|---|---|
| கொடிவேலி | ஆதண்டை |
| மாவிலங்கை | சாறணை |
| பொற்கொன்றை | வேம்பு |
| காற்றெட்டி | புங்கம்வேர்ப்பட்டை |

இவை வகைக்கு 3 பலம் இடித்து, தூணிப் பதக்கு (ஆறு மரக்கால்) தண்ணீர்விட்டு ஐந்தில் இரண்டாக காய்ச்சி, வடிக்கட்டிகொண்டு,

ஆமணக்கு எண்ணெய்
வேப்பெண்ணெய்
நல்லெண்ணெய்

இவை சமனாகச் சேர்த்து,

| | |
|---|---|
| கந்தகம் (சுத்தி செய்தது) | அதிமதுரம் |
| பெருங்குரும்பை | குளவிந்த மஞ்சள் |
| திரிபலை | சாதிக்காய் |
| வசம்பு | அரத்தை |

| | |
|---|---|
| துரிசு | ஓமம் |
| வெள்ளைப்பூண்டு | சேங்கொட்டை (சுத்திசெய்தது) |
| அபின் | |
| வாலுளுவையரிசி | கார்போகவரிசி |
| பெருங்காயம் | கடுகு |
| வளிச்சப்பிசின் | திப்பிலி |
| சுக்கு | |

இவை வகைக்கு ஒருநாழி எண்ணெய்க்கு $1\frac{1}{2}$ வராகனெடைத் தூள் வீதம் போட்டு எரித்து வடித்து மேலேபூசிவர எட்டு நாளில் வாதம் என்று சொல்லக்கூடிய எல்லா வியாதிகளும் தீரும் இது கைகண்ட முறை. அகஸ்தியராலும் சொல்லப் பட்டிருக்கிறது.

---

## 57. மகாவாதத்துக்குத் தைலம்

சந்தன மஞ்சிட்டி கோட்டந் தேவதார மகில்
சடைச்சிவேர் நல்
வெந்தய நன்னாரிவே ரமுக்கிராக்கிழங்கிளோடு
விளம்புகுப்பை
யிந்துப்புப் பெருங்குமிழ் நீடதிமதுர
மிலவங்க மேல மேற்கூ
றந்த விலவங்கப்பத்திரி கடுகுரோகிணி
சிற்றரத்தை தானும் (142)

ஆகவிவை வகைதனக்குப் பலமரை
சிற்றுமுட்டிவேரீரைந்
தாக வரும் பலம் பருத்திவிதைகுறுணி
யிவையனைத்து மடையவே நன்



றுகவிடித்துத் தூணிப்புனல் விட்டுக்
காய்ச்சி விட்டவெந்நீர் நாற்கூ
றுகச்செய் தெள்ளினெய்முதலாமைந்தெண்ணெய்
நேரதனிற்சேரே (143)

சேர்த்தெருக்கினிலை நொச்சிதழுதாழை
சேர்க்கொடிமேற் றிகழுகாயின்
கூர்த்திடுசா றொருநாழி யுரியுஞ்சேர்த் தினிதாகக்
கொதிக்கவைத்துப்
பார்த்துமொரு பதத்திறக்கிப் பூசின்மகாவாத
மெனப் பட்டவாதம்
பேர்த்தெட்டு நாளதனில் ஓடிவிடும்
இந்தமுறை பிசகிடாதே (144)

(இ-ள்)

| | |
|---|---|
| சந்தனம் | மஞ்சிஷ்டி |
| கோஷ்டம் | தேவதாரம் |
| அகில் | சடைச்சிவேர் |
| வெந்தயம் | நன்னாரிவேர் |
| அமுக்கிராக்கிழங்கு | சதகுப்பை |
| இந்துப்பு | பெருங்குமிழ்வேர் |
| அதிமதுரம் | இலவங்கம் |
| இலவங்கப்பத்திரி | கடுகுரோகிணி |
| சிற்றரத்தை | ஏலம் |

இவை வகைக்கு $\frac{1}{2}$ பலம்

சிற்றுமுட்டிவேர் 10 பலம்
பருத்திவிதை குறுணி

இவையெல்லாவற்றையும் ஒன்று சேரும்படி யிடித்து 4 மரக்கால் தண்ணீர்விட்டுக் குறுணியாகக் காய்ச்சி வடிகட்டி, இதனோடு

நல்லெண்ணெய் — இலுப்பெண்ணெய்
ஆமணக்கெண்ணெய் — புங்கெண்ணெய்
தேங்காயெண்ணெய்

இவை வகைக்கு ஒருபடி வீதம் சேர்த்து

எருக்கிலை — நொச்சி
தழுதாழை — உகாய்
சுரைக்கொடி

இவைகளின் சாறுகளில் வகைக்கு ஒரு நாழிவீதம் சேர்த்துக் காய்ச்சி வடித்துப் பூச மகாவாதம் எட்டேநாளில் தீரும்.

---

## 58. மகாவாதத்துக்கின்னமொரு தைலம்

எருக்கதனைச் சமூல மிடித்திரண்டுபடிசாறெடு
நல்லெண்ணெய்நாழி
பெருக்குறவிட் டமுக்கிரா நிலவுகாயுட னுகாய்
பெருத்த நொச்சி
திருத்தமுறு மிளகறணை கொடிவேலி
யாதண்டை திகழ்முருங்கை
வருக்கமுறு மிவற்றின் வேரொடு தகரங்
கத்தூரிமஞ்சளேலம் (145)
ஏலுறு கோட்டங் கடுகிந்துப் பிலவங்கம்
வகைக் கோரிருகழஞ்சு
சாலவரைத்துக் கலந்து வெள்ளாட்டுப்
பாலுழி சாரவிட்டு
மேலதனை யெரித்துவடித் துள்ளுக்குஞ்
சிறிதளித்து மேலிற்பூசிற்
காலமதிற் பலவாய்வக் திருந்தமகா வாதமெல்லாங்
கலங்கியோடும் (146)



(இ-ள்)

எருக்கின் சமூலம் இடித்த சாறு 2 படி
நல்லெண்ணெய் 1 நாழி

இவைகளோடு,

அமுக்கிரா
நில உகாய்
நல்ல உகாய்
நொச்சி
மிளகறணை
கொடிவேலி
ஆதண்டை
முருங்கை
} இவைகளின் வேர்

தகரம்
கஸ்தூரிமஞ்சள்
ஏலம்
கோஷ்டம்
கடுகு
இந்துப்பு
இலவங்கம்

இவை வகைக்கு 2 கழஞ்சு வீதம் எடுத்து அரைத்துக் கலந்து வெள்ளாட்டுப்பால் நாழிவிட்டு எரித்து உள்ளுக்கும்கொஞ்சம் கொடுத்து, மேலும் பூசிவர மகா வாதம் தீரும்.

---

## 59. மகாவாதத்துக்கு (வேறு)

அரப்பொடி யோரிண்டோடரைப்படி சதுரக்
கள்ளிப்பாலதுமுக்கா
லுரைக்கவரும் படிதன்னிற் பிசறிவைத்திட்
டுலர்த்தி நொச்சி யோங்குதாழை
யிருத்திடுமாவிலங்கை யாட்டாங்கொடி வேம்
பிவற்றினிலை யிலங்குசாறு
பருக்கவிரு நாழி யெள்ளினெய்யோ டாமணக்கு
நெய் படியோவ்வொன்று (147

ஒன்றிலுறுமஞ்சளின்தூ ளரைப்படியா
    மிளகுபடி யொருகாலா
மென்றிவை யெல்லாமெரித்து வடித்தொவ்வோர்
    கழஞ்சருந்திலிலங்கு குன்மங்
கன்றுவலிகுன்ம மெரிகுன்மம் விப்பிரதியோடு
    கண்கொதிப்புத்
துன்றிரும லுளைமாந்தை யானந்த வாத
    மிவை தொலைந்துபோகும் (148)

(இ-ள்)

அரப்பொடி 2½ படியில் சதுரக்கள்ளிப்பால் ¾ படிவிட்டுப் பிசறி உலர்த்தி,

| | |
|---|---|
| நொச்சியிலை | தாழையிலை |
| மாவிலங்கையிலை | ஆட்டாங்கொடியிலை |
| வேப்பிலை | |

இவற்றின் சாறுகளில் வகைக்கு 2 நாழியும்,

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | ஆமணக்கெண்ணெய் |

இவை வகைக்கு 1 படியும்,

| | |
|---|---|
| மஞ்சள் தூள் ½ படி | மிளகுப்பொடி ½ படி |

இவற்றை யெல்லாம் சேர்த்து எரித்து, வடித்துக்கொண்டு, ஒவ்வொரு கழஞ்சுவீதம் உள்ளுக்குச் சாப்பிடத்தீரும்

வியாதிகள் :—

குன்மம், வலிகுன்மம், எரிகுன்மம், விப்புருதி, கண்கொதிப்பு, ஈளை இருமல், உளைமாந்தை, ஆனந்தவாதம் முதலியவை.

---



# 60. அற்புதவாதம், திமிர்வாதம் முதலிய வாதங்களுக்கு

(பழம் பாட்டு)

ஆயில் நற்புன்கம்பட்டை யானசேவகன் செம்முள்ளித்
தோயமேபதக்குத்தன்னிற் றுவைபலந்தொண்ணூற்ரூறு
காயவை நாலொன்ருகக் கரைத்திடுங் கற்கங்கேளீர்
நேயசெம்முள்ளி வேலி நிலக்குமிழ் பெரியவாகை
வேருடன் மதுரங் கோட்ட விழலரியுட னிந்துப்புத்
தாயகுங்கிலியத்தோடே சதக்குப்பை யிவைகழஞ்சு
வேயெனுந்தோளினுளே விழுதாக வரைத்துக்கூட்டிப்
போயுரிநாழியெண்ணெய் பொருந்தியே பதத்தில்வெந்து
நாயகன் வடித்தேயாற்றி நக்கவே நசியம் பண்ணப்
பேயோடற்புத வாதந்தான் பின்னையுந் திமிர்ந்தவாதம்
மாயனு ரருளினுலே வளம்படப் போகுமன்றே (149)

(இ-ள்)

| | |
|---|---|
| ஆயில்பட்டை | புங்கம்பட்டை |
| சேவகன் | செம்முள்ளி |

இவை வகைக்கு 96 பலம் எடுத்துப் பதக்குத் தண்ணீர்விட்டு நாலிலொன்ருய்க் காய்ச்சி இறுத்துக்கொண்டு அதில்,

| | |
|---|---|
| செம்முள்ளி | கொடிவேலிவேர் |
| நிலக்குமிழ்வேர் | பெருவாகைவேர் |
| அதிமதுரம் | கோஷ்டம் |
| விழலரிசி | இந்துப்பு |
| குங்கிலியம் | சதகுப்பை |

இவை வகைக்கு 1 கழஞ்சு வீதம் எடுத்து விழுதாக அரைத்துக் கூட்டி,

எண்ணெய் 1 நாழி

விட்டுப் பதத்தில் வடித்து உள்ளுக்குச் சாப்பிட, நசியம் பண்ணப் பேய்வாதம், அற்புதவாதம், திமிர்வாதம் முதலியவை தீரும்.

## 61. சகல வஞ்சனைக்கும், வாதத்துக்கும் தைலம்

குறட்டைநறும் பழச்சாறுநாழி பூஞ்சாராயங்
குலவெள்ளெண்ணெய்
நிறத்தொவ்வோர்படி கலந்துநிலப்பனையின் கிழங்கினோடு
நிகழ்தேங்காயும்
சிறக்கவரைத்திட்ட விழுதொருதேங்காயளவினோடு
திகழ்வெண்காரம்
பொறுத்திடுள்ளி யிவ்விரண்டும் வகைக்கிரண்டு
பொருந்தச்சேரே [வராகனெடை

சேர்த்த கருங்கம்பளி சுட்டிடுசாம்பல்வசம்பிரண்டுந்
தெரிவகைக்குக்
கூர்த்த விருவராகனெடை காயமூவராகனெடை
கிறித்திடெல்லா
மார்த்த சங்கங்குப்பிச்சாறாற்றி யரைத்தொருமூங்கு
றரிந்துபோட்டுப்
பார்த்தெரித் துள்ளருந்தி மேற்பூசில் வஞ்சனைவாதம்
பயந்தோடிப்போம் (151)

(இ-ள்)

குறட்டைப்பழச்சாறு 1 நாழி பூஞ்சாராயம் படி 1
நலலெண்ணெய் 1 படி

இவைசேர்த்து,

| | | |
|---|---|---|
| நிலப்பனங்கிழங்கு<br>தேங்காய் | இவைகளைச்சேர்த்து அரைத்த விழுது | 1 தேங்காயளவு. |
| வெண்காரம்<br>உள்ளிப்பூண்டு | வகைக்கு | 2 வராகனெடை |
| கருங்கம்பளி சுட்ட சாம்பல் | | 2 வராகனெடை |
| வசம்பு | | ” |
| பெருங்காயம் | | 3 ” |



இவைகளைச் சங்கங்குப்பிச்சாறு ஊற்றி அரைத்துச் சேர்த்து அதில் ஒரு மூங்குறை அரிந்து போட்டு அடுப்பிலவைத்து எரித்துப் பதத்திலிறக்கி உள்ளுக்கும் கொடுத்து மேலும்பூச வஞ்சனை வாதம் தீரும்.

## 62. சகல வஞ்சனை வாதத்துக்குந் தைலம்

மொழி கவுரிபாடாண முயர்கொட்டைப்பாசி
மூலமெட்டிப்
பழமதின்சாறொருநாழி பேய்க்கருப்பஞ்
சாறதுவும் பகருநாழி
பழுதறுவெள்ளுள்ளி வசம்பொடு காயம்
வராகனெடை பகர்மும்மூன்று
விழுமமுறக்கலந்து கொன்றைப்பட்டை
வன்னிப்பட்டை யெனமேயிரண்டும் (152)

மேவுபசுவின்பாலி லூரவைத் தோர்நாள்
பால்விட்டரைத்து
வாவுமயிலிறகு கருங்கம்பளி சுட்டிடுசாம்பல்
வராகனெவ்வொன்
றுவுறவரைத்துச் சேர்த்தைந்தெண்ணெயுங்
கூட்டியடுப் பேய்த்தும்பைப்
பாவுறுசாறொடு சங்கங் குப்பிச்சா றிருவகைக்குப்
பரிவாய்க்கூட்டே. (153)

கூட்டியபின் னொருமூங்கு றதுவுமரிந்ததிற்
போட்டும் குலவுசேர்ந்தி
மூட்டியெரித்துப் பதத்திலிறக்கி
மேற்பூசி யுடன்முற்றுநித்தம்

வாட்டமற நனைத்துவரில் வஞ்சனையும்
வாதமென வகுத்தநோயு
மோட்டமெடுத் திடுமெட்டு நாளதனி
லிம்முறையு முண்மைதானே (154)

(இ-ள்)

கௌரிபாஷாணம்
கொட்டைப்பாசி
எட்டிப்பழச்சாறு வகைக்கு 1 நாழி
பேய்க்கருப்பஞ்சாறு 1 நாழி
வெள்ளைப்பூண்டு 3 வராகனெடை
வசம்பு 3 வராகனெடை
பெருங்காயம் 3 வராகனெடை

இவைகளைக்கலந்து,

கொன்றைப்பட்டை வன்னிப்பட்டை

இவையிரண்டையும் பசுவின் பாலில் ஒரு நாள் ஊறவைத்துப் பசுவின்பால் விட்டரைத்து,

மயில் இறகு கருப்புக்கம்பளி

இவையிரண்டையும் சுட்ட சாம்பல் வகைக்கு 1 வராகனெடை எடுத்துச் சேர்த்து,

ஐந்தெண்ணெய் (நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய், ஆமணக்கெண்ணெய், புங்கெண்ணெய், இலுப்பெண்ணெய்) இவைகளையும் சேர்த்துக்கூட்டி,

பேய்த்தும்பைச்சாறு சங்கங்குப்பிச்சாறு

இவை வகைக்கு ஒவ்வொருஉரி (½ நாழி) சேர்த்து எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு மூஞ்சூறை நறுக்கிப் போட்டு, நல்லதீயில் காய்ச்சிப் பதத்தில் இறக்கி உடம்பின் மேலே பூசி உடம்பு முழுவதும் எண்ணெயால் நனைத்துவர எட்டே நாளில் வஞ்சனைவாதம் தீரும்.

---



## 63. குக்குலாதி சூரணம், வாதம் வாயுக்களுக்கு

திரிகடுகு திரிபலை சீரகம் வகைக்குப்பலமரையே
திகழிவற்றோ
டுருவுதருபறங்கிநறும்பட்டை யிருபலமுங்கொண்
டொக்கத்தூள் செய்
துரைதருகுக்குலு வைந்துபல மெருக்கிலையதனுக்
குள்ளாய்வைத்து
மருவுபத்துவிருட்டியினிற் புடம்போட்டே யுடனெடுத்து
வைத்துப்பின்பு (155)

பின்னுறுவேப்பம்பட்டை தனிற்சுத்திசெய்துபின்
பிறங்குமேதி
தன்னுறுவெண்ணெயிற் கலந்துகாய்ச்சி யொரு
[வெண்சேலை
தனிற்றொடைத்து
முன்னுறுசூரணத்தி னுடன்சூரணித்துக் கலந்தருந்தில்
மொழிந்தவாதந்
துன்னுபிடிப்புத்தெறிப்புக் குடைச்சல்கைகாலெரிவு
தொலையுந்தானே (156)

(இ-ள்)

திரிகடு (சுக்கு, மிளகு, திப்பிலி) ½ பலம்
திரிபலை (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்) ½ பலம்
சீரகம் ½ பலம்
பரங்கிப்பட்டை 2 பலம்

இவைகளை நன்றாகத் தூள்செய்து வைத்துக்கொள்ளவும்.

குக்குலு (வெள்ளைக் குங்கிலியம்) 5 பலத்தை எருக்கிலைக்குள் வைத்து பத்து வரளிகளால் புடம்போட்டு எடுத்துவைத்துக்கொண்டு, பிறகு வேப்பம் பட்டைக் கஷாயத்துள் டோலாயந்திரமாகக் கட்டி சுத்தி செய்து, அதன்பிறகு எருமை வெண்ணெயிற் போட்டுக்காய்ச்சி வெள்ளைத் துணியில்

தேய்த்து, முன் சொன்ன சூரணத்துடன் இதையும் சூரணித்துக் கலந்து சாப்பிடத்தீரும் வியாதிகள் :—

வாதப்பிடிப்பு, தெறிப்பு, குடைச்சல், கைகாலெரிவு முதலியவை.

---

## 64. முகவாதத்திற்கு

குதிரைநெடுவாலிவேர் சிறுபூளை யவுரிவேர்
குழிமீட்டான்வேர்
மதமுறுவெண் காக்கறட்டா னுடனத்தைச்சூரிவேர்
வளர்வன்னெற்றின்
சிதமுறுவேர் நற்பாம்பின் கண்டங் திப்பிலி
கரியசீரகந்தான்
வீதமுறுகம்பிப்பிசின் கத்தூரிமஞ்சள்
வசம்பினொடு வெள்ளையுள்ளி (157)

உள்ளகருங்குங்கிலியங் கோழிக்காரம் மேதி
யுடன் றோல்கூட்டி
யெள்ளினுறுநெய் வேம்பினெய் வகைக்கோவ்
வொருநாழி யிசையவிட்டு
மெள்ளவெரித்துப் பதத்தில்வடித்துநா
சியிற்பிழிய மீதுருந்தத்
தெள்ளதன் றன்புகையுண்ண முகவாதம்
பல்வாதந் திறங்கெட்டோடும் (158)

(இ-ள்).

குதிரைவாலிவேர்
அவுரிவேர்
வெள்ளைக்காக்கறட்டான்வேர்
வன்னெற்றுவேர்
சிறுபூளைவேர்
குழிமீட்டான்வேர்
நத்தைச்சூரிவேர்
நல்லபாம்பின்கண்டம்



திப்பிலி
கம்பிப்பிசின்
வசம்பு
கருங்குங்கிலியம்
எருமைத்தோல்
கருஞ்சீரகம்
கஸ்தூரிமஞ்சள்
வெள்ளைப்பூண்டு
கோழிக்காரம்

இவைகளை வகைக்கு $1\frac{1}{2}$ விராகனெடை சேர்த்து, இதனுடன்

நல்லெண்ணெய் 1 நாழி வேப்பெண்ணெய் 1 நாழி

சேர்த்து, மெதுவாக எரித்துப் பதத்தில் வடித்து நசியம் பண்ண, புகைபிடிக்க மேலுக்கும் பூச முகவாதம், பல்வாதம் முதலியவை தீரும்.

---

## 65. முகவாதத்துக்கு எண்ணெய்

குன்றி பொன்னாங்கண்ணி வெள்ளைக்காக்கறட்டான்
சிறுபுள்ளடி குதிரைவாலி
நன்றிதரு முதியார்கூந்தல் சிற்று
முட்டிவேர் நல்வசம்பு
துன்றுவெண்காவள்ளி முளிமஞ்சள் பலகரை
மிளகு தொடருஞ்சிந்தில்
கன்றிடுகுங்கிலிய மிவைசமன்கொண்டு
பொடிசெய்து வகையிற்கொள்வோர் (159)

கொண்டதனை நல்லெண்ணெய் வேப்பெண்ணெய்
கூட்டியனற் கொதிக்கும்போது
கண்டதனிற் றூவிக்கீழிறக்கிவைத்துப்
புகைமுகத்திற்காட்டுவதாலும்

மண்டதனிற்சிறிதருந்திடிலுமுயர் தலைப்பூசி
　　மாலைப்போதில்
விண்டிடுவெந்நீர் குளித்திட்டாலு முகவாதசன்னி
　　விலகிப்போமால் (160)

(இ-ள்)

| | |
|---|---|
| குன்றிமணிவேர் | பொன்னாங்காணிவேர் |
| வெள்ளைக்காக்கரட்டான்வேர் | சிறுபுள்ளடிவேர் |
| குதிரைவாலிவேர் | முதியார்கூந்தல்வேர் |
| சிற்றாமுட்டிவேர் | வசம்பு |
| வெள்ளைப்பூண்டு | முளிமஞ்சள் |
| பலகரை (சோழி) | மிளகு |
| சீந்திற்றண்டு | குங்கிலியம் |

இவைசமனாக எடுத்துப் பொடிசெய்துகொண்டு,

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | வேப்பெண்ணெய் |

இவையிரண்டையும் கொதிக்கவைத்து அதில் மேற்சொன்ன பொடியைத் தூவிக் கீழே இறக்கி வைத்துப் புகையை முகத்திற்காட்டியும், உள்ளுக்குச் சிறிதுசாப்பிட்டும், தலையில் பூசியும், மாலைப்பொழுதில் வெந்நீரில் குளிக்க முகவாதம் சன்னி இவைதீரும்.

---

## 66. எரிவாதத்துக்கு

தாளியிலை குன்றியிலை யெலுமிச்சம்பழஞ்
　　சீந்திற் றண்டின்சாறு
கேளிந்தநான்கும் வகைக்கொருநாழி
　　யிலாமிச்சை இளருங்கோட்டம்



நீழிடுநன் னாரிவேர் சந்தன மோவ்வோர்கழஞ்சு
　　வேகவரைத்திட்
டாளிடு நல்லெண்ணெயிற் சேர்த்தெரித்துப்
　　பூசெரிவாத மகலுமன்றே (161)

(இ-ள்)

| | |
|---|---|
| தாளியிலைச்சாறு | குன்றிமணியிலைச்சாறு |
| எலுமிச்சம்பழச்சாறு | சீந்திற்றண்டுச்சாறு |

இவை வகைக்கொருநாழிச்சாறு சேர்த்து, இதனுடன்

| | |
|---|---|
| இலாமிச்சை | கோஷ்டம் |
| நன்னாரிவேர் | சந்தனம் |

இவை வகைக்கு ஒவ்வொருகழஞ்சு எடுத்து நேக அரைத்து ஒருபடி நல்லெண்ணெய் சேர்த்து எரித்துப் பூச எரி வாதம் தீரும்.

---

## 67. எரிவாதத்துக்கு

TAMIL NADU ARCHIVES LIBRARY EGMORE, MADRAS No. 101720
L84:6 N51

தேங்காய்ப்பால் நொச்சியிலைச்சாறு
　　வகைக்கொருநாழி தேவதார
மோங்குசதகுப்பை யிந்துப்பிவைவகைக
　　கோரிருகழஞ்சே யுயர்பூநாகந்
தாங்கிருபதின்கழஞ்சு கொண்டரைத்து
　　நாழியெண்ணெய் தன்னிற்கூட்டி
யாங்கெரித்துப் பூசவெரிவாத மெனச்சொல்வ
　　தெளிதகன்றுபோகும் (162)

(இ-ள்)

| | |
|---|---|
| தேங்காய்ப்பால் 1 நாழி | நொச்சியிலைச்சாறு 1 நாழி |

இவற்றில்,

| | |
|---|---|
| தேவதாரம் 2 கழஞ்சு | சதகுப்பை 2 கழஞ்சு |
| இந்துப்பு ,, | பூநாகம் (மண்நாக்குப்பூச்சி) 20 கழஞ்சு |

இவைகளை அரைத்துக் கரைத்து 1 நாழி எண்ணெய் சேர்த்து எரித்துப் பதத்தில் வடித்துப்பூச எரிவாதம் தீரும்.

---

## 68. உள் நடுக்கு வாதத்துக்கு

பரிந்த சிற்றாமுட்டி பேராமுட்டிவேர்கள்
எழுபத்திரண்டாய்த்
திருந்துபலமெண்மரக்காலிரிவிட்டு நாலிலொன்றாய்ச்
சிறக்கக் காய்ச்சிக்
கருங்கொள் சிற்றாமுட்டிபேராமல்லி பெருவாகை
கனத்த முன்னை
நெருஞ்சி பெருங்குமிழ் கூவிளை சிறியவழுதுணை
பிறங்குவேர்கள். [யிவற்றின் (163)

வேர்களினைத்தம்மொடு பாதிரிவேரும் வகையொன்று
விளம்பிராறாய்ச்
சேர்தருநற்பல மிடித்துமுன் வடித்தகடாயத்திற்
சேர்த்தெரித்துப்
பார்வையுற நாலிலொன்றாய்க் காய்ச்சி வடித்ததி
பகர்முந்நாழி [லெண்ணெய்
யார்தருபால்றுநாழி விட்டதினன்றாரிவே
ரகில்வசம்பு (164)

வசமுறு காகோளி தேவதாரஞ் சந்தனங்
கோட்டம் வளருமேதை
யிசையுமகா மேதை மஞ்சிட்டி
யழுக்கிரா வேரிலங்கிந்துப்பு



வசுவாசி சிறுதேக்குக் கிருப்பு மரமஞ்சளோடு
மாஞ்சில் குப்பை
மிசைதருநற்றிரிபலை வெட்பாலையரி
விழலரிசி விளங்கரத்தை (165)

விளங்கிடுகற்கடசிங்கி திப்பிலி சாரணை
யிந்தவிதங்க ளெல்லாம்
வளந்தர வோர் மும்மூன்று கழஞ்சரைத்துக்
கடாயத்து மருவச்சேர்த்துத்
துளங்கவெரித்துப் பதத்தில்வடித்து வத்திபிடிக்க
நக்கத் தொடர்ந்துபூச
வுளங்குளிர் வாதமென்பதெல்லா
மோர்முத்தினத்தி லூர்விட்டோடும் (166)

(இ-ள்)

| | |
|---|---|
| சிற்றாமுட்டிவேர் | பேராமுட்டிவேர் |

இவையிரண்டும் 72 பலம் நறுக்கி, 2 தூணி (8 மரக்கால்) தண்ணீர்விட்டு நாலிலொன்றாய்க்காய்ச்சி, வடிகட்டிக்கொண்டு

| | |
|---|---|
| கருங்கொள்ளு | சிற்றாமல்லி |
| பேராமல்லி | பெருவாகை |
| முன்னை | பெருங்குமிழ் |
| கூவிளை (வில்வம்) | சிறுவழுதுணை |
| பாதிரி | * நெருஞ்சில் |
| * கண்டங்கத்தரிவேர் | |

இவை வகைக்குப் பன்னிரண்டு பலம் எடுத்து இடித்து முன் சொன்ன கஷாயத்தில் போட்டு, நாலிலொன்றாய்க் காய்ச்சி, வடித்துக்கொண்டு இதில்

| | |
|---|---|
| நல்லெண்ணெய் 3 நாழி | பால் 6 நாழி |

விட்டு, இதில்

| | |
|---|---|
| அகில் | வசம்பு |
| காகோளி | தேவதாரம் |

---

* இந்தச் சரக்குகள் உரைச்சுவடியில் மட்டும் காணப்படுகின்றன.

| | |
|---|---|
| சந்தணம் | கோஷ்டம் |
| மேதை | மகாமேதை |
| மஞ்சிஷ்டி | அமுக்கிரா |
| இந்துப்பு | வசுவாசி |
| சிறுதேக்கு | கிரும்பு |
| மரமஞ்சள் | சடாமாஞ்சில் |
| சதகுப்பை | திரிபலை (கடுக்காய், நெல்லிக் காய், தான்றிக்காய்) |
| வெட்பாலையரிசி | விழலரிசி |
| அரத்தை | கற்கடசிங்கி |
| திப்பிலி | சாரணை |
| சாறணைவேர் | |

இவை வகைக்கு 3 கழஞ்சு எடுத்து அரைத்துக் கலந்து எரித்துப் பதத்தில் வடித்து வத்திபிடிக்க, தொடர்ந்து பூசிவர, உள்ளுக்கு அருந்த, குளிர்வாதம் தீரும்.

---

## 69. ஈரல் வாதத்தின் குணமும் மருந்தும்

வயிறுவலியுட னீரற்குலையதனைத்
தாக்கி மிகவலிய நோகும்
பயிலுநீர்க் கடுப்பினொடு முதுகுக்குத்திடு
முள்ளே பருக்கக்காயு
மயிலுறு மோக்காளஞ்செய்திடு
மீரற்குலையிதன்றன் வாதந்தான்மற்
றியலுறு மின்னதுதீர மருந்துவகைதிருந்தவே
யெடுத்துச் சொல்வாம். (167)



சொலும் வேலிப்பருத்தி கொடிக்கழலொடு
சாறணை வேர்கள் சொல்வகைக்கும்
பலமைந்து வெண்காரந் துவர்ச்சிகை
மாங்கிஷபேதி பகருகின்ற
நலமுதவுபிசின் செவியஞ் சிறுமூல
மிவற்றினொடு நாட்டிற்கூறுங்
குலவன்னபேதி யிவை வகையொன்று
முக்கழஞ்சு கொண்டு பின்னர் (168)

கொண்டவற்றை யரைத்தெடுத்து நல்வெண்ணெய்
நாழிதனிற்கூட்டி நன்றாய்
விண்டிடவே கரைத்தெரித்து வடித்து
நால்வராகனெடை விரும்பிக்கொண்டாற்
பண்டிருந்த பிணிகளுட னீரல்வாதமும்
பறக்கும் பறவைபோற்கை
கண்டதிந்தமுறை யீதுபிசகாதிந்
நோய்காணிற் கருதிச்செய்யே. (169)

(இ-ள்)

ஈரல் வாதத்தின் குணம் :—

வயிற்றுவலியுடன், ஈரற்குலையும் மிகவும் வலிக்கும். நீர்க்கடுப்பும், முதுகுக்குடைப்பும் அதிகமாக இருக்கும். உள் காய்ச்சலாகக் காயும். வாந்தி செய்யவரும்.

மருந்து :—

| | |
|---|---|
| வேலிப்பருத்தி | கழற்கொடிவேர் |
| சாரணைவேர் | |

இவை வகைக்கு 5 பலமும்,

| | |
|---|---|
| வெண்காரம் | துவர்ச்சிகை (கடுக்காய்ப்பிஞ்சு) |
| மாங்கிஷபேதி | நறும் பிசின் |
| சவ்வியம் | சிறுமூலம் |
| அன்னபேதி | |

இவை வகைக்கு 3 கழஞ்சும் எடுத்து, அரைத்து,

நல்லெண்ணெய் 1 நாழியிற் கரைத்து, எரித்துப் பதத்தில் வடித்து 4 வராகனெடை சாப்பிட்டுவர ஈரல் வாதம் தீரும்.

---

## 70 சூலைவாதத்தின் குணமும் மருந்தும்

காதடைத்த லிடுப்புவலி யுச்சியிடி பிடரிவலி
கண்ணீர் வீழ்த
லோதுதொண்டையெரித னடந்திடுங்காற் காற்
பெருவிரலை யுயர்கூன் வாங்கல்
கோதறு காற்கரட்டுவலி யிவைசூலை
வாதத்தின் குணங்களாகு
மீதிதனுக் கிரதமொடு கவுரிபாடாண
நெரிவிடமும் பின்னர் (170)

பின்சிவந்த பாடாணம் வகைக்குக்கால்
வராகனெடை பேரெருக்குத்
தன்னொடு தண்ணீர்மிட்டான் கொடிவேலி
மிளகரணை தகுமுருங்கை
நன்முசுட்டைவேர் கார்த்திகைக்கிழங்கு
பலம்வகைக்கு நவிலுங்கால் கொண்
டின்னவெல்லாங் கோசலம் விட்டரைத்து
வேப்பெண்ணெயுட னிருப்பையெண்ணெய் (171)

எண்ணுறு புன்கெண்ணெயு மோரளவாய்க்கொண்
டெலாங்கூட்டி யெரித்திறக்கி
நண்ணுபதினேருதினந்தான் றலையினு
மேலினும்பூச நவின்றசூலை



கண்ணுறக் காணுதோடு முருங்கைக்காயிலை
கீரை கறித்தூளாகும்
பண்ணுறுமுப்புப் புளிப்புப் பதினேழுநாளாகா
பத்தியந்தான் (172)

(இ-ள்)

**சூலைவாதத்தின் குணம் :—**

நடக்கும்பொழுது கால் பெருவிரலைக் கூன்வாங்கும். காற்கரட்டில் வலியுண்டாகும். காதடைக்கும். இடுப்புவலி, உச்சி இடி, பிடரிவலி, கண்ணாலே தண்ணீர் விழுதல், தொண்டை யெரிதல், முதலியவை இருக்கும்.

**மருந்து :—**

| | |
|---|---|
| சுத்திசெய்த பாதரசம் | சுத்திசெய்த சிவந்த பாஷாணம் |
| ,, கௌரீபாஷாணம் | ,, நெரிவிஷம் |

இவை வகைக்கு ¼ வராகனெடையும்

| | |
|---|---|
| எருக்கின்வேர் | தண்ணீர் மிட்டான்கிழங்கு |
| கொடிவேலி | மிளகரணை |
| முருங்கைவேர் | முசுட்டைவேர் |
| கார்த்திகைக்கிழங்கு | |

இவை வகைக்கு கால்பலமும் எடுத்துப்பசுவின் மூத்திரம் விட்டு அரைத்து,

| | |
|---|---|
| வேப்பெண்ணெய் | இலுப்பெண்ணெய் |
| புங்கெண்ணெய் | |

இந்த மூன்றுவகை எண்ணெயையும் ஓர் அளவாய் எடுத்துக் கொண்டு முன்பு அரைத்தவற்றையெல்லாம்சேர்த்து எரித்து (* மயில் நிறமாக ஆகும்) பதத்திலிறக்கி வைத்துக்கொண்டு பதினேரு நாட்கள் தலையிலும், உடம்பிலும் பூசிவரவும்.

---

* இது உரைச்சுவடியில் காணப்படுகிறது.

**பத்தியம்—**

முருங்கைக்காய், இலை, கீரை சேர்த்துக்கொள்ளவும். மிளகுபொடி தூவிக்கொள்ளலாம். பதினேழு நாட்களுக்கு உப்பு, புளி சேர்க்கக்கூடாது.

---

# 71. இடுப்புவலிக்கு

முற்றுமெருக்கிலை யொன்றை மூன்றுபாங்கிட்
டோர்பங்கை முன்னெடுத்தே
யுற்றிடதைச் சிறுகவரிக் தூரிக்குறுவையரிசியுட
னுற விடித்து
மற்றதனில் மூன்றிலொருகூ றுளுந்தின்
மாச்சேர்த்து வலிசாகோழி
பெற்றவொரு மூன்று முட்டை வெண்கருவுஞ்
சேர்த்தெரியிற் பிசறிக்கிண்டே (173)

கிண்டியுதின் பிறகு கருங்குங்கிலியப்
பொடித்தூவிக் கிண்டிப்பின்பு
சண்டமிளகின்பொடிப் போட்டிறக்கி யருந்திடின்
முதனாள் சமனாநிற்குங்
கொண்டமறு நாளருந்தி லதிகரிக்கு
மூன்றுநாள் கொள்ளத்தீரும்
பண்டு தொட்டாங்குறு மிடுப்புவலியெல்லாம்
பின்னென்றும் பற்றிடாதே. (174)

**(இ-ள்.)**

முற்றின எருக்கிலை ஒன்றை மூன்றுபாகமாகச்செய்து, ஒரு பாகத்தைச் சிறுக அரிந்து, ஒரு உரி (அரை நாழி) குருவை அரிசியோடு இடித்து, அந்தமாவில் மூன்றிலொரு பங்கு உளுந்துமாவும், மூன்று முட்டைகளின் வெள்ளைக் கருவையும் சேர்த்துக்கிண்டி, அதில் முதலில் கருங்குங்கிலியப்பொடி



தூவிக்கிண்டிப் பிறகு மிளகுப் பொடியைப் போட்டு இறக்கிச் சாப்பிட்டு வர முதல் நாள்சாதாரணமாக இருக்கும். மறு நாள் சாப்பிட இடுப்புவலி அதிகரிக்கும். மூன்றும் நாள் நன்றாக வலிதீர்ந்துவிடும். பிறகு எப்பொழுதுமே வலி உண்டாகாது.

---

# 72. திமிர்வாதத்துக்கு

வில்வவேர்ப்பட்டை யெட்டுப்பலமுஞ்
சிற்றுமுட்டிவேருஞ் சுக்குஞ்
சொல்லும்வகைக் கையைந்துபலமு
மிடித்தொரு பதக்குத் தூயநீர்விட்
டொல்லுமதை நாலிலொன்றாய்க்காய்ச்சி
வடித்தெண்ணெய் பாலொவ்வோர்நாழி
மெல்லதனிற் கலசம்* அந்தமருந்திலி
லொவ்வோர்பலந்தான் மேவக்கொள்ளே (175)

கொண்டரைத்துக் கரைத்தொரு [1]முத்தினமெரித்து
நாலாநாள் கூறுமங்கோர்
மண்கலசந்தனில் வடித்துத்தின மிரண்டுகழஞ்சு
நிறைமகிழ்ந் தருந்திக்
கண்டபுளியோடு கைப்புத் தவிர்ந்திடு
பத்தியங்கொள்ளிற் கலங்கச்செய்து
மிண்டிநின்ற திமிர்வாத மண்டலமொன்றினி
லகலும்வெறுத்துத் தானே (176)

**(இ-ள்)**

| | | | |
|---|---|---|---|
| வில்வவேர்ப்பட்டை | 8 பலம் | சிற்றுமுட்டிவேர் | 5 பலம் |
| சுக்கு | 5 பலம் | | |

---

* அந்த மருந்து - கடாயத்திற் போட்டிருக்கிற மருந்து.

1. முத்தினம் - மூன்றுநாள்.

இவைகளை இடித்துப் பதக்குத் தண்ணீர்விட்டு, நாலிலொன் ருய்க்காய்ச்சி வடித்து,

நல்லெண்ணெய் 1 நாழி பால் 1 நாழி

கலந்து, அதனுடன்

வில்வவேர்ப்பட்டை 1 பலம் சிற்றுமுட்டிவேர் 1 பலம்
சுக்கு 1 பலம்

இவைகளை அரைத்துப்போட்டு 3 நாட்கள் எரித்து நான்காம் நாள் ஒரு மண் கலசத்தில் வடித்துத்தினம் 2 கழஞ்சுவீதம் சாப்பிடவும்.

பத்தியம் :— புளிப்பு, கைப்புத்தவிர்க்கவும். திமிர்வாதம் தீரும்.

### (மற்ருெரு மருந்து)

தயிர்த்தண்ணீர் புளியிலையில் விட்டிடித்
தங்கொரு பதக்குச்சாறு முன்கொண்
டியல்தனை நாலிலொன்ருய்க்காய்ச்சி வடித்திரு
நாழியெண்ணெய் சேர்த்துப்
பயின்முருங்கை விதை கடுகு சங்கினுப்புக்
கல்லுப்புப் பருத்தசுக்குச்
செய லவச்சாரம் வகைக்குப் பலமரைசேர்த்
துடற்பூசத் திமிர்வாதம்போம். (177)

(இ-ள்)

புளியிலை கொண்டுவந்து தயிர்த்தண்ணீர்விட்டு இடித்து ஒரு பதக்குச்சாறு எடுத்துக்கொண்டு, அதை நாலிலொன்ருய்க் காய்ச்சி வடித்து, அதனுடன்,

நல்லெண்ணெய் 2 நாழி கலந்து



| | |
|---|---|
| முருங்கை விதை | கடுகு |
| சங்கின் உப்பு | கல்லுப்பு |
| சுக்கு | எவச்சாரம் (யவக்ஷாரம்) |

இவை வகைக்கு அரைப்பலம் எடுத்து விழுதாக அரைத்து எல்லாவற்றையும் கலந்து, உடம்பில் பூசத் திமிர்வாதம்தீரும்.

## 73. முழங்கால் வாதம்

நொச்சி தழுதாழை குப்பைமேனி யெருக்கிலை
கள்ளி நுவலுந்தும்பை
மெச்சுமுதியார் கூந்தல் மழை வண்ணக்குறிஞ்சி
நல்லவேளைச் சாறு
பச்சிலைக் கையாந்தகரை யாமணக்கினிலைச்சாறு
பகரா நின்ற
வச்சிறிய முட்டியிலைச்சாறு கொடிவேலி
வேரடைந்தசாறு (178)

சாறிவற்ருே டெலுமிச்சங்காய்ச்சாறு
தேங்காய்ப்பால் சாற்றிலெல்லாங்
கூறுவகைக் கொருநாழிகொண்டு
மரமஞ்சளொடு கோட்டமிந்துப்
பேறுபெருங்காய முயர்கடுகு வகைக்கரைப்பலத்தோ
டெண்ணெய் நாழி
தேறவிட்டுக் கொதிப்பித்துப் பூசு
முழங்கால் வாதந் தீர்ந்துபோகும் (179)

(இ-ள்)

| | |
|---|---|
| நொச்சி | தழுதாழை |
| குப்பைமேனி | எருக்கிலை |

| | |
|---|---|
| கள்ளி | தும்பை |
| முதியார்கூந்தல் | மழைமுன்னிக்குறிஞ்சி |
| வேளை | கையாந்தகரை |
| ஆமணக்கிளிலை | சிற்றாமுட்டியிலை |
| கொடிவேலி | எலுமிச்சங்காய்ச்சாறு |

இவற்றின் சாறுகளில் வகைக்கொரு நாழி எடுத்து

| | |
|---|---|
| மரமஞ்சள் | கோஷ்டம் |
| இந்துப்பு | பெருங்காயம் |
| கடுகு | |

இவை வகைக்கு ½ பலம் எடுத்து

நல்லெண்ணெய் 1 நாழி

இவை எல்லாவற்றையும் விட்டுக்கொதிப்பித்துப் பூச முழங்கால் வாதம்தீரும்.

(மற்றொருமுறை)

ஆதண்டை யமுக்கிரா முருங்கை நொச்சி
வேர்களுட னரத்தைமேலா
யோதுமுகாய்ச்சமூலங் கஸ்தூரிமஞ்சள்
பூசிடினு முயர்காற்றுடிச்
சீதளமெல்லிலைச்சாற்றிலியல்சுக்கான்கற்
சுட்டுச்சேரப் போட்டு
மீதுறுசூட்டுடன் பூசினலு முழங்கால்வாதம்
விலகிப் போமால் (180

(இ-ள்.)

| | |
|---|---|
| ஆதண்டைவேர் | அமுக்கிராவேர் |
| முருங்கைவேர் | நொச்சிவேர் |
| அரத்தை | உகாய்சமூலம் |
| கஸ்தூரிமஞ்சள் | |

இவைகளைச் சேர்த்து அரைத்துப் பூசினலும்,



காற்றுடியிலைச்சாற்றில் சுக்கான்கல்லைக் காய்ச்சிப் போட்டுக் கொதிக்கவிட்டு வெது வெதுப்பான சூட்டுடன் பூசினலும் முழங்கால் வாதம் தீரும்.

---

## 74. சூலைதிமிர் வாதத்துக்கு

பிரப்பினுறுகிழங்கு புனலித்தண்டு சுக்குத்
திப்பிலிமூலத்தோ
டரத்தை பறங்கிப்பட்டை சங்கம்வேர்
செவியமுட னவனிமீதி
லுரைத்திடுநற் சிறுதேக்கு வகையினுக்கோர்பலங்
கொண்டே யொன்றாய்க் கூட்டிப்
பொருத்தமுறு கடாயஞ்செய் தருந்தியிடச்
சூலைதிமிர் பொருந்திடாது (181)

(இ-ள்.)

| | |
|---|---|
| பிரப்பங்கிழங்கு | புனலித்தண்டு |
| சுக்கு | திப்பிலிமூலம் (கண்டந்திப்பிலி) |
| அரத்தை | பறங்கிப்பட்டை |
| சங்கம்வேர் | சவ்வியம் |
| சிறுதேக்கு | |

இவை வகைக்கு 1 பலம் எடுத்துக் கஷாயம் செய்து சாப்பிட சூலைதிமிர்வாதம் தீரும்.

## 75. ஒடிக்குத்துமுளைப்புக்கு

இருநாழி வெள்ளாட்டுப்பால் காய்ச்சிப்
 பிடிமுருங்கையிலை மேற்போட்டே
யொருபிடி வெள்ளுள்ளி கடுகொருபிடி
 வெந்தயம்பிடித் தொன்றுங் கூட்டித்
திரிவிதமும் வெதுப்பித் தூள்செய்திட்
 டூதிக்குடிக்கத் தீர்ந்துபோகும்
விரவுபுறத் தோடிக்குத்திடுமுளைப்
 பென்றுரைத்திட்டார் மேன்மையோரே. (182)

(இ-ள்)

2 நாழி வெள்ளாட்டுப்பாலைக் காய்ச்சி, அதில் ஒருபிடி முருங்கையிலையைப்போட்டு, அதன்மேல்

வெள்ளைப்பூண்டு 1 பிடி வெந்தயம் 1 பிடி
கடுகு 1 பிடி

இவைகளை வெதுப்பிப் பொடிசெய்து போட்டு, ஊதிவிட்டுக் குடிக்க ஓடிக்குத்துமுளைப்புத்தீரும்.

---

## 76. முடக்குவாதத்துக்கு

ஒருபிடி வெண்ணொச்சியிலைதனைக்
 குறுகவரிந்துகொண் டொரு தேங்காயின்
திருகலிற்பாதியும் புழுங்கலரிசி பொடித்திடுமா
 வோர் சிறங்கையுஞ் சேர்த்
தெரியதலிற் பிட்டுவைத் தச்சேலையுடனெடுத்
 தொற்றிட் டினிதருந்தி
வரின் மூன்றுதினத்தினிற் கைகால்கட்டு
 முடக்கம்போம் வகையாய்க்கொள்ளே (183)



(இ-ள்)

ஒருபிடி வெள்ளை நொச்சியிலையைக் குறுக அரிந்து கொண்டு, ஒருபாதி தேங்காயின் திருவலும், புழுங்கலரிசியைப் பொடிசெய்தமாவு 1 சிறங்கையும்சேர்த்துப் பிட்டாக அவித்து, அவித்த சீலையோடு எடுத்துக் காலையும் மாலையும் ஒத்தடம் கொடுத்து, உள்ளுக்கும் மூன்றுநாள் சாப்பிட முடக்குவாதம் தீரும். * ஆறுநாள் பத்தியமாக இருத்தல்வேண்டும்.

---

## 77. வாயுவினாலும், வாதத்தினாலும், பில்லி சூனியத்தினாலுங் கூடப்புகள், பல தந்திரத்தினாலுமுடங்கின கைகால் தீரத்தைலம்

முதலை நாக்குப் பித்துத் தசை யதின்வெங்காட்ட
 மினைமொழிந்திடெல்லா
மதிகமின்றிப் பப்பத்து வராகனெடை
 கோசலம் விட்டரைத் திட்டெண்ணெய்
வித மைந்துஞ் சமன்கூட்டி முட க்கொர்தான்
 சமூலமோடு விளங்கு நொச்சி
யதனிலை யூமத்தை சங்கங்குப்பி தூதளை
 வாதமடக்கி பின்னும் (184)
பின்னமிலா விருப்பை யாடாதொடையினிலை
 வகைக்குப் பிழியுஞ்சாறு
[1] முன்னிவிடு மெண்ணெயினுக் கிரட்டிப்புவீதம்
 விட்டு மொழியுமிந்த
[2] நன்னரிலைவகைவேர்க ளொவ்வொன்று வராகனெடை
 நவிலிரண்டும்
பண்ணுபெருங்காய மெட்டுவராகனெடை
 வெள்ளுள்ளி பலந்தானன்கு (185)

---

* இது உரைச்சுவடியில் மாத்திரம் காணப்படுகிறது.
1. முன்னல் - கருதல்
2. நன்னர் - நல்ல

குலவுவசம் பிரண்டுபல முதலையின்பல்
வராகனெடை குறிக்குமூன்றே
யுலவிடு மூஞ்சூறிரண்டோன் றிவையெல்லாங்
கோசலம்விட்டு மரைத்திட்
டிலகிடு கோமயச்சாறு கோசலமொவ்வோர்
நாழியெல்லாங் கூட்டி
நல்லுறவே யெரித்தருந்திப் பிடித்தொருசாமம்
வரைக்கும் நன்றாய்ப்பூசே (186)

பூசிநன்றாய்ப் பிடித்திடிற் சூனியம்
பில்லிகடப்புகளாற் பொருந்திமெத்த
மோசஞ்செய் கொடிகட்டுவாயு
வாதங்களினால் முடங்குகைகால்
பேசுமெட்டுநாள் தன்னி லதுகுணமாகு
மின்பப்பெரிது மெய்துங்
காசினியாள் சரபோசிமன்னவர்
சொன்முறையிதுவாங் கருதிச்செய்யே (187)

(இ-ள்.)

முதலைநாக்கு, பித்து, தசை
வெள்ளைக் கஷ்டம் (மலம்)

இவை வகைக்குப் பத்து வராகனெடை, கோமூத்திரம் விட்டரைத்து,

ஐந்து எண்ணெய் (நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய், இலுப்பெண்ணெய், வேப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய்) சமபாகமாகக்கூட்டி

| | |
|---|---|
| முடக்கத்தான்சமூலம் | ஊமத்தையிலை |
| நொச்சியிலை | சங்கங்குப்பியிலை |
| தூதுவளை இலை | வாதமடக்கியிலை |
| இலுப்பையிலை | ஆடாதொடையிலை |

இவைகளைப் பிழிந்தசாறு, இவற்றை எண்ணெயைப்போல் இரண்டு மடங்குவிட்டு,



| | |
|---|---|
| முடக்கொத்தான்வேர் | ஊமத்தைவேர் |
| நொச்சிவேர் | சங்கங்குப்பிவேர் |
| தூதுவளைவேர் | வாதமடக்கிவேர் |
| இலுப்பைவேர் | ஆடாதொடைவேர் |

இவை வகைக்கு 2 வராகனெடையும்

பெருங்காயம் 8 வராகனிடை வெள்ளுள்ளி (உரித்தது) [4 பலம்

வசம்பு 2 பலம் முதலைப்பல் 3 வராகனெடை
மூஞ்சூறு 2

இவைகளை எல்லாம் கோமூத்திரம் விட்டரைத்து,

கோமயம் 1 நாழி (பசுவின் சாணச்சாறு) கோமூத்திரம் 1 நாழி

விட்டு, முன்சொன்ன சாறுவகைகள், எண்ணெய்கள், அரைத்த விழுதுகள் எல்லாவற்றையும் கூட்டி எரித்துப் பதத்தில் வடித்து 2 வராகனெடை உள்ளுக்குச் சாப்பிட்டு மேலும் பூசி நன்றாக ஒரு சாமம் பிடித்துவிடவும்.

**தீரும் வியாதிகள்:—** பில்லி சூனியம், முதலியவற்றால் ஏற்படும் கொடிக்கட்டுவாயு முடக்குவாயு இவை தீரும்.

---

## 78. வாதசன்னியால் முடங்கினதற்கு

மேனிவேரவரிவேர் நல்வேளைவேர்
வசம்பு வெள்ளையுள்ளி
யீனமின்றிச் சமன்கூட்டி நருக்கி
யுரியளவு வேப்பெண்ணெயிற் போட்
டானதழலிடை யெரித்து வராகனெடையருந்தி
யுடம்பனைத்தும் பூசி
டானமும்பிடித் தடப்பம் பட்டை
வேதுப்பிடிக்க வாதந்தீரும் (188)

(இ-ள்)

குப்பைமேனிவேர் அவுரிவேர்
நல்வேளைவேர் வசம்பு
வெள்ளைப்பூண்டு

இவை சமனாகச்சேர்த்து நறுக்கி,

வேப்பெண்ணெய் 1 உரி (அரைநாழி)

யில் போட்டுப் பொன்னிறமாய் எரித்து 1 வராகனிடை உள்ளுக்குச் சாப்பிட்டு, உடலெங்கும் பூசிப்பிடித்து, அடப்பம் பட்டை சேர்த்துக் காய்ச்சிய நீர் ஆவியில் வேது பிடிக்கவும் வாத சன்னியால் முடங்கியவாதம் தீரும்.

---

## 79. வாதக்கட்டு முதலானதற்கு

ஓதிடு வேப்பம்பட்டைத் தைல மிருபொழுதினு
மொவ்வொருகழஞ்சு
மேதகவே யருந்தி யுப்புப்புளிதள்ளி
யிளங்கீரை மிளகு வெந்நீ
ரோதனங்கொண்டிடி லெட்டுநாள்தனிற்
சூலைக்கட்டுயர் கடுப்பு
வாத மிசிவாதக்கட்டுப் பிரமிய
நீள் வாதந்தீரும் (189)

(இ-ள்)

( * சிங்கம் பற்றிய ) வேப்பம்பட்டை கொண்டுவந்து தைலமுண்டாக்கி வைத்துக்கொண்டு காலையும், மாலையும்

* இது உரைச்சுவடியில் உள்ள விவரம்.





ஒவ்வொரு கழஞ்சுவீதம் சாப்பிட எட்டேநாளில், சூலைக்கட்டு, இசிவுவாதம், வாதக்கட்டு, பிரமிய வாதம், கடுப்புவாதம் முதலியவைதீரும்.

**பத்தியம் :—** உப்பு, புளிப்புத்தள்ளவும். இளங்கீரை, மிளகு, வெந்நீருஞ் சாதமும், உட்கொள்ளலாம்.

---

## 80. முடக்கு வாதத்துக்கு

ஆயிற்றோல் புங்கந்தோல் வகைக்குப்
பன்னிரண்டு பலமெடுத்திடித்துத்
தூய தூணிப்பதக்குநீர் வார்த்துக்
குறுணியதாய்த் தகவெரித்து
மேயபாலெண்ணெ யொவ்வோர் நாழியுடன்
வசம் பரத்தை விளங்குகோட்டந்
தூய சிற்றுமுட்டி யமுக்கிருந் தேவதாரமொடு
தொட்டார் கடுக்காய் (190)

தொடருமிவை வகையினுக்குக் கழஞ்சுநிறை
கொண்டரைத்துத் தொக்கரைத்துச்
சுடரெரியிலெரித்து வடித்தொரு வேளைக்
கொருகழஞ்சு தொட்டருந்தி
யுடலினும் பூசிட முடக்குவாதம் போந்துயரு
முடனோடிப் போகுங்
கடினமிலை பத்தியந்தான் புளியினோடு
புகையிலையுங் கைப்புமாகா (191)

(இ-ள்)

ஆயில் பட்டைத்தோல் புங்கந்தோல்

இவை வகைக்கு 12 பலம் எடுத்து இடித்து, தூணிப்பதக்குத் (6 மரக்கால்) தண்ணீர்விட்டுக் குறுணியாகக் காய்ச்சி,

பால் 1 நாழி நல்லெண்ணெய் 1 நாழி

விட்டு, அதனோடு

| | |
|---|---|
| வசம்பு | அரத்தை |
| கோஷ்டம் | சிற்றுமுட்டி |
| அமுக்கிறு | தேவதாரம் |
| கடுக்காய் | |

இவை வகைக்கு ஒவ்வொருகழஞ்சு நிறை எடுத்து அரைத்துக் கரைத்து, எரித்து, வடித்து வேளைக்கு ஒருகழஞ்சு உள்ளுக்குச் சாப்பிட்டு உடம்பின் மேலும்பூச முடக்குவாதம் தீரும்.

பத்தியம் :— புளி, கைப்பு, புகையிலை தள்ளவும்.

## 81. முடக்கு வாதத்துக்கெண்ணெ

தழுதாழை நொச்சி கள்ளி கோட்டம்
பிரண்டைச் சாறெவ்வொன்று
வழுவாதுநாழி கோசலமு மவ்வளவே
மஞ்ச ளிந்துப்
பிழிவில் சதகுப்பை சிறுகடுகு
குளவிந்தமுட னியல் வசம்பு
பழுதிலிருவேலி கொடி யமுக்கிரா
வேர்கள் பகர்வோ மின்னும் (192)

மென்னசெவிய மிலாமிச்சவேர் சாறணைவே
ரிவையோவ்வொன்று
பன்னிடுமொன் றரைக்கழஞ்சு கொண்டரைத்துக்
கரைத்தெண்ணெய் பகர்நாழி



தன்னுட னெல்லாங்கூட்டியெரித்து
வடித்திருகழஞ்சு தகவருந்திற்
பின்னையாதினுக்கிருக்கு முடக்குவாதப்பிணிதான்
பெயர்ந்துபோமே. (193)

(இ-ள்)

| | |
|---|---|
| தழுதாழைச்சாறு | நொச்சிச்சாறு |
| கள்ளிச்சாறு | கோஷ்டம் |
| பிரண்டைச்சாறு | கோமூத்திரம் |

இவை வகைக்கு 1 நாழி வீதம் சேர்த்து, இதனுடன்,

| | |
|---|---|
| மஞ்சள் | இந்துப்பு |
| சதகுப்பை | சிறுகடுகு |
| குளவிந்த மஞ்சள் | வசம்பு |
| கொடிவேலி | அமுக்கிறுவேர் |
| சவ்வியம் | இலாமிச்சம்வேர் |
| சாறணைவேர் | |

இவைகளை வகைக்கு $1\frac{1}{2}$ கழஞ்சு எடுத்து அரைத்துக்கரைத்து எண்ணெய் 4 நாழி சேர்த்து எரித்து, வடித்து இரண்டு கழஞ்சுவீதம் அருந்திவர முடக்குவாதம் தீரும்.

## 82. முடங்கினவாதம், வாதகரப்பான், சூலை, கூன் இடுப்புப் பிடிப்புக்கு

சாறுறுமென் வெள்ளுள்ளிப்பருப்புத்
தேங்காய்த்திருகல் சதுரக்கள்ளிச்
சாறிவை யொவ்வொருநாழிகூட்டி
யிடித்தடையாகத் தோன்றத்தட்டி

பூறிடுநல்வெயில்தனிற் பதமுறவேகாயவைத்
துரலிட்டாட்டித்
தேறிடுமத்தைலமெடுத் திருபோதும்
பிடித்துடலிற்சேரப் பூசே. (194)

பூசியுறப் பிடிப்பதன்றி நொச்சியிலை
வேம்பினிலை புகலெருக்கி
னாசகலும் பழுப்போடு தில்லம்பழுப்பு
மேல்வாதமடக்கி கூட்டி
வாசமுறு வேதுவைத்துப் பிடித்திடுக
புளிகைப்பு வரைதல் செய்க
பேசலுறுகூன் வாதசூலை கரப்பா
னிடுப்புப் பிடிப்புத்தீரும். (195)

(இ-ள்)

வெள்ளைப்பூண்டு பருப்பு எள்ளு
தேங்காய்த் திருவல்
சதுரக்கள்ளிச்சாறு

வகைக்கொரு நாழி கூட்டி இடித்து அடையாகத்தட்டி வெயிலில் பதமாகக் காயவைத்து உரலில் இட்டு இடித்துத் தைலம் எடுத்து இருபொழுதும் உடலிற்பூசி, நன்றாகப் பிடித்து

நொச்சியிலை வேப்பிலை
எருக்கம் பழுப்பு தில்லம்பழுப்பு
வாதமடக்கி

இவைகள் சேர்த்துக் காய்ச்சிய வெந்நீரில் வேதுபிடிக்கவும்.

**பத்தியம்:—** புளி, கைப்பு நீக்கவும்.

இதனால் கூன், வாதசூலை, கரப்பான், இடுப்புப் பிடிப்பு முதலியவை தீரும்.

---



## 83. கழல் வாதத்துக்கு

பெருங்காயம் பணவெடை மூன்றோடு
புங்கின்விதை யிரண்டு பேசிடுள்ளி
யருந்திடு பூண்டொரு மூன்று வசம்புத்தேறிரண்டு
கழலதின் பருப்பு
மிரண்டு சிறிதிருகடுகு மரைத்து
நொச்சிச் சாற்றினுடனே முத்தின்
வருந்தைல நாழி யினிலெரித்தே வையுங்கேளீர்
கழலின் வாதந்தீரும். (196)

(இ-ள்)

பெருங்காயம் 3 பணவெடை புங்கம்விதை 2
வெள்ளைப்பூண்டு 3 வசம்புத்தேறு 2
கழற்பருப்பு 2 நல்கடுகு சிறிது
நாய்க்கடுகு சிறிது

இவைகளைச் சேர்த்து அரைத்து இதனுடன்

அஞ்சிலை நொச்சிச்சாறு 1 நாழி, விளக்கெண்ணெய் 1 நாழி விட்டுக் கரைத்துக்காய்ச்சிக் கடுகோடு தின்னக் கழல் வாதம் தீரும்.

---

## 84. கழல் வாதத்துக்கு

திரிகடுகு வசம் புள்ளி முருங்கைவேர்
கழல்வேர் சேர்த்தம்மிதன்னி
லொருநிறையாக் கொண்டரைத்திட் டுரிவெந்நீர்
தனிலருந்தி யோதும் வைக்கோ
லெரியதனிற் சுடுசாம்ப லுடனெள்ளினெய்யுஞ்
சேர்த்தி சையப்பின்பு
பருகிவரி லோரெட்டு நாளதனிற்
கழல்வாதம் பறக்குமன்றே (197)

(இ-ள்)

திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி) — வசம்பு

வெள்ளைப்பூண்டு — முருங்கைவேர்

கழற்சிக்கொடிவேர்

இவை சமநிறை யெடுத்து அரைத்து ½ நாழி வெந்நீரோடு சாப்பிட்டுப் பின்பு வைக்கோல் சுட்ட சாம்பலுடன் நல்லெண்ணெயும் சேர்த்துச் சாப்பிட 8 நாளில் கழல் வாதம் தீரும்.

## 85. கழல் வாதத்துக்கு

குமிழம்வேர் சாறணைவே ருள்ளி வசம்பிந்
    நான்குங் கொண்டரைத்துச்
சமனுறவே யடைதட்டித் தின்றிடினு
    நீரின்மேறழ லாமென்ன
வமையு முட்டைப்பாசியினை யரிசியுட
    னிடித்துப் பிட்டாக்கி யேழ்நாள்
கமழுறுநல் லெலுமிச்சங்காயளவு தின்றிடினுங்
    கழல் வாதப்போம். (198)

(இ-ள்)

குமிழம்வேர் — சாறணைவேர்

வெள்ளைப்பூண்டு — வசம்பு

இவை நான்கையும் சேர்த்து அரைத்து அடைதட்டித் தின்னக் கழல் வாதம் தீரும்.

நீர்மேல் நெருப்பு — முட்டைப்பாசி

இவைகளை அரிசியுடன் இடித்துப் பிட்டாக்கி 7 நாள் எலுமிச்சங்காயளவு தின்றாலும் கழல்வாதம் தீரும்.



## 86. அண்டவாதங்கழல்வாதத்துக்கு

கழற்பருப்பை நஞ்சகற்றிக் கரண்டியிற்
    போட்டா மணக்கின் கனிந்திடெண்ணெய்
விழச்சிறிது விட்டெரித்துத் தினிற் கழல்வாதம்
    போகும் வெள்ளையுள்ளி
செழுமையுறு பலத்தினொடு பிடிகருஞ்சீரக
    மரைத்துத் தேனிற்சேர்த்து
மொழிகரு முத்தினமருந்தி லண்டவாதம்
    போகுமயன்று செய்யே. (199)

(இ-ள்)

கழற்சிப் பருப்பை நஞ்சைநீக்கிக் கரண்டியில் போட்டு ஆமணக்கெண்ணெய் விட்டு வேகவிட்டுத் தின்னக்கழல்வாதம் தீரும்.

வெள்ளைப்பூண்டு 1 பலம் — கருஞ்சீரகம் 1 பிடி

இதை அரைத்துத் தேனில் சேர்த்துக்குழப்பி மூன்று தினம் சாப்பிட அண்டவாதம் தீரும். இது கைகண்டமுறை.

## 87. குடல்வாதஞ் சுரோணிதவாதம் முதலானதற்கு மரகதாஞ்சனத்தைலம்

புகழ் சிற்றுமுட்டிவேரோடு சீந்திற்றண்டின்
    மேல்புரணியு ஞ்சீர்
தகவுறுமொரு வொருபிடியே நன்னாரிவேர்
    கூந்தல் சமூலமாகு
மிகல்வரிய சாரணைவேர் வகையொன்றுக்
    கிசைந்தபல மிருபதாக
மிகவிடித்தோ ராறுமரக்கானீரிற் போட்
    டெரியின் விரவக்காய்ச்சே. (200)

காயுமதை நாலிலொன்று யிறக்குபதக்
காவின்பால் கனலில்வைத்தே
யாயதையும் நாலிலொன்று யிறக்கு
சிற்றுமுட்டி வேரணிகொள்முன்னை
யேயபெருவாகை பெருங்குமிழ் கண்டங்கத்தரி
நீள்வில்வவேர்கள்
பாய சிற்றுமல்லி பாதிரி நெருஞ்சி
வழுதுணையின் பற்றிடும்வேர். (201)

வேரிவை தம்மொடு தேவதாரங் கோளி
மதுரம் விளங்கு கோட்டம்
பேரரத்தை குங்குலியஞ் சதகுப்பை மரமஞ்சள்
பிறங்கு மஞ்சள்
காரகில் வேப்பம்பிசின் குடபாலைப்பட்டை
குக்கில் கடுகுரோணி
பாரமுறு மாஞ்சில் சிறுதேக்கு மாஷப்பன்றி
பரிந்திடேலம். (202)

ஏலமொடு சாதிக்கா யிந்துப்புப் பொட்டி லுப்
பிலவங்கந்தக்
கோலம் விழலரிசி கருஞ்சீரகம் வெந்தயஞ்
சூடன் குங்குமப்பூச்
சாலுறு தாமரைத்தாது கிரும்பு தாயைக்
கொன்றுன் சார்ந்திடும்வெட்
பாலை *யரி திரிகடுகொ டோமமூக்கப்பன்றி
பகருமேதை (203)

மேதையிவை வகையொன்றுக் கொன்றரையாம்
வராகனெடை மேவக்கூட்டிச்
சீதநீர்தனிற் போட்டுக்காய்ச்சி யரைத்துக்
கரைத்துத் திகழ்முன்பாலு

* யரி = அரிசி



மோதலுறு கடாயமுஞ் சேர்த்தொரு நாழி
யெண்ணெயும் விட்டொன்றுய்த்தீயி
லாதரவோடைந்துநாள் சிறுகவெரித்
ததைவடிக்கொ ளாறுநாளில் (204)

வடித்துக்கொண் டருட்குருவைத்
துதித்தொருபத்தைந்து நாள் மருவுநெல்லின்
புடத்தினில் வைத்தெடுத்து நல்முகூர்த்தம்பார்த்
தருந்திவரிற் போகுநோய்கள்
படுத்த மகாவாதமொடு தலை நடுக்குத்
திரிதோஷவாதம் பித்தந்
தடுத்தசுரோணிதவாதஞ் சிரத்தம்பனத்தினொடு
சந்துவாதம் (205)

வாதசுரோணிதம் வாததம்பன மற்புதவாத
மகோதரத்தோ
டோதும் பீனிசங் காச்சுவாதம் யோனிச்சூலை
யுயர்ந்தசிங்க
வாத நீள்குதிகாலின் வாதமுடன்
புகல்கண்டவாதம் வாத
பேதங்கள் யாவையு மோர்மண்டலத்திற்
றீர்ந்துவிடும் பிடித்துச்செய்யே. (206)

(இ-ள்)

சிற்றுமுட்டிவேர் சீந்திற்றண்டின்மேற்புரணி

இவைகள் வகைக்கு ஒவ்வொருபிடியும்

நன்னாரிவேர் முதியார் கூந்தல் சமூலம்
சாரணைவேர்

இவை வகைக்கு 20 பலமும் எடுத்து, எல்லாவற்றையும் சேர்த்து இடித்து 6 மரக்கால் தண்ணீர்விட்டு நாலிலொன்றுய்க் காய்ச்சி வடிகட்டி அதனுடன் பசுவின்பால் 1 பதக்கு விட்டு, அதை நாலிலொன்றுய்க்காய்ச்சி,

| | |
|---|---|
| சிற்றுமுட்டிவேர் | முன்னைவேர் |
| பெருவாகைவேர் | பெருங்குமிழ்வேர் |
| கண்டங்கத்தரிவேர் | வில்வவேர் |
| சிற்றுமல்லி | பாதிரி |
| நெருஞ்சில் | வெழுதுணை (முள்ளுக்கத்திரி) |
| தேவதாரம் | காகோளி |
| அதிமதுரம் | கோஷ்டம் |
| பேரரத்தை | குங்கிலியம் |
| சதகுப்பை | மரமஞ்சள் |
| மஞ்சள் | அகில் |
| வேப்பம் பிசின் | குடசப்பாலைப்பட்டை |
| குக்கில் | கடுகு ரோகிணி |
| சடாமாஞ்சில் | சிறுதேக்கு |
| மாஷப்பன்றி | ஏலம் |
| சாதிக்காய் | இந்துப்பு |
| பொட்டிலுப்பு | இலவங்கம் |
| தக்கோலம் | விழலரிசி |
| கருஞ்சீரகம் | வெந்தயம் |
| சூடன் | குங்குமம்பூ |
| தாமரைத்தாது | கிரும்பு |
| வெட்பாலையரிசி | திரிகடு (சுக்கு, மிளகு, திப்பிலி) |
| ஓமம் | மூக்கப்பன்றி |
| மேதை | தாயைக்கொன்றான் (புல்லுருவி) |

இவை வகையொன்றுக்கு $1\frac{1}{2}$ வராகனெடை கூட்டி அரைத்துக்கரைத்து, முன்சொன்னபால், கஷாயம் முதலியவற்றையும் சேர்த்து எண்ணெய் 1 நாழி

விட்டு சிறுகொதியாக ஐந்துநாள் எரித்து ஆறுநாள் வடித்து, குருவைத் துதித்து 15 நாள் நெற்புடம்வைத்து எடுத்து நல்ல நாள் பார்த்து அருந்திவரத்தீரும் நோய்கள் :—



மகாவாதம், தலை நடுக்கு, திரிதோஷவாதம், பித்தம், சுரோணிதவாதம், சிரத்தம்பனம், சந்துவாதம், வாதசுரோணிதம், வாததம்பனம், அற்புதவாதம், மகோதரம், பீனிசம் காச்சுவாதம், யோனிச்சூலை, சிங்கவாதம், குதிகால் வாதம் கண்டவாதம், பலவகைவாதங்கள் இவை ஒரு மண்டலத்தில் தீரும்.

---

## 88. இடுப்புக்கடுப்புக்கு

பசுவின்பால்பதக்கை யொருநாழியாய்க்காய்ச்சி
வெல்லம் பதின்பலம்போட்
டிசையெண்ணெயிருநாழியுட னுளுந்து
பொடித்திடுநா லிலங்குநாழி
யசையுறச்சேர்த்துக்கிண்டி விளாங்காயி
னளவு தினமருந்தி யந்தி
மிசைவெந்நீர்குளி யிடுப்புக்கடுப்பினொடு
பிடிப்பு முடன்விலகிப்போமால் (207)

(இ-ள்)

பசுவின்பால் 1 பதக்கை (2 மரக்காலை) 1 நாழியாக (அரைப்படியாக) சுண்டக்காய்ச்சிவெல்லம் 10 பலம் போட்டு அதனுடன்

நல்லெண்ணெய் 2 நாழி, உளுந்துப்பொடி 1 நாழி

போட்டுக்கிண்டி தினமும் விளாங்காயளவு தின்று (மல்லாக்கப்படுத்திருக்கவும்)[1]. அந்திப்பொழுதில் வெந்நீரில் குளிக்கவும். இடுப்புக்கடுப்பு, பிடிப்பு முதலியவைதீரும்.

---

1. இந்த விவரம் உரைச்சுவடியில் காணப்படுகிறது.

## 89. இடுப்புவலிப்புக்கு

மொழிதருதிப்பிலிமூல மாளிவிதையொடு
நறுக்குமூலம் நல்ல
வழிவருவெந்தயங் கரியபோள மொவ்வோர்பலம்
நெய்யில் வறுத்திடித்துப்
பழவெல்லமொ ருசேருஞ் சேர்த்
திலேகியஞ்செய்து * பதமிரண்டும்
கழறுகாயளவருந்திப் புளிகைப்புத்தவி
ரிடுப்புக்கடுப்பெலாம் போம். (208)

(இ-ள்)

திப்பிலிமூலம் (கண்டந்திப்பிலி) ஆளிவிதை
நறுக்குமூலம் (கண்டந்திப்பிலியில் ஒருவகை) வெந்தயம்
கரியபோளம்

இவைகளை வகைக்கு 1 பலம் விதம் எடுத்து நெய்யில் வறுத்து, இடித்துச் சூரணித்துப் பழையவெல்லம் சேர்த்து லேகியமாகக்கிளறி தினமும் இரண்டுபொழுதும் கழற்சிக்காயளவு சாப்பிடவும். இடுப்புவலி நீரும்.

**பத்தியம்** :—புளிப்பு, கைப்பு தவிர்க்கவும்.

---

## 90. வாதப்பிடிப்புக்கு

பருவேம்பினெய் படியொன்றினிற்
சதுரக்கள்ளிப்பால் படியொன்றாற்றி
யொருபிடி நீண்மயிலிறகைக் குறுகவரிந்துடன்கூட்டி
யொன்றுன்மூடி

---

* பதம் = பொழுது



யிருசாமவரைக்கு மொருவிறகதனாற்
சிறுகவே யெரிக்கும்போதில்
விரவுசுடுநாற்றமாய்த் துர்க்கந்தமாகிப்
பல்விதமாய் நாறும் (209)

நாறியபின் றெய்வீகமாய் மணக்கும்
பதத்தே நன்கிறக்கித்
தேறிடுகற்பூர மொருபலம்போட்
டதுருகியபின் றிகழுகின்ற
வேறுகலசத்தாற்றி யிருபொழுதும்
பிடிப்பிடத்துமீது பூசில்
வீறுமெந்த வாயுவும்போம் புளிப்பினோடு
கைப்பாகா வெந்நீர்கூட்டே (210)

(இ-ள்.)

வேப்பெண்ணெய் 1 படி சதுரக்கள்ளிப்பால் 1 படி

இதில் மயிலிறகு ஒரு பிடியைக் குறுக அரிந்து பெரிய குண்டு சட்டியிற் போட்டு இடைவெளி இல்லாமல் ஒரு சட்டியால் மூடி அடுப்பில்வைத்து அடுப்பை ஒரேவகை விறகால் சிறுக எரியவிடவும். இப்படி இரண்டுசாமநேரம் எரிக்கும்பொழுது, முதலில் துர்க்கந்தமாகவும், சுடுநாற்றமாகவும் இப்படிப் பல விதமாக நாறும். பிறகு தெய்வீகமாய் மணக்கும். அந்தப் பதத்திலிறக்கி யதில்,

கற்பூரம் 1 பலம்

போட்டு, அது உருகியபின் மற்றொரு கலசத்தில் வார்த்து வைத்துக்கொண்டு, எங்கே பிடிப்பு இருக்கிறதோ அங்கே இந்தத் தைலத்தைத் தடவிப் பிடிக்க எப்படிப்பட்ட வாயுவும் தீரும்.

**பத்தியம்**:— கைப்பு, புளிப்பு தவிர்க்கவும். வெந்நீர் சேர்த்துக்கொள்ளவும்.

---

## 91. கடுப்பு வாதத்துக்கு

முதுவேப்பினுட னடப்பம்பட்டை
யொவ்வொரெடை நறுக்கி மொழியும்பானை
யதிற்போட்டுத் தூணிநீர்விட் டதுவோர்
குறுணியளவாகக் காய்ச்சி
யதனையொரு பாத்திரத்திலிருத் துமக்குப்
பொழுதிரண்டு மருந்திவந்தாற்
பதமுறு மெண்டினத்துள்ளே யுயர்கடுப்பு
வாதமெல்லாம் பறந்துபோகும். (211)

பறந்துபோ முயர்வாதக்கடுப் பிதற்குப்
புளிகைப்புப் பருகலாகா
வறிந்திடு மாவிலங்கை யுத்தாமணியிலைகளுடன்
புழுங்கலரிசி நல்ல
திறங்குலவு கடுக்காயொன்றேடு
பத்துமிளகாயுஞ் சேர்த்தரைத்துக்
கறங்கெரியிற் கொதிக்கவைத்து மேற்பூசு
மற்றிதுகைகண்டதாமே. (212)

(இ-ள்)

முற்றினவேப்பம்பட்டை அடப்பம்பட்டை

இவை வகைக்கு ஒவ்வொரு எடை (6¼ சேர்) நறுக்கி ஒரு பானையிற்போட்டு 4 மரக்கால் தண்ணீர்விட்டுக் குறுணியாகக் காய்ச்சி வடித்து, கஷாயக்குழம்பாக வைத்துக்கொண்டு இரு பொழுதும் ஒவ்வொரு ஆழாக்கு விதம் குடித்து, உப்பு, புளி, கைப்பு நீக்கிப் பத்தியமாக இருக்கவும்.

இதற்குப் பூச்சுமருந்து :—

| | |
|---|---|
| மாவிலங்கையிலை | உத்தாமணியிலை |
| கடுக்காய் 1 | மிளகாய் 10 |
| | புழுங்கலரிசி |



இவைகளைச் சேர்த்து, அரைத்துக் கொதிக்கவைத்து மேலே பூச[1] (தேள்கொட்டுவதுபோல் கடுக்கும்.) வாதம்தீரும். இது கைகண்டமுறை.

---

## 92. இடுப்பு வலிக்கு

கருவேலம்பிசின்விளாம்பிசினிரண்டும்
வகைக்கரைச்சேர் கனல்வறுத்திட்
டொருசேர்கொப்பரைத்தேங்காய்ப் பழவெல்ல
மொருசேர் கொண்டொருங்கிந் நான்கு
முரலினிற் போட்டிடித்துண்டைசெய்து
காலையினெய்யிலோதுமந்தி
விரவுபொழுதினில் வறிதுமருந்தேழ்நா
ளிடுப்புவலி விலகிப்போகும் (213)

(இ-ள்)

கருவேலம் பிசின் விளாம்பிசின்

இவை வகைக்கு ½ சேர் எடுத்து வறுத்துக்கொண்டு,

கொப்பரைத்தேங்காய் 1 சேர் பழையவெல்லம் 1 சேர்.

இவைகளை எல்லாவற்றையும் உரலில் போட்டு இடித்து உண்டைகளாகச் செய்து, நெய்யில் காலை, மாலை, இரவு இந்த மூன்றுவேளைகளிலும் சாப்பிட்டுவர ஏழே நாட்களில் இடுப்பு வலி விலகும்.

---

1. இந்த விவரம் உரைச்சுவடியில் காணப்படுகிறது.

## 93. குன்மம், குடல்வாதம் முதலானதற்கு

புன்முருங்கை நன்முருங்கை சிவதை சிற்றாமணக்கு
நொச்சி புகல்குறிஞ்சா
கனவாதமடக்கி நாகநத்தி வேலிப்பருத்தி
கரந்தை கொன்றை
வனமுறுமாவிலங்கை மூக்கரட்டை கொடுவேலி
பெருவாகை முன்னை
வினைதவிர்பாதிரி சதுரக்கள்ளி முதியார்கூந்தல்
வில்வத்தின்வேர் (214)

வில்வவேருட னழிஞ்சில் சிறியவழுதுணை
நெருஞ்சி விளங்குசிற்றா
மல்லிபெருங்குமிழ் கழல்வேர் கண்டங்கத்திரி
வீழி மருவும் வேர்கள்
வல்லசெருப்படிவேர் பேராமல்லிசமூலமிவை
வகையொன்றுக்குச்
சொல்லுமொரு பலமாக விடித் தெட்டுமரக்கானீர்
துன்னச்சேரே. (215)

சேர்த்தெரித்துப் பதக்காகக்கொண் டிரண்டுபடி
யெண்ணெய் சேர்த்து நன்றாய்ப்
பார்த்திடுகள்ளிப்பாலி னுரிகூட்டி
வெள்ளுள்ளிப்பருப்பு நீடு
கூர்த்தபலமிருபதோடு சிறுமூலம் செம்பு
சதகுப்பை கோட்டந்
தீர்த்ததிரிகடுகு கருஞ்சீரகம் வெந்தய
மதுரஞ் சிறியதேக்கு (216)

சிறுமையிலாப் பெருங்காயங் கிருமிசத்துரு
மஞ்சள் சீரகத்தோ
டுறுகடுரோகணி குழலாதொண்டைவேர்
சீந்தியற்கிழங்கு



பிரிவிலாவிழலரிசி சாறணைவேர் சிறுகுறட்டை
பெருங்குறட்டைத்
திறமுறுநற்கிழங்கு கொடிவேலிவேர்
மரமஞ்ச டேவதாரம். (217)

தேவதாராதி வகைக்கொரு கழஞ்சு
வெள்ளாட்டுத் தீம்பால்விட்டு
மேவுறவே யெலாமரைத் தேங்காய்ப்பாலிரண்டுபடி
விட்டுக்கூட்டி
வாவெரியிலைந்துநாள் சிறுகவெரித்
தாறுநாள் வடித்தெடுத்து
நாவுறக்காசெடை மூன்றுகொளிர் குன்மம்
வயிற்றுநோய் நடுங்கியோடும். (218)

ஓடிடும் பேய்க்கொம்மட்டியினிலை மோரிற்
பிசைந்தே யுறவடித்து
நாடதனைக்குடிக்கில் வாயாலெடுக்கும்
பேதியாம் நவிலொர் நாள்மூ
வீடுறவின்னதுசெய்து பின்னெண்ணெய் குடித்திடு
கவிதுவல்லாமற்
கூடுமொருதைல முடலிற்பூச வேண்டுமது
கூறுவோமால். (219)

கூறிடுவன்னெற்றுவேர் சடைச்சிவேர்
வசம்புள்ளி குலவுகின்ற
சாறணைவேர் வகைக்கைந்து வராகனெடை
நாழியெண்ணெய் தன்னிற்கூட்டி
வீறெரியிற்காச்சி மேற்பூசந்தவெண்ணெய்
கொள்ளும்வேளை மட்டும்
மாறிடுங்குடல்வாதஞ் சந்துவாதம் வீக்கம்
பகர்நோயெல்லாம். (220)

(இ-ள்)

| | |
|---|---|
| புன்முருங்கை (புரசு) | முருங்கை |
| சிவதை | சிற்றாமணக்கு |
| நொச்சி | சிறுகுறிஞ்சா |
| வாதமடக்கி | நாகதந்தி |
| வேலிப்பருத்தி | கரந்தை |
| பொற்கொன்றை | மாவிலங்கை |
| மூக்கரட்டை | கொடிவேலி |
| பெருவாகை | முன்னை |
| பாதிரி | சதுரக்கள்ளி |
| முதியார்கூந்தல் | வில்வவேர் |
| அழிஞ்சில் | சிறுவழுதுணை |
| நெருஞ்சில் | சிற்றாமல்லி |
| பெருங்குமிழ் | கழற்கொடிவேர் |
| பேராமல்லிசமூலம் | |

இவை வகைக்கு 1 பலம் வீதம் சேர்த்து இடித்து 8 மரக்கால் தண்ணீர் விட்டுப் பதக்காகக் காய்ச்சி, இதனுடன்

| | |
|---|---|
| எண்ணெய் 2 படி | கள்ளிப்பால் ½ நாழி |

சேர்த்து.

| | |
|---|---|
| வெள்ளைப்பூண்டுப் பருப்பு 20 பலம் | சிறுமூலம் |
| வசம்பு | சதகுப்பை |
| கோஷ்டம் | திரிகடு (சுக்கு, மிளகு, திப்பிலி) |
| கருஞ்சீரகம் | வெந்தயம் |
| அதிமதுரம் | சிறுதேக்கு |
| பெருங்காயம் | கிருமிசத்துரு (வாயுவிடங்கம்) |
| மஞ்சள் | சீரகம் |
| கடுகுரோகிணி | |
| குழலாதண்டைவேர் | சீந்திற்கிழங்கு |
| விழலரிசி | சாறணைவேர் |



| | |
|---|---|
| சிறுகுறட்டைக்கிழங்கு | பெருங்குறட்டைக்கிழங்கு |
| கொடிவேலிவேர் | மரமஞ்சள் |
| தேவதாரம் | *சவ்வியம் |
| *கிரும்பு | *நேர்வாளம் |
| *அரத்தை | *அமுக்கிரு |

இவை வகைக்கு 1 கழஞ்சு வீதம் எடுத்து வெள்ளாட்டுப்பால் விட்டு எல்லாவற்றையும் நன்ருக அரைத்து,

தேங்காய்ப்பால் 2 படி

விட்டு இதனுடன் சேரும்படி எண்ணெய்விட்டு ஐந்துநாள் சிறுக எரித்து ஆரும்நாள் வடித்து எடுத்து 3 காசெடை வீதம் சாப்பிட்டுவர குன்மம், குடல்வாதம் முதலியவை தீரும்.

இந்த எண்ணெய் சாப்பிடுமுன் பேய்க் கொம்மட்டியிலையை மோரில் பிசைந்து வடிகட்டிக் குடிக்க வாந்தி எடுக்கும். பேதியாகும். இம்மாதிரி 3 நாள் சாப்பிட்ட பின் எண்ணெய் சாப்பிடவும்.

இதற்குப் பூச்சுத்தைலம்

| | |
|---|---|
| வன்னெற்றுவேர் | சடைச்சிவேர் |
| வசம்பு | வெள்ளைப்பூண்டு |
| சாரணைவேர் | |

இவை வகைக்கு 5 வராகனெடை ஒரு நாழி எண்ணெயிற் சேர்த்துக் காய்ச்சி, முன்சொன்ன எண்ணெய் சாப்பிடும்வரை மேலே பூசிவரக் குடல்வாதம், சந்துவாதம், விக்கம் முதலியவை தீரும்.

---

* இந்த சரக்குகள் உரைச்சுவடியில் மாத்திரம் காணப்படுகின்றன.

## 96. பெருவயிறு, குடல்வாதம் முதலானதற்கு நெய்

சிவதை சிற்றாமணக்கு நொச்சிவேர்
    வகைக்கவ்வாறுபலஞ் சேர்த்திடித்து
நவில்பதக்குநீர்விட்டு நாலிலொன்றாயெரித்து
    நவின்றதன்றிக்
கவருளுந்து கொள்ளு வகைக்கோர் மூன்றுபலங்
    குறுணிகாணு நீரிட்
டமரவேயெரித் தெட்டிலொன்றாக
    வடித்திரண்டு மனையக்கூட்டே (221)

கூட்டிடந்தக் கடாயத்தி னல்லெண்ணெ
    யிரண்டுபடி கூடவிட்டு
நீட்டுவசம் பரத்தை சதகுப்பை
    திப்பிலிமூல நிகழுங்காயங்
கோட்டம ரேணுகஞ் செவியம் வெட்பாலையரிசி
    கடுகுரோகிணி தன்னோ
டெட்டமுறு வாய்விளங்கந் தேவதாரங்
    கழலின்பருப்பு (222)

புகலுமிவை வகைக்கொருமுக்கழஞ்சே
    யிந்துப்பினிரைபோற்று மூவைந்
திகழ்விலாக்கழஞ்சே கொண்டிளநீரிலரைத்து
    வெள்ளாட்டின் பாலுந்
தகவுறச்சேர்த் தெரித்தோர்கழஞ்சு
    குடித்துவரிற் சார்ந்தவீக்கந்
தொகுபக்கசூலை பெருவயிறுமை
    குடல்வாதந் தொலைந்துபோமே (223)

**(இ-ள்.)**

| | |
|---|---|
| சிவதை | சிற்றாமணக்கு |
| நொச்சிவேர் | |



இவை வகைக்கு 6 பலம் வீதம் எடுத்து இடித்துப் பதக்குத் தண்ணீர் விட்டு நாலிலொன்றாகக் காய்ச்சி வடித்து வைத்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| உளுந்து | கொள்ளு |

இவை வகைக்கு 3 பலம் வீதம் குறுணித் தண்ணீரில் போட்டு 1 நாழியாக (எட்டிலொன்றாகக்) காய்ச்சி வடித்து முன் சொன்ன கஷாயத்தோடு சேர்த்து, இதனுடன்

நல்லெண்ணெய் 2 படி

விட்டு,

| | |
|---|---|
| வசம்பு | அரத்தை |
| சதகுப்பை | திப்பிலிமூலம் |
| பெருங்காயம் | கோஷ்டம் |
| அரேணுகம் | சவ்வியம் |
| வெட்பாலையரிசி | கடுகுரோகிணி |
| வாயுவிளங்கம் | தேவதாரம் |
| கழற்சிப்பருப்பு | |

இவை வகைக்கு 3 கழஞ்சும்,

இந்துப்பு 15 கழஞ்சும்

இளநீர்விட்டு அரைத்து, வெள்ளாட்டுப்பாலும் விட்டு 3 நாள் காய்ச்சி நாலாநாள் வடித்து 1 கழஞ்சு வீதம் குடித்துவர வீக்கம், பக்கசூலை, பெருவயிறு, குடல்வாதம், ஆமைநோய் முதலியவை தீரும்.

---

## 97. விரைவாதத்துக்கு

கூறுவெள்ளாட்டிறைச்சிக்கு நிகர்சமனாய்த்
திரிபலைகள் கொண்டிடித்துத்
தேறிறைச்சியுடன் கூடிக்கடாயமிட்டு
வடித்ததனிற் சேர்நேரா

யூறிடு கோசலத்தினுட னுமணக்குநெய்கூட்டி
யுற்றெரித்து
வேறுவடித்துக் கழஞ்சுநெய் காலைப்போதருந்தில்
விரைவாதம் போம். (224)

போமினைய தைலங்கள் மூன்றுங் கொண்டிடும்
போதிற் புகழ்காலைக்கு
நாமமுறுதைலமு நீடந்திச் சூரணமு
நண்ணிராவி
லேமமுறு குடிநீருங்கொள வேண்டுங்
கலைமான்கொம் பெரியிற்சுட்டே
யாமதனைக் கரியாக்கிக் காசெடைதூள்
தைலத்திட்டருந்தவேண்டும் (225)

**(இ-ள்)**

வெள்ளாட்டு இறைச்சிக்கு சமநிறை திரிபலை (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்) சேர்த்து இடித்து, இறைச்சியுடன் கஷாயமாகக் காய்ச்சி வடித்துக்கஷாயத்திற்குச் சரியாக,

ஆமணக்கெண்ணெய் கோமூத்திரம்

விட்டு எரித்து மந்தாக்கினி பதத்தில் வடித்துக்காலை வேளையில் 1 கழஞ்சு வீதம் சாப்பிட விரைவாதம் தீரும். தைலம் சாப்பிடும்போது கலைமான் கொம்பைச் சுட்டுக் கரியாக்கி 1 காசெடைத்தூளை தைலத்தில் போட்டுச்சாப்பிடவும்.

குறிப்பு: மூலச் செய்யுள் 225ல் 3 தைலங்களைப்பற்றியும் அதைச் சாப்பிடும்போது சூரணம், குடிநீர், இவைகளையும் உட்கொள்ளவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் பாடலில் இல்லை.

---



# 98. குடல்வாதம் முதலானதற்கு

பெருங்குமிழ் சிற்ருமணக்குச் சிறியவழுதுணை
நெருஞ்சி பேராவாரை
யொருங்குறு கூவிளை சிவதை பாதிரிவேர்
நாகணத்தியுறுங்கிழங்கு
விரும்புமிவைவகையினுக்குப் பதின்பலமாமிருபதுவே
வெண்காவுள்ளி
தரும்பலமிவ்வெலா மிடித்தேயொருதூணிப்
புனலிடைச் சாரப்போடே. (226)

போட்டெரித்துக் குறுணியாயிறக்கிவடித்
திந்துப்புப் பொருந்துங்காயங்
கோட்டந் திப்பிலி யரத்தை சிறுதேக்கினுட
னமுக்குராயொவ்வொன்றுக்
கீட்டமுறு முக்கழஞ்சு தேவதாரத்தினெடு
மிட்டருந்தில்
வாட்டஞ்செய் குடல்வாதஞ் சூலையுடனுமைநோய்
மற்றுந்தீரும். (227)

**(இ-ள்)**

| | |
|---|---|
| பெருங்குமிழ் | சிற்ருமணக்குவேர் |
| சிறுவழுதுணைவேர் | நெருஞ்சிவேர் |
| பேராவாரை | கூவிளைவேர் |
| சிவதைவேர் | பாதிரிவேர் |
| நாகணத்திக்கிழங்கு (நேர்வாளவேர்) | |

இவை வகைக்கு 10 பலமும்,

வெள்ளைப்பூண்டு 20 பலமும்

எடுத்து எல்லாவற்றையும், இடித்து ஒருதூணி (4 மரக்கால்) தண்ணீர்விட்டுக் குறுணியாகக் காய்ச்சி, வடிகட்டி, அதில்

| | |
|---|---|
| இந்துப்பு | பெருங்காயம் |
| கோஷ்டம் | திப்பிலி |
| அரத்தை | சிறுதேக்கு |
| அமுக்கிரா | தேவதாரம் |

இவை வகைக்கு 3 கழஞ்சு எடுத்து அரைத்துக்கரைத்துப்பதத்தில் வடித்து அருந்திவரக் குடல்வாதம், சூலை, ஆமைநோய் முதலியவை தீரும்.

---

## 99. வயிறுவலி குடல்வாதமுதலானதற்கு

மாவிலங்கையுடன் கழலின்வடக்கோடும்
வேரோடிலைவளர்கொழுந்து
மேவவரைத்துக் கரைத்துக் குடித்துமேற்
பத்தியந்தான் மேன்மைநொய்யை
யாவுறு பாலினிற்போட்டு முருங்கையிலை
வுரித்தவுள்ளி யனைத்துங்கூட்டி
வெவித்துப் பகலருந்தில் வயிற்றுநோய்
குடல்வாதம் விட்டுப்போமே (228)

(இ-ள்)

| | |
|---|---|
| மாவிலங்கைவேர் | கழற்சிக்கொடி |

இவைகளின் வடக்கே போகிறவேரும், இவற்றின் கொழுந்து இலைகளையும் அரைத்துத் தண்ணீரில் கலந்து குடிக்கவும். வயிற்றுநோய், குடல்வாதம் இவை தீரும்.

**பத்தியம்:—** அரிசிநொய்யை பசுவின் பாலில்போட்டு, அதனோடு முருங்கையிலை, உரித்த வெள்ளைப்பூண்டு இவைகளையும் சேர்த்து வேகவைத்துப் பகலில் சாப்பிடவும்.

---



## 100. வயிற்றுவலி குடல்வாதத்துக்கு

பாவட்டையிலை கொற்றானிலை வேலிப்
பருத்தியிலை பகரொவ்வொன்று
மேவுபிடிசேர்த்திடித்துப் பானைவாய்
வேடுகட்டி வேட்டின்மீது
பாவுறுபாதியைவைத்தே யொருதேங்காய்
திருகிவைத்துப் பாதியும்மேற்
றாவிவைத்துமேல்மூடி யெரித்துவெந்த
பின்னாற்றித்தொடர்கைக்கொள்ளே (229)

கொண்டதனைப் பிழிந்துள்ளியரைப்பலநீ
டரைத்ததினிற்கூட்டி மீது
கண்டகடுகுட னுழுவையரிசி பொரித்
துப் பொடித்துக் கலக்கத்தூவி
மண்டிடொரு மூன்றுநாளருந்திவரிற்
குடல்வாதம் வயிற்றிரேவு
விண்டிடும்பத்தியங் கைப்புபுளியாகா
பசுவினெய் விரும்புபாலாம் (230)

(இ-ள்)

| | |
|---|---|
| பாவட்டையிலை | முடக்கொற்றானிலை |
| வேலிப்பருத்தியிலை | |

இவை வகைக்கு ஒவ்வொரு பிடிவீதம் சேர்த்து இடித்து, ஒரு பானையில் ஜலம்விட்டு வாயை வேடுகட்டி அதில் ஒரு பாதியை வைத்து அதன்மேல் ஒரு தேங்காயைத் திருவிவைத்து மீதியுள்ளபாதியை அதன்மேல் வைத்து மூடி அடுப்பை யெரித்து வெந்தபிறகு எடுத்து ஆற்றி சாற்றைப் பிழிந்துகொண்டு, வெள்ளைப்பூண்டு ½ பலத்தை அரைத்துக் கலந்து, அதில்

| | |
|---|---|
| கடுகு | உளுவையரிசி (வாலுளுவை) |

இவையிரண்டையும் பொரித்துப் பொடிசெய்துபோட்டு மூன்றுநாள் குடித்துவரக் குடல்வாதம், வயிற்றுவலி முதலியவை தீரும்.

**பத்தியம் :—** கைப்பு, புளிப்புதவிர்த்து பசுவின்பாலும், பசுவின் நெய்யும் சேர்த்துக்கொள்ளலாம்.

---

## 101. குடல்வாதத்துக்கு

கடுகு நாய்க்கடு கோமம் பெருங்காயஞ்
சுக்குள்ளி * கறியிவ்வேழுஞ்
சுடுதழலின் வறுத்திடித்து நல்லெண்ணெயிலிற்றூவித்
தொகுமெருக்கின் படுபாலினுடன்
சதுரக்கள்ளிப்பால் பனைவட்டம்
பரிவாய்ச்சேர்த்தே
யுடனெரித்துக் காலையிற் பாக்களவருந்திற்
குடல்வாத மோடிப்போமே (231)

(இ-ள்)

| | |
|---|---|
| கடுகு | நாய்க்கடுகு |
| ஓமம் | பெருங்காயம் |
| சுக்கு | வெள்ளைப்பூண்டு |
| மிளகு | |

இவை ஏழையும் சேர்த்து சுமாரான அனலிற் வறுத்து, இடித்து, நல்லெண்ணெயில் தூவி, அதனோடு

| | |
|---|---|
| எருக்கம்பால் | சதுரக்கள்ளிப்பால் |
| பனைவட்டம் (கருப்புட்டி) | |

இவைகளையும் சேர்த்து எரித்துத்தினமும் காலையில் பாக்களவு சாப்பிடக் குடல்வாதம் தீரும்.

---

* கறி = மிளகு



## 102. விரைவாதத்துக்கு

ஒருதேங்காய்த்திருகலினோ டெருக்கின்மொட்
டறுநாழி யுப்புநாழி
தருமுழக்கு நல்லெண்ணெய்விட் டினிது
பிசைந்ததை யோர்சட்டியிட்டு
விரவெரியில் வேகவைத் திரண்டுபொட்
டணமாக்கி மேவுகைக்கொண்
டுரியவொரு முக்காணாழிகைக் கொருக்கா
லாய் மாற்றியொற்றுப்போடே (232)

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| எருக்கம்மொட்டு | 6 நாழி | உப்பு | 1 நாழி |
| நல்லெண்ணெய் | 1 உழக்கு | | |

இவைகளோடு ஒரு முற்றின தேங்காயைத் திருகிப்போட்டுப் பிசைந்து ஒரு சட்டியில் வேகவைத்து இரண்டு பொட்டலங்களாகக்கட்டி முக்கால் நாழிகைக் கொருதரம் மாற்றி மாற்றி சூட்டோடு ஒத்தடம் கொடுக்கவும். விரைவாதம் தீரும்.

---

## 103. குடல்வாதத்துக்கு

பதினாறுமரக்காலீர்தனி னூறுபலவுள்ளிப்பருப்புப்
போட்டுக்
கதழெரியிற்காய்ச்சி யொருமுக்குறுணியா யிறுத்துக்
கருதுமுன்னை
யிதமுதவுபெருவாகை பெருங்குமிழ் பாதிரி
யொவ்வொன்றேழ்பலந்தான்
வதியுறுதூணிப்புனலிட் டொருகுறுணியாயெரித்து
வடித்துக்கொள்ளே (233)

கொண்டிரண்டுகடாயமுஞ் சேர்த்திரண்டுபடி
பழங்காடி கூடவிட்டு
மண்டிரண்டுபடி தாதுமாதுளையின் பழச்சாறு
மருவச்சேர்த்து
விண்டதிரிகடுகு திரிபலை யிங்கு சீரகஞ் செவ்விய
மிந்துப்புத்
தண்டருநீள் புளிநறளைக்கிழங் கோமமொடு
தேவதாரங்கூட்டே (234)

கூட்டுமிவை வகையாக வகைக்கொரு
நாற்கழஞ்சுகொண்டு கூறிடும்வெள்
ளாட்டுப்பால் விட்டரைத்துக் கலந்தெரித்து
வடித்துக்கொண் டதனைநாளும்
நாட்டமுறு காலைப்போ தொருகழஞ்சு
கொண்டுவரி னவிலுமாறு
யீட்டமுறு குடல்வாத மியாவும்போம்
பத்தியமுமிசைவாய்க்கொள்ளே. (235)

(இ-ள்)

வெள்ளைப்பூண்டை உரித்த பருப்பு 100 பலத்தில் 16 மரக்கால் தண்ணீர்விட்டு மூன்று மரக்காலாகக் காய்ச்சி இறுத்துக்கொள்ளவும்.

| | |
|---|---|
| முன்னை | பெருவாகை |
| பெருங்குமிழ் | பாதிரி |

இவற்றின் வேர் வகைக்கு 7 பலம் எடுத்து இடித்து 4 மரக்கால் தண்ணீர்விட்டு ஒரு மரக்காலாகக்காய்ச்சி இறுத்து, முன்சொன்ன கஷாயத்தையும் சேர்த்து அதில்

| | |
|---|---|
| பழையகாடி 2 படி | மாதுளம்பழச்சாறு 2 படி |

சேர்த்து, அதனுடன்

| | |
|---|---|
| திரிகடு (சுக்கு, மிளகு, திப்பிலி) | இங்கு (பெருங்காயம்) |
| சீரகம் | சவ்வியம் |



| | |
|---|---|
| இந்துப்பு | புளிநறளைக்கிழங்கு |
| தேவதாரம் | ஓமம் |

இவை வகைக்கு 4 கழஞ்சு எடுத்து வெள்ளாட்டுப்பால்விட்டு அரைத்துக் கலந்து எரித்துப் பதத்தில் இறக்கி தினமும் காலையில் 1 கழஞ்சுவீதம் சாப்பிட்டுப் பத்தியமாய் இருந்துவரக் குடல் வாதம் தீரும்.

---

## 104. குடல்வாதத்துக்கு

வடதிசைபோங் கழல்வேரும் பிடிகொழுந்து
மொருமூன் றுவன்பருப்புங்
கொடுவசம்போ டுள்ளியுஞ்சேர்த்தரைத் திளவெந்
நீர்தனிற் கொளினுஞ் சீந்திற்
றிடவேருந் தண்டுந் தோல்போக்கி நறுக்கிப்
பிழிந்து சேர்ந்தகாடி
யுடனெண்ணெயுழக்கும் விட்டருந்திடினுங்
குடல்வாதமோடிப்போமால் (236)

(இ-ள்)

(1) வடக்குப்பக்கம்போன கழற்கொடிவேரும், அதன் பருப்பு மூன்றும் அதன் கொழுந்து ஒருபிடியும், இவைகளோடு

| | |
|---|---|
| வசம்பு | வெள்ளைப்பூண்டு |

இவைகளை எல்லாம் சேர்த்து அரைத்து இளவெந்நீரில் கரைத்துக்குடிக்கவும்.

(2) சீந்தில் வேர், தண்டு இவைகளை மேல்தோல் சீவி நறுக்கிப்பிழிந்து காடியும் எண்ணெய் 1 உழக்கும் சேர்த்துக் குடிக்கவும். குடல் வாதம் போம்.

---

## 105. குடல்வாதத்துக்கு (வேறு)

*சாறணையின்கொழுந் துத்தாமணி வேளை*
*யாவாரைத்தன்கொழுந்து*
*கூறுகுப்பைமேனி யோவ்வோர்பிடி கூட்டிக்காய்ச்சி*
*யுறுக்கொண்ட நீர்விட்*
*டேறுகடு கிந்துப்பு மஞ்சள் கருஞ்சீரகஞ்*
*சுக்குள்ளி யோமஞ்*
*சாறிடுவெந்தயம் வகைக்குப்பல மரைத்துக்கொளிற்*
*குடல்வாதங்கடீரும் (237)*

(இ-ள்)

| | |
|---|---|
| சாறணையின்கொழுந்து | உத்தாமணி |
| வேளை | ஆவாரைக்கொழுந்து |
| குப்பைமேனி | |

இவை வகைக்கு ஓவ்வொரு பிடிசேர்த்துத் தகுந்த தண்ணீர் விட்டுக் காய்ச்சி கஷாயமாகச் செய்துகொள்ளவும்.

| | |
|---|---|
| கடுகு | இந்துப்பு |
| மஞ்சள் | கருஞ்சீரகம் |
| சுக்கு | வெள்ளைப்பூண்டு |
| ஓமம் | வெந்தயம் |

இவை வகைக்கு 1 பலம் முன் சொன்ன கஷாயம்விட்டு அரைத்துத் தினமும் தின்றுவரவும். குடல்வாதம் தீரும்.

---

## 106. குடல்வாதத்துக்கு

*திரிகடுகு சருக்கரை வெள்ளுள்ளி கருஞ்*
*சீரகம் நற்சீரகங்கள்*
*ஒருவகைக்குப்பலத்தா ளாமணக்கின்விதை*
*பசுவினெய்யொடு வெள்ளாட்டி*



*னரியதயிர் வகைக்குழக்குச் சேர்த்திரவிபுடம்வைத்தே*
*யருந்தியெண்ணெய்*
*கருநெல்லினரிசி தண்ணீர் பத்தியங்கொள்*
*குடல்வாதங் காணாதோடும் (238)*

(இ-ள்)

| | |
|---|---|
| திரிகடு (சுக்கு, மிளகு திப்பிலி) | சர்க்கரை |
| வெள்ளைப்பூண்டு | கருஞ்சீரகம் |
| நற்சீரகம் | |

இவை வகைக்கு 1 பலம் எடுத்துத்தூளாக்கி இதில்

பசுவின் நெய் 1 உழக்கு வெள்ளாட்டுத்தயிர் 1 உழக்கு
ஆமணக்கம் விதை 1 உழக்கு

இவை மூன்றையும் சேர்த்து வெயிலில் வைத்து எடுத்துச் சாப்பிடவும்,

**பத்தியம்:—** கருப்பு நெல்லரிசி (கருங்குருவை)யைச் சமைத்த சோறு வெந்நீருடன் சாப்பிடவும். நல்லெண்ணெய் சேர்த்துக்கொள்ளவும்.

---

## 107. குடல்வாதத்துக்கு

*பெருங்குறிஞ்சாவேரின் றாள்பல முள்ளிப்பருப்பினொடு*
*பேய்மருட்டி*
*யிருங்கொடிவேலிச்சாறு வகைக்குழக்கு*
*நல்லெண்ணெய்யுரியேரண்டந்*
*தருந்தயில நாழியிவை கூட்டியெரித் தொருகழஞ்சு*
*தானருந்தில்*
*நெருங்கண்டவாதமொடு குடல்வாதம் இவைகள்தான்*
*நெருங்கிடாது (239)*

(இ-ள்)

| | |
|---|---|
| பெருகுறிஞ்சாவேர்த்தூள் | 1 பலம் |
| வெள்ளைப்பூண்டு உரித்தபருப்பு | உழக்கு |
| கொடிவேலிச்சாறு | 1 உழக்கு |
| பேய்மருட்டிச்சாறு | 1 உழக்கு |
| நல்லெண்ணெய் | ½ நாழி |
| ஆமணக்கெண்ணெய் | 1 நாழி |

இவை சேர்த்து எரித்து ஒரு கழஞ்சுவீதம் சாப்பிட்டுவர அண்டவாதம், குடல்வாதம் தீரும்.

---

## 108. குடல்வாதத்துக்கு

நந்தியாவட்டையிலை பேய்மருட்டியிலை
சரியாய்நன்குகொண்டு
செந்தழலிற் கடாயம்வைத் திறுத்துழக்குக்
கொண்டதனைத் திகழோர்சட்டி
முந்துறக்காயவைத் துள்ளி மூன்றுகாசெடையினேடு
முன்னர்வீட்டுத்
தந்திட்டுபாதி யெரித்தருந்திற் குடல்வாதந்
தங்கிடாதே (240)

(இ-ள்)

நந்தியாவட்டையிலை பேய்மருட்டியிலை

இவைகளைப்போட்டு செந்தழலில் கஷாயம்வைத்து இறுத்தது 1 உழக்கு எடுத்துக்கொண்டு, ஒரு சட்டியைக்காயவைத்து அதில் வெள்ளைப்பூண்டு 3 காசெடை போட்டு அதில் கஷாயத்தைவிட்டுப் பாதியாகக் காய்ச்சிச் சாப்பிடக் குடல் வாதம் தீரும்.



## 109. குடல்வாதம்

முடக்கொத்தான் கொழுந்தோடு நீர்ப்பனங்கிழங்கினுறு
கொழுந்தினிது மொழிவெண்காரந்
திடச்சிற்ருமணக்குநெய்யினிற் பொரித்துத்தினிற்
குடல்வாதந் தீர்ந்தோடுங்
குடப்பாலுஞ்சோறும் பத்தியங் கண்டங்
கத்திரிவேர் கூறிடுள்ளி
யிடித்துப்பாக்களவரைத்து வெள்ளாட்டுப்பாலிற்
கொண்டிடினுமேகும் (241)

(இ-ள்)

முடக்கொத்தான்கொழுந்து நீர்ப்பனங்கொழுந்து
வெண்காரம்

இவைகளை சிற்ருமணக்கெண்ணெயிற் பொரித்துத் தின்னக் குடல்வாதம் தீரும்.

**பத்தியம் :—** பாலும் சாதமும் சாப்பிடவும்.

கண்டங்கத்திரிவேர் வெள்ளைப்பூண்டு

இவைகளை இடித்து பாக்களவு அரைத்து வெள்ளாட்டுப்பாலில் சாப்பிடவும் குடல்வாதம் தீரும்.

---

## 110. குடல்பிரட்டு குடல்வாதத்துக்கு

பாக்களவு வீழிவேரரைத்ததனை
வெந்நீர்பருகினுலும்
பாக்களவு வெட்பாலையிலையரைத்து
வெந்நீர்பருகினுலும்

பாக்களவு வெட்பாலைவேரரைத்
தாட்டுப்பாலிற் பருகினுலுங்
தேக்கிடுமுத்தினமதனிற் குடற்பிரட்டுக்
குடல்வாதந் தீருந்திண்ணம் (242)

(இ-ள்)

வீழிவேரை அரைத்து ஒரு பாக்களவு சாப்பிட்டு வெந்நீர் சாப்பிட்டாலும்,

வெட்பாலை இலையை அரைத்துச் சாப்பிட்டு வெந்நீர் பருகினுலும்,

வெட்பாலைவேரை அரைத்துப் பாக்களவு ஆட்டுப்பாலில் சாப்பிட்டாலும் குடல்பிரட்டு, குடல்வாதம் இவை 3 நாட்களில் கட்டாயம் தீரும்.

குறிப்பு:— செய்யுள் 243 முதல் 258 வரையில் பலவித வாதரோகங்களின் குணங்கள் கூறப்படுகின்றன. அவை வாத ரோககுறி குணங்களை விளக்கும் முகவுரையில் எடுத்து எழுதப்பட்டிருக்கின்றன.

---

## 111. விரைவாதத்துக்கு

தேவதாரத்திெனுடு மஞ்சள் சமனுகத்தூள்
திறமாச்செய்து
மேவதனைக் கோசலத்தின் மூன்றுகாசெடை
யருந்தில் வீக்கத்தோடு
தாவிவிரையேறுவது மிறங்குவதும்போ
மிளகு தகைசெய்யுள்ளி
பாவுறுவெற்றிலைக்காம்பு சமனரைத் தெண்ணெயின்
முந்நாள்பருகிலும் போம். (259)



(இ-ள்)

1. தேவதாரம் மஞ்சள்

இவைகளை சமனுகஎடுத்துத் தூள் செய்து மூன்றுகாசெடை கோமூத்திரத்தில் சாப்பிட விரை வீக்கம், விரையேறி யிறங்கு வது முதலியவை தீரும்.

2. மிளகு வெள்ளைப்பூண்டு
வெற்றிலைக்காம்பு

இவைகளைச் சமனுகச்சேர்த்து எண்ணெயில் 3 நாள் சாப்பிடவும் மேற் சொன்ன வியாதிகள் தீரும்.

---

## 112. அண்டவாதத்துக்கு

முடக்கொத்தான்கொழுந் துள்ளி கழற்பருப்பு
வகையொன்றுமுக்கழஞ்சு
கொடுத்திருநாழிப்புனலி லுழக்காகக்காய்ச்சி
யதைக்குடித்திட்டாலும்
அடுத்தமுருக்கிலைச்சாறு மாமணக்கின்றைலமு
நேராகக்கூட்டிக் குடித்திடினு
நாட்பட்ட வண்டவாதஞ் சுருங்குங்
கொடுத்துப்பாரே (260)

(இ-ள்)

1. முடக்கொத்தான்கொழுந்து வெள்ளைப்பூண்டுப்பருப்பு
கழற்சிப்பருப்பு

இவ்வை வகைக்கு 3 கழஞ்சு வீதம் 2 நாழி தண்ணீரில் போட்டு உழக்காகக் காய்ச்சி அதைக்குடித்தாலும் (2) முருங்கை யிலைச்சாறும் ஆமணக்கெண்ணெயும் சேர்த்துக் குடித்தாலும் நாள்பட்ட அண்டவாதம் சுருங்கிப்போகும்.

---

## 113. அண்டவாதத்துக்கு

உயர்முருக்கின்பட்டையினை முள்ளகற்றி யிடித்துச்
சாறுழக்குக்கேரண்டத்
தயிலமதிற்பாதிவிட்டுக் காவிக்கல் வராகனெடை
தானொன்றோடே
யியலுமரைவராகனெடை யிந்துப்புத்தூளுஞ்
சேர்த்திசையு முந்நாள்
நியமமதாய்ப் புளிகைப்புத் தவிர்த்தருந்திவரி
லண்டநீங்கிப்போமால் (261)

**(இ-ள்)**

முள்முருங்கைப்பட்டையை முள்ளை அகற்றிவிட்டு இடித்து ஒரு உழக்குச்சாறு எடுத்து அரை உழக்கு நல்லெண்ணெயில் விட்டு,

காவிக்கல் 1 வராகனெடை இந்துப்பு ½ வராகனெடை

இவைகளைத் தூள் செய்துபோட்டு 3 நாள் புளிப்பு, கைப்புத் தவிர்த்துப் பத்தியமாக இருந்து சாப்பிட அண்டவாதம் தீரும்.

---

## 114. அண்டவாதம் வீக்கஞ் சூலைக்கு

கோழிமுட்டைக்கரு வொருசட்டியிலூற்றிக்
கழற்கொடியின்கொழுந் தரைத்து
வாழிகழற்காயளவு சேர்த் தினிதாய்ப்பொரித்
தருந்திவரி லோர்முந்நாள்
சூழுமிருபோது மண்டவாதம் வீக்கம்
பக்கசூலை தீரும்
வீழுறுகைப்புட னுப்புப் புளி யகன்றிடிளங்கீரை
மிளகுகூட்டே (262)



**(இ-ள்)**

கோழிமுட்டை கொண்டுவந்து, உடைத்து ஒரு சட்டியில் ஊற்றி, கழற்கொடியின் கொழுந்தை அரைத்து அந்தவிழுதில் ஒரு கழற்சிக்காயளவு சேர்த்துப் பொரித்துக் காலையும், மாலையும் 3 நாள் சாப்பிட அண்டவாதம், வீக்கம், பக்கசூலை முதலியவை தீரும்.

பத்தியம் :— உப்பு, புளிதவிர்த்து, இளங்கீரை, மிளகுடன், வெந்நீர்சாதம் சாப்பிடவும்.

---

## 115. அண்டவாதத்துக்கு

கூடுகழற்கொழுந்து முடக்கொத்தான்
கோழியாவரையின்கொழுந் திம்மூன்று
மீடுறுபச்சரிசியுஞ் சேர்த்தரைத்து மூன்றடைதட்டி
யிரவுதன்னி
னீடுறுமவ்வண்டமதின் மூன்றுநாள் கட்டிவரி
னீங்கிப்போகும்
கோடுறுமாவிலங்கையிலை தன்னொடு பட்டையும்
வறுத்துக்கூட்டி யொற்றே (263)

**(இ-ள்)**

கழற்சிக்கொடிக்கொழுந்து முடக்கொத்தான்கொழுந்து
கோழியாவரைக்கொழுந்து

இம்மூன்று கொழுந்துகளோடு, பச்சரிசியுஞ் சேர்த்து அரைத்து மூன்று அடைகளாகத்தட்டி இரவில் அந்த அண்டத்தில் கட்டி விடியற்காலையில் அவிழ்த்துவிடவும். இப்படி 3 நாட்கள் கட்டவும். மாவிலங்கையிலையும், பட்டையும் வறுத்து ஒற்றிடவும். அண்டவாதம் குணமாகும்.

---

## 116. அண்டவாதத்துக்கு

நிழற்றருதேற்றிலை ப்பட்டை சுக்கு மிளகிருநாழி
நீரிற்போட்டே
யுழக்காகக்காய்ச்சியிறுத் தம்மிளகுஞ் சுக்கு
மரைத்துடன்கலந்து
பழிப்பறவேயருந்தி யொருநாளினுக்கு மூன்றுதரம்
பரிந்தேயொற்றும்
அழுத்தமுற வொற்றிவரி லண்டவாதந்தீரு
மறிந்துசெய்யே (264)

(இ-ள்)

தேற்றான் இலை, அதன் பட்டை, சுக்கு, மிளகு இவைகளை 2 நாழிதண்ணீரில் போட்டு உழக்காகக் காய்ச்சி, இறுத்துக் கொண்டு, அதில் இருக்கும் மிளகையும், சுக்கையும் அரைத்து அதில் கலந்துசாப்பிட்டு, அத்தேற்றான் இலை, பட்டைகொண்டு ஒரு நாளைக்கு மூன்றுதரம் நன்றாக ஒத்தடம் கொடுத்துவர அண்டவாதந்தீரும்.

---

## 117. அண்டவாதத்துக்கு

ஓதிடுகையாந்தகரைவிதை யரைத்துப்பூசி
யதையுள்ளினுக்குஞ்
சீதநீர்தனிற்கொளினு மாதொண்டைவே
ரரைத்துத்திறமாய்ப்பூசி
யேதமறவுட்கொளினுஞ் சாறணை
மூக்கறட்டைவேரிரண்டும் பாலிற்
றீதிலெலுமிச்சங்காயள வரைத்துக் குடித்திடினும்
திகழண்டம்போம் (265)



(இ-ள்)

கையாந்தகரை விதையை அரைத்து மேலேபூசி, உள்ளுக்கும் சாப்பிட்டுக் குளிர்ந்த தண்ணீர் சாப்பிட்டாலும், ஆதண்டைவேரை அரைத்துப்பூசி உள்ளுக்கும் சாப்பிட்டாலும், சாறணைவேர், மூக்கரட்டைவேர் இவை யிரண்டையும் அரைத்து எலுமிச்சங்காயளவு பாலில் கரைத்துக் குடித்தாலும், அண்டவாதம்தீரும்.

---

## 118. ஒருபுறத்தண்டவாதத்துக்கு

(பழைய பாட்டு)

வருநொச்சி முடக்கொத்தா னமுக்கிரா வூமத்தை
மண்டியமுருங்கையுடனே
வாடாதகள்ளி யுத்தாமணி யெருக்கம்வேர்
வான்மயிலடிக்குருந்து
தருவேர்கொழுந்தெலாஞ் சரியாகவறுபலந்
தண்ணீருமுக்குறுணிதான்
தாழாதிடித்திட்டு நாலொன்றதாய் வெந்த
தண்கடாயந் தன்னிலே
கருநிறக்கற்கடசிங்கி கம்பிப்பிசின்
கடியபூதவிருக்ஷங்
கண்டசுக்கொடு வசம்பொடு காந்தமுங் கனிசத்தின்
முக்கழஞ்சா
யொருமித்தரைத்து முந்நாழியைந்தெண்ணெயி
லுயர்தழலெரித்தொற்றவே
யொருபுறத்தண்டவாதஞ் சூலை குடல்வாத
மொருநாளிலேதீருமே (266)

(இ-ள்)

| | |
|---|---|
| நொச்சி | முடக்கொத்தான் |
| அமுக்கிரா | ஊமத்தை |
| முருங்கை | கள்ளி |
| உத்தாமணி | எருக்கு |
| மயிலடிக்குருந்து | |

இவைகளின் வேரும், கொழுந்தும் வகைக்கு 6 பலம் வீதம் எடுத்து இடித்துப்போட்டு 3 குறுணி (3 மரக்கால்) தண்ணீர் விட்டு நாலிலொன்ருய்க் காய்ச்சி யிறுத்துக்கொண்ட கஷாயத்தில்,

| | |
|---|---|
| கருப்புக்கற்கடசிங்கி | கம்பிப்பிசின் |
| பெருவாகைப்பட்டை | சுக்கு |
| வசம்பு | காந்தம் |

இவை வகைக்கு 3 கழஞ்சு வீதம் எடுத்துச் சேர்த்தரைத்துப் போட்டு, அதில் ஐந்தெண்ணெய் (நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய், இலுப்பெண்ணெய் புங்கெண்ணெய், ஆமணக்கெண்ணெய்) 3 நாழி விட்டு எரித்துப் பதத்தில் வடித்து ஒத்தடம் கொடுக்க, ஒருபுறத்தண்டவாதம், சூலை, குடல் வாதம் முதலியவை ஒரே நாளில் தீரும்.

## 119. அண்டவாதத்துக்கு

சாறணைவேர் கழற்பருப்பி னுடன்கொழுந்து
முடக்கொத்தான் றன்கொழுந்து
கூறுவசம் புள்ளியிவை யரைத்திட் டாமணக்கெண்ணெய்
குலவுநாழி
தேறவிட்டு வடக்கயிறுஞ் சுட்டுப்போட் டெரித்தொரு
காசெடையுட்கொண்டு
வீறிடுவீக்கந் தனிலும்பூசி லண்டவாத
முடன்விலகிப்போகும் (267)



(இ-ள்)

| | |
|---|---|
| சாறணைவேர் | கழற்சிப்பருப்பு, கொழுந்து |
| முடக்கொத்தான் கொழுந்து | வசம்பு |
| வெள்ளைப்பூண்டு | |

இவைகளைச் சேர்த்தரைத்து ஆமணக்கெண்ணெய் 1 நாழி விட்டு வடக்கயிறையும் (எருமைத்தோல்) சுட்டு அதில் போட்டு எரித்துப் பதத்தில் வடித்து, ஒரு காசெடை வீதம் உள்ளுக்குச் சாப்பிட்டு வீக்கத்தின் மேலும் பூசிவர அண்டவாதம் தீரும்.

## 120. அண்டவாதத்துக்கு

வெள்ளுள்ளித் திரிப்பிஞெடு வெண்காய
முடக்கொத்தான் மென்கொழுந்து
முள்ளுறுதண் கழற்கொழுந் தின்னவைவகைக்குப்
பிடியொருமும்மூன்று வேவித்
தெள்ளரு மாமணக்குநெய் தனிற்பிசைந்து
நீடிரவியெதிரெ வைத்துக்
கொள்ளுவொருகடியள வோர்வெற்றிலையின்
முக்காலை கூறண்டம்போம். (268)

(இ-ள்)

| | |
|---|---|
| வெள்ளைப்பூண்டுத்திரி | வெங்காயம் |
| முடக்கொத்தான் கொழுந்து | கழற்சிக்கொழுந்து |

இவை வகைக்கு 3 பிடி தனித்தனியே வேகவைத்து 1 உரி ஆமணக்கெண்ணெயிற் பிசைந்து வெயிலில் வைத்து 3 நாள் ஒரு வெருகடிப் பிரமாணம் வீதம் வெற்றிலையில்வைத்து, காலையில் சாப்பிட்டு, வீக்கத்தின் மேலும்பூச அண்டவாதம் தீரும்.

## 121. அண்டவாதத்துக்கு

நல்லெண்ணெயொடு சங்கங்குப்பிச்சா
    றிவ்விரண்டும் நாழி நாழி
யொல்லும்வகை கலந்திரண்டு பொழுதுமொரு
    மூன்றுநாளுக் கருந்து
வல்லுறுபத்திய முப்புமுதலாகா நாலாநாள்
    வறுத்துக்கூட்டுச்
சொல்லவருமேழாநா ளாமணக்கெண்ணெயின்மூழ்கு
    தொடரண்டம்போம் (269)

(இ-ள்)

நல்லெண்ணெய் 1 நாழி சங்கங்குப்பிச்சாறு 1 நாழி இவையிரண்டையும் கலந்திரண்டு பொழுதும் 3 நாள் சாப்பிடவும்.

பத்தியம்:— மருந்து சாப்பிடும் 3 நாளும், அதற்குப்பிறகு 3 நாளும் அதாவது 6 நாள்[1] உப்பு சேர்த்துக்கொள்ளாமல் வெந்நீருஞ் சாதமும் சாப்பிடவும். ஏழாம் நாள் விளக்கெண்ணெய் தேய்த்துக்கொண்டு தலைமுழுகி, உப்பை வறுத்துச் சேர்த்துக் கொள்ளவும். வெங்காயம், அகத்திக்கீரை, பச்சை மீன் இவை சேர்த்துக் கொள்ளக்கூடாது.[2]

---

1. செய்யுளில் 3 நாள் பத்தியம் என்று கண்டிருந்த போதிலும் உரைச்சுவடியில் ஆறு நாள் பத்தியம் என்று கண்டிருக்கிறது. அதன்படி இங்கு இவ்வுரை எழுதப்பட்டிருக்கிறது.

2. இந்த விவரம் உரைச்சுவடியில் காணப்படுகிறது.



## 122. அண்டவாதத்துக்கு

ஓதுகழற்பருப்பொன்று பொடிசெய்து
    பனைவெல்லமொருபலத்திற்
றீதகலநடுவைத்து மூடிக்காலையின்
    மூன்றுதினந்தின்றாலும்
மாதரணிமஞ்சளொடு தேவதாரத்து
    மும்மூவராகன்றானை
யாதரவாய்க் கோசலத்திற்கொளினும்
    வெகுநாட்பட்ட வண்டமும்போம் (270)

(இ-ள்)

(1) ஒரு கழற்சிப்பருப்பைப் பொடிசெய்து பனைவெல்லம் ஒரு பலத்திற்குள் வைத்து மூடிக் காலைவேளையில் 3 நாட்கள் சாப்பிடவும். அண்டவாதம் தீரும். இது கைகண்ட முறை.

பத்தியம்:— இச்சாபத்தியம், புளிகூடாது.[1]

(2) மஞ்சள், தேவதாரம் இவை வகைக்கு 3 வராகனெடை எடுத்துப் பொடி செய்து கோமூத்திரத்தில் சாப்பிட வெகுநாள்பட்ட அண்டவாதம் தீரும்.

## 123. அண்டவாதத்துக்கு

இரண்டுபணவெடைகாய மொருதலைவெள்ளுள்ளிநான்
    கிவையரைத்திட்
டிருங்கலத்திலப்பி விளக்கதின் மைபோல்வைத்
    துருட்டியெடுத்துத்தின்று
நெருங்கிடுவீக்கத் தாடைபோட்டொருமுத்தினம்
    வெந்நீர்நேரேவிட்டு
மறுங்குறுநாயுருவியிலை யரைத்துப்பூசிடி
    லண்டமாறிப்போமே (271)

---

1. இந்த விவரம் உரைச்சுவடியில் காணப்படுகிறது.

(இ-ள்)

(1) பெருங்காயம் 2 பனவெடை, ஒருதலைப்பூண்டு 4 இவைகளை மைபோல் அரைத்து ஒரு கலத்தின்மேலே அப்பி விளக்கிலே மைவைப்பதுபோல வைத்து எடுத்து உருட்டி விழுங்கவும். வீக்கத்தின்மேல் துணியை மடித்துப்போட்டு மேலே வெந்நீர்விடவும். 3 நாள் கைப்பு, புளிப்பு தள்ளவும். (2) நாயுருவியிலையை அரைத்துப் பூசிவரவும், அண்டவாதம் தீரும்.

குறிப்பு :— 10 பனவிடை = 1 விராகனெடை
10 விராகனெடை = 1 பலம்.

## 124. விரைவாதம், அண்டவாதவீக்கத்துக்கு

கருகவருத்திட்ட கழற்பருப் பிருப்பைப்பிண்ணாக்குக்
கருதலுற்ற
வீரவுசவுக்காரம் வகைக்கோர்பலங்கொண்
டிளவெந்நீர்விட்டரைத்துத்
தருகொட்டைப்பாக்களவு வெல்லத்திற்றினில்
விரைவாதந்தான்றீரும்
பரவுகழலிலை வருத்துக்கட்டி
லண்டவீக்கமுடன்பதுங்கிப்போகும், (272)

(இ-ன்)

| | |
|---|---|
| கழற்சிப்பருப்பை கருகவருத்தது | 1 பலம் |
| இலுப்பைப் புண்ணாக்கு | 1 பலம் |
| சவுக்காரம் | 1 பலம் |

இவைகளை இளஞ்சூடுள்ள வெந்நீர் விட்டரைத்து ஒரு கொட்டைப்பாக்களவு வெல்லத்தில் சாப்பிடவும். கழற்கொடி இலையை வறுத்து வீக்கத்தின் மேல் கட்டவும். அண்டவாதம் தீரும்.



## 125. விரைவாதத்துக்கு

ஒருபிடிநன்முருங்கையிலை வெந்தயமாழாக்கு
வெள்ளுள்ளியின்றன்
விரவுகழற்பருப் பிரண்டுசுக்கு மிளகி
வையரைத்து விளங்குநீரிற்
பரிவினொடுகரைத்தெரித்துக் குடிக்கில்
விரைவாதமுடன்பறந்துபோகு
முரைதருமின்னது
தஞ்சைசரபோசிமன்னவர்தம்முறையதாமே (273)

(இ-ள்)

முருங்கையிலை 1 பிடி
வெந்தயம் 1 ஆழாக்கு
வெள்ளைப்பூண்டுப்
[பருப்பு 1 ஆழாக்கு
கழற்சிப்பருப்பு 2
சுக்கு
மிளகு

இவைகளைச்சேர்த்து அரைத்துத் தண்ணீரில் கரைத்துக் காய்ச்சிக் குடிக்க விரைவாதம் தீரும்.

## 126. தண்டுவாதத்துக்கு

வனமுருங்கையிலையின்றா ளோமத்தாள்
நொச்சியிலைவகுத்திடுநற்றா
ளினவுளுத்தமா விந்நான்கும் வகைக்கிருசேர்கொண்
டினியவெல்லந்
தனைப்பாகுசெய்துபோட்டுக் கிளறிக்கொண்
டெலுமிச்சங்காய்மானம்
தினிற் றண்டுவாதந்தீர்ந்திடுஞ்
சிலநாளிற்கி ழவன்சிறுவனுவன் (274)

(இ-ள்)

காட்டுமுருங்கையிலைத்தூள்செய்தது — ஓமத்தூள்
நொச்சியிலையை இடித்ததூள் — உளுத்தமா

இவை வகைக்கு 2 சேர் வீதம் எடுத்து, வெல்லத்தைப் பாகு செய்து கொண்டு அதில் இந்தத் தூள்களைப் போட்டுக்கிளறி எலுமிச்சங்காயளவு தின்று வரவும். தண்டுவாதம் தீர்ந்து கிழவனும் சிறுவனுவான்.

---

## 127. ஆனந்தவாதம், விரைவாதத்துக்கு

ஆவாரையிலை சிறுகவரிந்தெடுத்து
    நாழிநீரதில்வேவித்து
மேவுபுனல்வற்றியபி னுழாக்காமணக்குநெய்
    விட்டுப்பின்னுந்
தாவுமொருகோழிமுட்டை யுடைத்துவிட்டு
    மத்தித்துத்தகவொற்றிட்டா
லோவிலானந்தவாயுவுடன் விரைவாதமு
    மஞ்சியுடனோடிப்போமே (275)

(இ-ள்)

ஆவாரையிலையைச் சிறுக அரிந்து, 1 நாழி தண்ணீரில் வேகவைத்து தண்ணீர்வற்றியபின் 1 ஆழாக்கு ஆமணக்கெண்ணெய் விட்டு, ஒரு கோழிமுட்டையை உடைத்து அதில் விட்டு மத்தித்து, ஒத்தடம் கொடுக்க ஆனந்த வாதம், விரை வாதம் முதலியவை தீரும்.

---



## 128. முழங்காற்சுரோணிதவாதத்துக்கு

பகரறுகஞ்சாறு நீர்த்தாளிச்சா றெவ்வொன்றுபடிநான்
    கெண்ணெய்
தகவிரண்டுவிரண்டுபடி கலந்துகுன்றி யிலாமிச்சை
    நீர்த்தாளி வேர்கள்
வகையினுக்கோரரைப்பல மிட்டெரித்தொருமண்டல
    மருந்திவரமுழங்கா
லுகவீக்கத்திலும்பூசி லுற்றசுரோணிதவாத
    முற்றிராது (276)

(இ-ள்)

அறுகஞ்சாறு 4 படி — நீர்த்தாளிச்சாறு 4 படி

இவற்றுடன் எண்ணெய் 2 படி கலந்து, இதனுடன்

குன்றிமணிவேர் — இலாமிச்சம்வேர்
நீர்த்தாளிவேர்

இவை வகைக்கு $\frac{1}{2}$ பலம் வீதம் அரைத்துச் சேர்த்து எரித்துப் பதத்தில் வடித்து ஒரு மண்டலம் உள்ளுக்கும் சாப்பிட்டு முழங்கால் வீக்கத்திலும் பூசிவர சுரோணிதவாதம் தீரும். [1]அந்திக்கு ஆடாதொடையிலை, பொற்கொன்றைவேர், சுக்கு இவைகளைக் கஷாயமிட்டுக் கொடுத்துவரவும்.

---

## 129. சுரோணிதவாதத்தின்குணமும், மருந்தும்

ஓதுசுரோணிதவாதங் கடுப்புவலியுட
    னெலும்புள்ளூறக்குடைந்து
தீதுசெயு மின்னதற்கு மிளகுபழம் பதக்குநீர்
    சேரப்போட்டு

1. இந்த விவரம் உரைச்சுவடியில் காணப்படுகிறது.

மீதெரியிலெரித்ததனை யொருநாழியாய்ப்பிழிந்து
    விளம்புமாஞ்சில்
கோதறுசந்தன மருதமஞ்சளட்டி லரத்தை
    யமுக்கிராவேர் கோட்டம் (277)

கோட்டமகில் கச்சோல நறும்பிசின்
    குருந்தம்பிசினொடு குளமென்மாஞ்சி
லீட்டமுறு முந்திரிகைப்பழந் தேவதாரமுட
    னிசையுங் குப்பை
காட்டுமிவை வகைக்கொருமா மாங்கிசத்தின்
    பேதியரைக்கழஞ்சுதானு
மாட்டமுறு நன்னாரிவேர் பலமூன்
    றிவையெல்லா மரைத்துக்கொள் (278)

அரைத்ததனை மூவுழக்கெண்ணெயினுடனே நாழிப்பால்
    தனிற்கூட்டிக்
கரைத்தொரு முந்நாளெரித்து வடித்தொரு
    முக்காசெடைதான் காலைப்போதி
லருந்தியுற வெதுப்பியருந்திடவேண்டு மருந்திவரி
    லனையவாதந்
திரைகடல் சூழுலகத்துத் தங்காதிம்முறையினை
    நீதெளிவாய்ச்செய்யே (279)

(இ-ள்)

**சுரோணிதவாதத்தின் குணம்:—** எலும்புக்குள்ளே உள்ளூறக் குடையும். கடுப்புவலி உண்டாகும். தலைகனக்கும்.

**மருந்து:—** ஒரு நாழி மிளகுப்பழத்தைப் பிசைந்து பதக்குத் தண்ணீர்விட்டு எரித்து ஒரு நாழியாக இறுத்துக்கொண்டு, அதனுடன்

| | |
|---|---|
| சடாமாஞ்சில் | சந்தனம் |
| மருதம் | மஞ்சள் |
| அட்டில் (செஞ்சந்தனம்) | அரத்தை |
| அமுக்கிராவேர் | கோஷ்டம் |



| | |
|---|---|
| குளவிந்தமஞ்சள் | தேவதாரம் |
| குருந்தம்பிசின் | முந்திரிப்பழம் |
| கச்சோலம் | அகில் |
| சதகுப்பை | நறும்பிசின் |

இவை வகைக்கு அரை விராகனிடை வீதம் சேர்த்து, இதனோடு

மாங்கிஷபேதி ½ கழஞ்சு நன்னாரிவேர் 3 பலம்

இவைகளை யெல்லாம் சேர்த்து அரைத்துக் கரைத்து, 3 உழக்கு எண்ணெயும் 1 நாழிப்பாலும் சேர்த்து 3 நாள் எரித்துப் பதத்தில் வடித்து 3 காசெடை வீதம் எடுத்துச் சூடுகாட்டிக் காலை வேளையில் சாப்பிட்டுவர சுரோணிதவாதம் தீரும். இது கைகண்ட முறை.

---

## 130. பெருங்கால்வாதம்

வட்டவட்டமாகி யாங்காங்கெரிவுந்தினவு
    முற்றுவண்ணம் வெவ்வே
றொட்டுமிந்தப் பெருங்காலின்வியாதி யசாத்தியமாகு
    முயர்கறட்டைத்
தொட்டுமேலிரண்டு விரற்கிடையளவு
    கீழ்நரம்புதோன்றக்காணிற்
றிட்டமாயதினி ரத்தம்வாங்கிவிட்டு
    மருந்தும்பின்செய்யலாகும் (280)

ஆமணக்குநெய்யுங் கோமூத்திரமுஞ்
    சரிகூட்டியருந்திக்கொண்டு
காமுறுகோமூத்திரத்தி லனஞ்சமைத்து
    மண்டலத்தின் † காறுண்டாலு

† காறு = அளவு

தேமருவுசிவதைவேருடன் கடுக்காய் கோசலத்திற்
சிலநாள்கொண்டு
கோமடிதந்திடுபாலிற் சிலநாள்கொண்டாலு
முடன்குணமாம்பாரே (281)

(இ-ள்)

குணம்:—தினவும் எரிவும் இருக்கும். ஆங்காங்கே வட்டவட்டமாக நானுவிதமாக இருக்கும். இது நாட்பட்டால் அசாத்தியம். பெருங்கால் கறட்டுக்கு மேல் இரண்டு விரற்கிடையளவு கீழ் நரம்பு தெரிந்தால், அட்டையை அதன்மேல் விட்டாவது, அறுத்தாவது ரத்தத்தை வெளியேற்றவும், பிறகு மருந்து சாப்பிடவும்.

மருந்து:— (1) ஆமணக்கெண்ணெயும், கோமூத்திரமும் சரியளவு சேர்த்துச் சாப்பிட்டு, கோமூத்திரத்தில் சாதம் சமைத்து ஒரு மண்டலம் சாப்பிட்டுவரவும்.

(2) சிவதைவேரும் கடுக்காயும் கோமூத்திரத்தில் சில நாளும், பசுவின்பாலில் சில நாளும் சாப்பிடக்குணமாகும்.

## 131. பெருங்காலுக்கு

பார்த்திடுவெண்பூத்தரு முக்கால்வேளைசமூலமுந்தான்
பகுத்திடுங்கோ
மூத்திரத்தி லரைத்ததன்மேற்பூசி டிதுவன்றியே
முதிர்கடுக்காய்
கூர்த்ததிரிகடுகு *விளங்கந் தேவதார
மிவைகொடுவேலிச்சாற்
றிலரைத்துமண்டல மக்காலினிற்பூசிடு
குணமாமிசைவாய்ச்செய்யே (282)

* விளங்கம் = வாய்விளங்கம்



(இ-ள்)

(1) வெள்ளைப்பூ பூக்கிற முக்காவேளை சமூலத்தை கோமூத்திரம் விட்டரைத்து கால்லின் மேல் ஒரு மண்டலம் பூசிவரவும்.

(2) கடுக்காய், திரிகடு (சுக்கு, மிளகு, திப்பிலி), வாயுவிளங்கம், தேவதாரம் இவைகளை கொடிவேலிச்சாறைவிட்டு அரைத்து ஒருமண்டலம் அந்தக்காலில் பூசிவரக்குணமாகும்.

## 132. அறணைபிரண்டி கைகால் சூம்பிப்போன வாதத்துக்கு

நாலுபடிநீரி னண்டு நானூறுகொண்டிடித்து
நண்ணப்போட்டு
மேலிரண்டுபடியாகக் காய்ச்சியிறுத்
ததிலெண்ணெய்மிகுதேங்காய்நெய்
யேலுறுபுன்குதவிடுநெய் படியோவ்வொன்றுட
னரணையிரண்டுங் கூட்டிக்
கோலவெரித்துப் பூசிப்பிடிக்கின் மெலிந்திட்ட
கைகால்குணமாம்நன்றாய் (283)

(இ-ள்)

400 நண்டுகளை இடித்து 4 படி தண்ணீரில் போட்டு 2 படியாய்க்காய்ச்சி இறுத்து அதில், தேங்காயெண்ணெய் 1 படி, புங்கெண்ணெய் 1 படி சேர்த்து, அறணை இரண்டு சேர்த்து எரித்துப்பூசிப் பிடிக்க அறணைபிரண்டி கை கால் சூம்பிப்போன வாதம் குணமாகும்.

## 133. சந்துவாத முதலானதற்கு சிநேக பொட்டணம்

நொச்சி தழுதாழையின் றன்கொழுந்துட
னுமணக்கினிலை நவைலூமத்தம்
பச்சிலை சிற்றுமணக்கு மகிழ்வேம்பு புன்னைவிதைப்
பருத்திக்கொட்டை
யச்சமுத்திராப்பழந் தேங்காய்த்திருகல்
கோழியாவாரையதின்வித் தெல்லாங்
காச்சிடுவேப்பெண்ணெய் வறுத்தொற்று சந்துவாத
முதற்காணுருது (284)

(இ-ள்)

| | |
|---|---|
| நொச்சிக்கொழுந்து | தழுதாழைக்கொழுந்து |
| ஆமணக்கிலை | ஊமத்தையிலை |
| சிற்றுமணக்கம்விதை | புன்னைவிதை |
| பருத்திக்கொட்டை | மகிழம்விதை |
| வேப்பங்கொட்டை | சமுத்திராப்பழம் |
| தேங்காய்த்திருகல் | கோழியாவரைவிதை |

இவைகளை யெல்லாம் துவைத்து வைத்துப் பொட்டணம் கட்டி அதன்மேல் காய்ச்சிய வேப்பெண்ணெய் வார்த்து ஒற்றினுல் சந்துவாத முதலானதும் அற்புதவாதமும் முதலியவை தீரும்.

## 134. குதிகால்வாதத்துக்கு

குதிகால்புண்போல்வலிக்கு நிலத்தில்வைக்கவொண்ணுது
குதிகால்வாதம்
இதுதீரும்வகைசொல்வேன் மண்வெட்டி தழற்காச்சி
யெடுத்துவைத்துப்



புதுவேலிப்பருத்திச் சாரதிலூற்றிக்
காலதினும்பொருந்தப்பூசி
மிதியவிடுமூன்றுமுறை யாவிபடமூன்றுநாள்
வியாதிதீரும் (285)

(இ-ள்)

குணம் :— குதிகாலில் புண்போல் வலிக்கும். பூமியில் கால் வைக்க முடியாது. இதற்கு குதிகால் வாதம் என்றுபெயர்.

மருந்து :— மண்வெட்டியைத் தழலில் காய்ச்சி எடுத்துவைத்துக்கொண்டு, வேலிப்பருத்தியைத் துவைத்துச் சாறுபிழிந்து அந்தச் சாற்றைக்காய்ச்சிய மண்வெட்டியிலே விட்டால் அது கொதிக்கும். அப்போது குதிகாலில் அந்தச்சாற்றைத் தடவி மண்வெட்டிமேல் ஆவி பிடிக்கவேண்டும். பிறகு கொஞ்சம் ஆறிய பிறகு மிதியிடவும். இப்படி 3 முறைகாயப்போட்டு 3 முறை ஆவிபிடிக்கவும். இப்படி 3 நாள் செய்யவும்.

## 135. குதிகால் வாதத்துக்கு

எருக்கம்பா லுழக்கினுடன் கோழிமுட்டையிரண்டு
சேர்த்திசையப்பூசு
பெருத்திடெருக்கிலையிடித்து வறுத்தொற்று
நன்ருகப்பின்னுநீடு
கரத்துவிட்டை யைங்தொடு நெய்யுழக்கிட்டு
வறுத்துக்கட்டுநின்று
வருத்தஞ்செய் குதிகாலின்வாதந் தீர்ந்திடு
மிதுவும்வாய்மையாமே (286)

(இ-ள்)

(1) எருக்கம்பால் 1 உழக்குடன் கோழிமுட்டை இரண்டை உடைத்துச் சேர்த்துக் குதியில் பூசவும். பிறகுக் காடித்தெளிவில்[1] எருக்கிலைபோட்டுக் காய்ச்சி வேதுபிடிக்கவும்.

1, இந்த விவரம் உரைச்சுவடியில் காணப்படுகிறது.

(2) கழுதைவிட்டை ஐங்தோடு நெய் 1 உழக்கு சேர்த்து வருத்துக் குதிகாலில் வைத்துக்கட்டக் குதிகால் வாதம் தீரும்.

---

## 136. க்ஷயத்துக்கு வாசாதியிலேகியம்

கண்டங்கத்தரி யாடாதொடையே முள்ளுக்கத்தரி
தூதளை வாகை கொடிவேலி சங்கு
விண்டளிநற்றுளசி திப்பிலிமூல மிவற்றின்வேர்
வகைக்குப் பலமிருபதோர் தூணிநீரிற்
கொண்டிடப்போட் டெட்டிலொன்றுய்க் காய்ச்சிக்
கொண்டதனி னொச்சிதூதளைசெம்முள்ளி
துண்டிடுகாஞ்சொறி கையாந்தகரை யாடா
தொடையிலையின் சாறுவகைக்கொருகாற்சேரே
சேர்த்ததனி லிருசேர் வெல்லமிட்டுத்திரமாகப்
பாகாக்கிச் செவியஞ்சுக்கு
கூர்த்திடுதிப்பிலிமூலஞ் சிறுநாகப்பூக் கொடிவேலி
சடாமாஞ்சிலேல மிந்துப்
பார்த்திடுதிப்பிலி யிலவங்கப்பட்டையுடனே
யான விலவங்கப்பத்திரி வகைக்குப்பலத்தூள்
பார்த்திடுநல் லுலோகசிந்தூர மோர்பலந்தான்
பரிவுறுமப்பாகந்தனிற் பண்பாய்க்கூட்டே (288)

(இ-ள்)

| | |
|---|---|
| கண்டங்கத்தரி | ஆடாதொடை |
| முள்ளுக்கத்தரி | தூதுவளை |
| வாகை | கொடிவேலி |
| சங்கு | துளசி |
| திப்பிலி மூலம் (கண்டந்திப்பிலி) | |



இவைகளின் வேர் வகைக்கு 20 பலம் வீதம் எடுத்துக்கொண்டு மெல்லிய சூரணமாக இடித்து ஒரு தூணி (4 மரக்கால்) தண்ணீரில் போட்டு எட்டிலொன்றுய்க் காய்ச்சி அதில்,

| | |
|---|---|
| நொச்சி | தூதுவளை |
| செம்முள்ளி | சிறுகாஞ்சொறி |
| கையாந்தகரை | ஆடாதொடையிலை |

இவைகளின் இலைச்சாறு வகைக்கு ¼ சேர் விட்டு எரித்து இவற்றுடன் 2 சேர் வெல்லத்தைப் போட்டுப் பாகுபதத்தில்,

| | |
|---|---|
| சவ்வியம் | சுக்கு |
| திப்பிலிமூலம் | சிறுநாகப்பூ |
| கொடிவேலி | சடாமாஞ்சில் |
| ஏலம் | இந்துப்பு |
| திப்பிலி | இலவங்கப்பட்டை |
| இலவங்கப்பத்திரி | |

இவை வகைக்கு 1 பலம் எடுத்து நன்குகச் சூரணித்துப் போட்டு உலோக சிந்தூரம் 1 பலம் சேர்த்துக்கிளறி இறக்கி, வேண்டிய அளவு நெய்யும் ஆறிய பிறகு வேண்டிய தேனும் சேர்த்துக்கொள்ளவும். இதை நோயாளி, நோய் இவைகளுக் குத் தகுந்தபடி அளவாகச் சாப்பிட்டுவர க்ஷயப், இருமல் முதலிய ரோகங்கள் தீரும்.

குறிப்பு:— வாதரோகிகளுக்கு க்ஷயம் ஏற்பட்டால் அதற் கான முறை இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

---

**சரபேந்திரர் வைத்ய முறைகள்.**

# வாத ரோக சிகித்ஸை முறைகளின்

## மருந்து அகராதி.

(அநேக இடங்களில் மருந்துகளுக்குப் பெயர் கூறப்படாமலிருப்பதால், அவைகளுக்குப் பொருந்தும் பெயர்களை இட்டுப் பிறைக்குறிகளும் (Brackets) இடப்பட்டிருக்கின்றன.)


| நெ. | முறையின் பெயர். | பக்கம். |
|---|---|---|
| 1. | அமுதசஞ்சீவித் தைலம் (சர்வ வாதத்திற்கும்) ... | 75 |
| 2. | அமுத சர்க்கரை (பலவித வாதம், சூலை, குன்மம் முதலியவற்றிற்கு) ... .... | 79 |
| 3. | அரக்குத் தைலம் (வாயு, நாள்படாத சுரம்) ... | 43 |
| 4. | (அரப்பொடி) எண்ணெய் (மகாவாதத்திற்கு) ... | 91 |
| 5. | அர்க்காதித் தைலம் (எலும்பு முறிவு, வாள்வெட்டுப் புண்) ... .... | 13 |
| 6. | அறுகுத் தைலம் (முழங்கால் சுரோணித வாதத்திற்கு) ... ... ... | 165 |
| 7. | (ஆட்டுப்பால்) மருந்து (ஒடிக்குத்து முளைப்புக்கு) | 114 |
| 8. | (ஆதண்டைப்) பற்று (முழங்கால் வாதத்திற்கு) ... | 112 |
| 9. | (ஆமணக்கெண்ணெய்) மருந்து (பெருங்கால் வாதத்திற்கு) ... ... ... | 167 |
| 10 | (ஆயில்பட்டை) எண்ணெய் (முடக்கு வாதத்திற்கு) | 119 |
| 11. | (ஆயில்ய) எண்ணெய் (அற்புத வாதம், திமிர் வாதம் முதலானதற்கு) ... ... | 93 |

| நே. | முறையின் பெயர். | பக்கம். |
|---|---|---|
| 12. | ஆயில்ய எண்ணெய்) விஷவாதத்திற்கு) ... | 71 |
| 13. | (ஆவாரையிலை) ஒத்தடம் (ஆனந்தவாதம், விரை வாதத்திற்கு) ... ... | 164 |
| 14. | இலட்சுமி நாராயணத் தைலம் (சர்வ வாதத்திற்கும்) | 23 |
| 15. | (இறைச்சி) எண்ணெய் (விரை வாதத்திற்கு) ... | 139 |
| 16. | எட்டி எண்ணெய் (நொச்சிவேது) 'வாதத்திற்கு)... | 70 |
| 17. | எருக்கெண்ணெய் (நரம்பு முடக்கத்திற்கு) .... | 68 |
| 18. | எருக்கெண்ணெய் (ஸர்வ வாதத்திற்கு) ... | 62 |
| 19. | (எருக்காதித் தைலம் (வாத நோய்களுக்கு) ... | 39 |
| 20. | எருக்காதித் தைலம் (மகாவாதத்திற்கு) ... | 90 |
| 21. | (எருக்கம்பால்) பத்து (குதிகால் வாதத்திற்கு) ... | 171 |
| 22. | (எருக்க மொட்டு) ஒத்தடம் (விரைவாதத்திற்கு) ... | 145 |
| 23. | (எருக்கிலைக்) கவி (இடுப்பு வலிக்கு) ... | 108 |
| 24. | (எருக்கெண்ணெய்) புகை (வாதத்திற்கு) ... | 69 |
| 25. | ஏரண்டத் தைலம் (சகல வாதத்துக்கும்) ... | 12 |
| 26. | (ஐந்தெண்ணெய்) (ஒருபுறத்தண்ட வாதத்திற்கு)... | 157 |
| 27. | (ஐந்தெண்ணெய் பாஷாணத்தைலம்) (சகல வஞ்சனை வாதத்திற்கும்) ... ... | 95 |
| 28. | (கடுகாதி) இடிமருந்து (குடல் வாதத்திற்கு) ... | 144 |
| 29. | கண்டங்கத்திரி நெய் (சகல காசத்திற்கும்) ... | 85 |
| 30. | (கண்டத்திப்பிலி) லேகியம் (இடுப்பு வலிக்கு) ... | 130 |
| 31. | கலிங்காதிக் கடுகு (குன்மம், கட்டிகளுக்கு) ... | [illegible]5 |
| 32. | (கழல்கொடி) மருந்து (கழல் வாதத்திற்கு) ... | 125 |
| 33. | (கழல்கொடி வேர்க்)கல்கம் (குடல் வாதத்திற்கு) ... | 147 |
| 34. | (கழற்சிக் கொழுந்து) அடை (அண்டவாதத்திற்கு) | 155 |





| நே. | முறையின் பெயர். | பக்கம். |
|---|---|---|
| 35. | (கழற்கொடி) மருந்து (அண்டவாதத்திற்கு) ... | 161 |
| 36. | (கழற்சிக்) கல்கம் (விரைவாதம், அண்டவாத வீக்கத்திற்கு) ... ... | 162 |
| 37. | (கள்ளி) எண்ணெய் (வாதத்திற்கு) ... | 72 |
| 38. | (கற்கடக) தைலம் (அறணை பிரண்டி, கை கால் சூப்பிப்போன வாதத்திற்கு) ... | 169 |
| 39. | (கார்ப்பாஸாஸ்தியாதி) தைலம் (மகாவாதத்திற்கு) | 88 |
| 40. | குக்கிலாதிச் சூரணம் (வாதம், வாயுக்களுக்கு) ... | 97 |
| 41. | குக்குலு மாத்திரை (மேகவிரணம், மார்பு வ்ரணம், வலி, வாதம் முதலானவைகளுக்கு) ... | 50 |
| 42. | (குப்பைமேணி) எண்ணெய் (வாதசந்தியால் முடங்கினதற்கு ... ... ... | 117 |
| 43. | (குமிழம் வேர்) பிட்டு (கழல் வாதத்திற்கு) ... | 124 |
| 44. | குருவெண்டை (சகல வாதத்திற்கும்) ... | 53 |
| 45. | (குறட்டைப்பழத்) தைலம் (சகல வஞ்சனைக்கும் வாதத்திற்கும்) ... ... | 94 |
| 46. | குறிஞ்சி எண்ணெய் (வாதத்துக்குப் பூச, தலை பாரத்துக்கு நசியம்) ... ... | 8 |
| 47. | (குன்றி) எண்ணெய் (முகவாதத்திற்கு) ... | 99 |
| 48. | கேதகீ தைலம் (சகல வாதத்திற்கு) ... | 40 |
| 49. | கேதகீ தைலம் (வாத சோணிதம்,வாதத்திற்கு) .... | 49 |
| 50. | (கையாந்தகரை) மருந்து கல்கம் (அண்ட வாதத்திற்கு) ... ... | 156 |
| 51. | (கோழிமுட்டை) மருந்து (அண்டவாதம், வீக்கம், சூலைக்கு) ... ... | 154 |
| 52. | (சங்கங்குப்பி) எண்ணெய் (அண்டவாதத்திற்கு) ... | 160 |

| நெ. | முறையின் பெயர். | பக்கம். |
|---|---|---|
| 53. | சதுர்வகைச் சாறு தைலம் ... ... | 14 |
| 54. | சவ்யாதி சூரணம் .... ... | 66 |
| 55. | (சாறணைக் கொழுந்து) கல்கம் (குடல் வாதத்திற்கு) | 148 |
| 56. | (சாறணை) யெண்ணெய் (அண்டவாதத்திற்கு) ... | 153 |
| 57. | சித்ரமூல எண்ணெய் ... ... | 2 |
| 58. | (சித்ரமூல) எண்ணெய் (சகல வாதத்திற்கும்) ... | 86 |
| 59. | சிநேகப் பொட்டணம் (80 வாதத்திற்கு) ... | 64 |
| 60. | சீரகத் தைலம் ... ... | 21 |
| 61. | சீரகத் தைலம் ... ... | 44 |
| 62. | சேங்கொட்டை நெய் ... ... | 42 |
| 63. | தசமூலமரிசாதித் தைலம் ... ... | 43 |
| 64. | தசமூல மாஷ தைலம் ... ... | 35 |
| 65. | (தழுதாழை) எண்ணெய் (முடக்கு வாதத்திற்கு) | 120 |
| 66. | (தழுதாழை) எண்ணெய் (வாதத்திற்கு) ... | 73 |
| 67. | (தாளியிலைத்) தைலம் (எரிவாதத்திற்கு) ... | 100 |
| 68. | (திரட்டுப்பால்) மருந்து (இடுப்பு வலிக்கு) ... | 129 |
| 69. | (திரிகடுக்) கல்கம் (கழல் வாதத்திற்கு) ... | 84 |
| 70. | (திரிகடு) நெய் (குடல் வாதத்திற்கு) ... | 148 |
| 71. | (திருவ்ருத்) எண்ணெய் (பெருவயிறு, குடல் வாதம் முதலானவைகளுக்கு) ... | 138 |
| 72. | (தேவதாருக்) கல்கம் (விரைவாதத்திற்கு) ... | 152 |
| 73. | (தேற்றான்) கஷாயம் (அண்டவாதத்திற்கு) ... | 153 |





| நெ. | முறையின் பெயர். | பக்கம். |
|---|---|---|
| 74. | தேற்றான் தைலம் ... ... | 20 |
| 75. | (நக்ர தைலம்) (வாயுவினாலும், வாதத்தினாலும், பில்லி சூன்யத்தினாலும் கடப்புகள், பல தந்திரத்தினாலும் முடங்கின கைகால் தீர) ... | 115 |
| 76. | நத்தைர்சூரி எண்ணெய் ... ... | 1 |
| 77. | (நந்தியாவட்டை யிலை)க் கஷாயம் (குடல் வாதத்திற்கு) ... ... ... | 150 |
| 78. | நிம்பாதித் தைலம் ... ... | 3 |
| 79. | நிர்குண்டிக் குழம்பு ... ... | 7 |
| 80. | (நிர்குண்டித்) தைலம் (எரிவாதத்திற்கு) ... | 101 |
| 81. | (நிர்குண்டித்) தைலம் (முழங்கால் வாதத்திற்கு) ... | 111 |
| 82. | (நிர்குண்டித்) தைலம் (கழல் வாதத்திற்கு) ... | 123 |
| 83. | (நிர்குண்டிப்) பிட்டு (முடக்கு வாதத்திற்கு) ... | 114 |
| 84. | (நிர்குண்டிச்) சிநேக பொட்டணம் (சந்து வாதம் முதலியவைகளுக்கு) ... ... | 170 |
| 85 | பஞ்சார்க்கத் தைலம் ... ... | 17 |
| 86. | பஞ்சார்க்கத் தைலம் ... ... | 29 |
| 87. | (பலா வில்வாதி) தைலம் (திமிர்வாதத்திற்கு) ... | 109 |
| 88. | (பலா தசமூலாதி) தைலம் (உள் நடுக்கு வாதத்திற்கு) ... ... ... | 102 |
| 89. | (பாவட்டையிலைச் சாறு) மருந்து (வயிற்று வலி, குடல் வாதத்திற்கு) ... ... | 143 |
| 90. | பாஷாண நெய் ... ... | 47 |
| 91. | (பிரப்பங் கிழங்குக்) கஷாயம் (சூலை, திமிர்வாதத்திற்கு) ... ... | 113 |

| நெ. | முறையின் பெயர். | பக்கம். |
|---|---|---|
| 92. | (பிரஸாரிணீ தைலம்) (முகவாதத்திற்கு) ... | 98 |
| 93. | பிருங்காமலகத் தைலம் ... ... | 45 |
| 94. | பீலுத் தைலம் ... ... | 37 |
| 95. | (புளியிலைத்) தைலம் (திமிர்வாதத்திற்கு) ... | 110 |
| 96. | பூதிகாத் தைலம் ... ... | 9 |
| 97. | (பூண்டு) மருந்து (அண்டவாதத்திற்கு) ... | 125 |
| 98. | (பூண்டுகள்ளிக்) கல்கம் (முடங்கின வாதம், வாத கரப்பான், சூலை, கூன், இடுப்பு பிடிப்பிற்கு) ... ... ... | 121 |
| 99. | (பெருகுறிஞ்சான்) எண்ணெய் (குடல் வாதத்திற்கு) ... ... ... | 149 |
| 100. | (பெருங்காயக் கல்கம்) (அண்ட வாதத்திற்கு) ... | 161 |
| 101. | மரகதாஞ்சனத் தைலம் (குடல் வாதம், சுரோணித வாதம் முதலானதற்கு) ... | 125 |
| 102. | (மயூரசிகைத்) தைலம் (வாதப்பிடிப்பிற்கு) ... | 130 |
| 103. | மஹா நாராயணத் தைலம் ... ... | 31 |
| 104. | (மஹா வாதத்) தைலம் (குன்மம், குடல் வாதத்திற்கு) ... ... ... | 132 |
| 105. | (மாவிலங்கைக்)கல்கம் (வயிறுவலி, குடல் வாதத்திற்கு) ... ... ... | 142 |
| 106. | (மாவிலங்கப்பத்து) (இடுப்பு வாதத்திற்கு) ... | 132 |
| 107. | மாஷத் தைலம் ... ... | 22 |
| 108. | (மாஷாவ லேஹம்) (தண்டு வாதத்திற்கு) ... | 163 |
| 109. | (மிளகுப்பழத் தைலம் (சுரோணித வாதத்திற்கு) | 165 |
| 110. | (முடக்கொத்தான்) கொழுந்து கஷாயம் (குடல் வாதத்திற்கு) ... ... | 151 |





| நெ. | முறையின் பெயர். | பக்கம். |
|---|---|---|
| 111. | (முடக்கொத்தான்) கொழுந்து கஷாயம் (அண்ட வாதத்திற்கு) ... ... | 153 |
| 112. | (முட்காவேளைப்) பத்து (பெருங்காலுக்கு) ... | 168 |
| 113. | முருங்கை வேர்த் தைலம் ... ... | 18 |
| 114. | (முள் முருக்கஞ் சாறு) மருந்து (அண்ட வாதத்திற்கு) ... ... ... | 154 |
| 115. | (ரஸப் பாஷாணத்) தைலம் (சூலை வாதத்தின் குணமும், மருந்தும்) ... ... | 106 |
| 116. | லசுனபிஷ்டித் தைலம் ... ... | 15 |
| 117. | லசுனபிஷ்டி ... ... | 35 |
| 118. | (லசுனபிஷ்டி) (குடல் வாதத்திற்கு) ... | 145 |
| 119. | (லசுன) தைலம் (அண்டவாதத்திற்கு) ... | 159 |
| 120. | (லசுனாதி) தைலம் (குடல் வாதம் முதலானவைகளுக்கு) ... ... ... | 141 |
| 121. | வடவானல ரஸம் ... ... | 80 |
| 122. | வாசாதி லேகியம் (க்ஷயத்திற்கு) ... | 172 |
| 123. | வாதராட்சத சூரணம் ... ... | 52 |
| 124 | வாத தைலம் ... ... | 56 |
| 125. | வாத தைலம் ... ... | 57 |
| 126. | வாத தைலம் (எண்பதுக்கும்)... ... | 59 |
| 127. | வாத தைலம் ... ... | 61 |
| 128. | விஷமுஷ்டித் தைலம் ... ... | 65 |
| 129. | விஷ்ணு பராக்ரம ரஸ குளிகை ... | 55 |

| நெ. | முறையின் பெயர். | பக்கம். |
|---|---|---|
| 130 | (வீழிவேர்க்) கல்கம் முதலான மருந்துகள் (குடல் புரட்டு, குடல் வாதத்திற்கு) ... | 151 |
| 131. | (வெண்ணுந்தைத்) தைலம் (வாதத்திற்கு) ... | 82 |
| 132. | (வெந்தயக் கஷாயம்) (விரை வாதத்திற்கு) ... | 163 |
| 133 | (வேப்பெண்ணெய்) மருந்து (வாதக்கட்டுக்கு) ... | 118 |
| 134. | (வேம்புக்) கஷாயம் (கடுப்பு வாதத்திற்கு) ... | 132 |
| 135. | (வேலம்) பிசினி உருண்டை (இடுப்பு வலிக்கு) ... | 133 |
| 136. | (வேலிப்பருத்தி) வேது (குதிகால் வாதத்திற்கு) | 170 |
| 137. | (வேலிப்பருத்தி) எண்ணெய் (ஈரல் வாதத்திற்கு) | 104 |
| 138. | (க்ஷீர) தைலம் (சகல வாதத்திற்கும்) ... | 76 |


---

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 1 | 11 | பத்தெரியே | பதத்தெரியே |
| 6 | | 23-வது வரியில் திப்பிலிமூலம், கிராம்பு, கருஞ்சீரகம் முதலியவைகளைச் சேர்த்துக்கொள்ளவும். | |
| 14 | 6 | பாடாண் பேதி | பாடாண பேதி. |
| 14 | | 23-வது வரியில் காணப்படும் 'சுத்திசெய்த பாஷாணம்' என்பதையும் 24-வது வரியில் காணப்படும் 'சுத்தி செய்த அன்னபேதி' என்பதையும் நீக்கி 'சிறுபீளை' என்ற சரக்கையும் சேர்த்துக்கொள்ளவும். | |
| 15 | | 2-வது வரியில் காணப்படும் 'தவசி,' 'முருங்கைவேர்' என்று தனித்தனியாக இருப்பதை 'தவசுமுருங்கை வேர்' என்று சேர்த்து வாசிக்கவும். | |

15-வது பக்கத்தில் காணப்படும் தைலத்தின் பெயர் லசுன பிஷ்டித் தைலம் என்று இருப்பினும் அதில் வெள்ளுள்ளி சேர்க்கப்படவில்லை என்பதைக் காண்க

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 19 | 21 | கழுவன்கொடி | கழற்சிக்கொடி |
| 19 | | 29-வது வரியில் "வெளிச்சைப் பிசின்" என்ற சரக்கைச் சேர்க்கவும் | |
| 21 | | 7-வது வரியில் "பிளகை"ச் சேர்த்துக்கொள்ளவும். | |
| 21 | 8 | நல்ணெலெணய் | நல்லெண்ணெய் |
| 23 | 5 | ஒரு பலம் | கால் பலம் |
| 23 | 23 | கொம்மடி | கொம்மட்டி |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 27 | 11-வது வரியில் 'வில்வம்' என்றும் 12-வது வரியாக 'பிராய்', 'ஆவாரை', இவ்விரு சரக்குகளையும் சேர்த்துக்கொள்ளவும். | | |
| 29 | 7 | டஞ்சுமெசனுகை | டஞ்சுமேசமனுகை |
| 30 | 25-வது வரியில் 'கடுகு' என்று சேர்க்கவும். | | |
| 35 | 4 | மெலாஞ் | மேலஞ் |
| 39 | 6 | 4 படி தண்ணீர் | 2 மரக்கால் தண்ணீர் |
| 39 | 8-வது வரியில் "காடி—1 மரக்கால்" என்று சேர்த்துக்கொள்ளவும். | | |
| 39 | 15-வது வரியிலுள்ள "ஏலம்" என்ற சரக்கை நீக்கிவிடவும். | | |
| 40 | 13-வது வரியாக "பெருங்காயம்—1 வராகனெடை" என்பதைச் சேர்க்கவும். | | |
| 42 | 2 | பூழாங்கிழங்கு | பூலாங்கிழங்கு |
| 45 | 11-வது வரியில் 'கடுக்காய் பிஞ்சு' என்று சேர்க்கவும். | | |
| 47 | 3-வது வரியில் 'அரக்கு' என்ற சரக்கைச் சேர்க்கவும். | | |
| 47 | 11 | "துணிசுற்றி" என்பதை நீக்கிக் "கனமான தோலைச் சுற்றி இடைவெளியில் உளுத்தமாவை அப்பிவைத்து" | |
| 48 | 2 | பச்சநாபி | கருநாபி முதலியவைகள் வகைக்கு 1 கழஞ்சு. |
| 48 | 3-வது வரியில் "கடுக்காய்த்தோல்-½ கழஞ்சு" என்று சேர்க்கவும். | | |
| 50 | 17 | வஸ்திரட்ட | புகை பிடிக்க |



| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 53 | 10 | பாதரஸம்— 2 வராகனெடை | பாதரஸம்—4 வராகனெடை |
| 53 | 12 | வென்காரம்—2 வராகனெடை | வெண்காரம்—4 வராகனெடை |
| 58 | 21 | இலுப்பெணணெய் | இலுப்பெண்ணெய் |
| 58 | 29 | ஏடைக்கு | எடைக்கு |
| 62 | 5 | அரேனுகம் | அரேணுகம் |
| 72 | 10 | பசுவின் பால்— | பசுவின் பால் 8½ நாழி |
| 74 | 22 | செவ்வள்ளி | செவ்வல்லிக்கொடி |
| 80 | 13-வது வரியில் "பச்சிலை" என்பதைச் சேர்க்கவும். | | |
| 87 | 12 | ஆமணக்கு எண்ணெய் | ஆமணக்கெண்ணெய் |
| 92 | 6 | விப்பிரதியோடு | விப்புருதியோடு |
| 94 | 22 | நலலெண்ணெய் | நல்லெண்ணெய் |

98-வது பக்கத்தில் காணப்படும் "முகவாதத்திற்கு" என்ற மருந்தில் சேரும் "வன்னெற்று வேர், குழிமிட்டான் வேர் இரண்டும் நத்தைச்சூரியின் வேறு பெயர்கள்" என்று அகராதியில் காணப்படுகிறது.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 103 | 18 | சிற்றுமல்லி | சிற்றுமுட்டி |
| 103 | 29-வது வரியில் "நன்னாரிவேர்" என்ற சரக்கையும் சேர்த்துக்கொள்ளவும். | | |
| 104 | 12-வது வரியில் காணப்படும் "சாரணை"யை நீக்கிவிடவும். | | |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 119-வது பக்கத்தில் வாதக்கட்டு மருந்து என்ற முறையில் வேப்பம்பட்டைக் குழித்தைலமாக இறக்கி உபயோகித்தல் வேண்டும். | | | |
| 136 | 6 | நாகநத்தி | நாகதந்தி |
| 136 | 17-வது, 18-வது வரிகளில் "கண்டங்கத்திரி சமூலம், செருப்படி வேர், விழி வேர்" இம்மூன்றையும் சேர்த்துக்கொள்ளவும் | | |
| 138 | 96-வது மருந்தின் தலைப்பை "பெருவயிறு, குடல் வாதம் முதலானதற்கு எண்ணெய்:' என்று வாசிக்கவும். | | |
| 143 | 28 | உளுவயைரிசி | உளுவையரிசி |
| 144 | 9 | கறியிவ்வேமுழு | கரிசிவ்வேமுளு |
| 146 | 31-வது வரியாக "கடுக்காய்த் தோல், நெல்லிவற்றல், தான்றிக்காய்த் தோல்" இம்மூன்றையும் சேர்க்கவும். | | |

# சரபேந்திர வைத்திய முறைகளில் கண்ட மருந்து முறைகளை உபயோகித்த வைத்யர்களின் நற்சாக்ஷிப் பத்திரங்கள்.

( 1 )

ப. பூ. சின்னய்யா செட்டி,
வைத்தியர்,

கமுதி போஸ்டு,
ராமநாதபுரம் ஜில்லா,
விரோதிஸு, கார்த்திகை 12.

இதற்குமுன் ஸ்ரீ S. கோபாலன் B. A., B. L., அவர்களால் வெளியிடப்பட்ட குன்மரோக சிகிச்சையைத் தருவித்து அதன் முறைகளைப் படித்து, சில செய்தும் ஆனந்தமடைந்தேன். குன்மரோக சிகிச்சை 114-வது பக்கம் சத்திகுன்மத்திற்கு "வில்வாதி லேகியம்" என்ற முறை வெகு ஆச்சரியமாகக் குணம் செய்கிறது. எல்லோரும் சந்தோஷமடைகிறார்கள்.

ஒப்பம் : ப. பூ. சின்னய்ய செட்டி.

( 2 )

M. R. Krishnamoorty Iyer,
Native Doctor.

Camp, Pattukkottai,
15-12-52.

குன்ம சிகிச்சை நூலில் அநேக மருந்துகள் செய்து அனுபவித்துப் பார்த்ததுடன் 'குன்மாதி செந்தூரம்' முறைப்படி அனுபவித்தேன். நன்றாயிருக்கிறது. இன்னமும் வைத்ய வெளியீடுகள் எனக்கு அனுமதியில்லாமலே V. P. யில் அனுப்பித்தரக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்கள்,
(Sd.) M. R. Krishnamoorthy.

( 3 )

K. கதிர்வேல்,
தமிழ் சித்த வைத்யசாலை,

மண்டப வீதி,
ஈரோடு.
*17—1—49.*

*அன்புடையீர்,*

*தங்கள் குன்ம ரோக சிகிச்சை வெளியீடு நெ. 2-ல் சொல்லப்பட்ட "93. நெ. குன்ம வாயுவுக்கு எண்ணெய் (சந்தம் வேறு)" என்ற இம்மருந்தினால் வலிகுன்மம், செங்கிரந்தி, ஆகிய 2 நோய்களும் பூரண குணமளிக்கிறது என்பதை என் அனுபவத்தால் அறிந்து தங்களுக்குத் தெரிவித்து மகிழ்ச்சியுற்றேன். ௸ நோய் 3 வருடமாகக் கஷ்டப்பட்டுப் பலரக சிகிச்சை பெற்றும் குணமுற்றபாடின்றி அவஸ்தைப் பட்டவன் ஒருவன் அத்தாக்ஷியின் மீதே தங்களுக்கு மிக்க மகிழ்ச்சியுடன் எழுதுகிறேன். இந்நூல்களில் இன்னும் சில மருந்துகள் தயாராகின்றது. அதை அனுபவித்து விவரம் தெரிந்து எழுதுகிறேன்.*

*இப்படிக்கு,*
(Sd.) K. கதிர்வேல்.

( 4 )

I am much surprised to see the efficient curative powers of Sarabendra recipes. My wife had a serious trouble during menses. And many patent medicines have been tried in vain for the past 4 years. At last I had an opportunity to meet Dr. Venkatarajan who prescribed a course of treatment in No. 4 of Garbini Balaroga Chikitsai and to our astonishment it has given complete relief from the illness. In turn I have tried in many other cases with success.

(Sd.) **P. S. Raman,**
Station Master, S. I. R., Tanjore



( 5 )

*தங்கள் வெளியீடுகள் யாவும் நாங்கள் வாங்கி அதன் முறைப்படி மருந்துகள் தயாரித்து அதன் குணங்களைக் கண்டோம். குன்ம ரோக முறையும், நயன ரோக முறையும் நாங்கள் கையாண்டோம். பெருமைப் படத்தக்க நல்ல முறைகள்.*

N. V. ராஜு,
Native Doctor,
கருணாநிதி வைத்தியசாலை,
நாமக்கல்.

( 6 )

*குன்மரோக சிகித்ஸையில் 96-ம் பக்கத்திலுள்ள 68-வது மருந்து "குன்மத்திற்குக் கும்மட்டிக்காயெண்ணெய்" முறைப்படி தயார் செய்து கொடுத்ததில் சுமார் 15 முதல் 20 நாட்கள் உபயோகிப்பவருக்குக் குன்மக்கட்டி கரைவதுடன் வயிற்று வலியும் நின்றுவிடுகின்றன. இன்னும் அதன் தலைப்பில்கண்ட வியாதிகளைத் தவிர குன்மம், குமட்டல், ஓக்காளம் ஆகியவைகளும் குணமடைகின்றன. ஆனால் ஆகாரம் ஜவ்வரிசிப் பாயஸம் கொடுத்து வருதல் முக்யம். ௸ கஞ்சி கொடுக்கலாம். ௸ கஞ்சி, பாயஸம் கொடுத்தால் குணமடைகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.*

(Sd.) **H. T. Govindan,**
F. T. H. C. (Homeo.)
Amaragandi P. O.
Salem.

( 7 )

*குன்மரோக சிகித்ஸை முறைகளில் 'வஜ்ஜிரவல்லரிதகி' லேகியம் நல்ல குணமளிக்கிறது. 6 மாதமாக இருந்த தலைச் சுற்றலும், கண் புகைச்சலும், மூலக்கொதிப்பும் சில வாரத்தில் குணமாகியது. பவுத்திரத்திற்கும் நல்ல மருந்து. பாண்டுவில் வீக்கம் வடிகிறது.*

கர்ப்பிணி பாலரோக சிகித்சை முறைகள் 198-ம் பக்கம் 214-வது 'மாத்திரை' சகல பாலபேதிக்கும், சுரத்திலும், இசுவிலும், அடி தள்ளியதிலுள்ள பேதிக்கும் மேலான மருந்து. வாய் வெக்காளமுள்ள மூலக்கிராணியும் 10 தினங்களில் குணமேற்பட்டது.

266-வது பக்கத்திலுள்ள 'மாவடு' அவ்வளவாகக் குணம் கொடுக்கவில்லை.

202-ம் பக்கத்திலுள்ள மருந்து வாந்தியோடுகூடிய கழிச்சலையும் பொருமலையும் தீர்க்கிறது.

203-ம் பக்கத்திலுள்ள 'மாம்பட்டைச் சாறு' நல்ல குணமுள்ளது. மேலும் எழுதுகிறேன்.

(Sd.) K. G. நாகராஜ மண்ணையார்,
சித்த வைத்யம்,
சாலியத்தெரு, அம்மாபேட்டை.
1—11—50.

( 8 )

4-வது வெளியீடான நயனரோக சிகித்சை 23-வது முறைத் தைலத்தைச் செய்து தளித்தேன். அதில் மிகவும் நல்ல பயன் அடைந்தேன்......

சு. சுந்தரசாமி,
ஆவில்சின்னம்பாளையம்,
பொள்ளாச்சி P. O. கோவை.
20—9—50.

( 9 )

Nayana Roga Chikitsai book is containing really valuable preparations with good get up worth going thro' and even added on by (Allopaths) to their armamentarium and aid.



(P. S.) Enumeration of Signs & Symptoms and Diseases of Eyes, Preparation of various medicines are quiet neatly given.

Captain V. N. RAMAKRISHNAN,
L. M. P.,
Sitharam Clinic,
Krishnagiri.
2—9—50.

( 10 )

I have great pleasure in informing that I have tried one or two remedies in Sarabendrar Vaidya Murai and found them wonderfully efficacious. No. 11 Kumari Thailam in Nayana Roga Chikitsai was made by me and it has been very effective for obstinate Headache, Eye trouble like circulating pupil, even without the addition of ingredient called Kandivennai which was said to be available at Malabar.

I made enquiries in the Drug Shops at Malabar and I was told by a reliable shop-man that geneiune Kandivennai being the first evacuvation of the newly born young one of an elephant, was very rare and bazaar people are selling powdered Kungiliyam in the name of Kandivennai. With great trouble I got a good quantity of genuine Stuff from Nammara, Cochin and mixed it in prepared oil.

Those who used it said, it was extremely hot. Those who had very obstinate complaints like headache etc., had wonderful cures with the help of this mixture.

I therefore reserved it for very difficult cases only. In ordinary cases the oil without the special drug is giving excellent results. I have got some stock of oil and I shall be glad to send it for cases of unsteady pupil etc. I wish to have all the publications of this Medical Series as and when they are published. I am very glad that the Saraswathi Mahal has come forward to publish these valuable manuscripts.

R. THULASIDOSS,
Yarn Merchant,
Sevapet, Salem.
14—9—51.

( 11 )

*சரபேந்திர வைத்ய முறைகளாகிய நூல்கள் வெளி வந்ததில் குன்மரோக சிகித்ஸை 10-வது பக்கம், 5-வது மருந்து, "சங்கக்ஷாரம்" என்ற முறையைத் தயாரித்து 5 மாத காலங்களாகின்றன. இதற்குள் 3 கேஸ்கள் பலனடைந்தது.* **Gastric Trouble** *10 வருட காலமாயிருந்ததையும், பித்த குன்மம் ஒன்றும், அஜீர்ண பேதி ஒரு கேஸும் பூர்ண சுகமடைந்தது. அதனால் நமக்கு நல்ல பெயரும், வருவாயும் கிடைத்தது.*

*கோடேடி ராமச்சந்திரன் என்ற* **L. M. P.,** *டாக்டரின் தங்கைக்கும் பரிணாமசூலைக்கு 15 நாட்களுக்கு மருந்து கொடுத்திருக்கிறேன். முக்கால்வாசி குணம் கிடைத்திருக்கிறது. பூர்ண குணமானதும் தெரிவிக்கிறேன். அந்த அம்மாவிற்குப் பெரிய பெரிய டாக்டர்கள் யாவரும் பார்த்தனர். அம்மருந்து வேண்டுமானாலும் தங்களுக்கு அனுப்புகிறேன். உபயோகித்துப் பாருங்கள். புகழ்ந்து எழுதுவதல்ல அம்மருந்தின் பெருமையை.*

இப்படிக்கு.
**K. R. Guhun,**
Peddavaru P. O.
(Via) KOVUR.



( 12 )

**ஷியாரின் மற்றொரு கடிதம்.**

*எமது அனுபவத்தில் 116-ம் பக்கம் 115-ம் மருந்தான "குன்மாதி எட்டுக்கும் பெருங்காயச் சூரணம்" என்ற முறையை யான் அநேகருக்குக் கொடுத்துக் குணமடையக்கண்டு மகிழ்ச்சியடைந்து வருவதன்னியில் ஒரு முக்யமான கேஸை இங்கெழுதி எம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கிருந்து தென்திசையில் 1 மைலில் உள்ள மலகபல்லி என்ற கிராமத்தில் செறுகூறி நாராயணன் என்ற குடியானவன் (கம்மா) 45 வயதுள்ளவன். அவனுக்கு பரிணாமசூலை என்று நம் அபிப்ராயம். சென்னை போய்* X-ray *முதற்கொண்டு எடுத்துப் பார்த்தும், அலோபதிக் சிகித்ஸை ஒரு வருடம் செய்தும் அவனுக்குக் குணமாகவில்லை. மிக்க வருத்தத்துடன் இருந்தான். அவனுக்கு நான் மேற்கூறிய பெருங்காயச் சூரணத்தை உபயோகிக்க, வலி குறைவடைந்து, சாப்பாடு ஜீரணமாகிக் கொண்டும் நல்ல முறையிலிருக்கிறதை தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் பல முறைகள் தயார்செய்து வருகிறேன்.*

K. R. GUHUN.
Peddavaru.
21—8—51.

( 13 )

*ஐயா,*

*ஸரஸ்வதி மகாலில் 10—11—51-ல் சில புஸ்தகங்கள் வாங்கிச் சென்றேன். அதில் கண் வியாதிகளின் மருந்தைச் செய்து பலருக்குப் போட்டதில் குணமிருந்தது. பலரும் என்னிடம் கண் நோய் தீர வந்து போகிறார்கள். அவர்கள் வருவதற்கு சரஸ்வதி மகால்தான் காரணம். ஹோமியோபதி டாக்டராயிருந்தாலும் இதுவரை ஆயுர்வேத மருந்தே உபயோகித்து வருகிறேன்..........*

**S. R. நாராயணன்,**
32. ரங்கநாத பிள்ளை தெரு,
சேலம், *13—2—52.*

( 14 )

10-வது முறையான குன்மத்திற்கு மாத்திரை என்னும் மருந்தினால் கொடிய வயிற்றுவலி குணமாகி இருக்கிறது. நான் பரம்பரைக் கிராம வைத்யன். கிராமங்களில் வைத்யம் செய்து கொண்டிருக்கிறேன். இதைப்போன்ற நூல்களை வெளியிட்டிருந்தால் அவைகளை எமக்கு அதிவிரைவில் அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**கோபாலகிருஷ்ணன்,**
திருவாடையார்கோவில்,
கண்டமங்கலம் போஸ்டு,
**விழுப்புரம்.**

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS
No. 101720

( 15 )

நான் தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு நயனரோக சிகித்ஸைமூலம் ரோக நிதானம் தெரிந்து அதில் சொல்லியிருக்கும் முறைகளின்படி அநேகம் பேருக்கு மருந்தைப் பிரயோகித்து சுமார் 1000 பேர்வரை குணமடைந்திருக்கிறார்கள். ரோக நிதானங்கள் விபரமாய் சொல்லியிருக்கிறபடியேதான் இருக்கிறது. நான் தற்போது இதையே முக்யமான தொழிலாகக் கொண்டு, வந்தவர்களுக்கு மருந்து கொடுத்துக்கொண்டிருக்கிறேன். இது ஏழைகளுக்கு மிக உபயோகமாயிருக்கிறது இம்மருந்துகளுக்குச் சென்னை முதலான இடங்களிலிருந்தும் ஜனங்கள் வருகின்றனர்.

**T. N. Venkatarama Iyer**
Opticia n,
**குத்தாலம்.**
**24—6—52.**

L 8:46
N51